

# அன்பொடு புணர்ந்த ஐந்திணை

## பாலை

1

த. கோவேந்தன்

# அன்பொடு புணர்ந்த ஐந்திணை

– சங்கப் பாடல்கள் –

## பாலை

*(முதல் தொகுதி)*

தொகை - வகை - உரை

*இலக்கிய வல்லுநர்*

புலவர் த. கோவேந்தன்

**வேமன் பதிப்பகம்**

*19, நியூ காலனி - சோசியர் தெரு,*

*நுங்கம்பாக்கம்*

*சென்னை - 600 034*

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | அன்பொடு புணர்ந்த ஐந்திணை |
| ஆசிரியர் | : | த கோவேந்தன் |
| பதிப்பு | : | 24 08 2003 |
| பொருள் | : | சங்க இலக்கியம் - பாலை |
| அளவு | : | 1 X 8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| கட்டமைப்பு | : | சாதா அட்டைக் கட்டு |
| விலை | : | ரூ. 100/- |
| பக்கங்கள் | : | 273 |
| வெளியீடு | : | வேமன் பதிப்பகம்<br>19, நியூ காலனி, சோசியர் தெரு<br>சென்னை - 34<br>தொலைபேசி 28211134 |
| ஒளியச்சு | : | அன்பு - சுகுராம் கிராபிக்ஸ்<br>சென்னை - 24<br>தொலைபேசி . 24727236 |
| மறுதோன்றி | : | ரவிராஜா ஆப்செட்<br>சென்னை - 14 |

# அன்பொடு புணர்ந்த ஐந்திணை

தொல்பழங்கால நாகரிக நாடுகளில் தமிழகம் தலைசிறந்த ஒன்றாகும். சீனமும் தமிழும்தான் இன்றும் உயிர்ப்போடு உள்ளன. தமிழிலக்கிய வரலாறு மிகமிகத் தொன்மையானது கி.மு 3000-த்திலிருந்து கி.பி 300 வரை பரப்புக்குட்பட்டது. நாகரிக முதிர்ச்சியிலும் பண்பாட்டு நிலையிலும் இயற்கையோடியைந்த காலங்கள் முச்சங்கங்கள் நிலவின காலம்

ஈராயிரமாண்டு காலப் புலமைச சானறோர்களின் பாடல்களைக் கடற்கோளுக்கும் வந்தேறிகளின் அழிவுக்கும் பின்னும் அகம என்றும் புறம் என்று தொகுக்கப்பட்டன. அவை

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத் திறத்து எட்டுத் தொகை.**

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சி, பட்டினப்**
**பாலை கடாத்தொடு பத்து -**

பாட்டும் தொகையுமாகப் பாடினோர் ஒருகாலத்தவர், ஒரு நாட்டவர் அல்லர் ஓர் ஊரினர் அல்லர். குமரி முதல் வடவேங்கடம வரை பல்வேறு காலங்களில் வாழ்ந்தவர்கள்

இன்று நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் தொகை - பாட்டு நூற்படி மொத்தம் 2279 ஆகும். அகம் புறம் இரண்டும் பாடிய சங்கச் சான்றோர்கள் 238 பேர் ஆவர் மொத்தப் பாடல்களில் 102 புலவர்களின் பெயர் தெரியவில்லை. இவர்களை நீக்கிப் பெயர் தெரிந்தவர்கள் 472 பேர் ஆவர்.

அகப் பாடல்கள் அடி எல்லையைக் கொண்டும் பாவகையைக் கொண்டும் தொகுக்கப் பெற்றவை ஐங்குறுநூறு 500; குறுந்தொகை 401, நற்றிணை 400, கலித்தொகை 149, பரிபாடல் 8; பத்துப்பாட்டு 4 - ஆக 1862 பாடல்கள் அகத்திணை வாழ்வு பற்றியவை

இயற்கை நெறிக்காலமாகிய சஙககால ஆண் பெண் அன்புறவு நட்பில மலர்நது தோழமையில் தோய்ந்து காதலில் இனபுற்று அறநெறி தவறா ஒழுக்க வாழ்வாகும நானிலததின் பாகுபாட்டோடு வாழ்ந்த தமிழினத்தினர் களவில் தொடங்கி கற்புடை இல்லறவாழ்வில் இனிது வாழ்ந்தனர் வாழ்வோடும் நிலைத்தணை இயங்குதிணையோடும் இரண்டறக் கலந்து துய்த்தனர்

தோழர் தங்கப்பா கூறுவதுபோல "பாலுறவு அதன் முழுமையான பயனையும் நுணசுவையினையும் நல்குவது அன்பு நிலையில்தான் ஒருவரில் ஒருவர் உண்மை அனபு பூண்ட ஆணும் பெண்ணும் தம்முள் கூடி வாழும் வாழ்வில்தான் பாலுறவு வாழ்வின் மலர்ச்சிக்குத் துணை புரிகிறது" என்கிறார். இதனின் மணிசசுருக்கம் தான் 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பதும் - 'மலரினும் மெல்லியது காமம், சிலர் அதன் செவ்வி தலைபடுவார்' என்பதுமாகும்

பிற உயிர்களிடத்தும் ஆண்பெண் அன்புறவு உள்ளதெனினும் அஃது இயறகையின் இயலபூக்க உணர்ச்சியே தவிர, மனமலர்ச்சியின் பேரினபம நுகரவில்லை. அதனால் தான் தொல்காப்பியன்,

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉம் மேவற்றாகும்'

என்றான இந் நூற்பாவின் பொருள் உயர்திணை மாந்தர்க்கு மட்டுமின்றி பிற உயிரினங்கட்கும் பொருந்தும். அஃறிணைகள் மொழியைப் படைககத் தெரியாததால் தம்தம் இன்ப உணர்வுகளை வெளிப்படுத்த முடியவிலலை மாந்தன உணர்ந்ததை உணர்த்தும் படைப்பாற்றல் உள்ளவன். ஆதலால் மொழி முதல் உளிவரை உள்ளது சிறக்கும் மனத்தறிவால் உணர்ச்சி வெளிப்பாட்டினை மொழியில் வெளிப் படுத்தியவையே இலக்கியங்கள் இதில் அகமும் புறமும் அடங்கும்

தமிழர் வாழ்விலும் சங்க இலக்கியங்களிலும் 'அன்பொடு புணர்ந்த ஐந்திணைதான் உண்டே தவிர தொல்காப்பியன் கூறும் கைக்கிளையும் பெருந்திணையும் தமிழர் வாழ்விலே இல்லை இவ இரண்டும் ஆரியர்களின் அழிம்பு நிலைகள் எனவே தான் குறிஞ்சி, முல்லை, மருதம, நெய்தல, பாலை என வகுத்தனர் இப் பாகுபாடு அறிவியலுக்கும் சமூக மனவியலுக்கும பொருத்தமானவை

எந்தையர் வே மு தங்கவேலனார் தமிழ, தெலுங்கு, சமற்கிருதம ஆகிய மூம மொழிகளில வல்லுநராய் இருந்தும் சங்க இலக்கியங்கள்

கற்றிருந்தாலும் சைவ சமயத்தவராகவே வாழ்ந்ததாலும் என் கல்வி விட்டு விட்டுத் தொடர்ந்ததால் எட்டாம் வகுப்பு படிக்கையில் தான் சங்க நூல்கள் அறிமுகமாயின. காரணம 'செந்தமிழ்ச் செல்வி' 'தமிழ்ப் பொழில்' வீட்டுக்கு வந்தன. பாடநூல்களிலும் சங்கப்பாடல்கள் பாடப்பகுதியில வந்திருந்தன இவற்றுக்கும் மேலாய் வேலூர் கு.மு. அண்ணல்தங்கோவின் மாணவர் படையின் தலைவனாய் இருந்ததால் 40-50-களில் நடந்த தைப பொங்கலின் ஒரு வார விழாவில் அக் காலத்தில் சிறந்தோங்கி யிருந்த பல பெருபுலமைச் சான்றோர்களின் சொற்பொழிவுகளாலும் அவர் களுக்குத் தொண்டு செய்தபோது பெற்ற செவிச் செல்வமும் செழுந்தமிழ் நூற்படிப்பும் என்னை மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வில் புகுத்தியது பாவேந்தர் தொடர்பும் அறிவுரையும் சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சமய இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் பாரதி - பாரதிதாசன் ச சு. சோமசுந்தர பாரதி, வெள்ளை வராணனார், வேங்கட ராமையா, மயிலை வேங்கடசாமி, ந.மு வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு, பெரும்புலவர் வேணு கோபால நாய்கர் - பாலசுந்தர நாய்க்கர், உரைவேந்தர் அவ்வை சு. துரை சாமி பிள்ளை, மு.வ. போன்ற பலரின் தொடர்பும் என்னைப் பிற இலக்கியங்களிலிருந்து சங்க இலக்கியத்தில் மேலும் மேலும் தோயச் செய்தன. 1957-இல் தோழர் தங்கப்பாவின் நட்பு சங்க இலக்கிய ஐந்தருவி யில் திளைத்தின்புறச் செய்தது

சென்னை வாழ்க்கை என்னைப் பிறர்க்கெழுதிப் பலர் பேரும் புகழும் பட்டமும் பெற முன்னிறுத்தியது என் வாழ்க்கைக்குரிய வருவாய் அதில் வந்தது. அப்பொழுது சங்க ஆய்வுக் களத்தில் மருதம் பற்றி ஆய்வு செய்தேன். அதற்கு முன்பே அகப்பொருள் நூல்கள் எவையும் ஏனோ குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் - பாகுபாடு நூலுக்கு நூல் வேறுபட்டிருப்பதை அறிந்து தெரிந்திருந்த எனக்கு அகப் பொருள் பாடல்கள் அனைத்தையும் இப் பாகுபாட்டில் பிரிக்க வேண்டும் என்ற உந்தாற்றல் என் மனப் பண்ணையில் உயிர்த்தெழுந்தது.

தொகை நூல்களில் முதன்முதல் தொகுக்கப்பட்டது குறுந்தொகையும் அடுத்து நற்றிணையும் ஆகும். எனவே இரு நூல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாடல்கள் காவனத்தில் உலாவும் பல்வகை அஞ்சிறைத்தும்பிகளாக முறையின்றி ஊடுருவியுள்ளன அரிமா நோக்காக நற்றிணையில் ஒவ்வொரு பத்தாம் பாட்டும் பல மருதத்திணையாகிறது பின்னர் தொகுக்கப்பட்ட ஐங்குறுநூறு மருதம் - நெய்தல் - குறிஞ்சி

பாலை - முல்லை என்று கார்கானாற்றாய்த் திசைமாறி சிறகுகின்றன. அக நானூற்றிலோ களிற்றுயானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை யென முப் பிரிவாகி ஒற்றை எண் 1, 3, 5, 7, 9 எனப் பாலைப் பாடல்களும் 4, 14, 24, 34 என 4 - இல் முடியும் முல்லைப் பாடல்களும், 6, 16, 26, 36 என 6-இல் முடியும் பாடல்கள் மருதப் பாடல்களாகவும், 10, 20, 30, 40 - எண் பாடலகள் நெய்தலாகவும் எண் அடிப்படையில் கலம்பகமாகவே உள்ளன. பிற்கால நூலான கலைத்தொகையோ பாலை, குறிஞ்சி, மருதம், முலலை, நெய்தல் எனப் பூமஞ்சரியாக விளங்குகின்றன.

சங்க நூல்களைப் பதிப்பித்த அறிஞர் பெருந்தகைகளும் நூலாராய்ச்சி வல்லுநர்களும் இம் முறை மாறி நிற்பவற்றை ஏனோ எண்ணவில்லை. பேராசிரியர் சு. வையாபுரிப் பிள்ளை துணிந்து சங்கப் பாக்களை ஆசிரியர் அகவரிசையில் முறைப்படுத்தியது போல - சீரிய கூரிய செம்மொழி அறிஞர் பேரா வ சுப மாணிக்கனார் தம் முனைவர் ஆய்வேடான ‘தமிழ்க் காதல்’ ஏட்டில் இம் முறை மாற்றம் பற்றிச் சுட்டிக் காட்டியது பற்றி நேரில் வினவுகையில் நீங்கள் முறைப்படுத்துங்களேன் என்று 1962-லேயே என்னிடம் கூறினார். அவ் வகையில் என்னை முழுமையாகச் செயல்படச் செய்தவர் தோழர் ம இல தங்கப்பா.

ஒவ்வொரு திணைக்கும் நூற்பெயர் - ஆசிரியர் பெயர் பாட்டின் கீழ் தந்துள்ளேன் முதலில் வரிசை எண்ணும் ஒவ்வொரு திணைக்கும் தனித்துத் தந்துள்ளேன் பாடல் ஆசிரியர் பெயர் தெரியாதவிடத்து பாட்டுக்கடியில் உவமையாலோ அருந்தொடராலோ பாடினார் பெயர் சூட்டாமல் ‘பாடினார்?’ என்று வினாக்குறி இட்டுள்ளேன் நற்றிணையில் மட்டுமே பாடினார் பெயர் தெரியாத பாடல்கள் மிக்குள்ளன

நெடுநாளைய என் திட்டத்தை செயல்படுத்தப் போய் நான் இழந்த பேரிழப்பைச சொல்லி மாளாது. அதாவது என் அன்புக்குரிய தோழர் தங்கப்பாவுடன் மடல் தொடர்புகளை இழந்தேன். இப் பணியில் ஒரு வெறியனைப் போல் இருந்ததால் அவரிடமிருந்து ஆறுமடல்களை இழந்தேன். இது ஒரு தனி மாந்தனுக்கு ஏற்பட்ட இழப்பன்று தமிழுக்கும் நாட்டிற்கும் உலகுக்கும் ஏற்பட்ட இழப்பாகும் அவ்விழப்பை என் தொகை வகை - உரைப் பணி ஈடு செய்யுமா என்பது ஐயமே. என் வருவாயையும் இழந்தேன். அது எனக்குப் பேரிழப்பில்லை. நண்பரின் வாழ்வியக்க எண்ணங்களை மடலாகப் பெறாமையே ஈடிலாப பேரிழப்பு

என் இவ இலக்கியப் பணியினை மற்றவரும் வழிகாட்டினால் செய்தல் கூடும். ஆனால், கல்லூரி, பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தொன்னூற்கஞ்சி தடுமாறுளத்தராயினர். வருவாயோ புகழோ பெறமுடியாத பணியென மடியின் மடியில் மகிழ்பவராய உள்ளனா. படடிமன்ற சொற் பொழிவுத் தொழில் வணிகப் பரத்தராக விளங்கும் இரு மனத்தராகவும், தன்மையே விற்கும் வேடிக்கை மாந்தராகவும் 'நாளுக்கொரு பேச்சும், வேளைக்கொரு பேச்சு என வலியுருக்கி நோயின வாயில்களாக வாழ்கின்றனர். எனவே பாடுபட்டுழைக்கும் பண்பிலிகளாயினர்.

இந் நூலைத் தொகை - வகை - உரையுடன் கொண்டு வருவதில் ஓர் ஆர்வமும் அக்கறையும் உண்டு. இதற்கு முன் சங்க இலக்கியத்திற்கு என் உரைகள் வேறு வேறு மாந்தர்களின் பெயரால் வெளிவந்துள்ளன. பெயரிடப் படாமல் மற்றொரு நிறுவனம் அரைகுறையாய் வெளியிட்டது இரண்டாண்டுகளுக்கு நான் புதுக்கிய உரைகள் பணம் தந்தன. ஆனால் இருவர் - மூவர் பெயரில் மலிவு விலையைப் போலவே பிழைகளும் மலிந்து வெளிப்பட்டன. உழைப்புக்குக் கூலி கிடைத்தது அதற்குரிய பேரும் புகழும் யார் யாரோ உரிமை கொண்டாடினர். அதற்காக நான் வருந்தவில்லை ஏனெனில் சங்க இலக்கியம் பரவுவதில் எனக்குள்ள ஈடுபாடே காரணம்

திரை உலகில் பின்னணிப் பாடகர் பெயர் போடப்பட்டாலும் வாய் அசைப்பவரான கதை மாந்தருக்கன்றோ பேரும் புகழும்! பாடு பட்டுப் பயன் விளைவிக்கும் வேளாளரை எவர் நினைக்கின்றனர்? (தேவையும் இல்லை) ஆனால், சிற்றுண்டிப் பேருண்டிச் சாலைகளுக்குத் தானே பெயரும் புகழும் தாயையே மறக்கின்ற உலகத்தில் தந்தையை மறப்பது உலகத்தியற்கைதானே?

* * *

அகப் பாடலகள் அடி மிகமிக முதல் இக உரிப்பொருள்கள் விரி வடைகின்றன அவையே போல் தமிழ் மன்னர்கள், அவர் தம் மற, அறச் செயல்கள் பிற மாந்தர் செயல்கள் தொழில்கள் வரலாறு நானல் வாழ்க்கை ஆகியவற்றின் குறிப்புகள் மிகுகின்றன.

ஆனால் கலித் தொகையிலோ, ஆரியரின் தொன்மச் செய்திகளும், பாண்டியனைப் பாடலிலுமில்லை குறிக்கப்படுகின்றன. ஆனால் எந்தப் பாண்டியன் எனறு ஒரு பத்தியிலுமில்லை. மேலும் மருதத்திலும் வரும பரத்தையர், ஐஙகுறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை

கலித் தொகையில் பரத்தையர் புனலாடலும், தலைவி ஊடலும், எங்கும் சுட்டப் பெறவில்லை. பரிபாடல் இதில் முதன்மை வகிக்கிறது. பரத்தை யர்கள் பெரும்பாலும் பார்பணத்திகளே என்பது என் ஆய்வின் முடிவு.

கலித் தொகை முல்லைத் திணையில் கொல்ஏறு அடக்குதல் வருகின்றது. ஆனால், பிற சங்க அகநூல்களில் மாடுபிடி போர் இல்லை. இது பிற்காலத் தமிழக வாழ்வில் இணைந்தது போலும். இந் நூலின் திணை வரிசைக்கேற்ப ஆய்வு செய்தால் பெருகும் என்பதனை விடுத்து, இத் தொகை - வகை உரை நூலை முறைப்படுத்துங்கால் என்னை இடையறாது ஆக்கப் பணிக்கு ஊக்குவித்த கலைஞன் பதிப்பகம் திரு. மாசிலாமணி அவர்களுக்கும், ஆங்கில அறிஞர் திரு. சகதீசன் அவர்களுக்கும், என் மகன் சிற்பி கோ. வீரபாண்டியனுக்கும் வெளியீட்டாளர் திரு. வேலாயுதம் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. தமிழகம் இப் புதிய வார்ப்பினை ஏற்று பயனடையும் என்பது என் நம்பிக்கை.

சங்கத் தமிழ்ச்சான்றோர் நூற்றொகைத் தந்துவக்கத் தங்கத்தைத் தேடுதல்போல் தம்வாழ்வைத் தாமிழந்து செங்கதிராய்த் தென்தமிழ்ச் செல்வத்தை நானிலத்தில் எங்கும் இருந்தமிழே உன்னால் இருந்தேன். ஓ. தங்கும் உயிர் வானோர் விருந்தமிழ்தம் வேண்டேம்என இங்குழைத் தார்க்கெல்லாம் நன்றி இயம்பிடுவன் பொங்குகடல் வீறலை போல்.

அன்பன்
த. கோவேந்தன்

*காதலினால் உயிர் தோன்றும் - இங்குக்*
*காதலினால் உயிர் வீரத்தில் ஏறும்;*
*காதலினால் அறிவெய்தும் - இங்குக்*
*காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்*

*செவ்விது, செவ்விது, பெண்மை - ஆ!*
*செவ்விது செவ்விது செவ்விது காதல்*
- பாரதி

# பாலை

## ஐங்குறு நூறு

### செலவு அழுங்குவித்தல்

#### 1. பெரிதும் வருந்துவாள்!

மால் வெள்ளோத்திரத்து மை இயில் வால் இணர்,
அருஞ் சுரம் செல்வோர், சென்னிக் கூட்டும்,
அவ் வரை இறக்குவைஆயின்
மை வரை நாட! வருந்துவள் பெரிதே.

– *ஓதலாந்தையார் ஐங்குறுநூறு 301*

*தலைவனை நோக்கி பிரிவுணர்த்தப்பட்ட தோழி, "கரிய மேகம் தவழும் மலை நாட்டை உடையவனே! பெரிய வெண்மையான ஒத்திர மரத்தின் குற்றம் அற்ற வெள்ளிய மலர்க்கொத்தைக் கடப்பதற்கு அரிய பாலை நிலத்திற் செல்பவர் தம் தலையில் அணிந்து கொள்ளும் அழகிய மலையைக் கடந்து செல்வாயாயின், இவள் பெரிதும் வருந்துவாள்!" என்று கூறினாள்.*

#### 2. பிரிந்து செல்லாமை நல்லது

அரும்பொருள் செய் வினை தப்பற்கும் உரித்தே;
பெருந் தோள் அரிவை தகைத்தற்கும் உரியள்;
செல்லாய் ஆயினோ நன்றே –
மெல்லம் புலம்ப! – இவள் அழப் பிரிந்தே. – *ஐங் 302*

*தோழி தலைவனை நோக்கி, "மெல்லம் புலம்ப! பெறுவதற் கரிய பொருள் தேடற்கு நீ செய்யும் வினை முற்றுதலில்லாது தவறவும் கூடும். பெரிய தோளையுடைய அரிவையானவள்*

*நின் பிரிவுக்கு உடன் படாது தடுத்தற்கும் உரியவள்; எனவே, இவள் நின் பிரிவை ஆற்றாது வருந்த நீ பிரிந்து செல்லாது இருந்தால் நன்று!" என்று இயம்பினாள்.*

## 3. உடன் அழைத்துப் போவாய்!

**புதுக் கலத்தஅன்ன கனிய ஆலம்**
**போகில்தனைத் தடுக்கும் வேனில் அருஞ் சுரம்**
**தண்ணிய இனிய ஆக;**
**எம்மொடும் சென்மோ, விடலை! நீயே.** – *ஐங் 303*

*தோழி தலைவனை நோக்கி, "தலைவனே! புதிய மண் கலத்தைப் போன்ற நிறம் பொருந்திய பழங்களையுடைய ஆலமரம் தன்னை அடைந்த பறவையினம் தன்னிடமிருந்து செல்லாமல் தடுக்கும் வேனிலின் வெம்மையுடைய அரிய காடுகள் குளிர்ச்சியையும் இனிமையையும் உடையனவாய் ஆக நீ எம்மையும் உடன் அழைத்துக் கொண்டு போவா யாக!" என்று உரைத்தாள்*

## 4. இவளைப் பிரிந்து செல்லற்க!

**கல்லாக் கோவலர் கோலின் தோண்டிய**
**ஆன்நீர்ப் பத்தல் யானை வவ்வும்**
**கல்லதர்க் கவலை செல்லின், மெல் இயல்**
**புயல் நெடும்கூந்தல் புலம்பும்;**
**வய மான் தோன்றல்! வல்லாதீமே.** – *ஐங் 304*

*தோழி தலைவனை நோக்கி, "வலிமைமிக்க குதிரையை யுடைய தலைவனே! கல்வி இல்லாத கோவலர்கள் தம் கைக் கோலால் தோண்டிய நீர் நிறைந்த பள்ளத்தை யானைகள் கவரும் கற்கள் பொருந்திய கவர்த்த வழியில் நீ சென்றால், மென்மையான தன்மையுடைய இவள் வருந்துவள் இவள் அழ நீ செல்லவதை தவிர்வாய்!" என்றாள்*

## 5. செலவு என்ன பயனைத் தரும்?

**களிறு பிடி தழீஇப் பிற புலம் படராது,**
**பசி தின வருந்தும் பைது அறு குன்றத்துச்,**

சுடர்த் தொடிக் குறுமகள் இனைய,
எனைப்பயம் செய்யுமோ – விடலை! நின் செலவே.?

*– ஐங் 305*

தோழி, "தலைவ, ஆண் யானை தன் பெண் யானையைத் தழுவி, வேனில் வெப்பம் தெறுதலால் உணவொன்றும் பெறலாகாமையால், அது பெறக்கூடிய வேறு புலங்களை நினைத்துச் செல்லுதலும் செய்யாது, பசிநோய் வருத்த வருந்தி வாடும் பசுமையில்லாத மலைக்கு, ஒளிவிடும் வளை அணிந்த இளையவளாகிய இவள் நின் பிரிவைப் பொறுக்க இயலாது அழுது புலம்ப, இவளை நீங்கிச் செல்லும் நின் செலவு என்ன பயனைச் செய்யும்?" என்று தனித்துச் செல்லும் தலைவனிடம் வினவினாள்.

## 6. புல்லாங்குழல் போல் புலம்புவாள்

வெல்போர்க் குரிசில்! நீ வியன் சுரன் இறப்பின்,
பல் காழ் அல்குல் அவ் வரி வாடக்,
குலினும் இனைகுவள் பெரிதே –
விழவு ஒலி கூந்தல் மாஅயோளே. *– ஐங் 306*

தோழி, "வெல்லும் போரை உடைய தலைவனான நீ அகன்ற பாலையைக் கடந்து சென்றதால் பல மணிகள் பொருந்திய மேகலை அணிந்த அல்குலிடத்து அழகிய வரிகள் வாட்டம் அடைய நினது பிரிவாற்றாமையால் மண விழாவைப் போல நல்ல மணம் கமழும் கூந்தலையும் மாமை நிறத்தையும் கொண்ட இவள் வேய்ங்குழல் ஒலிப்பதைப் போன்று பெரிதும் அழுவாள்" என்று அவள் பிரி வாற்றா மையைக் கூறினாள்

## 7. பொருள் நன்றில்லை!

ஞெலி கழை முழங்குஅழல் வயமா வெரூஉம்
குன்றுடை அருஞ் சுரம் செலவு அயர்ந்தனையே;
நன்றுஇல கொண்க! நின் பொருளே –
பாவை அன்ன நின் துணைப் பிரிந்து வருமே. *– ஐங் 307*

தோழி, "கொண்கனே! மூங்கிலால் கடையப்பட்ட கழையில் எழுந்து முழங்கும் தீயை, வன்மையுடைய புலிகள்

*அஞ்சி ஓடும் அரிய காடுகள் பலவும் கடந்து பொருள் செய்யச் செல்ல எண்ணினை பாவை போன்ற நின் துணை வியைப் பிரிதல் செய்தால் அல்லது வாராதாகலான், நின் பொருள் பால் அறம் இல்லை. 'அவளுடன் கூடிச் செய்வதே பொருளாகலின் நீ செல்வதைக் கை விடுக!" என்று தலை வனிடம் கூறினாள்*

## 8. பிரியாதிருத்தல் நல்லது

**பல் இருங் கூந்தல் மெல்லியலோள்வயின்**
**பிரியாய் ஆயினும் நன்றே; விரிஇணர்க்**
**கால் எறுழ் ஒள் வீ தாஅய**
**முருகு அமர் மா மலை பிரிந்தெனப் பிரிமே.** ***– ஐங் 308***

*தோழி, "ஐம்பாலான கரிய கூந்தலையும் மென்மையான இயல்பையும் உடைய தலைமகளைப் பிரியாது ஒழுகுவை யாயின் நன்று; பொருட்குப் பிரிவதே பொருள் எனக் கொண்டால் மலர்ந்த கொத்துகள் பொருந்திய வலிய காலை யுடைய எறுழ மரத்தின் பரந்துள்ள முருகன் விரும்பும் இப் பெரிய மலையில் இப் பருவத்தில் எங்களைவிட்டுப் பிரிக" என்று வருந்தி கூறினாள்.*

## 9. சிறுவன் முறுவலின் இனிதோ செய்பொருள்!

**வேனில் திங்கள் வெஞ் சுரம் இறந்து**
**செலவு அயர்ந்தனையால் நீயே; நன்றும்**
**நின் நயந்துஉறைவி கடுஞ் சூல் சிறுவன்**
**முறுவல் காண்டலின், இனிதோ –**
**இறு வரை நாட! நீ இறந்து செய்பொருளே?** ***– ஐங் 309***

*தோழி பொருட்காகப் பிரியும் தலைவனை நோக்கி, "முறிந்த மலைப் பக்கத்தை உடைய நாடனே, நீ வேனிற் பருவத்தில் கொடிய பாலையைக் கடந்து பொருள் தேடப் பிரிய எண்ணினால், நீ பிரிந்து செய்யும் அந்தப் பொருள், உன்னைப் பெரிதும் விரும்பி வாழும் இவளுடைய முதற் சூலில் தோன்றிப் பிறந்த சிறுவனின் இள நகையைக் காண்பதால் பெறக்கூடிய இன்பத்தை விடப் பெரிதாகுமோ?" என்று வினவினாள்*

### 10. நெற்றி அழகு மீளாதே!

பொலம் பசும் பாண்டில் காசு நிரை அல்குல்,
இலங்கு வளை மென் தோள்,இழை நிலை நெகிழப்
பிரிதல் வல்லுவை யாயின்
அரிதே விடலை – இவள்! ஆய்நுதற் கவினே! – *ஐங் 310*

*தோழி தலைவனை நோக்கி, "தலைவ, பொன்னாற் செய்யப்பட்ட பசுமையான வட்டமாகச் சுற்றி, மணிகள் கோத்து அணிந்த அல்குலையும், விளங்கும் வளையலையும் மென்மையான தோளையும் உடைய இவள் அந்த அணிகள் நின்ற நிலையினின்று கழன்று நீங்க, நினது பிரிவால் இவளிடத்தினின்று நீங்கிக் கெடும் சிறு நெற்றியின் அழகு மீண்டும் பெறுதவற்கு அரிது" என்று பொருள் திரட்டப் போதல் தவிர்க்கச் சொன்னாள்*

## செலவு நிலை

### 11. காலம் நீட்டிப்பரோ!

வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும்,
ஆரிடைச் செல்வோர் ஆறு நனி வெரூஉம்
காடு இறந்தனரே காதலர்;
'நீடுவர் கொல்'என நினையும், என் நெஞ்சே! – *ஐங் 311*

*தலைமகள் தோழியை நோக்கி, "காட்டில் உள்ள வேங்கை மரத்தில் ஏறிப் பூக் கொள்பவர், பஞ்சுரம் என்னும் பண் எனப் பாடுவாராயினும், அரிய வழியில் செல்பவர் அது கேட்பினும், அந்த வழியில் செல்பவர்க்கு அஞ்சும் காட்டை, நம் காதலர் முழுதும் கடந்து சென்றனர் ஆதலால் என் மனம், அவரை விரைவாக வாராமல் காலம் நீட்டிப்பாரோ என எண்ணுகின்றது" என்று ஆற்றாது கூறினாள்*

### 12. அறம் நிறைந்து ஓங்குக!

அறம் சாலியரோ! அறம் சாலியரோ!
வறன் உண்டாயினும், அறம் சாலியரோ!
வாள் வனப்புஉற்ற அருவிக்
கோள் வல் என்னையை மறைத்த குன்றே. – *ஐங் 312*

*தலைவி, "ஒளியால் அழகுடைய அருவிகளையுடையதாய், உடன் போக்கில் எங்களைத் தொடர்ந்து வந்த நம் உறவினர் அறியாதபடி வலிமை மிக்க என் தலைவனை மறைத்து உதவிய குன்றம், எங்கும் வற்கடம் உண்டாயினும், நீர் வற்கடம் ஏற் படாமல் அறம் நிறைந்து மிக ஓங்குக" என்று கூறினாள்.*

## 13. செவிலி ஆற்றாமை!

தெறுவது அம்ம, நும் மகள் விருப்பே –
உறு துயர் அவலமொடு உயிர் செலச் சாஅய்ப்,
பாழ்படு நெஞ்சும் படர் அடக் கலங்க,
நாடு இடை விலங்கிய வைப்பின்
காடு இறந்தனள், நம் காதலோளே! – *ஐங் 313*

*நற்றாய் தோழியை நோக்கி, "மிக்க துயரம் காரணமாகத் தோன்றும் அவலத்தால் உயிர் நீங்குமாறு மெலிந்து பாழ் படும் என் நெஞ்சம், தன்னை நினைப்பதால் வருத்தம் மிகுந்து கலக்கத்தை அடைய, நாடுகள் பல இடையிட்ட இடத்தை யுடைய காடுகளைக் கடந்து என் மகள் அன் பனுடன் போனாள். ஆதலால் அவள்மீது உண்டான என் காதல் துன்பப் படுத்தலாயிற்று" என்றாள்.*

## 14. அரிய காட்டினால் அவலம் கொள்கிறேன்

'அவிர்தொடி கொட்ப, கழுது புகவு அயரக்,
கருங் கண் காக்கையொடு கழுகு விசும்பு அகவச்,
சிறு கண் யானை ஆள் வீழ்த்துத் திரிதரும்
நீள் இடை அருஞ் சுரம்' என்ப – நம்
தோள்இடை முனிநர் சென்ற ஆறே. – *ஐங் 314*

*தலைவி தோழியை நோக்கி, "தோழியே, விளங்கும் தொடியை அணிந்த பேய்மகள் ஆறலைக்கப்பட்ட இடத்தில் செத்தவரின் கரிய தலையைத் தேடித் திரிய, அவள் ஏறி யூர்ந்து வந்த கழுது என்ற பேய், அவர்தம் நிணமாகிய உணவு தேடி உண்ண, எஞ்சியவற்றை உண்ணும் கரிய கண் களையுடைய காக்கையும் கழுகும் வானத்தில் ஆரவாரம் இட்டுத் திரிய, சிறு கண்களையுடைய யானை, எதிர்ப்பட்ட*

மறவரைக் கொன்று திரியும் நீண்ட இடத்தையுடைய கடப்பதற்கு அரிய காடு என்று கூறுவர் நம் தோளிடத்து விருப்பம் இல்லாதவர் சென்ற நெறியை. அதைக் கேட்டு என் மனம் கவலை கொள் கின்றது" என்று கூறினாள்.

## 15. நெடுங்கண் அழுகை அறியார்!

**பாயல் கொண்ட பனி மலர் நெடுங் கண்**
**பூசல் கேளார் சேயர் என்ப –**
**இழை நெகிழ் செல்லல் உறீஇ,**
**கழை முதிர் சோலைக் காடு இறந்தோரே.** *– ஐங் 315*

தோழி, "தன்னால் துறக்கப்பட்டார்க்குத் தன் பிரிவால் அணிகள் நெகிழ்ந்து ஓடவல்ல துன்பத்தை அடையச் செய்து மூங்கில்கள் பொருந்தியுள்ள சோலைகளையுடைய காடுகளைக் கடந்து, மிக்க தொலைவில் சென்றுள்ளவரான காதலர் பிரிந்த பொழுது அயர்ந்து உறக்கம் கொண்டமை பொருட்டுக் குளிர்ந்த மலர் போல் நீண்ட நின் கண்களால் விளையும் துன்பத்தைக் கேளார். கேட்பார் எனக் கலங்குதலால் என்ன பயன்?" சொல்லாமல் பிரிந்த தலைவன் வேறு பாட்டைக் கூறினாள்.

## 16. ஆற்றுவது எப்படி?

**பொன் செய் பாண்டிற் பொலங்கலம் நந்தத்,**
**தேர் அகல் அல்குல் அவ் வரி வாட,**
**இறந்தோர் மன்ற தாமே – பிறங்கு மலைப்**
**புல் அரை ஓமை நீடிய**
**புலி வழங்கு அதர கானத்தானே.** *– ஐங் 316*

தோழி, "உயர்ந்த மலைப் பக்கத்தில் புல்லென்ற அடிப் பகுதியை உடைய ஓமை மரங்கள் நிறைந்த புலிகள் திரியும் காடு அதில் பொன்னால் செய்யப்பட்ட பாண்டில் என்ற பொன்னணி நெகிழ, தேரின் தட்டைப் போன்ற அகன்ற அல் குலில் கிடந்த அழகிய வரிகள் வாட, நம்மைப் பிரிந்து சென்றார் ஆகலான் நாம் ஆற்றுவது யாங்ஙனம்? அறியேன்" என்று தலைவன் பிரிவின் கண் உரைத்தாள்.

## 17. நெஞ்சம் நீடிய பொருள்!

சூழ்கம் வம்மோ – தோழி! பாழ்பட்டுப்
பைது அற வெந்த பாலை வெங் காட்டு
அருஞ் சுரம் இறந்தோர் தேஎத்துச்

சென்ற நெஞ்சம் நீடிய பொருளே. – *ஐங் 317*

*தலைவி, "தோழியே, பாழ்மை அடைந்து பசுமை இல்லாது வெந்து கரிந்து பாழாகிய கொடிய காட்டில் உள்ள அரிய சுரத்தைக் கடந்து சென்ற தலைவரிடம், தூதாகச் சென்ற என் நெஞ்சம் விரைந்து திரும்பி வரவில்லை. காலம் நீள்கின்றது. இதன் பொருள் தெரிந்திலது ஆகலின் அதை ஆராய்வோம் வருவாய்!" என்று தோழியிடம் உரைத்தாள்.*

## 18. விருப்பை அழித்தார்!

ஆய்நலம் பசப்ப, அரும் படர் நலிய,
வேய் மருள் பணைத்தோள் வில் இழை நெகிழ,
நசை நனி கொன்றோர் மன்ற – விசை நிமிர்ந்து
ஓடு எரி நடந்த வைப்பின்,
கோடு உயர் பிறங்கல் மலை இறந்தோரே. – *ஐங் 318*

*தலைவி, "ஓசை மிக்குப் பலவிடத்தும் பரவிப் போகும் தீ எரிந்த இடத்தை உடைய முடிகளால் உயர்ந்து செறிந்த மலையைக் கடந்து சென்ற தலைவர், அழகிய என் நலம் கெட்டுப் பசலை பாயவும் அவர்மேல் உள்ள நினைவு வருத்துகிறது. ஆதலால் மூங்கில் போல் பருத்த தோளிடத்து அணிந்த ஒளி வீசும் மணிகள் கழன்று நீங்கவும் பிரிந்து, தன் உள்ளத்தில் எழும் விருப்பத்தைப் பெரிதும் அழித்து விட்டார்!" என்று தலைவன் பிரிந்த போது சொன்னாள்.*

## 19. அவர் நம்மை மறந்தார்

கண் பொர விளங்கிய கதிர் தெறு வைப்பின்,
மண் புரை பெருகிய மரம் முளி கானம்
இறந்தனரோ நம் காதலர்?
மறந்தனரோதில் மறவா நம்மே. – *ஐங் 319*

"கண் ஒளியுடன் மாறுபடும் வெயில் மிக வருத்தும் இடம் உடையதாய், மண் மேடுகள் பெருகிய, மரங்கள் கரிந்து உலர்ந்த காட்டை நம் காதலர் கடந்து சென்றாரோ? தம்மை மறக்காமல் வாழும் அவர் நம்மை மறந்தாரோ! மறந்தவரே ஆவார்" என்று தலைமகள் தலைமகன் பிரிந்த காலத்தில் தோழிக்குச் சொன்னாள்

### 20. தாங்கரிய நோய்!

**முள் அரை இலவத்து ஒள் இணர் வான் பூ**
**முழங்கழல் அசைவளி எடுப்ப, வானத்து**
**உருமுப் படு கனலின் இரு நிலத்து, உறைக்கும்**
**கவலை அருஞ் சுரம் போயினர் –**
**தவல் இல் அரு நோய் தலைத்தந்தோரே.** *– ஐங் 320*

*தலைவி, "முள்கள் பொருந்திய அடிமரத்தையுடைய இலவ மரத்தின் ஒள்ளிய கொத்தில் மலர்ந்த வெண்மை யான மலர்கள், ஒலிக்கும் தீயையுடைய அலைப்பதற்கென எழுந்த காற்று மிக்கு வீசுதலால், வானத்து இடியில் பிறக்கும் நெருப்பைப் போல் பெரிய நிலத்தில் உதிரும் கவடுபட்ட வழியையுடைய அரிய காட்டைக் கடந்து சென்றாராயினும் நமக்குக் கெடாத பொறுத்தற்கு இயலாத நோயைத் தந்தாரே" என்றாள்*

## இடைச்சுரம்

### 21. அவள் அருங்குணம் வருத்துகின்றது!

**உலறு தலைப் பருந்தின் உளி வாய்ப் பேடை**
**அலறு தலை ஓமை அம் கவட்டு ஏறிப்**
**புலம்பு கொள விளிக்கும் நிலங் காய் கானத்து,**
**மொழி பெயர் பல் மலை இறப்பினும்,**
**ஒழிதல்செல்லாது – ஒண்டொடி குணனே.** *– ஐங் 321*

*தலைவன், "உலர்ந்த தலையையுடைய பருந்தின் உளி போல் கூர்மையான வாயையுடைய பெண்பருந்து, இலை இல்லாமல் உலர்ந்து விரிந்து தோன்றும், ஓமை என்ற மரத்தின் அழகிய கவைக்கிளையில் இருந்து துன்பம்*

அடைந்து இசைக்கும், வறண்ட பாலை நிலத்தையும் வேறு மொழியே பேசும் மக்கள் வாழும் பல மலைகளையுடைய நாடுகளையும் கடந்து சென்றாலும், ஒளியுடைய தொடி உடையாளின் காதல் கெழுமிய குணம் நினைவில் தோன்றி வருத்துகின்றது இனிச் செய்வது என்னோ?" என்று இடை நிலத்து கலங்கிக் கூறினான்

## 22. அவளை நினைந்தால் குளிர்ச்சி

நெடுங் கழை முளிய வேனில் நீடிக்,
கடுங் கதிர் ஞாயிறு கல் பகத் தெறுதலின்,
வெய்ய ஆயின, முன்னே, இனியே,
ஒள் நுதல் அரிவையை உள்ளுதொறும்
தண்ணிய ஆயின, சுரத்திடை ஆறே. — *ஐங் 322*

"ஒளிமிகுந்த நெற்றியையுடைய அரியவளைப் பிரிந்து செல்லத் துணிந்த காலத்துச் சுரத்திடையே உள்ள வழிகள், நீண்ட மூங்கில்கள் உலரும்படி வேனில் நீளுதலால் மிக்க கதிர்களையுடைய ஞாயிறு, கற்களும் பிளந்திடுமாறு காய்வதால், முன்பு கொடியனவாய் விளங்கின. அவளைப் பிரிந்து இச் சுரத்திடை அடையும் இப்பொழுதில், அவை, அவளை நினைக்குந்தோறும் குளிர்ந்தனவாய் உள்ளன" என்று தலைவன் இடை வழியில் அவளை நினைந்து சொன்னான்.

## 23. காதலியின் பண்புகள் வழியைக் கடந்துவந்தன!

வள் எயிற்றுச் செந்நாய் வயுவு உறு பிணவிற்குக்
கள்ளிஅம் கடத்திடைக் கேழல் பார்க்கும்
வெஞ் சுரக் கவலை நீந்தி,
வந்த – நெஞ்சம்! நீ நயந்தோள் பண்பே. — *ஐங் 323*

தலைவன், "நெஞ்சே! நீ காதலிக்கும் தலைமகளின் பண்புகள், கூர்மையான பற்களையுடைய செந்நாய் கருவுரு கால நோய் கொண்டு வருந்தும் தன் பெண் நாய் பொருட்டுக் கள்ளி நிறைந்த சுரத்திடையே பன்றியின் வரவை எதிர் பார்த்திருக்கும் கொடிய காட்டில் கவர்த்த வழிகள் பலவும் கடந்து வந்தன" என்று தன் நெஞ்சுக்குச் சொன்னான்

## 24. தலைமகளைத் கண்டு அமைந்தேன்

**எரி கவர்ந்து உண்ட என்றூழ் நீளிடைச்**
**சிறிது கண்படுப்பினும், காண்குவென் மன்ற —**
**நள்ளென் கங்குல், நளி மனை நெடு நகர்**
**வேங்கை வென்ற சுணங்கின்**
**தேம் பாய் கூந்தல் மாஅயோளே! — ஐங் 324**

*தலைவன் தோழியை நோக்கி, "காட்டுத் தீ தோன்றிப் பகலே அல்லாது இரவிலும் எரித்துச் செல்ல, பகலில் வெயில் மிக்கு வருத்தும் நீண்ட சுரத்தில், யான் சற்றுக் கண்ணயர் வேன் ஆனாலும், அக் கண்ணயரும் சிறு பொழுதில், 'நள்' என்ற ஓசையுடைய இரவுப் போதில், பெரிய மனையில் நின்ற நெடிய இல்லத்தில் நிறத்தால் வேங்கை மலர்போல் வீறு பெற்ற தேமல்களையும், தேன் சிந்தும் கூந்தலையும் மாமை நிறத்தையும் உடைய தலைமகளைத் தெளிவாகக் கண்டு அமைந்திருந்தேன். ஆதலால் இவள் குணத்தை நான் மறக்கும் படி இல்லை!" என்றான்.*

## 25. காதலியால் வெம்மை இல்லை

**வேனில் அரையத்து இலை ஒலி வெரீஇப்,**
**போகில் புகா உண்ணாது, பிறிது புலம் படரும்**
**வெம்புஅலை அருஞ் சுரம் நலியாது —**
**எம் வெங் காதலி பண்பு துணைப் பெற்றே. — ஐங் 325**

*தலைவன் தோழியை நோக்கி, "வேனிற் காலத்தில் உண்டான சூறைக் காற்றால் அலைப்புண்ட அரச மரத்தின் இலைகள் அசைவதால் ஏற்பட்ட ஓசையை அஞ்சிப் பறவை கள் தாம் இரைதேடி உண்பதைச் செய்யாமல் வேற்று நிலங்களை எண்ணிச் செல்லும் வெம்மை மிக்க அரிய சுரம், எங்களால் விரும்பப்பட்ட காதலியின் குணங்களைத் துணை யாகப் பெற்று யாம் சென்றோம் ஆகலின் எம்மை வெம்மை வருத்தவில்லை!" என்று கூறினான்.*

## 26. என்னவள் பண்பு இனிது

**அழல் அவிர் நனந் தலை நிழலிடம் பெறாது,**
**மட மான் அம் பிணை மறியொடு திரங்க,**

நீர் மருங்கு அறுத்த நிரம்பா இயவின்
இன்னாமன்ற சுரமே;
இனிய மன்ற, யான் ஒழிந்தோள் பண்பே! — *ஐங் 326*

*"வெம்மை மிக்க பாலை நிலத்தில், நிழல் உள்ள இடம் பெற முடியாமையால் மடமை பொருந்திய மானின் அழகிய பெண்மான் தன் மறியுடன் கூடி வருந்த மழை நீரால் பக்கம் அலைக்கப்பட்டு மிகவும் சிறிய வழியையுடைய சுரம் தெளிவாகத் துன்பத்தை அளிப்பனவே ஆகும் ஆயினும் என் தலைவியின் பண்புகள் நினைக்க இன்பம் அளிப்பனவாம்" என்று தலைவன் தன் நெஞ்சுக்குள் சொன்னான்*

## 27. பண்புகள் செம்மை செய்தன

பொறி வரித் தடக் கை வேதல் அஞ்சிச்,
சிறு கண் யானை நிலந் தொடல்செல்லா;
வெயில் முளி சோலைய, வேய் உயர் சுரனே;
அன்னஆர் இடையானும்,
தண்மை செய்த இத் தகையோள் பண்பே! — *ஐங் 327*

*"புள்ளிகளையும் வரிகளையும் உடைய பெரிய கை வேவதற்கு அஞ்சிச் சிறிய கண்களையுடைய யானைகள் நிலத்தைத் தொட இயலாத வெயிலால் உலர்ந்த சோலைகளையுடையவை மூங்கில் உயரமாய் வளர்ந்த சுரங்கள் இத் தன்மையுடைய செல்வதற்கு அரிய நெறியிலும் இவ் அழகு உடையவளின் பண்புகள் வெப்பம் தோன்றாதவாறு குளிர்ச்சியைச் செய்தன" எனத் தலைவன் தலைவியின் குணம் நினைந்து உரைத்தான்.*

## 28. குளிர்ச்சியும் வெம்மையே!

நுண் மழை தளித்தென நறு மலர் தாஅய்த்
தண்ணிய ஆயினும், வெய்ய மன்ற –
மட வரல் இன்துணை ஒழியக்
கடம் முதிர் சோலைய காடுஇறந்தேற்கே. — *ஐங் 328*

*"மடப்பம் உடைய என் இனிய துணைவியைப் பிரிந்து சுரத்தையும் அதைச் சூழ்ந்த மரச்செறிவுகளையும் உடைய காட்டைக் கடந்து வந்தேன். இத்தகைய எனக்கு நுட்பமான*

மழைத் துளி பெய்தலால் நறிய மலர்கள் உதிர்ந்து பரந்து குளிர்ந்து தோன்றினாலும் எனக்கு அவை வெய்யவாகவே விளங்குகின்றன" என்று உடன் இருந்தவரிடம் கூறினான் தலைவன்.

## 29. காட்டைக் கடக்காது மீளுமோ?

**ஆள் வழக்கு அற்ற பாழ்படு நனந் தலை**
**வெம் முனை அருஞ் சுரம் நீந்தி, நம்மொடு**
**மறுதருவதுகொல் தானே – செறிதொடி**
**கழிந்து உகு நிலைய ஆக**
**ஒழிந்தோள் கொண்ட, என் உரங்கெழு, நெஞ்சே.**

*– ஐங் 329*

*"கைகளில் பொருந்தி நின்ற வளைகள் நெகிழ்ந்து நீங்கும் நிலைமையை அடைய, மனையில் பிரிந்து தங்கும் தலைமகளால் கொள்ளப்பட்ட என் திண்மை பொருந்திய நெஞ்சம், மக்கள் நடமாட்டம் இல்லாத பாழான இடத்தையுடைய கொடிய ஆறலைப்போர் இடமான அரிய காட்டைக் கடந்து நம்முடன் வராது மீண்டு செல்வதை எண்ணுமோ? இது என்னே!" என்று தலைவன் தன் நெஞ்சை நொந்து சொன்னான்.*

## 30. செல்லலை ஒழிக!

**வெந் துகள் ஆகிய வெயில் கடம் நீந்தி,**
**வந்தனம் ஆயினும், ஒழிக இனிச் செலவே –**
**அழுத கண்ணள் ஆய்நலஞ் சிதையக்**
**கதிர் தெறு வெஞ் சுரம் நினைக்கும்**
**அவிர் கோல் ஆய்தொடி உள்ளத்துப் படரே.** *– ஐங் 330*

*தலைவன், "நெஞ்சே! விளக்கமும் திரட்சியும் பொருந்திய ஆராய்ந்து கொள்ளப்படும் தொடியையுடையவளின் மனத்தில் உள்ள நினைவு, கண்களில் நீர் வடியவும், அழகு புனையப்பட்ட மேனி நலம் கெட்டு நீங்கவும், வெயில் சுடும் கொடிய சுரத்தில் நம் செலவின் மேற்றாய் அவளை வருத்தும் ஆதலால் வெம்மையான துகள் மிக்க வெயில் காயும் காட்டைக் கடந்து வந்திருக்கிறோம் எனினும், மேலே செல்வதைக் கை விடுக!" என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறினான்*

## தலைவி இரங்குதல்

### 31. துன்பம் தரும் வழி

அம்ம வாழி, தோழி! அவிழ் இணர்க்
கருங் கால் மராஅத்து வைகு சினை வான் பூ
அருஞ் சுரம் செல்லுநர் ஒழிந்தோர் உள்ள,
இனிய கமழும் வெற்பின்
இன்னாது என்பஅவர் சென்ற ஆறே. — *ஐங் 331*

*தலைவி, "தோழி, கேட்பாய் மலர்ந்த மலர்க்கொத்து களையுடைய கரிய அடியைப் பெற்ற வெண் கடம்ப மரத்தில் உள்ள கிளையின் பூத்த வெண் மலர்கள், போவதற்கு அரிய சுரத்தைக் கடந்து செல்வோர் கண்டு தாம் பிரிந்து வந்த தலைவியரை நினைந்து அழுங்குமாறு இனிய மணம் நாறும் மலையில் நம் தலைவர் சென்ற நெறி துன்பம் தரும் இயல் பினது என்று பலரும் கூறுவர்" என்று தலைவனைப் பிரிந்த வேளையில் சொன்னாள்.*

### 32. பண்பற்ற மாக்கள்

அம்ம வாழி, தோழி! என்னதூஉம்
அறன் இல மன்ற தாமே — விறன்மிசைக்
குன்று கெழு கானத்த பண்பு இல் மாக் கணம்
'கொடிதே காதலிப் பிரிதல்;
செல்லல், ஐய' என்னாதவ்வே. — *ஐங் 332*

*தலைவி தோழியை நோக்கி, "தோழியே, கேள். சிறந்த உச்சியை உடைய குன்றுகள் பொருந்திய காட்டில் உள்ள நல்ல பண்பு இல்லாத விலங்கின் கூட்டம் சிறிதும் அறிவற்ற தாகும். அதுதான், 'ஐயனே,காதலியைப் பிரிந்து செல்வது கொடிது!' என்று தலைவனுக்குக் கூறவில்லையே!" என்று மனம் இரங்கிச் சொன்னாள்.*

### 33. பறவைகளை நொந்தது

அம்ம வாழி, தோழி! யாவதும்
வல்லாகொல்லோ தாமே — அவண

கல்லுடை நல்நாட்டுப் புள்ளினப் பெருந் தோடு,
'யாஅம் துணை புணர்ந்து உறைதும்;
யாங்குப் பிரிந்து உறைதி' என்னாதவ்வே. – *ஐங் 333*

*தலைவி, "தோழியே, கேட்பாயாக. அவ் இடத்தாகிய மலைகளையுடைய நல்ல நாட்டில் பெருந்தொகையாய் உள்ள பறவைகள், நம் தலைவரை நோக்கி, 'ஐய, யாம் எம் துணையின் பிரியாது கூடியிருக்கின்றோம் இல்லையா, அங்ஙனமிருக்க நீ இவ்வாறு பிரிந்து வந்தனையோ?" என்று சொல்லித் தலைவன் செலவைத் தடுக்காது ஒழிந்தன. ஆதலால் அவை சிறிதும் வன்மையுடையன அல்ல போலும்," என்று சொன்னாள்*

## 34. கல் நெஞ்சினர்!

அம்ம வாழி, தோழி! சிறியிலை
நெல்லி நீடிய கல் காய் கடத்திடைப்,
பேதை நெஞ்சம் பின் செலச், சென்றோர்
கல்லினும் வலியர்மன்ற –
பல் இதழ் உண்கண் அழப் பிரிந்தோரே. – *ஐங் 334*

*தலைவி, "தோழியே! கேள். சிறிய இலைகளை உடைய நெல்லி மரங்கள் மிக்க மலையானது, உருகும்படி காய்கின்ற வெயில் வருத்தும் காட்டில் அறியாமையுடைய என் மனம் தன் பின் தொடர்ந்து வரப் பிரிந்து சென்றார் தலைவர். அவர் பல இதழ்களையுடைய மலர் போன்ற மை பூசப்பட்ட கண்கள் அழுது நீரைச் சிந்தப் பிரிந்தார் ஆதலால் அவர் கல்லை விட வன்நெஞ்சமுடையவர்!" என்று தன் தோழியை நோக்கிச் சொன்னாள்*

## 35. காதலர் சென்ற வழி கடிது!

அம்ம வாழி, தோழி! நம்வயின்
நெய்த்தோர் அன்ன செவிய எருவை
கற்புடை மருங்கில் கடு முடை பார்க்கும்
காடு நனி கடிய என்ப –
நீடி இவண் வருநர் சென்ற ஆறே - *ஐங் 335*

*தலைவி தன் தோழியை நோக்கி, "தோழியே, கேள். அரத்தத்தைப் போல் சிவந்த செவியையுடைய கழுகுகள் கற்களின் பக்கத்தில் கிடக்கும் மிக்க புலால் நாற்றத்தையுடைய ஊன் துண்டுகளைப் பார்க்கும் காடுகள் மிக்க அச்சம் பொருந்தினவாம் என்று நம்மிடம் உரைப்பர் ஆதலால் விரைய வராது காலம் தாழ்த்து வரக்கூடியவராய் நம் காதலர் சென்ற வழிகள் அக் காடுகளிடம் உள்ளன ஆதலால் நான் வருந்துவேன்" என்று உரைத்தாள்.*

## 36. தலைவர் செயலைப் பார்த்தாயா?

**அம்ம வாழி, தோழி! நம்வயின்**
**பிரியலர் போலப் புணர்ந்தோர்மன்ற –**
**நின்றதில் பொருட்பிணி முற்றிய**
**வென்றூழ் நீடிய சுரன் இறந்தோரே.** – *ஐங் 336*

*தலைவி, "தோழியே! கேள். நிலைபேறில்லாத பொருள் தேடப் பிரிந்து செய்யும் வினையை முடித்தற்கு வெயில் கருகிச் சுடும் காட்டைக் கடந்து போன நம் தலைவர், பண்டு நம்மைக் கூடியபோது பிரியாதவர் போல் கூடி மகிழ்ந்தார்! அவர் செயல் இருந்தவாறு என்னே!" என்றாள்.*

## 37. தழுவலினும் பொருள் இனியதோ?

**அம்ம வாழி, தோழி! நம்வயின்**
**மெய் உற விரும்பிய கை கவர் முயக்கினும்**
**இனியமன்ற தாமே –**
**பனி இருங் குன்றம் சென்றோர்க்குப் பொருளே!** – *ஐங் 337*

*தலைவி, "தோழியே! கேள். குளிர்ச்சியுடைய பெரிய குன்றத்தைக் கடந்து பொருள் தேடப் பிரிந்த நம் காதலர்க்கு அப் பொருள்கள் நம்மிடம் மெய்யுற விரும்பிக் கையால் சேர முயங்கும் முயக்கத்தை விட இன்பம் மிக அளிப்பன வாகும். இல்லையேல், பிரிவாரா அவர்?" என்று தோழியை நோக்கிச் சொன்னாள்.*

## 38. கூடாத காலத்தில் தலைவர் பிரிந்தார்!

**அம்ம வாழி, தோழி! சாரல்**
**இலை இல மலர்ந்த ஒங்கு நிலை இலவம்**

மலை உறு தீயின் சுரமுதல் தோன்றும்
பிரிவுஅருங் காலையும், பிரிதல்
அரிது வல்லுநர் – நம் காதலோரே! – ஐங் 338

*தலைவி, "தோழியே, கேள் நம் தலைவர் மலைச் சாரலில் இலை உதிர்ந்து மலர்ந்து உயர்ந்து தோன்றும் நிலையை யுடையது இலவ மரம். அம் மலையில் தோன்றுகின்ற தீயைப் போல் காட்டு வழியில் தோன்றும் பிரிவதற்கு அரிய காலத்திலும்கூட அரிதாய்ப் பிரிதலில் வல்லவர் ஆயினர்" என்றாள்.*

## 39. காதலர் நாட்டில் மாலை இல்லையோ?

அம்ம வாழி, தோழி! சிறியிலைக்
குறுஞ் சினை வேம்பின் நறும் பழம் உணீஇய
வாவல் உகக்கும் மாலையும்
இன்றுகொல், தோழி! அவர் சென்ற நாட்டே? – ஐங் 339

*தலைவி, "தோழியே, கேள். சிறிய இலைகளையும் குறுகிய கிளைகளையும் உடைய வேம்பின் இனிய பழத்தை உண்டற்கு வெளவால்கள் உயரப் பறக்கும் மாலைக் காலம் காதலை யுடைய நம் தலைவர் சென்ற நாட்டில் இல்லை போலும்! இருப்பதாயின் இது நாம் குறித்த பருவம் எனக் கொண்டு வாராது இருக்க மாட்டாராதலால்!" என்று மாலைப் பொழுது கண்டு கூறினாள்.*

## 40. நினைதற்குரிய தகுதியை இழந்தோமோ?

அம்ம வாழி, தோழி! காதலர்
உள்ளார்கொல்? நாம் மருள் உற்றனம்கொல்?
விட்டுச் சென்றனர் நம்மே –
தட்டைத் தீயின் ஊர் அலர் எழவே. – ஐங் 340

*தலைவி, "தோழியே! கேள் காதலர் நம்மை ஆற்றி இருத்தற்குரியவற்றைக் கூறிப் பிரிந்து சென்றாராக ஊரில் மூங்கில் காட்டில் உண்டான தீயைப்போல் அலர் எழுந்த தால் நாம் ஆற்றாமையுடையேம் என்பதை அறியாரோ? அன்றி அவர் நினைத்தற்குரிய தகுதியை நாம் இழந்து விட்டோமோ? கூறுக!" என்று காலம் நீட்டித்ததற்குத் தோழிக்குச் சொல்லினாள்*

## இன் இளவேனில்

### 41. வருவேன் என்றார் வரவில்லையே!

அவரோ வாரார்; தான் வந்தன்றே –
குயிற் பெடையின் குரல் அகவ,
அயிர்க் கேழ் நுண் அறல் நுடங்கும் பொழுதே! – *ஐங் 341*

*தலைவி, "பெட்டைக் குயில் தன் இனிய குரல் எடுத்துப் பாட அயிரின் நிறம் உடைய நுண்ணிய மணல் காற்றால் அசைந்து குவியும் பெரும்பொழுதான இளவேனில் வந்ததே அன்றி அப் பருவத்தே வருவேன் என்று குறித்துச் சென்ற நம் தலைவர் வாரார் ஆனார் எனவே, யான் எங்ஙனம் ஆற்றுவேன்?" எனக் கூறினாள்.*

### 42. வேனில் வந்ததும் காதலர் வரவில்லை!

அவரோ வாரார்; தான் வந்தன்றே –
சுரும்பு களித்துஆலும் இருஞ் சினைக்
கருங் கால் நுணவம் கமழும் பொழுதே! – *ஐங் 342*

*தலைவி, "வண்டுகள் தேனையுண்டு ஒலிக்கும் பெரிய கிளைகளையும் கரிய அடியையும் உடைய நுணாமரம் அதில் மலர்கள் மலர்ந்து மணம் கமழ்கின்றன. இவ் இயல்பு வாய்ந்த இன்னிளவேனிற்பருவமும் வந்தது. ஆனால் இப் பருவத்தில் வருவேன் என்று தெளியச் சொல்லிப் பிரிந்தவர் வரவில்லை," என்று வருந்திச் சொன்னாள்*

### 43. இளவேனிற்பருவத்தில் வரவில்லை!

அவரோ வாரார்; தான் வந்தன்றே –
திணி நிலைக் கோங்கம் பயந்த
அணி மிகு கொழு முகை உடையும் பொழுதே! – *ஐங் 343*

*தலைவி, "திண்மையான நிலையையுடைய கோங்க மரம் அரும்பிய அழகு மிகுந்த கொழுவிய அரும்பு கட்டு அவிழ்ந்து மலரும் இளவேனிற் பருவம் வந்ததே அல்லாது அப் பருவத்தில் மீண்டு வருவேன் என்று கூறிச் சென்ற காதலர் வரவில்லையே" என்று கூறி மனம் இரங்கினாள்.*

## 44. இளவேனில் வந்தும்! அவர் வரவில்லை!

அவரோ வாரார்; தான் வந்தன்றே –
நறும் பூங் குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே! – *ஐங் 344*

*தலைவி, "நறுமணப் பூக்களையுடைய குரவ மரம் காய்த்த பாவையைக் கொய்யும் பருவமாகிய இளவேனில் வந்ததே அல்லாமல் அப் பருவத்தில் வருவேன் என்று சொல்லிப் பிரிந்து போன நம் தலைவர் வரவில்லையே!" என்று ஏங்கிக் கூறினாள்*

## 45. புனலிக்கொடி பூத்தும் வரவில்லையே

அவரோ வாரார்; தான் வந்தன்றே –
புதுப் பூ அதிரல் தாஅய்க்
கதுப்புஅறல் அணியும் காமர் பொழுதே! – *ஐங் 345*

*தலைவி, "புதிய மலர்களையுடைய புனலிக் கொடி பரந்து படர்ந்து மங்கையர் கூந்தல் போன்ற மணற் பரப்பை அழகு செய்யும் அழகிய இளவேனிற் பருவம் வந்ததே அல்லாமல் அப் பருவத்தில் வருவேன் என்ற அவர் வரவில்லையே" என்று ஏங்கி இரங்கினாள்.*

## 46. சென்றவர் திரும்பவில்லையே! என் செய்வேன்!

அவரோ வாரார்; தான் வந்தன்றே –
அம் சினைப் பாதிரி அலர்ந்தெனச்,
செங் கண் இருங் குயில் அறையும் பொழுதே! – *ஐங் 346*

*தலைவி, "அழகிய கிளைகளையுடைய பாதிரிப் பூக்கள் மலர்ந்தன சிவந்த கண்களையுடைய கருங்குயில் கூவும் இளவேனிற்பருவமும் வந்தது. அப் பருவத்தில் வருவேன் என்று கூறிவிட்டுப் போன தலைவர் வரவில்லை இதற்கு யான் என்ன செய்வேன்?" என்று கூறினாள்.*

## 47. புன்கின் பூத்தும் திரும்பவில்லை!

அவரோ வாரார்; தான் வந்தன்றே –
எழில் தகை இள முலை பொலியப்
பொரிப் பூம் புன்கின் முறி திமிர் பொழுதே! – *ஐங் 347*

*தலைவி, "அழகும் தகுதியும் பொருந்திய இளமையான கொங்கைகள் பொலிவு அடையுமாறு பொரி போன்ற பூக்களை யுடைய புன்க மரத்தின் தளிர்களை அணியும் வேனிற் பருவம் வந்ததே அன்றி, அப் பருவத்தில் வருவேன் என்று தெளிவுபடுத்திப் போன தலைவர் வரவில்லையே" என்று வருந்திக் கூறினாள்.*

## 48. வெண் கடப்பம் மலர்ந்தது!

**அவரோ வாரார்; தான் வந்தன்றே –**
**வலம் சுரி மராஅம் வேய்ந்து, நம்**
**மணம் கமழ் தண் பொழில் மலரும் பொழுதே!** – *ஐங் 348*

*"வலப்பக்கமாகச் சூழ்ந்த மலர்களையுடைய மராமரம் மலர்ந்து நல்லமணம் கமழும் நம் குளிர்ந்த சோலையில் பூக்கள் மலரும் இளவேனிற் பருவம் வந்தபோதும், அப் பருவம் வரும் போது வருவேன் என்று கூறிச் சென்ற அவர் வரவில்லையே!" தலைவி என்று இரங்கியுரைத்தாள்.*

## 49. மாமரம் தளிர்த்தும் மனமில்லை!

**அவரோ வாரார்; தான் வந்தன்றே –**
**பொரி கால் மாஞ் சினை புதைய**
**எரி கால் இளந் தளிர் ஈனும் பொழுதே!** – *ஐங் 349*

*தலைவி, "பொரிந்த அடிப் பகுதியை உடைய மா மரம் தன் கிளைகள் மறையும்படி தீப் போலும் இளந் தளிர் களைத் தளிர்த்துத் திகழும் இனிய வேனிற் பருவம் வந்ததே அல்லாமல் அப் பருவத்தில் வருவேன் என்று கூறிச் சென்ற தலைவர் வரவில்லையே!" என்று நெஞ்சழுங்கச் சொன்னாள்.*

## 50. வருவேன் என்றவர் வரவில்லை!

**அவரோ வாரார்; தான் வந்தன்றே –**
**வேம்பின் ஒண் பூ உறைப்பத்,**
**தேம் படு கிளவி அவர் தெளிக்கும் பொழுதே!** – *ஐங் 350*

*தலைவி, "வேப்ப மரத்தினது ஒளியுடைய மலர்கள் உதிர்ந்து படிந்தன இனிமை பொருந்திய சொற்களை யுடைய தம் துணைவியரைத் தெளிவிக்கும் வேனிற்பருவ*

மும் வந்தது. அப் பருவத்தில் வருவேன் என உறுதி கூறித் தெளிவித்துச் சென்ற தலைவர் வரவில்லையே" என்று வருந்திச் சொன்னாள்

## வரவு உரைத்தல்

### 51. வாடும் நிலை ஒழிக!

அத்தப் பலவின் வெயில் தின் சிறு காய்,
அருஞ் சுரஞ் செல்வோர், அருந்தினர் கழியும்
காடு பின் ஒழிய வந்தனர்; தீர்க,இனிப் –
பல் இதழ் உண்கண் மடந்தை! நின்
நல் எழில் அல்குல் வாடிய நிலையே. – *ஐங் 351*

*தலைவியை நோக்கி தோழி, "வழியில் நின்ற பலாவின் வெயிலால் வெதுப்பப்பட்ட சிறிய காயைச் செல்வதற்கு அரிய பாலை வழியில் செல்பவர் உண்டு நீங்குவர். அத்தகைய காடுகள் பிற்படும்படி நம் தலைவர் வந்தார். ஆதலால் பல இதழ்களை உடைய மலர் போலும் மையுண்ட கண்ணை யுடைய மடந்தையே நீ இப்போது நின் நல்ல அழகு நாளும் வாடி வருந்தி நின்ற நிலையை இனி விடுக!" என்று உரைத்தாள்.*

### 52. வந்தார் விரைந்து!

விழுத் தொடை மறவர் வில் இடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல் அன்ன விழுப் பிணர்ப்
பெருங் கை யானை இருஞ் சினம் உறைக்கும்
வெஞ் சுரம் 'அரிய' என்னார்
வந்தனர் – தோழி! – நம் காதலோரே! – *ஐங் 352*

*"சிறந்த அம்பு தொடுக்கும் வீரர் தம் வில்லிடைத் தொடுத்துவிட, எதிர் நின்று உயிர் தந்து வீழ்ந்த வீரர் பொருட்டு நடப்பட்ட பெயரும் பீடும் எழுதப்பட்ட நடு கல்லைப் போன்ற சிறந்த சருச்சரை பொருந்திய பெருங்கை யுடைய யானை, பெரிய சினம் மிக்குத் திரியும் கொடிய காடுகள் செல்வதற்கு அரியவை என்று நினைத்துத் தாழ்க்கா மல் வந்தார் விரைவாக நம் தலைவர்!" என்று தோழி தலைவியை நோக்கிக் கூறினாள்*

## 53. காதலர் திரும்பி வந்தார்

எரிக் கொடி கவைஇய செவ் வரை போலச்
சுடர்ப் பூண் விளங்கும் ஏந்துஎழில் அகலம்
நீ இனிது முயங்க, வந்தனர் –
மா இருஞ் சோலை மலை இறந்தோரே. – *ஐங் 353*

*"நெருப்புக்கொடி சூழ்ந்த சிவந்த மலையைப் போல ஒளிவிடும் அணி கிடந்து விளங்கும் உயர்ந்த அழகிய தன் மார்பை இனிதாக முயங்குதற் பொருட்டாகப் பெரிய சோலைகளை உடைய மலைகளைக் கடந்து சென்ற நம் காதலர் திரும்பி வந்திருக்கின்றார்" என்று தலைவியை நோக்கித் தோழி சொன்னாள்.*

## 54. நின் குணங்கள் நினைந்து விரைந்தார்

ஈர்ம் பிணவு புணர்ந்த செந்நாய் ஏற்றை
மறியுடை மான் பிணை கொள்ளாது கழியும்
அரிய சுரன் வந்தனரே –
தெரியிழை அரிவை நின் பண்பு தரவிரைந்தே – *ஐங் 354*

*தோழி தலைவியை நோக்கி, "நும் காதலர் குளிர்ந்த பெண் நாயைக் கூடிய செந்நாயின் ஆண், கன்றையுடைய பெண் மானைக் கொள்ளாமல் நீங்கும் அரிய காட்டைக் கடந்து, ஆராய்ந்து எடுத்த அணிகளை அணிந்த நின் அருங் குணங்கள் நினைவில் நினைவிட்டதால் விரைவாகத் திரும்பி வந்தார்" என்று கூறினார்.*

## 55. சொல்லாமல் மீண்டு வந்தேன்!

திருந்திழை அரிவை! நின் நலம் உள்ளி,
அருஞ் செயல் பொருட் பிணி பெருந் திரு உறுகளனச்
சொல்லாது பெயர்தந்தேனே – பல் பொறிச்
சிறு கண் யானை திரிதரும்
நெறி விலங்கு அதர கானத்தானே. – *ஐங் 355*

*"திருத்தமான அணிகளை அணிந்த மங்கையே! பல பொறிகளையும் சிறிய கண்களையும் உடைய யானை உலவும் நெறியில் குறுக்கிடும் சிறு வழிகளையுடைய காட்டில், யான்*

நின் நலத்தை நினைந்து அரிய செயல்வகையாகிய பொருட் பேறு பெருஞ்செல்வம் அடைக என விடுத்து உடன் வந்தவர் ஒருவரிடத்தும் சொல்லாமல் மீண்டு வந்தேன்" என்றான் தலைவன்.

## 56. நினைத்தற்கு குணங்கள் இனியன!

உள்ளுதற்கு இனியமன்ற – செல்வர்
யானை பிணித்த பொன் புனை கயிற்றின்,
ஒள் எரி மேய்ந்த சுரத்திடை
உள்ளம் வாங்கத் தந்த நின் குணனே. *– ஐங் 356*

தலைவன், "செல்வம் உடையவர் தம் யானைகளைப் பிணித்த பொன்னால் செய்யப்பட்ட கயிற்றைப் போல், ஒள்ளிய தீ, தொடர்ந்துள்ள காட்டில் வினை மேற்கொண்ட நெஞ்சை மடக்கி மீளும் வகை தந்த நின் குணங்கள், நினைத் தற்கு இனிமையுடையனவாய் இருந்தன" என்றான் தலைவி யிடம்.

## 57. நின் நிறம் வனப்புற வந்தார்!

குரவம் மலர, மரவம் பூப்பச்,
சுரன் அணி கொண்ட கானங் காணூஉ,
'அழுங்குக செய்பொருள் செலவு' என விரும்பி,நின்
நலங் கலிழ் மாமை கவின
வந்தனர் – தோழி – நம் காதலோரே! *– ஐங் 357*

தோழி, தலைவியிடம், "தோழியே! குரவமும் மரவமும் கொழித்துப் பூத்து விளங்குதலால் அழகு பெற்று விளங்கும் சுரமாகிய காட்டைக் கண்டு, அது, தான் வருவேன் என்று குறித்து வந்த பருவம் ஆவதை அறிந்து, மேல் உளதாகும் பொருள் வயின் பிரிந்த செலவும் இனி ஒழிக என எண்ணி, நும் தலைவர் நின்னை விரும்பி நின் மாமை நிறம் வனப்பு மிக வந்தார்" என்று உரைத்தாள்

## 58. கண்ணீர் காதலரை வரச் செய்யும்

கோடுஉயர் பல் மலை இறந்தனராயினும்,
நீட விடுமோ மற்றே – நீடு நினைந்து,

துடைத்தொறும் துடைத்தொறும் கலங்கி,
உடைத்து எழு வெள்ளம் ஆகிய கண்ணே? – *ஐங் 358*

*தோழி, "தலைவன் கொடுமுடிகளால் உயர்ந்த பல மலைகளைக் கடந்து சென்றாராயினும், நீ நெடுக நினைந்து அழுதலால் துடைக்குந் தோறும் நில்லாது அணையை உடைத்து எழும் நீர்ப் பெருக்கைப் போன்று வடியும் நின் கண்ணீர், காதலரை விரைய மீளச் செய்வதின்றிக் காலம் தாழ்த்தாது!" என்று உரைத்தாள்.*

## 59. நினைப்பின் இயல்பு

அரும் பொருள் வேட்கையம் ஆகிநிற்துறந்து
பெருங் கல் அதரிடைப் பிரிந்த காலைத்
தவ நனி நெடிய ஆயின; இனியே,
அணியிழை உள்ளி யாம் வருதலின்
நணிய ஆயின – சுரத்திடை ஆறே. – *ஐங் 359*

*தலைவன், "முன்னம் யாம் அடைவதற்கு அரிய பொருள் மீது அவாக் கொண்டேமாய் நின்னைப் பிரிந்து போனோம். அப்போது அச் சுரத்திடையுள்ள வழிகள் மிக மிக நீண்டவாய் விளங்கின. இப்போது அழகிய இழைகளையுடைய நின்னை எண்ணி வருதலின் அவை மிக்க அண்மையில் உள்ளவாய் விளங்கின" என்று தலைவி அருமை கூறினான்.*

## 60. நின்னை நினைந்தேன் வழி எளிது

எரி கவர்ந்து உண்ட என்றூழ் நீள் இடை
அரிய ஆயினும், எளிய அன்றே –
அவவு உறு நெஞ்சம் கவவு நனி விரும்பிக்,
கடு மான் திண் தேர் கடைஇ,
நெடு மான் நோக்கி! நின் உள்ளியாம் வரவே – *ஐங் 360*

*தலைவன், "மான் போன்ற நீண்ட கண்களை உடையவனே! தன்னிடம் எழுந்த வெப்பத்தால் எதிர்ப்பட்ட பொருள்களைப் பற்றி அழிக்கும் தீயும் வெயிலும் மிக்க நீண்ட இடைச் சுரம் கடப்பதற்கு அரியது என்றாலும் அவா மிக்க என் நெஞ்சம் நின் முயக்கத்தை மிகவும் விரும்புதலால் விரைவான செலவைப் பெற்ற குதிரைகள் பூட்டப்பட்ட*

திண்ணிய தேரைச் செலுத்தி யான் நின்னையே நினைந்து வருதலால் எளியவாய் ஆயின" என்று தலைவியிடம் கூறினான்

## நேரிடைப் பேச்சு

### 61. தோளின் சினம்!

உயர்கரைக் கான் யாற்று அவிர்மணல் அகன்துறை
வேனிற் பாதிரி விரி மலர்க் குவைஇத்
தொடலை தைஇய மடவரல் மகளே!
கண்ணினும் கதவ நின் முலையே!
முலையினும் கதவ நின் தட மென் தோளே — *ஐங் 361*

*தலைவன், "உயர்ந்த கரைகளைப் பொருந்திய கான் யாற்றில் விளங்கும் மணல் பரவிய அகன்ற துறையில் வேனில் பருவத்தில் மலரும் பாதிரியின் விரிந்த மலர்களைக் குவித்து மாலை தொடுக்கும் மடப்பம் பொருந்திய பெண்ணே, நின் கண்ணினும் கொங்கைகள் சினம் கொண்டனவாயும் அவற்றி னும் நின் பெரிய மென்மையான தோள்கள் மிகச் சினம் கொண்டனவாயும் உள்ளன" என்று தலைவியிடம் கூறினான்.*

### 62. எப்படி வந்தாய்?

பதுக்கைத்து ஆய ஒதுக்கு அருங் கவலை,
சிறு கண் யானை உறு பகை நினையாது,
யாங்கு வந்தனையோ — பூந்தார் மார்ப!
அருள் புரி நெஞ்சம் உய்த்தர
இருள் பொர நின்ற இரவினானே? — *ஐங் 362*

*"தலைவா! மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்த மார்பை உடையவனே! கற்குவியலையுடைய செல்வ தற்கு அரிய கவர்த்த வழியில் உலவும் சிறிய கண்ணை யுடைய யானை மிக்க பகைக்கு அஞ்சாது, எமக்கு அருள் செய்யும் வண்ணம், நின் நெஞ்சு நின்னைச் செலுத்த, இருள் அடர்ந்து வழிச் செல்வாரைத் தடுக்கும் இரவில் எங்ஙனம் வந்தாய்? என் உள்ளம் வருந்துகின்றது" என்று தோழி தலைவனை நோக்கி உரைத்தாள்*

## 63. சுணங்கு இல்லை அணங்கு!

சிலை விற் பகழிச் செந் துவர் ஆடைக்
கொலை வில் எயினர் தங்கை! நின் முலைய
கணங்கு என நினைதி நீயே;
அணங்கு என நினையும்,என் அணங்குறு நெஞ்சே.

*– ஐங் 363*

*தலைவன் தலைவியை நோக்கி, "சிலை என்ற மரத்தால் செய்த வில்லில் எய்யும் அம்பையும் செந்நிற ஆடையையும், கொலைத் தொழிற்குரிய வில்லையும் கொண்ட வேட்டுவர் தம் தங்கையே, நின் கொங்கையில் உள்ள தேமலை நீ சுணங்கு என நினைக்கின்றாய். நோய் மிக்க என் மனம் அதை வருத்தம் தரும் அணங்கு என எண்ணுகின்றது" என்று திரும்பியவன் சொன்னான்*

## 64. தலைவியிடம் கேட்டு வருவேன்

முளவு மா வல்சி எயினர் தங்கை
இளமா எயிற்றிக்கு, நின் நிலை அறியச்
சொல்லினென் இரக்கும் அளவை –
வென் வேல் விடலை! – விரையாது ஈமே. *– ஐங் 364*

*தோழி, "வெண்மையான வேலையுடைய தலைவ, முள் பொருந்திய விலங்கான பன்றியை உணவாகக் கொண்ட வேட்டுவர்க்குத் தங்கையான இளமையும் அழகும் உடைய காட்டுவப் பெண்ணுக்கு நின் உடன்போக்குக் குறிப்பை உரைத்து உடன்படுமாறு இரந்து கொண்டு யான் வரும் வரை விரையாமல் நிற்பாய்!" என்று தலைவனைப் பார்த்துச் சொன்னாள்*

## 65. தவம் என்ன செய்தாய்?

கண மா தொலைச்சித் தன் ஐயர் தந்த
நிண ஊன் வல்சிப் படு புள் ஓப்பும்
நல மாண் எயிற்றி போலப் பல மிகு
நன்னல நயவரவு உடையை
என் நோற்றனையோ? – மாவின் தளிரே *– ஐங் 365*

*"இனிய மாவின் தளிரே! கூட்டமான விலங்குகளைத் தொலைத்துத் தன் தமையன்மார் கொண்டு வந்த நிணமான தசையுணவைக் கவர வருகின்ற பறவைகளை ஓட்டும் பெண்மை நலம் உடைய எயிற்றியைப் போல், பலவாய் மிக்க நலம் யாவரும் விரும்பும்படி பெற்றுள்ளாய்; ஆகவே இதற்கு எத்தகைய தவத்தைச் செய்தாய்?" என்று தலைவன் மாந் தளிரைப் பார்த்துக் கூறினான்*

## 66. அறத்தோடு நின்ற போதில்...

**அன்னாய், வாழி! வேண்டு அன்னை, என் தோழி**
**பசந்தனள் பெரிது எனச் சிவந்த கண்ணை**
**கொன்னே கடவுதி ஆயின், என்னதூஉம்**
**அறிய ஆகுமோ மற்றே –**
**முறி இணர்க் கோங்கம் பயந்தமாறே?** *– ஐங் 366*

*தோழி செவிலித் தாயை நோக்கி, "தாயே, வாழ்க! யான் கூறுவதை விரும்பிக் கேட்பாய், என் தோழி மிகவும் பசலை யடையப் பெற்று வேறுபடுகின்றாள் ஆகலின் இதற்குக் காரணம் யாது என நீ சினத்தினால் கண் சிவந்து அச்சப் படுத்தி வினவுகின்றாய்; ஆராயும்போது அது தளிரும் மலர்க் கொத்துகளும் உடைய கோங்கின் பூவைத் தந்தமை யால் மற்றவரால் எத்துணையும் அறியப்படாது!" என இயம்பினாள்.*

## 67. பேரோடு புணர்ந்தது உயிர்!

**பொரி அரைக் கோங்கின் பொன் மருள் பசு வீ,**
**விரி இணர் வேங்கையொடு, வேறு பட மிலைச்சி,**
**விரவு மலர் அணிந்த வேனில் கான் யாற்றுத்**
**தேரொடு குறுக வந்தோன்**
**பேரொடு புணர்ந்தன்று, – அன்னை! இவள் உயிரே**

*– ஐங் 367*

*தோழி செவிலித்தாயை நோக்கி, "தாயே! பொரிந்த அடிப் பகுதியை உடைய கோங்கின் பொன் போன்ற மலர்கள் விரிந்த கொத்துகளைக் கொண்ட வேங்கைப் பூவுடன் வேறுபட*

அணிந்து, பலவாய் விரவிய பூக்களால் பொலிந்த வேனிற் பருத்தில், கான் ஆற்றின் மருங்கே தேர் ஏறிக் குறுக வந்த வனுடைய பெயருடன் இவளது உயிர் ஒன்றுபடலாயிற்று" என்று கூறினாள்

## 68. இளவேனில் இன்ப நுகர்ச்சி

எரிப் பூ இலவத்து ஊழ்கழி பல் மலர்
பொரிப் பூம் புன்கின் புகர் நிழல் வரிக்கும்
தண் பத வேனில் இன்ப நுகர்ச்சி
எம்மொடு கொண்மோ, பெரும்! – நின்
அம் மெல்லோதி அழிவிலள் எனினே. – ஐங் 368

தோழி தலைவனுக்கு, "பெருமையுடையவனே, தீயைப் போன்ற நிறம் உடைய இலவ மரத்தினின்றும் உதிர்ந்த பல மலர்கள் பொரி போன்ற மலர்களைக் கொண்ட புன்க மரத்தின் புள்ளி பொருந்திய நிழலில் கிடந்து அழகுபடுத்தும் குளிர்ந்த வேனிற்காலத்து விளையாட்டில் பெறும் இன்ப நுகர்ச்சி, அழகும் மென்மையும் உடைய கூந்தலையுடைய இவள் நின் பிரிவாற்றி மேனி நலன் அழிவில்லாது இருப்பா ளாயின் எம்மொடு கொள்க!" என்று வேனிற் பருவத்தைக் கூறினாள்

## 69. குயில் கூவுதலைவிட அலர் பெரிதாயிற்று!

வள மலர் ததைந்த வண்டு படு நறும் பொழில்
முளை நிரை முறுவல் ஒருத்தியொடு, நெருநல்
குறிநீ செய்தனை என்ப; அலரே,
குரவ நீள் சினை உறையும்
பருவ மாக் குயில் கௌவையின், பெரிதே! – ஐங் 369

தலைவி தலைவனை நோக்கி, "வளமான மலர்கள் நிறைந்திருத்தலால் வண்டுகள் படியும் நறுமணச் சோலையில் முளைபோல் வரிசைப்பட அமைந்த பற்களையுடைய ஒருத்தி யொடு நீ குறி செய்து ஒழுகினை என்று சொல்வர் அதன் வழி எழுந்த அலர் குரவ மரத்தின் நீண்ட கிளையில் வதியும வேனிற பருவத்துக் கூவும் இயல்புடைய குயிலின் குரல் ஓசையை விடப் பெரிதாயிற்று!" என்றாள்

### 70. நின்னால் விரும்பப்பட்டவள் யார்?

**வண் சினைக் கோங்கின் தண் கமழ் படலை**
**இருஞ் சிறை வண்டின் பெருங் கிளை மொய்ப்ப,**
**நீ நயந்து உறையப்பட்டோள்**
**யாவளோ? எம் மறையா தீமே. – ஐங் 370**

*தலைவி தலைவனை நோக்கி, "வளமான கிளைகளையுடைய கோங்கின் குளிர்ந்ததாய் மணம் கமழும் மாலையைக் கருமையுடைய சிறகுகள் பொருந்திய வண்டுகளின் கூட்டம் மொய்த்து நிற்ப, நின்னால் அணிந்து விரும்பப்பட்டவள் யார் என்பதை மறைக்காது எனக்குக் கூறுவாயாக!" என்றாள்*

## <u>மகள் போக்கிய தாய் இரங்கல்</u>

### 71. காட்டுவழி இனியதாகுக!

**மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும்**
**உயர் நெடுங் குன்றம் படு மழை தலைஇச்**
**சுரம் நனி இனிய வாகுக்தில்ல –**
**'அறநெறி இது' எனத் தெளிந்த என்**
**பிறை நுதல் குறுமகள் போகிய சுரனே! – ஐங் 371**

*நற்றாய், "மறவர் செய்யும் முழக்கத்துக்கு ஏற்ப மயில் ஆடும் நெடிதாய் உயர்ந்த குன்றத்தில் ஒலிக்கும் கொண்டல் மழை பெய்தலால் அதனைச் சார்ந்த வழி வெம்மை இல்லாது இனிமையுடையதாகுக. தலைவனுடன் போதலாகிய இஃது அறநெறியே என்று தெளிந்து சென்ற, பிறைபோல் நெற்றியையுடைய என் இளமகள் சென்ற பாலைவனம் ஆதலால்!" என்று சொன்னாள்.*

### 72. பெற்றவளை நினைத்தாளா?

**என்னும் உள்ளினள்கொல்லோ – தன்னை**
**நெஞ்சு உணத் தேற்றிய வஞ்சினக் காளையொடு,**
**அழுங்கல் மூதூர் அலர் எழச்**
**செழும் பல் குன்றம் இறந்த என் மகளே? – ஐங் 372**

*நற்றாய், "தன் நெஞ்சு கொள்ளும்படியாய் வேண்டியவற்றைக் கூறித் தலைவிக்குத் தெளிவை உண்டாக்கினான்*

*தலைவன், பிரிந்தான்; அவன் வஞ்சினக் காளை போன்றவன். அங்ஙனமாக யான் வருந்துவதற்கு இடமான இப் பழைய ஊரார் அலர் கூற அதை எண்ணியும் பாராமல் என் மகள் தான் சென்ற வழியில் என்னையும் நினைந்தாளோ? அறியேன்!" என்று கூறினாள்*

## 73. தலைவனும் தாயும் தவித்திடு

**நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக –**
**புலிக் கோட் பிழைத்த கவைக் கோட்டு முது கலை**
**மான்பிணை அணிதர, ஆண் குரல் விளிக்கும்**
**வெஞ் சுரம் என் மகள் உய்த்த**
**அம்பு அமை வல் வில் விடலை தாயே!** *– ஐங் 373*

*நற்றாய், "புலியால் பற்றப்படுவதினின்று தப்பிப் பிழைத்த கவடுபடு கொம்பையுடைய முதிய கலைமான், தன் பெண் மான் தன்னை அடையுமாறு தன் ஆண் குரலை உயர்த்தி விரும்பி அழைக்கின்ற கொடிய காட்டில் என் மகள் செல்லும்படி செய்த புதிய மூங்கிலால் செய்யப்பட்ட வலிய வில் ஏந்திய தலைவனின் தாயானவள் நினைக்குந் தோறும் என்னைவிட பெரும் கண்ணீர் வடியும் துன்பத்தை அடைவாளாக!" என்றாள்.*

## 74. காதலின் துணிவு

**பல் ஊழ் நினைப்பினும், நல்லென்று ஊழ –**
**மீளி முன்பின் காளை காப்ப,**
**முடி அகம் புகாஅக் கூந்தலள்**
**கடுவனும் அறியாக் காடு இறந்தோளே.** *– ஐங் 374*

*"பல முறை ஆராய்ந்தாலும் இந்த உடன் போக்கு நல்ல முறையே ஆகும் என எண்ணி, வீரனைப் போன்ற வலியுடைய காளையைப் போன்றவன் காவல் செய்ய, முடித்தற் குரிய நீளம் இல்லாத கூந்தலையுடையவளான என் மகள், குரங்குகளாலும் புகுந்தறியப் படாத காட்டைக் கடந்து போயினள்; அவள் அறிவு இருந்தவாறு என்னே!" எனத் தாய் அவள் இளமை நினைந்து உரைத்தாள்*

## 75. நினையாமல் நீங்கினாளே!

'இது என் பாவைக்கு இனியநன் பாவை;
இது என் பைங்கிளி எடுத்த பைங்கிளி;
இது என் பூவைக்கு இனிய சொற் பூவை' என்று
அலமரு நோக்கின் நலம் வரு சுடர் நுதல்
காண்தொறும் காண்தொறும் கலங்க,
நீங்கினளோ – என் பூங்கணோளே? – ஐங் 375

*"இந்தப் பாவை, என்னுடைய பாவை போன்ற மகள் வைத்து விளையாடிய பாவையாகும் இந்தக் கிளி சுழன்ற பார்வையையுடைய அழகுமிக்க ஒளி பொருந்திய நெற்றியை உடைய பசிய கிளி போன்றவள் வளர்த்த பச்சைக் கிளி இப்படிக் கூறி, யான் இவற்றைக் காணுந்தோறும் கலங்கி வருந்த, என் அழகிய கண்களையுடைய மகள் பிரிந்து போயினள் போலும்!" என்று தாய் பிரிந்த மகளை எண்ணி வருந்தி உரைத்தாள்*

## 76. தீவினை தீயிடை எரிந்தழிக

நாள் தொறும் கலிழும் என்னினும் இடை நின்று
காடு படு தீயின் கனலியர் மாதோ –
நல் வினை நெடு நகர் கல்லெனக் கலங்கப்,
பூப் புரை உண்கண் மடவரற்
போக்கிய புணர்த்த அறன் இல் பாலே! – ஐங் 376

*நற்றாய், "நல்ல செயல்வினை அமைந்த நெடிய இல்லத்தில் உள்ள நம்மவர் ஓ என்று கலங்கி வருந்த, மலரைப் போல் மை தீட்டப்பட்ட கண்களையுடைய மடமகள் யான நினைந்து வருந்தும்படி காட்டிடை நின்று அதில் தோன்றிய தீயில் பட்டு எரிந்து அழிவதாகுக!" என்று விதியை நொந்து உரைத்தாள்.*

## 77. விளையாட்டுப் பொருள்கள் வருத்துகின்றன

நீர் நசைக்கு ஊக்கிய உயவல் யானை
இயம் புணர் தூம்பின் உயிர்க்கும் அத்தம்

சென்றனள்மன்ற, என் மகளே –
பந்தும் பாவையும் கழங்கு எமக்கு ஒழித்தே. – *ஐங் 377*

*மகளைப் பிரிந்த நற்றாய், "நீர் வேட்கை மிக்கு வருந்தும் யானை வங்கியம் என்னும் இசைக் கருவியின் தூம்பு போல் துதிக்கையை உயர்த்திப் பிளிறும் வழி. அவ் வழியில் என் மகள் பந்தும் பாவையும் கழங்கும் முதலிய பல விளையாட்டுப் பொருள்களையும் யான் கண்டு வருந்தும்படி விட்டுவிட்டுச் சென்றுவிட்டாளே" என்று வருந்தி உரைத்தாள்.*

## 78. தோழிக்காக வருந்துகிறேன்!

செல்லிய முயலிப் பாஅய சிறகர்
வாவல் உகக்கும் மாலை, யாம் புலம்பப்
போகிய அவட்கோ நோவன்; தே மொழித்
துணை இலள் கலிழும் நெஞ்சின்
இணை ஏர் உண்கண் இவட்கு நோவதுவே. – *ஐங் 378*

*நற்றாய், "செல்வதற்குப் பரப்பிய சிறகுகளையுடைய வெளவால் விரும்பிப் பறக்கும் பின் மாலைக் காலத்தில், யாம் துன்பம் அடையும்படி எம்மைப் பிரிந்து சென்ற மகளை நினைந்து நான் அழவில்லை. இனிய சொற்களையுடைய துணைவி இன்றி வருந்தும் நெஞ்சுடன் தோழியான இவள் பொருட்டாகவே யான் வருந்துகின்றேன்" என்று சொன்னாள்*

## 79. பெற்றோர் அறியாமல் செல்லல் இனிதோ?

தன் அமர் ஆயமொடு நன் மண நுகர்ச்சியின்
இனிது ஆம்கொல்லோ தனக்கே – பனி வரை
இனக் களிறு வழங்குஞ் சோலை
வயக்குறு வெள் வேலவற் புணர்ந்து செலவே? – *ஐங் 379*

*நற்றாய், "குளிர்ந்த மலையில் யானைகள் கூட்டமாக இயங்கும் சோலைகளின் வழியே விளக்கம் மிக்க வெற்றி பொருந்திய வேலை உடையவனுடன் கூடிச் செல்லல். தன்னால் விருப்பப்பட்ட ஆய மகளிர் சூழாம் செய்யும் நன் மணத்தைப் பெறக்கூடிய இன்ப நுகர்ச்சியைவிட இனியதாய் இருக்குமோ!" என்று நெஞ்சு வருந்திக் கூறினாள்*

## 80. திருமணம் செய்யும் பேறில்லை!

அத்த நீள் இடை அவனொடு போகிய
முத்து ஏர் வெண் பல் முகிழ் நகை மடவரல்
தாயர் என்னும் பெயரே வல்லாறு
எடுத்தேன் மன்ற, யானே;
கொடுத்தோர்மன்ற, அவள் ஆயத்தோரே. — *ஐங் 380*

*செவிலித்தாய், "நீண்ட வழியையுடைய வழியில் அவனுடன் புணர்ந்து உடன் போகிய முத்துகளைப் போன்ற வெண்மையான பற்களையும் நகையையும் உடைய மடப்பம் உடைய தலைவிக்குத் தாயர் என்ற பெயரை யான் பெற்றேன் ஆயினும் அவளை அவனுக்கு உரியவளாகக் கொடுக்கும் பேற்றைப் பெற்றவர் அவளுடைய ஆயத்தாரே ஆவார் ஆகையால் யான் அப் பெயர் பெற்றும் பெறாதவன் ஆயினேனே" என்று அலமந்து சொன்னாள்.*

## *வழியில் கண்டவர் உரை*

## 81. பிரியாக் காதலர்

பைங் காய் நெல்லி பலவுடன் மிசைந்து,
செங் கால் மராஅத்த வரி நிழல் இருந்தோர்
யார்கொல், அளியர் தாமே – வார்சிறைக்
குறுங் கால் மகன்றில் அன்ன
உடன் புணர் கொள்கைக் காதலோரே? — *ஐங் 381*

*'நெல்லிமரத்தின் பசுமையான காய்களைப் பலாவின் பழத்துடன் உண்டு, சிவந்த அடிமரத்தையுடைய செங்கடம்பு மரத்தின் இடை வெளியுடைய நிழலில் அமர்ந்திருப்பவர், நீண்ட சிறகுகளையும் குறுகிய காலையும் உடைய மகன்றில் பறவை போல் பிரிதற்கு அரிய இயல்புடைய காதலைப் பெற்ற வராய் உள்ளனர்" என்று வழியில் கண்டவர் உரைத்தனர்.*

## 82. கண்டவர் உரை!

புள் ஒலிக்கு அமர்த்த கண்ணள், வெள் வேல்
திருந்து கழல் காளையொடு அருஞ் சுரங் கழிவோள்,

எல்லிடை அசைந்த கல்லென் சீறூர்ப்
புனை இழை மகளிர்ப் பயந்த
மனை கெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே. *– ஐங் 382*

*காதலரையும் தலைவியைக் கண்டு இரங்கும் பெண்டிரையும் கண்டு "பறவைகள் செய்த ஒலியால் அஞ்சி மருண்ட கண்களை உடைய இவள், வெண்மையான வேலையும் அழகிய கழலையும் உடைய காளை போன்றவனுடன் கூடிப் போதற்கு அரிய சுரத்தில் செல்கின்றாள் இத் தகையவள் இங்கு இரவில் தங்குதலால் 'கல்' என்ற ஓசை மிக்க இந்தச் சிறிய ஊரில் திருத்தமான அணியை அணிந்த மகளிரைப் பெற்ற பெருமனைக் கிழத்தியர்க்கு இவளைக் காண மிக்க வருத்தம் உண்டாயிற்று!" என்று கண்டவர் வருந்தியுரைத்தனர்*

## 83. மள்ளன் உள்ளம் மகிழ்வு

கோட் சுரும்பு அரற்றும் நாட்சுரத்து அமன்ற
நெடுங் கால் மராஅத்துக் குறுஞ் சினை பற்றி,
வலஞ் சுரி வால் இணர் கொய்தற்கு நின்ற
மள்ளன் உள்ளம் மகிழ்கூர்ந்தன்றே –
பைஞ்சாய்ப் பாவைக்கும் தனக்கும்
அம் சாய் கூந்தல் ஆய்வது கண்டே.. *– ஐங் 383*

*"வழியில் நெருக்கமாய் உள்ள நீண்ட அடிப் பகுதியை உடைய வெண்கடம்ப மரத்தில், அரிய இனிய தேன் உண்ணும் வண்டுகள் ஒலிக்கும், சிறிய கிளையைத் தாழ்த்தி, அழகிய கூந்தலையுடைய தன் காதலி, அக் கொம்பில் நாள் காலையில் வலமாகச் சுழித்து மலர்ந்த வெண்மையான மலர்களைக் கொய்வதற்காகச் சற்று நேரம் பயணம் செல்வதைத் தவிர்ந்து நின்றான் காளை போன்றவன் தலைவி அம் மலரைப் பறித்துத் தனக்கும் தன் கோரைப்புல்லான பாவைக்கும் பகுத்துச் சூட்டுவதைக் கண்டு மகிழ்ச்சி உண்டாகின்றது பாருங்கள்!" என்று கண்டோர் கூறினர்*

## 84. அரிய வழியைக் கடந்து போனாள்!

சேட் புலம் முன்னிய அசைநடை அந்தணிர்!
நும் ஒன்று இரந்தனென் மொழிவல்; எம் ஊர்,

'யாய் நயந்து எடுத்த ஆய்நலங் கவின
ஆர் இடை இறந்தனள்' என்மின் –
நேர் இறை முன்கை என் ஆயத்தோர்க்கே. – *ஐங் 384*

*தலைவி, தன் எதிரே வரும் அந்தணரை நோக்கி, "தொலைவில் உள்ள நிலத்தை எண்ணித் தளர்ந்த நடையை உடையவராகச் செல்லும் அந்தணரே! உங்களை ஒன்று இரந்து சொல்கின்றேன். நீவிர் எம் ஊர்க்குச் செல்லின், நேரிய இறை பொருந்திய முன் கையையுடைய என் தோழியர்க்கு 'உங்கள் தோழியானவள் தன் தாய் போற்றி வளர்த்த அழகிய நலம் வனப்பு மிக, செல்வதற்கரிய வழிகளைக் கடந்து போனாள்' எனக் கூறுவீராக!" எனக் கூறினாள்*

## 85. காதலனுடன் சென்றதைக் கழறு

'கடுங்கட் காளையொடு நெடுந் தேர் ஏறிக்,
கோள் வல் வேங்கைய மலை பிறக்கு ஒழிய,
வேறு பல் அருஞ் சுரம் இறந்தனள் அவள்' எனக்
கூறுமின் – வாழியோ! ஆறு செல் மாக்கள்!
நல் தோள் நயந்து பாராட்டி,
எற் கெடுத்து இருந்த அறன்இல் யாய்க்கே – *ஐங் 385*

*"வழியில் செல்பவர்களே! என்னுடைய நல்ல தோள்களை விரும்பிப் பாராட்டி வளர்த்து, யான் தலைவனுடன் கூடி என் கவினை அழகுபடுத்திக் கொள்ளாத வகையில் இற் செறித்து வைத்த அறிவு இயல்பில்லாத என் தாயைக் காணின், அவளுக்கு அஞ்சாமையுடைய தன் காதலனுடன் நெடிய தேர் மீது ஏறிக், கொலையில் வல்ல வேங்கைகள் மிக்க மலைகள் பிற்பட முன்னாக உள்ள பலவாய் வேறுபட்ட போவதற்கரிய சுரங்களைக் கடந்து நின் மகள் சென்றாள் எனச் சொல்வீராக!" என்று பரிந்து கூறினாள் தலைவி*

## 86. காதலனுடன் சென்றனள் கன்னி!

புன்கண் யானையொடு புலி வழங்கு அத்தம்
நயந்த காதலற் புணர்ந்து சென்றனளே –

நெடுஞ் சுவர் நல் இல் மருண்ட
இடும்பை உறுவி! நின் கடுஞ் சூல் மகளே. *- ஐங் 386*

*தலைவியைக் கண்டவர் அவளுடைய தாயிடம், "நெடிய சுவர் சூழ்ந்த நல்ல இல்லத்தில் மயங்கி ஒடுங்குதற்கான துன்பத்தை அடைபவளே, நின் முதற் சூலில் தோன்றிய மகளாகிய தலைமகள் தன்னை விரும்பிய காதலனுடன் சேர்ந்து சிறு கண்களையுடைய யானைகளும் புலிகளும் திரியும் வழிகளைக் கடந்து சென்றாள். ஆதலால் நீ வருந்தாதே!" என்று உரைத்தனர்*

## 87. துன்புறேல் துணையுடன் சென்றாள்!

'அறம் புரி அரு மறை நவின்ற நாவின்
திறம் புரி கொள்கை அந்தணிர்! தொழுவல்' என்று
ஒண்டொடி வினவும் பேதைஅம் பெண்டே!
கண்டனெம் அம்ம, சுரத்திடை அவளை –
இன் துணை இனிது பாராட்டக்,
குன்று உயர் பிறங்கல் மலை இறந்தோளே. *– ஐங் 387*

*"அறத்தை உரைக்கும் அரிய மறைகளை ஓதிப் பயின்ற நாவையும், அது விதிக்கும் செயல்வகை அறிந்து ஆற்றும் ஒழுக்கத்தையும் கொண்ட அந்தணரே, வணங்குகின்றேன் என்று கூறி, ஒளியுடைய தொடி அணிந்த என் மகள் தன் காதலனுடன் சென்றுவிட்டாள். அவளை நீங்கள் பார்த்ததுண்டா? என்று வினவும் பேதைமையுடைய மனைகெழு மாதே! யாம் அவளைச் வழியிடையே பார்த்தோம் இன்னும் கேள்: இனிய துணைவனான காதலன் மகிழ்ந்து நலம் பாராட்டி வரக் குன்றுகள் செறிந்த உயர்ந்த மலைகளைக் கடந்து சென்று விட்டாள். ஆதலால் நீ அவளைப் பின் தொடர்ந்து போய்த் தேடித் துன்புற வேண்டா!" என்று செவிலிக்கு அந்தணர் ஆறுதல் உரைத்தனர்.*

## 88. பாலை வழியில் பார்த்தோர் மொழி

நெருப்பு அவிர் கனலி உருப்புச் சினம் தணியக்
கருங் கால் யாத்து வரி நிழல் இரீஇச்,

சிறு வரை இறப்பின் காண்குவை – செறிதொடிப்
பொன் ஏர் மேனி மடந்தையொடு
வென்வேல் விடலை முன்னிய சுரனே. – ஐங் 388

*"செறிந்த தொடியையும் பொன் போன்ற அழகிய மேனியையும் உடைய மங்கையுடன் வென்றி தரும் வேலேந்திய விடலை நினைத்துச் சென்ற வழியைத், தீயைப் போன்று விளங்கும் ஞாயிற்றின் வெம்மை தணியும் அளவும் கரிய அடியையுடைய யா என்னும் மரத்தின் செறிவற்ற நிழலில் தங்கிச் சிறு மலைகளைக் கடந்து சென்றால் காணலாம்" என்று செவிலுக்கு வழியில் காதலரைக் கண்டவர் கூறினர்.*

## 89. வெம்மை நிலத்தில் படிந்தனவோ கால்

'செய்வினைப் பொலிந்த செறி கழல் நோன் தாள்
மை அணற் காளையொடு பைய இயலி,
பாவை அன்ன என் ஆய்தொடி மடந்தை
சென்றனள்! என்றிர், ஐய,
ஒன்றினவோ அவள் அம் சிலம்படியே! – ஐங் 389

*"ஐயனே! என் கண் பாவை போல் ஆய்ந்து கொண்ட தொடியினைப் பூண்ட என் மகள், தொழில் வகையால் அழகுறச் செய்யப்பட்ட செறிந்த கழலினையும் வலிய தாளையும் கரிய தாடியையும் உடைய காளை போன்றவனுடன் மெல்ல நடந்து போனாள் என்று சொல்கின்றீர் அது போது அவளுடைய அழகிய சிலம்பை அணிந்த அடிகள் நிலத்தில் பொருந்தினவா?" என்று கண்டவர்களைச் செவிலித்தாய் வினவினாள்.*

## 90. காளையுடன் மகளைக் கண்டோம்

நல்லோர் ஆங்கண் பரந்து கைதொழுது
பல் ஊழ் மறுகி வினவுவோயே!
திண் தோள் வல்வில் காளையொடு
கண்டெனம்மன்ற சுரத்திடை, யாமே. – ஐங் 390

*கண்டவர், "அறிவுரைத் தேடித் திரிந்து அவரிடம் கையால் தொழுது பல முறையும் வினவுதலை உடையவளே, திண்ணிய தோள்களையும் வன்மையான வில்லையுடைய*

*காளை போன்ற காதலனுடன் நின் மகள் செல்வதை யாம் இடை வழியிலே பார்த்தோம்!" என்று கூறினர்*

## திரும்பி வருதல்

### 91. மகள் வரும்படி கரை

மறு இல் தூவிச் சிறு கருங் காக்கை
அன்புடை மரபின் நின் கிளையோடு ஆரப்
பச்சூன் பெய்த பைந் நிண வல்சி
பொலம் புனை கலத்தில் தருகுவென்மாதோ;
வெஞ்சின விறல் வேல் காளையொடு
அஞ்சிலோதியை வரக் கரைந்தீமே. *– ஐங் 391*

*"குற்றம் இல்லாத இறகுகளையுடைய சிறிய கரிய காகமே, கொடிய சினமும் வெற்றியும் கொண்ட வேலை யுடைய காளை போன்றவனுடன் போன அழகிய சில வாகிய கூந்தலையுடைய என் மகளை வரும்படி கரை வாயாக. கரையின், அன்புடைய நின் முறைமைக்கு ஏற்ப, நின் கிளைக் காக்கைகளோடு இருந்து நீ உண்ணும் வகையில் பசுமையான ஊன் கலந்து சமைக்கப்பட்ட பசிய வலி யுணவைப் பொன்னால் செய்யப் பட்ட கலத்தில் இட்டுத் தருவேன்!" என்று தாய் ஏங்கி உரைத்தாள்*

### 92. வருந்துவதை ஒழிக!

வேய் வனப்பு இழந்த தோளும், வெயில் தெற
ஆய்கவின் தொலைந்த நுதலும், நோக்கிப்
பரியல் வாழி, தோழி! பரியின்,
எல்லை இல் இடும்பை தரூஉம் –
நல் வரை நாடனொடு வந்தமாறே. *– ஐங் 392*

*தலைவி, "தோழியே! நல்ல மலை சூழ்ந்த நாடனுடன் புணர்ந்து உடன் போய்த் திரும்பி வந்ததால், மூங்கிலினது அழகை இழந்த தோளும், வழியின் வெம்மை வருத்துதலால் நுட்பமான அழகு கழிந்த நெற்றியும் நோக்கி வருந்துதல் ஒழிக வருந்தினாயானால் அஃது முடிவற்ற துன்பத்தைத் தருமாகலான்!" என்று வழி வரல் வருத்தம் கண்டு உரைத்தாள்*

## 93. விடலையின் பின் நின் மகள்

துறந்ததற்கொண்டு துயர் அடச் சாஅய்,
அறம் புலந்து பழிக்கும் அம்கணாட்டி!
எவ்வ நெஞ்சிற்கு ஏமம் ஆக
வந்தனளோ நின் மட மகள் —
வெந் திறல் வெள் வேல் விடலை முந்துறவே? — *ஐங் 393*

*"நின்னைப் பிரிந்து சென்றதைக் காரணமாகக் கொண்டு துயரம் வருத்துதலால் உள்ளம் மெலிந்து அற நூல்களைச் சினந்து பழிக்கும் அழகிய விழியுடையாய்! வருத்தத்தினால் வருந்துகின்ற நின் நெஞ்சிற்கு இன்பம் ஏற்பட, கொடிய வலியும் வெண்மையான வேலையுமுடைய விடலையோன் முன்னால் வர அவன் பின்னால் நடந்து நின் மகள் வந்தாள்" என்று அயலார் அவர் தாய்க்குக் கூறினர்*

## 94. திரும்பியவளைக் காட்டுவேன்!

மாண்பு இல் கொள்கையொடு மயங்குதுயர் செய்த
அன்பு இல் அறனும் அருளிற்று மன்ற;
வெஞ் சுரம் இறந்த அம் சில் ஓதிப்,
பெரு மட மான் பிணை அலைத்த
சிறு நுதல் குறுமகட் காட்டிய வம்மே. — *ஐங் 394*

*தாய், "சுற்றத்தினரே! சிறப்பில்லாத கொள்கையால் மயங்குதற்கு ஏதுவான துயரத்தைச் செய்த, அன்புடன் பொருந்தாத அறமும், அன்பின் தோன்றிய அருளை உடைய தாயிற்று கொடிய சுரத்தைக் கடந்து சென்ற அழகிய ஐஞ்சிறு கூந்தலையுடைய சிறிய பெண்மானைப் போன்ற இளையவள் மீண்டு வந்தனள்! வாருங்கள் காட்டுகிறேன்!" என்று தன் சுற்றத்தார்க்கு உவந்து கூறினாள்.*

## 95. பாலை வழி முடிந்தது

முளி வயிர்ப் பிறந்த, வளி வளர் கூர் எரிச்
சுடர் விடு நெடுங் கொடி விடர் முகை முழங்கும்
இன்னா அருஞ் சுரம் தீர்ந்தனம்; மென்மெல
ஏகுமதி வாழியோ, குறுமகள்! போது கலந்து

கறங்கு இசை அருவி வீழும்,
பிறங்கு இருஞ் சோலை மலை கெழு நாட்டே. – *ஐங் 395*

*தலைவன் தலைவியை நோக்கி, "இளையவளே! உலர்ந்த மூங்கிலில் தோன்றிக் காற்றினால் மிகுந்து பெருகிய தீயின் ஒளிவிடும் நீண்ட ஒழுங்கு, கற்பிளவுகளிலும் மலைக் குகை களிலும் முழங்கும் கொடிய செல்வதற்கரிய காட்டை நாம் நீங்கிவிட்டோம் ஆதலால், இனி மலர்களுடன் கூடி ஒலிக்கும் ஓசையையுடைய அருவிகள் விழும் நாட்டிலே மெல்ல நடந்து செல்வாயாக!" என்று உரைத்தான்.*

## 96. பகல் விருந்தாகச் செல்வோம்!

புலிப் பொறி வேங்கைப் பொன் இணர் கொய்து நின்
கதுப்பு அயல் அணியும் அளவை, பைபயச்
சுரத்திடை அயர்ச்சியை ஆறுகம் – மடந்தை!,
கல் கெழு சிறப்பின் நம் ஊர்
ஏல் விருந்தாகிப் புகுகம், நாமே. – *ஐங் 396*

*தலைவன் தலைவியை நோக்கி, "பெண்ணே! பொறி போன்ற புள்ளிகளையுடைய வேங்கை மரத்தின் பொன் மயமான பூங்கொத்துகளைக் கொய்து நின் கூந்தலின் அயல் யான் சூடும் அளவு மெல்லப் போய், சுரத்தில் நடந்ததால் உண்டான அயர்ச்சியைப் போக்குவாயாக. மேலும் மலை களையுடைய நம் ஊருக்கு நாம் பகலில் வருகின்ற விருந்தின ராய்ப் போவோம்!" என ஆறுதல் உரைத்தாள்.*

## 97. என் ஆயத்தார்க்குக் கூறுக!

'கவிழ் மயிர் எருத்தின் செந்நாய் ஏற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்
சுரம் நனி வாராநின்றனள்' என்பது
முன்னுற விரைந்த நீர் உரைமின் –
இன் நகை முறுவல் என் ஆயத்தோர்க்கே. – *ஐங் 397*

*தலைவி, "கீழே கவிழ்ந்து விளங்கும் நிறை மயிர் பொருந்திய கழுத்தையுடைய செந்நாயின் ஆண் குட்டியை*

உடைய பன்றியைக் கொள்ளாமல் நீங்கும் வழியைக் கடந்து அண்மையில் வருகின்றனள் என இனிய நகை பொருந்திய முறுவலைப் பெற்ற என் ஆயத்தார்க்கு முன்னே விரைவாய்ப் போகும் நீவிர் கூறுவீராக!" என்று தன் ஊர்க்குச் செல்ப வர்க்குக் கூறினாள்.

## 98. ஊரவர் புலம்பினர்!

'புள்ளும் அறியாப் பல் பழம் பழுனி,
மட மான் அறியாத் தட நீர் நிலைஇ,
சுரம் நனி இனிய ஆகுக' என்று
நினைத்தொறும் கலிழும் என்னினும்
மிகப் பெரிது புலம்பின்று – தோழி, நம் ஊரே – ஐங் 398

"தோழியே! நின்னை எண்ணுந்தோறும் நீ செல்லும் சுரம் பறவையினமும் தேர்ந்து அறியாத பல வகைப்பட்ட பழங்கள் நிரம்பி, மடப்பம் பொருந்திய மான் கூட்டமும் பார்த்து அறியாத பெரிய நீர் நிலைகள் நிலைபெறப் பெற்றுச் செல்வதற்கு இனியவாய் விளங்குக என்று வாழ்த்திக் கண்ணீர் விட்டுக் கலங்கும் என்னை விட நம் ஊரில் உள்ளவர் மிக்க இரக்கம் கொண்டு புலம்பி நின்றனர்" என்று தோழி தலைவியை நோக்கிச் சொன்னாள்.

## 99. என் மனையில் திருமணம்!

'நும் மனைச் சிலம்பு கழீஇய அயரினும்,
எம் மனை வதுவை நல் மணங் கழி'எனச்
சொல்லின் எவனோ மற்றே – வென்வேல்,
மை அற விளங்கிய கழலடிப்,
பொய் வல் காளையை ஈன்ற தாய்க்கே? – ஐங் 399

"வெற்றி மிக்க வேலையும் குற்றம் இல்லாத விளங்கிய கழல் அணிந்த காலையும் உடைய பொய்ம் மொழிவதில் வல்ல தலைவனை ஈன்ற தாய்க்கு நும் வீட்டில் சிலம்பு களைந்து திருமணமான கடமையைச் செய்வாயாக! என நீவிர் அவளுக்கு உரைத்தால் வரக்கூடிய இழுக்கு யாது?" என்றாள் ஆங்கு வந்தவர்க்கு நற்றாய்.

## 100. காதலனுடன் வருவாள்!

மள்ளர் அன்ன மரவம் தழீஇ,
மகளிர் அன்ன ஆடுகொடி நுடங்கும்
அரும் பதம் கொண்ட பெரும் பத வேனில்,
'காதல் புணர்ந்தனள் ஆகி, ஆய்கழல்
வெஞ் சின விறல் வேற் காளையொடு
இன்று புகுதரும்' என வந்தன்று, தூதே. — *ஐங் 400*

*செவிலி "பெற்ற தாயே! வீரர் போன்ற மரவ மரங்களை மகளிர் போலும் அசையும் கொடிகள் தழுவி அசையும் அருமையான உண்ணும் பொருள்களை உடைய சிறந்த வேனிற் பருவத்தில், வதுவை செய்து கொண்டவளாய் நம் மகள் ஆராய்ந்து அணிந்து கொண்ட வீரகழலும் கொடிய சினமும் விறல்மிக்க வேலும் உடைய காளையைப் போன்ற வனுடனே இன்று மகள் வருவாள் என்று தூதர் கூறு கின்றனர்" என்று சொன்னாள்.*

# பாலை

## குறுந்தொகை

### 101. இந்த நல்லவர்கள் யாரோ?

வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல் அடி மேலவும் சிலம்பே நல்லோர்
யார்கொல்? அளியர் தாமே ஆரியர்
கயிறு ஆடு பறையின், கால் பொரக் கலங்கி,
வாகை வெண் நெற்று ஒலிக்கும்,
வேய் பயில் அழுவம் முன்னியோரே.

*– பெரும்பதுமனார் குறு 7*

*"ஆரியக்கூத்தர் கழையிற் கட்டிய கயிற்றின் மேல் நின்று ஆடும் போது கொட்டுனின்ற பறையைப் போல, மேல் காற்றானது தாக்குதலால் நிலை கலங்கி வாகை மரத்தினது வெள்ளிய நெற்றுகள் ஒலித்தற்கு இடமாகிய மூங்கில் செறிந்த பாலை நிலப் பரப்பைக் கடந்தும் செல்ல நினைத்து வருபவர்களுள், வில்லினை உடைய இவ் ஆடவனது காலில் வீரக் கழல்கள் உள்ளன தோள்வளையை அணிந்த இம் மகளின் மெல்லிய அடியின் மேல் சிலம்புகள் உள்ளன. இந் நல்லோர் யாவரோ? இவர்கள் இரங்கத் தக்கவர்கள்." என்று ஊரினர் உரைத்தனர்*

### 102. அவள் நாணும்படி வருகிறாள்

யாய் ஆகியளே விழவு முதலாட்டி
பயறுபோல் இணர பைந்தாது படீஇயர்

**உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்**
**காட்சி ஊரன் கொடுமை**
**காந்தனள் ஆகலின் நாணிய வருமே.**

*– ஓரம்போகியார் குறு 10*

*“செல்வச் செழிப்பும் இல்லற இன்பமும் ஆகிய விழை வினைத் தந்து தலைவன் மகிழ்ந்து குலாவுவதற்குரிய எம் தலைவி பயிற்றங்காய் போன்ற பூங் கொத்துகளிலுள்ள பசிய பூந்தாது தம்மேல் படியும்படி உழவர்கள் வளைந்த, மணக் கின்ற பூக்களையுடைய மெல்லிய கிளைகளையுடைய காஞ்சி மரத்தை உடைய ஊரனாகிய தலைவனது கொடுமையை நாம் தெரிந்து கொள்ளாதபடி மறைக்கின்றாள். ஆதலால், நீ வருகின்ற பொழுது, நீ நாணும்படி உம்மை எதிர்கொண்டு அழைப்பாள்” என்று தலைவனுக்குத் தோழி கூறினாள்.*

## 103. நெஞ்சே நினைந்திருப்போம்

**கோடு ஈர் இலங்கு வளை நெகிழ, நாள்தொறும்**
**பாடுஇல கலிழும் கண்ணொடு புலம்பி,**
**ஈங்கு இவண் உறைதலும் உய்குவம் ஆங்கே**
**எழு, இனி வாழி, என் நெஞ்சே! முனாது,**
**குல்லைக் கண்ணி வடுகர் முனையது**
**வல்வேற் கட்டி நல் நாட்டு உம்பர்**
**மொழி பெயர் தேஎத்தர் ஆயினும்,**
**வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே.**

*– மாமூலனார் குறு 11*

*“எனது நெஞ்சமே , நீ வாழ்வாயாக! சங்கினை அறுத்துச் செய்யப்பட்டு விளங்கும் கை வளை உடல் மெலிவினால் நெகிழ்கிறது. நாள்தோறும் இமை பொருந்துதல் இல்லாமை யினால் உறக்கமின்றிக் கலங்கி அழும் கண்ணோடு தனித் திருந்து இவ் இடத்தில் வருந்துதல் இனி ஆற்றமாட்டேன். கஞ்சங் குல்லையாகிய கண்ணியை அணிந்த வடுகருக்குரிய இடத்திற்கு முன்னேயுள்ளதாகிய பலவாகிய வேற்படையை யுடைய கட்டி என்பவனது நல்ல நாட்டிற்கு அப்பால் உள்ள மொழி வேறுபட்ட நாட்டில் தலைவர் உள்ளாரேனும் அவரிடத்தும் செல்லுதலை யான் எண்ணியுள்ளேன். நீயும்*

*இப்பொழுதே எழுவாயாக." என்று தலைவி தன் நெஞ்சிற்குக் கூறியது போல் தோழிக்குக் கூறினாள்.*

## 104. இடித்துரைக்கும் ஊர்

**எறும்பி அளையின் குறும் பல் சுனைய**
**உலைக்கல் அன்ன பாறை ஏறி,**
**கொடு வில் எயினர், பகழி மாய்க்கும்**
**கவலைத்து என்ப, அவர் தேர் சென்ற ஆறே;**
**அது மற்று அவலம் கொள்ளாது,**
**நொதுமல் கழறும், இவ் அழுங்கல் ஊரே.**

*– ஓதலாந்தையார் குறு 12*

*"தலைவர் சென்ற வழியானது, எறும்பின் வளையைப் போல குறுகிய பலவாகிய நீர்ச்சுனைகளை உடையது; கொல்லனது உலைக்களத்து உள்ள பட்டறைக் கல்லைப் போன்ற வெம்மையுடைய பாறையின் மேல் ஏறிச் செல்லுதல் வேண்டிய அருமைத்து வளைந்த வில்லை உடைய எயினர் வழிப்போக்கர் பொருளைக் கவரும் இடமாகிய பிளவுபட்ட வழிகளையுடையது என்று கண்டோர் கூறுவர். இந்த ஆரவாரத்தை உடைய ஊரானது அவ் வழியின் கொடுமையைப் பற்றி எண்ணாது, வேறுபட்ட சொற்களைக் கூறி என்னை இடித்துரைக்கும்." என்று 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குத் தலைவி உரைத்தாள்.*

## 105. நட்பு உண்மையானது

**பறை படப், பணிலம் ஆர்ப்ப, இறைகொள்பு**
**தொல் முதாலத்துப் பொதியில் தோன்றிய**
**நால் ஊர்க் கோசர் நல்மொழி போல,**
**வாய் ஆகின்றே – தோழி, – ஆய் கழல்**
**சேயிலை வெள் வேல் விடலையொடு**
**தொகுவளை முன்கை மடந்தை நட்பே.**

*– ஔவையார் குறு 15*

*"தோழி! அழகிய வீரக்கழலையும், செம்மையாகிய இலை வடிவில் ஆய வெள்ளிய வேலையும் கொண்ட தலைவனோடு பலவாகத் தொகுக்கப் பட்ட வளைகளைப்*

*பூண்ட முன்கையை யுடைய நின் மகள் செய்த நட்பானது, மிகப் பழைய ஆல மரத்தடியின் கண்ணே உள்ள ஊர்ப் பொது இடத்தில் தங்குதலையுடைய நான்கு ஊரிலுள்ள கோசரது நன்மையையுடைய நீடு மொழி உண்மையாவதைப் போல, முரசு முழங்கவும், சங்கு ஒலிக்கவும் செய்தலால் உண்மை ஆகியது" என்று செவிலித்தாய் உரைத்தாள்*

## 106. உள்ளார் கொல்லோ?

**உள்ளார்கொல்லோ – தோழி! கள்வர்**
**பொன் புனை பகழி செப்பம் கொண்மார்,**
**உகிர் நுதி புரட்டும் ஓசை போலச்,**
**செங்காற் பல்லி தன் துணை பயிரும்**
**அம் காற் கள்ளிஅம் காடு இறந்தாரே?**

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ குறு 16*

*"தோழி! ஆறலைக் கள்வர், இரும்பினாற் செய்யப்பட்ட தம் அம்பின் செம்மை காணும் பொருட்டு அதை தம் நக நுனியில் புரட்டுதலால் உண்டாகிய ஒலியைப் போல, செம்மையாகிய கால்களையுடைய பெண் பல்லியை அழைத் தற்கு இடமாகிய கள்ளிகளையுடைய பாலையைக் கடந்து பொருள் வயின் சென்ற தலைவர் நம்மை நினையாரோ?" என்று தோழி வினவினாள்*

## 107. யாம் அறிவற்றவர் ஆகுக!

**அருளும் அன்பும் நீக்கித், துணை துறந்து,**
**பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்,**
**உரவோர் உரவோர் ஆக!**
**மடவம் ஆக, மடந்தை, நாமே!**

*– கோப்பெருஞ்சோழ குறு 20*

*"தோழியே! அருளையும் அன்பையும் துறந்து, தன் துணைவியையும் விட்டுப் பிரிந்து பொருள் தேடும் முயற்சி யின் பொருட்டுப் பிரியும் தலைவன் அறிவுடையவ ராயின், அவ் ஆற்றலையுடையார் அறிவுடையவரே ஆக்க! அவரைப் பிரிந்திருத்தற்குரிய ஆற்றலில்லாத யாம் அறிவிலேம் ஆகுக! எனத் தலைவி தோழியிடம் இயம்பினாள்*

## 108. யார் உன்னைப் பிரிய எண்ணுவர்?

நீர் வார் கண்ணை நீ இவண் ஒழிய,
யாரோ பிரிகிற்பவரே? – சாரல்
சிலம்பு அணி கொண்ட வலம் சுரி மராஅத்து
வேனில் அம் சினை கமழும்
தேம் ஊர் ஒண்ணுதல்! – நின்னொடும், செலவே.

*– சேரமான் எந்தை குறு 22*

*"மலைச் சாரலானது அழகு கொள்வதற்குக் காரணமாக, வலமாகச் சுரிந்த வெண்கடப்ப மலரையுடைய வேனிற் காலத்தில் மலர்ந்த அழகிய கிளையினிடத்தில், மணக்கின்ற நன்மணம் பரவிய விளக்கத்தையுடைய நெற்றியையுடையாய், துயரத்தினால் நீர் சொரியும் கண்ணை உடையையாகி நீ இங்கே தனியே இருக்க நின்னைப் பிரிந்து செல்லும் ஆற்றலுடையவர் யாவர்? தலைவர் செலவு நின்னுடனே அமைவது ஆகும்" என்று தோழி தலைவியை ஆற்றுவித்தாள்*

## 109. என் அழகு பாழாகிறதே!

கன்றும் உண்ணாது, கலத்தினும் படாஅது,
நல் ஆன் தீம் பால் நிலத்து உக்காஅங்கு,
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது,
பசலை உணீஇயர் வேண்டும் –
திதலை அல்கல் என் மாமைக் கவினே.

*– வெள்ளிவீதியார் குறு 27*

*"நல்ல இனப் பசுவின் இனிய பாலானது அப் பசுவின் கன்றினாலும் உண்ணப்படாமல், கலத்திலும் கறந்து கொள்ளப் படாமலும் தரையிற் சிந்தி வீணாவது போலத் தேமல் படர்ந்த அல்குலினிடத்து எனது மாமையாகிய பேரழகு எனக்கும் அழகு பயவாமல் என் தலைவனுக்கும் இன்பம் செய்யாமல் பசலை உண்ணும் நிலையினதாயிற்று."* என்று தலைவி தோழியை நோக்கிக் கூறினாள்.

## 110. துன்பம் அறியாது உறங்கும் ஊர்!

முட்டுவேன்கொல்? தாக்குவேன்கொல்?
ஓரேன், யானும்: ஓர் பெற்றி மேலிட்டு,

'ஆஅ! ஒல்' எனக் கூவுவேன்கொல்? –
அலமரல் அசைவளி அலைப்ப, என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.

*– ஔவையார் குறு 28*

*"சுழன்று அசைந்து அசைந்து வருகின்ற தென்றற் காற்று வருத்த, எனது வருத்துகின்ற காம நோயாகிய துன்பத்தை உணர்ந்து கொள்ளாமல், கவலையின்றித் தூங்கும் ஊரிலுள் ளாருக்காக யான் சுவர் முதலியவற்றில் முட்டிக் கொள் வேனோ? கோல் முதலிய கருவிகளால் தாக்கிக் கொள் வேனோ? ஏதாவது ஒரு காரணத்தின் பொருட்டு ஆ ஒ என்றும் ஐயோ என்றும் ஒலியுண்டாக உரத்துக் கூப்பிடுவேனோ? இன்னது செய்வேன் என்பதை அறியேன்." என்று தலைவி ஆற்றாமையால் அலறினாள்.*

## 111. கனவு தந்த மயக்கம்

கேட்டிசின் வாழி – தோழி! அல்கல்,
பொய்வலாளன் மெய் உறல் மரீஇய
வாய்த் தகைப் பொய்க் கனா மருட்ட ஏற்று எழுந்து
அமளி தைவந்தனனே; குவளை
வண்டு படு மலரின் சாஅய்த்
தமியென்; மன்ற அளியென் யானே.

*– கச்சிப்பேட்டு நன்னாகையார் குறு 30*

*"தோழி கேட்பாயாக, இராப் பொழிதிலே, பொய் கூறுதலில், வன்மையுடைய தலைவன் என் உடம்போடு இணைதலைப் பொருந்தியது, மெய்போலும் தன்மையுடைய பொய்யாகிய கனவாகும். அது, மயக்கத்தை உண்டாக்க துயிலுணர்ந்து எழுந்து, தலைவன் என்று எண்ணிப் படுக்கை யைத் தடவினேன். வண்டுகள் வீழ்ந்து உழக்கிய குவளை மலர்போல மெலிந்து தவித்தவளாயுள்ளேன், அத்தகைய யான் இரங்குதற்குரியள்" என்று தலைவி வருந்தினாள்.*

## 112. களிற்றின் செயலால் வருவார்!

நசை பெரிது உடையார்; நல்கலும் நல்குவர்;
பிடி பசி களைஇய பெருங்கை வேழம்

மென் சினை யாஅம் பொளிக்கும்
அன்பின – தோழி! – அவர் சென்ற ஆறே.
*– பாலை பாடிய பெருங்கடுங்கோ குறு 37*

*"தோழியே தலைவர் நின்பால் விருப்பம் மிக உடையார்; தலையளி செய்தலும் உடையவர்; அவர் செல்லும் வழிகளில் பெண்யானையின் பசியை நீக்கும் பொருட்டுப் பெரிய துதிக்கையை உடைய ஆண்யானை மெல்லிய கிளைகளை உடைய 'யா மரத்தின் பட்டையை உரித்து அதன் நீரை அப் பெண் யானையைப் பருகச் செய்யும் அன்பு நிலைக் காட்சியைக் கண்டவிடத்து, நமக்கு அருளுதலை எண்ணி விரைந்து வருவார்.*

## 113. அவர் சென்ற வழி!

'வெந் திறல் கடு வளி பொங்கர்ப் போந்தென,
நெற்று விளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை, அருஞ்சுரம்' என்ப நம்
முலையிடை முனிநர் சென்ற ஆறே. *– ஔவையார் குறு 39*

*"தோழி! நம் முலையிடத்தே துயிலுகின்றதை வெறுத்துப் பிரிந்து சென்ற தலைவர் செல்லும் வழியானது வெம்மை யோடு கூடிய வலிய பெருங்காற்றானது மரக்கிளைகளினுடே வீசுவதால், வாகை மரத்தினது நெற்றாய் விளைந்த வற்ற லானது ஒலித்தற்கு இடமாகிய மலைகளை உடைய கடத்தற் கரிய கொடிய பாலை வழியாகும்" என்று தலைவி கூறினாள்*

## 114. விழாக் கொண்ட பேரூர்!

காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து,
சாறு கொள் ஊரின் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்
மக்கள் போகிய அணில் ஆடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் – தோழி! – அவர் அகன்ற ஞான்றே.
*– அணிலாடு முன்றிலார் குறுந் 41*

*"தோழி! தலைவர் அருகில் இருப்ப மிக மகிழ்ச்சியுற்று, விழாக்கொண்ட ஊரினர் மகிழ்வது போல யானும் மகிழ்*

*வேன் அவன் என்னைப் பிரிந்த காலத்தில் பாலை நிலத்தில் உள்ள அழகிய குடியை உடைய சிறிய ஊரில் மாந்தர் நீங்கிச் சென்ற வீட்டின் அணிலாடுகின்ற முற்றத்தைப் போலப் பொலிவிழந்து வருந்துவேன்" என்றாள் தலைவி தோழியிடம்*

## 115. இரு பேராண்மை பூசல்

'செல்வார் அல்லர்' என்று யான் இகழ்ந்தனனே;
'ஒல்வாள் அல்லள்' என்று அவர் இகழ்ந்தனரே;
ஆயிடை, இரு பேர் ஆண்மை செய்த பூசல்,
நல்அராக் கதுவியாங்கு, என்
அல்லல் நெஞ்சம் அலமலக்குறுமே. – *ஔவையார் குறு 43*

*"தோழி! தலைவர் நம்மைப் பிரிந்து செல்வார் என்று எண்ணி யான் அவர் செலவை விலக்காமல் சோர்ந்திருந் தேன், அவரும் நம் பிரிவைத் தெரிவித்தால் அதற்கு இவள் உடன் படமாட்டாள் என்று எண்ணி என்னிடம் கூறாதிருந் தார், அந்தக் காலத்தில் இருவரிடத்தும் தோன்றிய இருவகை ஆண்மைகளால் விளைந்த மாறுபாட்டினால் என் துன்ப முடைய நெஞ்சு, நல்ல பாம்பு கடித்ததினால் வருந்துவதைப் போல இப்போது மிக்க கலக்கத்தை அடைந்துள்ளது." என்று வருந்தியபடி தலைவி கூறினாள்*

## 116. விண் மீனினும் பலர்

காலே பரி தப்பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே;
அகல் இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற, இவ் உலகத்துப் பிறரே.
– *வெள்ளிவீதியார் குறு 44*

*"என் கால்கள் நடந்து நடந்து வருந்துகின்றன; என் கண்கள் எதிர் வருவாரைப் பார்த்துப் பார்த்து ஒளியை இழந்தன உறுதியாக இந்த உலகத்தில் என் மகளும் அவள் தலைவனும் அல்லாத பிறர், அகன்ற பெரிய வானத்திலுள்ள மீன்களைக் காட்டிலும் பலராவர்" என்று செவிலித்தாய் வருந்திக் கூறினாள்*

## 117. தலைவர் வருத்தம் தீராரோ?

'தாதின் செய்த தண் பனிப் பாவை
காலை வருந்தும் கையாறு ஓம்பு' என,
ஓரை ஆயம் கூறக் கேட்டும்,
இன்ன பண்பின் இனை பெரிது உவக்கும்
நன்னுதல் பசலை நீங்க, அன்ன
நசை ஆகு பண்பின் ஒரு சொல்
இசையாதுகொல்லோ, காதலர் தமக்கே?

*– பூங்கணுத்திரையார் குறு 48*

*"பூந்தாது முதலியவற்றால் செய்யப்பட்ட மிக்க குளிர்ச்சி யுடைய விளையாட்டுப் பாவையானது தலைவி தன்னைப் போற்றுதலை ஒழித்தாளென வருந்துகிறது. அதனைப் பாது காப்பாயாக என்று தோழியர்க் கூட்டம் சொல்லக் கேட்ட பின்பும் வாளாது வருந்தும் நல்ல நெற்றியினையுடைய தலைவியின் பசலை நீங்கும்படி, விருப்பமுடைய ஒரு சொல் கூறுதல் தலைவனுக்கு இயலாதோ?" என்று தோழி கூறினாள்*

## 118. அவள் வந்திருந்தால் இரங்கத்தக்கது!

வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சில் நீர்
வளையுடைக் கையள், எம்மோடு உணீஇயர்,
வருகதில் அம்ம, தானே;
அளியளோ அளியள், என் நெஞ்சு அமர்ந்தோளே.

*– சிறைக்குடி ஆந்தையார் குறு 56*

*"வேட்டையை மேற்கொண்ட செந்நாய் தோண்டி உண்டு எஞ்சியதாகிய, காட்டுமல்லிகைப் பூ முடிய அழுகல் நாற்றத்தையுடைய சிறிதான நீரை, வளையையுடைய கையளாய், எம்மொடு சேர்ந்து உண்ணுதற்குத் தலைவி வருக வந்தால் எம் நெஞ்சின்கண் விரும்பி உறையும் அத் தலைவி மிகவும் இரங்கத்தக்கவள்" என்றான் தலைவன்.*

## 119. வரும்வரை பொறுத்தல் வேண்டும்!

பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அதலைக் குன்றத்து அகல் வாய்க் குண்டு சுனைக்

குவளையொடு பொதிந்த குளவி நாறு நறு நுதல்
தவ்வென மறப்பரோ – மற்றே; முயலவும்,
சுரம் பல விலங்கிய அரும் பொருள்
நிரம்பா ஆகலின், நீடலோ இன்றே.

*– மோசிகீரனார் குறு 59*

*"ஒரு கண்ணுடைய கிணைப் பறையை முழக்கி முடிக்கும் தாளத்தினை உடைய பாணர் முதலிய பரிசிலரைப் பாது காக்கும் 'அதலை என்ற குன்றத்தில் உள்ள அகன்ற வாயை உடைய ஆழமுள்ள சுனையிடத்து மலர்ந்த குவளை மலர்க ளோடு சேர்த்துக் கட்டிய காட்டு மல்லிகையின் மணங் கமழும் நின் நெற்றியைத் தலைவர் மறந்து விடுவாரோ? எவ்வளவு முயன்றாலும் பாலை நிலம் கடந்து சென்று கிடைத்தற்கரிய பொருள் பெற்று மீண்டு வருவோமென்று கருதிச் சென்ற தலைவர் காமம் நீட்டித்துத் தங்குதல் இயலாது.ஆதலின் நீ வருந்துவதை நீக்குவாயாக!" என்று தோழி தலைவியை ஆற்றுவித்தாள்*

## 120. நெஞ்சே நீ சொல்லுக

'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' எனச்
செய் வினை கைம்மிக எண்ணுதி; அவ் வினைக்கு
அம் மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ? உரைத்திசின் – நெஞ்சே.

*– உகாய்க்குடிகிழார் குறு 63*

*"நெஞ்சே! இரவலருக்குக் கொடுத்தலும், இன்பங் களை நுகர்வித்தலும் பொருளில்லாத வறியவர்களுக்கு இல்லை என்று கருதி, பொருள் செய்தற்குரிய செயல்களை மிகவும் எண்ணிச் செய்கின்றார். அச் செயல் செய்வதற்குத் துணையாக அழகிய மாமை நிறத்தையுடைய தலைவியும் வருவாளோ! எம்மை மட்டும் செலுத்துகின்றாயோ? சொல்லு வாயாக."* என்று தலைவன் தன் நெஞ்சிடம் வினவினான்.

## 121. நம்மை நினைக்கவும் மாட்டாரோ?

உள்ளார்கொல்லோ – தோழி! – கிள்ளை
வளை வாய்க் கொண்ட வேப்ப ஒண் பழம்

புது நாண் நுழைப்பான் நுதி மாண் வள் உகிர்ப்
பொலங் கல ஒரு காசு ஏய்க்கும்
நிலம் கரி கள்ளிஅம் காடு இறந்தோரே?

*- அள்ளூர் நன்முல்லை குறு 67*

"தோழியே! கிளி தன் வளைந்த அலகினிடத்திலே கொண்ட வேம்பினது ஒளி வீசும் பழமானது, புதிய பொற் கம்பியின் ஊடு செலுத்தும் பொற்கொல்லரது முனை மாட்சிமைப் பட்ட கூரிய கைந் நகத்தில் கொண்ட பொன் அணிகலனிற்குரிய ஒரு காசை ஒத்துக் காணப்படும். நிலம் கரிந்துள்ள கள்ளியை உடைய பாலை நிலத்தைக் கடந்து சென்ற தலைவர் என்னை நினையார்ரோ?" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

## 122. இவளிற் சிறந்த செல்வம் உண்டோ?

மருந்து எனின் மருந்தே; வைப்பு எனின் வைப்பே –
அரும்பிய சுணங்கின் அம் பகட்டு இளமுலை,
பெருந் தோள், நுணுகிய நுசுப்பின்,
கல் கெழு கானவர் நல்குறு மகளே.

*- கருவூர் ஓதஞானி குறு 71*

"நெஞ்சே! தோற்றிய தேமலை உடைய அழகிய பெருமை யையுடைய இளைய முலையையும் பெரிய தோளையும் நுண்ணியதாகிய இடையையும் உடைய, கற்கள் நிறைந்த காட்டுப் பகுதியில் வாழும் கானவன் பெற்ற மகள், காம நோய்க்கு மருந்தாவாள்; இன்பம் நுகர்வதற்குரிய செல்வமும் ஆவாள்" என்று தன் நெஞ்சிடம் தலைவன் தலைவன் இயம்பினான்

## 123. தோள் மெலிந்து வருந்துவது தவறோ?

அம்ம வாழி, தோழி! யாவதும்,
தவறு எனின், தவறோ இலவே – வெஞ் சுரத்து
உலந்த வம்பலர் உவல் இடு பதுக்கை
நெடு நல் யானைக்கு இடு நிழல் ஆகும்
அரிய கானம் சென்றோர்க்கு
எளிய ஆகிய தடமென் தோளே.

*- மதுரை மருதன் இளநாகனார் குறு 77*

*"தோழி! உனக்கு யான் ஒன்று கூறுவேன் கேட்பாயாக! வெம்மை மிகுந்த கடப்பதற்கரிய பாலை நில வழியிலே இறந்துபட்ட வழிப்போக்கர்களுடையே உடல்களை மறைந்த தழைக் குவியலானது உயர்ந்த நல்ல யானைக்குச் செயற்கை யாய் இட்ட நிழலைத் தருவதற்குரிய பாலை நிலவழியில் என்னைப் பிரிந்து சென்ற தலைவருக்காக மெலிந்தன வாகிய பரந்த மெல்லிய என் தோள்கள் தவறுடையன என்று கூறின் அவை சிறிதும் தவறு இல்லாதனவாம்" என்றாள் தலைவி*

## 124. அவர் அங்கேயே தங்கிவிடுவாரோ?

**கான யானை தோல் நயந்து உண்ட**
**பொரிதாள் ஓமை வளி பொரு நெடுஞ் சினை**
**அலங்கல் உலவை ஏறி, ஓய்யெனப்**
**புலம்பு தரு குரல் புறவுப் பெடை பயிரும்**
**அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்ச்**
**சேர்ந்தனர் கொல்லோ தாமே – யாம் தமக்கு**
**ஒல்லேம் என்ற தப்பற்குச்**
**சொல்லாது ஏகல் வல்லுவோரே.**

*– குடவாயிற் கீரத்தன் குறு 79*

*"தோழி! யான் பிரிவதற்கு ஒத்துக் கொள்ளேன் என்று சொன்ன தவற்றினால் நம்மிடம் சொல்லாமற் சென்று விட்ட வன்மையுடைய தலைவர், காட்டு யானையால் பட்டையை விரும்பி உண்ணப்பட்ட பொரிந்த அடிய் உடைய ஓமை மரத்தின் காற்றடிக்கும் நெடிய கிளையினது அசைதலை உடைய வற்றல் கொம்பில் ஏறி, 'ஓய்' என்று தனிமை வருத்தத்தை வெளிப்படுத்தும் வகையில் ஆண் புறா பெட்டைப் புறாவை அழைக்கும் பாலை நிலத்தின் வழியே உள்ள அழகிய குடிகளை உடைய சிற்றூரில் தங்கி விட்டாரே? எனத் தோழியை நோக்கித் தலைவி வினவினாள்.*

## 125. பாலை நிலத்தில் எப்படி நடப்பான்

**பெயர்த்தனென் முயங்க, 'யான் வியர்த்தனென்' என்றனள்;**
**இனி அறிந்தேன், அது துனி ஆகுதலே –**

கழல்தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்
வேங்கையும் காந்தளும் நாறி,
ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே. – *மோசிகீரன் குறு 84*

*"கழலும்படி இட்ட தோள்வளையை உடைய ஆய் என்னும் வள்ளலுடைய மேகம் தவழும் பொதிய மலையில் வேங்கை மலரினது மணத்தையும், காந்தள் மலரினது மணத்தையும் ஒருங்கே பெற்றவளும் ஆம்பல் மலரைக் காட்டிலும் குளிர்ச்சியை உடையவளுமான மகள் யான் தழுவிய போது தான் வியர்வை அடைந்ததாகக் கூறினாள் அங்ஙனம் என் தழுவல் அவளுக்கு வெறுப்பு உண்டாக்குவதற்குரிய காரணத்தை அப்பொழுது அறிந்திலேன்; ஆயினும் இப்பொழுது அறிந்தேன்" என்றாள் செவிலித்தாய்*

## 126. இனி எங்ஙனம் ஆற்றுவேன்!

அம்ம வாழி, தோழி! காதலர்,
நூல் அறு முத்தின் தண்சிதர் உறைப்பத்,
தாளித் தண் பவர் நாள் ஆ மேயும்
பனி படு நாளே, பிரிந்தனர்;
பிரியும் நாளும் பல ஆகுபவே!

– *காவன்முல்லைப் பூதனார் குறு 104*

*"தோழி! ஒன்று கூறுவன் கேட்பாயாக நம் தலைவல் நூலற்ற முத்துவடத்திலிருந்து உதிர்கின்ற முத்துகளைப் போலக் குளிர்ந்த பனித்துளிகள் துளிக்கும் 'தாளி' என்னும் கொடியை விடியற் காலையில் பசுக்கள் மேயும் பனி வீழ்கின்ற காலத்தில் தலைவர் பிரிந்து சென்றார். அங்ஙனம் அவர் பிரிந்து சென்ற நாள்களும் பலவாயின யான் எங்ஙனம் ஆற்றுவேன்" என்று தலைவர் வராததால் தலைவி தன் ஆற்றாமையைக் கூறினாள்.*

## 127. இனிமையை எங்கே காண முடியும்?

உமணர் சேர்ந்து கழிந்த மருங்கின், அகன் தலை,
ஊர் பாழ்த்தன்ன ஓமைஅம் பெருங் காடு
இன்னா என்றிர் ஆயின்,
இனியவோ – பெரும, தமியோர்க்கு மனையே?

– *பாலை பாடிய பெருங்கடுங்கோ குறு 124*

*"தலைவனே! உப்பு வணிகர் பலர் கூடித் தங்கியிருந்து கடந்து சென்ற பக்கத்தையும், விரிந்த இடத்தையும் உடைய ஊரானது பாழ்பட்டுக் கிடப்பது போன்ற தோற்றத்தை உடைய ஓமை மரங்கள் வளர்ந்த பெரும் பாலைநில வழியானது செல்லுதற்குத் துன்பமுடையது என்று கூறித் தனியே செல்லக் கருதுகின்றீர். தலைவரைப் பிரிந்த தனிமையுடைய மகளிருக்கு வீடுகள் மட்டும் இனிமை தருவனவோ? அல்லவே!" என்றுரைத்தாள் தோழி*

## 128. எங்கே செல்வார் அவர்

**நிலம் தொட்டுப் புகாஅர்; வானம் ஏறார்;**
**விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்;**
**நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்**
**குடிமுறை குடிமுறை தேரின்,**
**கெடுநரும் உளரோ? நம் காதலோரே.**

*– வெள்ளிவீதியார் குறு 130*

*"தோழியே! நம்முடைய தலைவர் நிலத்தைத் தோண்டி உள்ளே புகமாட்டார், விண்ணகத்தில் பறந்து மறைந்து விட மாட்டார், குறுக்கிடுகின்ற பெரிய கடலின்மேல் காற்றினால் நாவாய் வழி கடந்தும் செல்லார், நாடுகள்தோறும், ஊர்கள் தோறும், முறையாக குடிகள்தோறும், ஆராய்ந்தால் அகப் படாமல் தப்புவாரும் உளரோ?" என்று தோழி தலைவிக்கு ஆறுதல் உரைத்தார்.*

## 129. என் நெஞ்சு விரைகின்றது

**ஆடு அமை புரையும் வனப்பிக் பணைத்தோட்**
**பேர் அமர்க் கண்ணி இருந்த ஊரே**
**நெடுஞ்சேண் ஆர் இடையவே; நெஞ்சே,**
**ஈரம் பட்ட செவ்விப் பைம் புனத்து**
**ஓர் ஏர் உழவன் போலப்,**
**பெரு விதுப்பு உற்றன்றால்; நோகோ யானே.**

*– ஓரேருழவனார் குறு 131*

*"அசைகின்ற மூங்கிலை ஒத்த அழகினையும் பருத்த தோள்களையும் பெரிய காதற் போர் செய்கின்ற கண்களை*

யும் பெற்ற தலைவி இருக்கின்ற ஊர் நெடுந்தூரத்தில், அடைதற்குரிய இடத்தில் உள்ளது. எனது நெஞ்சானது ஈரம் பொருந்திய செவ்வியை உடைய பசுமையான புனத்தையுடைய ஒற்றை ஏரை உடைய உழவனைப் போல பெருவிரையும் வினை உடையது அதனால் யான் வருந்துகிறேன்" என்றுரைத் தான் தலைவன்.

## 130. தலைவர் பிரிந்து செல்லார்!

'வினையே ஆடவர்க்கு உயிரே; வாள் நுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என,
நமக்கு உரைத்தோரும் தாமே,
அழாஅல் – தோழி, – அழுங்குவர் செலவே.

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ குறு 135*

"தோழியே! 'தொழில் தான் ஆண்மக்களுக்கு உயிராகும் இல்லின்கண் உறையும் மகளிருக்குக் கணவன்மாரே உயிராவர். என்று நமக்கு எடுத்துக் கூறியவரும் அத் தலைவரே. ஆதலால் அழுதலை ஒழிவாயாக. தலைவர் செல்லுதலைத் தவிர்ப்பார்." என்று தலைவன் பிரிந்து செல்வதைக் கூறிய தலைவிக்குத் தோழி ஆற்றுவித்தாள்.

## 131. ஏற்போர் இல்லாத நாள்கள் ஆகுக

மெல் இயல் அரிவை! நின் நல் அகம் புலம்ப,
நிற் துறந்து அமைகுவென் ஆயின் – எற் துறந்து
இரவலர் வாரா வைகல்
பல ஆகுக! – யான் செலவுறு தகவே.

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ குறு 137*

"மென்மைத் தன்மையை உடைய பெண்ணே! நின் நல்ல நெஞ்சம் தனிமையில் வருந்தும்படி, உனைனைப் பிரிந்து சென்ற இடத்தே மனம் பொருந்தி இருப்பேனாயின், நான் அங்ஙனம் செல்லுவதற்கு உற்ற வினையிடத்தில், என்னிடத்து இரப்போர் வராத நாள்கள் பலவாகுக!

## 132. ஊர் அறிந்தது துன்பம்

வேதின வெரிநின் ஓதி முது போத்து,
ஆறு செல் மாக்கள் புள்கொளப், பொருந்தும்

**சுரனே சென்றனர், காதலர்; உரன் அழிந்து,**
**ஈங்கு யான் அழுங்கிய எவ்வம்**
**யாங்கு அறிந்தன்று – இவ் அழுங்கல் ஊரே?**

*– அள்ளூர் நன்முல்லையார் குறு 140*

*தலைவர், கருக்கரிவாளைப் போன்ற முதுகை உடைய முதிய ஆண் ஒந்தியானது, வழிச் செல்லும் மனிதர்கள் அறி குறியாகக் கொள்ளும்படி தங்குகின்ற பாலை நிலத்தில் சென்றனர் அவர் பிரிந்த பிறகு அங்கே வலிமை அழிந்த யான் பொறுத்துக் கொண்டுள்ள துன்பத்தை, இரங்குதலைடைய இவ் ஊர் எவ்வாறு அறிந்தது" என்று தோழியைப் பார்த்து தலைவி வினவினாள்.*

## 133. தன் மெல்லடி வருந்தப் போயினளே!

**கழிய காவி குற்றும், கடல**
**வெண் தலைப் புணரி ஆடியும், நன்றே**
**பிரிவு இல் ஆயம் உரியது ஒன்று அயர,**
**இவ் வழிப் படுதலும் ஒல்லாள் – அவ் வழிப்**
**பரல்பாற் படுப்பச் சென்றனள் மாதோ –**
**செல் மழை தவழும் சென்னி**
**விண் உயர் பிறங்கல் விலங்கு மலை நாட்டே!**

*– மதுரை ஆசிரியன் கோடங் கொற்றன் குறு 144*

*"கழனியிடத்து மலர்ந்த காவி மலர்களைப் பறித்தும், கடலில் உள்ள வெள்ளிய தலையை உடைய அலையிடத்து விளையாடியும், தன்னோடு என்றும் பிரிதல் இல்லாத நல்ல ஆயத்தார் தம் தமக்குரிய விளையாட்டில் ஈடுபட்டிருக்க, அவள் அதில் ஈடுபாடு கொள்ளாளாகி, விரைந்து செல்லும் முகில்கள் தவழுகின்ற உச்சியை உடைய உயர்ந்த மலை களைக் கொண்ட அந்த வெம்மை மிகுந்த பாலை வழியின் பருக்கைக் கற்கள் அடியின் அழகைச் சிதைக்க அவனோடு போயினள்." என்று செவிலித்தாய் சொல்லி வருந்தினாள்.*

## 134. காதலர்கள் இகழ மாட்டார்களோ?

**வேனிற் பாதிரிக் கூன்மலர் அன்ன**
**மயிர் ஏர்பு ஒழுகிய அம் கலுழ் மாமை,**

நுண் பூண், மடந்தையைத் தந்தோய் போல,
இன் துயில் எடுப்புதி – கனவே! –
எள்ளார் அம்ம, துணைப் பிரிந்தோரே.

*– கோப்பெருஞ்சோழன் குறு 147*

*"கனவே! வேனிற்காலத்து மலரும் வளைந்த மலரின் துய்யைப் போன்ற மயிர் எழுந்து படர்ந்த அழகு ஒழுகும் மாமையையும், நுண்ணிய தொழிலை உடைய அணி கலனையும் அணிந்த தலைவியை நேரே கொண்டுவந்து தந்தது போல, நீயும் இனிய துயிலினின்றும் என்னை எழுப்பு கின்றாய். அதனால் தம் துணைவியரைப் பிரிந்தோர் இனி உன்னை இகழார்," என்று கனவு கண்டு தலைவி உரைத்தாள்*

## 135. அவனோடு சென்றால் நாணம் போகும்!

அளிதோ தானே – நாணே நம்மொடு
நனி நீடு உழந்தன்று மன்னே; இனியே,
வான் பூங் கரும்பின் ஓங்கு மணற் சிறு சிறை
தீம் புனல் நெரிதர வீய்ந்து உக்காஅங்குத்,
தாங்கும் அளவைத் தாங்கி,
காமம் நெரிதரக் கைந் நில்லாதே.

*– வெள்ளிவீதியார் குறு 149*

*"தோழி, நாணம் நம்மோடு மிக நெடுங்காலம் உடனிருந்து வருந்தியது வெள்ளிய பூவை உடைய கரும்பின், உயர்ந்த மணலைப் பெற்ற சிறிய கரையானது, இனிய நீர் நெருங்கி மோதுவதால் கரை அழிந்து உட்குறைந்தாற் போல், தாங்கும் அளவில் தாங்கிய காமம் மேன்மேலும் நெருங்குவ தால் என்னிடம் தங்கி நில்லாமல் போய்விடும். அஃது இரங்கத் தக்கது" என்று தலைவி தோழியை நோக்கிக் கூறினாள்*

## 136. இளமைக்கு முடிவாகும்!

வங்காக் கடந்த செங் காற் பேடை
எழால் உற வீழ்ந்தெனக் கணவற் காணாது,
குழல் இசைக் குரல் குறும் பல அகவும்
குன்று உறு சிறு நெறி அரிய என்னாது,

'மறப்பு அருங் காதலி ஒழிய
இறப்பல்' என்பது, ஈண்டு இளமைக்கு முடிவே.

*- தூங்கலோரி குறு 151*

*நெஞ்சமே! ஆண் வங்காப் பறவை நீங்கப் பெற்றமை யால் சிவந்த கால்களையுடைய பெண் பறவை 'வல்லூறு என்னும் பறவை (தன் மேல் வீழ) இரையாகக் கொள்ளும் பொருட்டுத் தம்முடைய கணவனாகிய ஆண் பறவையைக் காணாமல் வேய்ங்குழலினது இசையைப் போன்ற குரல் களைக் கொண்டனவாய் சிறிய பல ஒலிகளால் அலைத்துக் கொண்டிருக்கும் குன்றுகள் பொருந்திய சிறிய வழிகள் கடத்திற்கு அரியன என்று எண்ணாமல் மறத்தற்கு அரிய நம் தலைவி இவ் இடத்தில் தனித்திருக்க நான் செல்வேன் என்று துணிவது ஈங்கு நம் இளமைப் பருவத்துக்கு முடிவாகும்" என்று வருந்தினான் தலைவன்*

## 137. எவ்விதம் பெற்றாரோ?

யாங்கு அறிந்தனர்கொல் – தோழி – பாம்பின்
உரி நிமிர்ந்தன்ன உருப்பு அவிர் அமையத்து,
இரை வேட்டு எழுந்த சேவல் உள்ளிப்,
பொறி மயிர் எருத்தின் குறு நடைப் பேடை
பொரிகாற் கள்ளி விரிகாய் அம் கவட்டுத்
தயங்க இருந்து, புலம்பக் கூஉம்
அருஞ் சுர வைப்பின் கானம்
பிரிந்து, சேண் உறைதல் வல்லுவோரே?

*- மதுரைச் சீத்தலைச் சாத்தன் குறு 154*

*"தோழியே! பாம்பினது சட்டை உரிந்த தோல் மேல் எழுந்தாற் போல வெம்மை விளங்குகின்ற கானலின் நண்பகற் பொழுதிலே இரையை விரும்பி மேலெழுந்து பறந்து சென்ற ஆண் பறவையை நினைத்து, புள்ளிகளையுடைய மயிர் பொருந்திய கழுத்தையும், மென் நடை பெற்ற பெண் புறா பொரிந்த அடியினையும் வெடித்த காயையும் கொண்ட கள்ளியினது அழகிய கிளையில் இருந்து தனிமைத் துயர் தோன்றும்படி கூவுகின்றது அத்தகைய கடத்தற்கரிய பாலை*

*நிலத்தைக் கடந்து நெடுந்தூரத்தில் தங்கி இருத்தலை உடைய தலைவர் இவ் வன்மையை எவ்வாறு பெற்றார்?" என்றாள் பிரிந்த தலைவனை நினைந்த தலைவி*

## 138. அவளைப் பிரியின் உயிர் வாழ்தல் அரிது!

மாரிப் பித்திகத்து நீர் வார் கொழு முகை
இரும் பனம் பசுங் குடைப் பலவுடன் பொதிந்து
பெரும் பெயல் விடியல் விரித்து விட்டன்ன
நறுந் தண்ணியளே, நல்மா மேனி;
புனற் புணை அன்ன சாய் இறைப் பணைத் தோள்
மணத்தலும் தணத்தலும் இலமே;
பிரியின் வாழ்தல் அதனினும் இலமே.
*– சிறைக்குடி ஆந்தையார் குறு 168*

*"நெஞ்சே, நல்ல அழகிய நிறம் பெற்ற மேனியை உடைய தலைவி மாரிக் காலத்தில் மலரும் பிச்சியினது நீர் ஒழுகும் செழுமையான அரும்புகளைப் பெரிய பசுமையான பனை ஓலைக் குடையில் ஒருங்கே வைத்து மூடி, பெருமழை பெய்தலைச் செய்யும் விடியற்காலத்தே விரித்து விட்டாற் போன்ற நறுமணத்தையும் குளிர்ச்சியையும் உடையவள்; நீரில் விடும் தெப்பத்தைப் போன்ற வளைந்த நிலவினை உடைய மூங்கிலனைய அவள் தோள்களைப் பொருந்துதலும் பிரிதலும் இல்லை யாயினோம்; பிரிவோமாயின் உயிர் வாழ்தல் அதனைக் காட்டிலும் இயலாததது ஆகும்" என்று பொருள் தேடித் துணிந்த தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான்.*

## 139. அருளை மதிப்பவர் இல்லை

பெயல் மழை துறந்த புலம்பு உறு கடத்துக்
கவை முடக் கள்ளிக் காய் விடு கடு நொடி
துதை மென் தூவித் துணைப் புறவு இரிக்கும்
அத்தம் அரிய என்னார், நத்துறந்து,
பொருள்வயிற் பிரிவார் ஆயின், இவ் உலகத்துப்
பொருளே மன்ற பொருளே;
அருளே மன்ற ஆரும் இல்லதுவே. *– வெண்பூதி குறு 174*

*"தோழியே! பெய்ய வேண்டிய மழை பெய்யாது நீங்கிய தனிமை மிக்க பாலை நிலத்தில் கவைத்த முள்ளை உடைய கள்ளியினது காய் வெடிக்கும் பொழுது விடும் கடிய ஒலி யானது, நெருங்கிய மெல்லிய சிறகுகளை உடைய ஆணும் பெண்ணுமாகிய இரட்டைப் புறாக்களை நீங்கச் செய்யும் அரு வழிகள் கடத்தற்கரியன என்று கருதாராகி, நம்மைப் பொருள் தேடும் பொருட்டு நம் தலைவர் பிரிவாராயின் இந்த உலகத்தில் செல்வமே உறுதிப்பொருளாகி விடும். அருள் என்பது தன்னை ஏற்றுக் கொள்வார் யாரும் இல்லாத தாகி விடும்" எனத் தலைவி தோழிக்குக் கூறினாள்.*

## 140. பொருள் பெற்றவுடன் திரும்புவார்!

**பழூஉப் பல் அன்ன பரு உகிர்ப் பா அடி**
**இருங் களிற்று இனநிரை ஏந்தல் வரின், மாய்ந்து,**
**அறை மடி கரும்பின் கண் இடை அன்ன**
**பைதல் ஒரு கழை நீடிய சுரன் இறந்து,**
**எய்தினர் கொல்லோ பொருளே – அல்குல்**
**அவ் வரி வாடத் துறந்தோர்**
**வன்பர் ஆகத் தாம் சென்ற நாட்டே?**

***– கச்சிப்பேட்டு நன்னாகையார் குறு 180***

*"அல்குலினது அழகிய தேமல் நிறம் கெடும்படி நம்மைப் பிரிந்த தலைவர், பேயின் பற்களைப் போன்ற பருத்த நகங் களை உடைய பரவிய அடிகளைப் பெற்ற பெரிய களிற்றுக் கூட்டத்தின் தலைவனாகிய யானை வந்து கைப்பற்றிய தனாலே, அழிந்து பாத்தியினிடத்து வீழ்ந்த கரும்புகளின் இடையிடையே நின்ற ஒற்றைக் கரும்பு போல ஒற்றை மூங்கில் ஆங்காங்கே வளர்ந்துள்ள பாலை நிலத்தைக் கடந்து நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் தாம் சென்ற நாட்டினி டத்துப் பொருளைப் பெற்றாரோ இல்லையோ?" என்று தோழி தலைவியிடம் இயம்பினாள்.*

## 141. வினை முடித்து விரைவோம்!

**இன்றே சென்று வருதும்; நாளைக்**
**குன்று இழி அருவியின் வெண் தேர் முடுக,**

இளம் பிறை அன்ன விளங்கு சுடர் நேமி
விசும்பு வீழ் கொள்ளியின் பைம் பயிர் துமிப்பக்,
கால் இயல் செலவின், மாலை எய்திச்,
சில் நிரை வால் வளைக் குறுமகள்
பல் மாண் ஆகம் மணந்து உவக்குவமே.

*– மதுரை ஈழத்துப் பூதன் தேவன் குறு 189*

*"பாகனே, இன்றே வினையின் பொருட்டுப் புறப்பட்டுப் போய்; நாளை மீண்டும் வருவோமாக. குன்றிலிருந்து வீழும் அருவியைப் போல யானைத் தந்தத்தால் செய்த வெள்ளிய தேரானது விரைந்து செல்க. இளம்பிறையைப் போன்ற விளங்குகின்ற ஒளியையுடைய அத் தேரினது ஆழி வானத் தினின்றும் வீழ்கின்ற கொள்ளியைப் போலப் பசிய பயிர் களைத் துமிக்கட்டும். காற்றைப் போன்ற மிகுந்த விரைவை உடைய தேரானது மாலைக் காலத்தில் தலைவியின் இருப்பிடத்தை அடைக சிலவாகிய வரியை உடைய வெள்ளிய வளைகளைக் கொண்ட அவளது மாட்சிமைப் பட்ட மேனியை யாம் பலமாக அணைந்து மகிழ்வோம்" என்றான் தலைவன்*

## 142. வருந்தாது இருப்பேனா?

'ஈங்கே வருவர், இனையல், அவர்' என,
அழாஅற்கோ இனியே? நோய் நொந்து உறைவி!
மின்னின் தூவி இருங் குயில், பொன்னின்
உரை திகழ் கட்டளை கடுப்ப, மாச் சினை
நறுந் தாது கொழுதும் பொழுதும்,
வறுங் குரற் கூந்தல் தைவருவேனே.

*– கச்சிப்பேட்டு நன்னாகையார் குறு 192*

*"நோயால் வருந்தி உறையும் தோழி, தலைவர் இவ் இடத்தே மீண்டும் வருவார் என்று நீ சொல்வதனால் இப் பொழுது நான் அழாமல் இருப்பேனா? மின்னுகின்ற இனிய இறகுகளை உடைய கரிய குயில் தன்மேனி பொன்னை உரைத்த பொடியானது விளங்குகின்ற உரைகல்லை ஒக்கும் படி மா மரத்தின் கிளையினிடத்து நறிய பூந்தாதைக் கோது கின்ற இளவேனிற்காலத்திலும் அவர் வாராமையால்*

*புனையப் பெறாமல் உள்ள வெறுங் கூந்தலைத் தடவுவேன்" என்று தலைவி வருந்தி உரைத்தாள்*

## 143. தடுக்காமல் இருந்தனையே

**'செப்பினம் செலினே செலவு அரிது ஆகும்' என்று,**
**அத்த ஓமை அம் கவட்டு இருந்த**
**இனம் தீர் பருந்தின் புலம்பு கொள் தெள் விளி**
**சுரம் செல் மாக்கட்கு உயவுத் துணை ஆகும்**
**கல் வரை அயலது தொல் வழங்கு சிறு நெறி**
**நல் அடி பொறிப்பத் தாஅய்ச்**
**சென்றுஎனக் கேட்ட நம் ஆர்வலர் பலரே.**

*- உறையனார் குறு 207*

*"நம்முடைய செலவைத் தலைவியிடத்துச், சொல்லிச் செல்வோமாயின் செல்லுதல் அரியதாகும் என்று கூறி, பாலை நிலத்தில் உள்ள ஓமை மரத்தினது அழகிய கிளையின் கண் இருந்த, இனத்தினின்று பிரிந்து வந்த பருந்தினது, தனிமையை வெளிப்படுத்தும் தெளிந்த ஓசையானது அரிய அவ் வழியில் செல்லும் மனிதர்களுக்கு நல்ல துணையாக அமைதற்கு இடமாகிய கற்களை உடைய மலையின் அருகில் உள்ளதாகிய பழமையான பலரும் சென்று வருவதாகிய சிறிய வழியில், தம் நல்ல அடிகள் சுவடு செய்ய பிரிந்து சென்றார் என்று கேள்வியுற்ற நம்முடைய அன்பர் பலராவர்" என்று தலைவன் பிரிவிற்குத் தலைவி தோழியிடம் கூறினாள்.*

## 144. மடந்தையின் நட்பு

**சுரந்தலைப் பட்ட நெல்லிஅம் பசுங் காய்**
**மறப்புலிக் குருளை கோள்இடம் கரக்கும்**
**இறப்பு அருங் குன்றம் இறந்த யாமே**
**குறு நடைப் புள் உள்ளலமே, நெறிமுதல்,**
**கடற்றில் கலித்த முடச் சினை வெட்சித்**
**தளை அவிழ் பல் போது கமழும்**
**மை இருங் கூந்தல் மடந்தை நட்பே.**

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ குறு 209*

*"குறுக அடியிட்டு நடக்கும் நடை கொண்ட தோழி!, வழிப்போவரது உயிரைத் தாங்குதற்குரிய சுரத்தையுடைய நெல்லி மரத்தினது அழகிய பசிய காய்கள் வலியை உடைய புலிக்குட்டிகள் இரை கொள்ளுமிடத்தில் உதிர்ந்து உருளு கின்ற கடத்தற்கரிய மலைகளைக் கடந்து சென்ற யாம், அங்ஙனம் சென்றவிடத்துப் பல பொருள்களை நினைத்தேன் அல்லேன். காட்டு வழியினிடத்தே தழைத்த வளைந்த கிளை களை உடைய வெட்சியின முருக்கவிழும் பல பேரரும்புகள் மணக்கின்ற மையைப் போன்ற கரிய கூந்தலைப் பெற்ற தலைவியினது நட்டையே நினைத்திருந்தேன்" என்று தலைவன் தோழியிடம் தலைவியின் பால் கொண்ட அன்பினை உரைத்தான்.*

## 145. அருளுடையவர் அல்லர்

**அம் சில் ஓதி ஆய் வளை நெகிழ**
**நொந்தும், நம் அருளார் நீத்தோர்க்கு அஞ்சல்**
**எஞ்சினம் வாழி – தோழி! – எஞ்சாது**
**தீய்ந்த மராஅத்து ஓங்கல் வெஞ் சினை**
**வேனில் ஓர் இணர் தேனோடு ஊதி,**
**ஆராது பெயரும் தும்பி**
**நீர் இல் வைப்பின் சுரன் இறந்தோரே.**

*– காவன் முல்லைப் பூதனார் குறு 211*

*"தோழியே! வேனிலால் கரிந்து போன மரா மரத்தினது ஓங்கிய வெவ்விய கிளைகளில் வேனிற்காலத்து மலர்ந்த ஒற்றைப் பூங்கொத்தைத் தேன் உண்ணும் தும்பி என்னும் இன வண்டானது ஊதி, அதன் கண் தேன் இன்மையினால் உண்ணாமல் மீளுகின்ற நீரில்லாத இடங்களையுடைய பாலை நிலத்தைக் கடந்து சென்ற தலைவர் அழகிய சில வாகிய கூந்தலையுடைய நினது வளைகள் நெகிழும்படி, நம் விருப்பத்திற்கு உடன்பட்டு நம்பால் அருள் செய்யாது, நம்மைப் பிரிந்து சென்றவராகிய தலைவரின் பொருட்டு அஞ்சுதல் நீங்கினோம்" என்று தலைவிக்குத் தோழி இயம்பினாள்*

## 146. கடமை முடித்தே மீள்வார்

நசை நன்கு உடையர் – தோழி! – ஞெரேரெனக்
கவைத் தலை முது கலை காலின் ஒற்றிப்
பசிப் பிணிக்கு இறைஞ்சிய பருஉப் பெருந் ததரல்
ஒழியின் உண்டு, அழிவுஇல் நெஞ்சின்
தெறித்து நடை மரபின் தன் மறிக்கு நிழல் ஆகி,
நின்று வெயில் கழிக்கும் என்ப – நம்
இன்துயில் முனிநர் சென்ற ஆறே.

*– கச்சிப் பேட்டுக் கொற்றன் குறு 213*

*"தோழி, தலைவர் உன்னிடம் விருப்பம் மிக உடையவர் நம்மோடு சேர்ந்து செய்யும் இனிய துயிலை வெறுத்துப் பிரிந்து சென்றார் அவர் சென்ற வழியில் விரைவாகக் கிளைத்த கொம்புகளைன் கொண்ட முதிய ஆண் மான், தன் பசி நோயைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுக் காலால் வளைந்த பருத்த பெரிய மரப்பட்டையைத் தன் குட்டி உண்டபின் எஞ்சியதைத் தான் உண்டு பின் குற்றமில்லாத நெஞ்சினோடு துள்ளி நடக்கும் இயல்பினை உடைய தன் குட்டிக்கு நிழலாக நின்று வெயிலில் இருந்து காக்கும்" என்று தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறினாள்.*

## 147. வருவார் இன்று

படரும் பைபயப் பெயரும்; சுடரும்
என்றூழ் மா மலை மறையும்; இன்று அவர்
வருவர்கொல், வாழி – தோழி, – நீர் இல்
வறுங் கயம் துழைஇய இலங்கு மருப்பு யானை
குறும் பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்
கொடு வரி இரும் புலி காக்கும்
நெடு வரை மருங்கின் சுரன் இறந்தோரே.

*– மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் குறு 215*

*"தோழி, உன்னுடைய துன்பமும் மெல்ல மெல்ல நீங்கும் ஒளிவீசும் செங்கதிரும் பெரிய மலைக்குப்பின் கண் மறைந்தது ஆதலின் நீரற்று வறண்ட குளத்தைத் துழாவிய ஒளிவீசும் கொம்புகளை உடைய ஆண் யானைகள், சிறிய குண்டுக் கற் களுக்கருகில் தாம் விரும்புகின்ற பிடிகளைத் தழுவிக் கொண்டு*

வளைந்த கோடுகளையுடைய பெரிய புலித் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கின்ற உயர்ந்த மலைப் பக்கத்திலுள்ள பாலை நிலத்தைக் கடந்து சென்றவராகிய தலைவர் இன்று வருவர் நீ வாழ்வாயாக, என்று தலைவியை நோக்கித் தோழி ஆற்றினாள்.

## 148. என் உயிர் நில்லாது

அவரே, கேடு இல் விழுப்பொருள் தருமார், பாசிலை
வாடா வள்ளிஅம் காடு இறந்தோரே;
யானே, தோடுஆர் எல்வளை ஞெகிழ, நாளும்,
பா்டு அமை சேக்கையில், படர் கூர்ந்திசினே;
'அன்னள் அளியள்' என்னாது, மா மழை
இன்னும் பெய்யும்; முழங்கி
மின்னும் – தோழி, – என் இன் உயிர் குறித்தே.

*– கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றன் குறு 216*

"தோழியே! நம் தலைவர் கேடில்லாத உயர்ந்த செல் வத்தைக் கொண்டு வரும் பொருட்டு பசுமையான இலை களைப் பெற்ற வாடாத வள்ளிக் கொடி படர்ந்த நாட்டைக் கடந்து சென்றார். யான் திரளாகப் பொருந்தியுள்ள வளைகள் நெகிழும்படி தலைவன் பிரிவினால் கவலையுற்றுப் படுக்கை யில் வீழ்ந்து துன்புற்றுக் கிடக்கின்றேன். கரிய முகில் என் துன்பத்தை எண்ணி 'இவள் இரங்குதற்குரியள்' என்று எண்ணாமல் இன்னும் மழை பெய்யும் பொருட்டாக முழங்கி என்னுடைய உயிரைப் பறித்தலையே குறியாகக் கொண்டு மின்னுகின்றதே." என்றாள் தலைவி.

## 149. உயிருக்கு உயிர்

விடர் முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாம்; கைந் நூல் யாவாம்;
புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்;
உள்ளலும் உள்ளாம் அன்றே – தோழி –
உயிருக்கு உயிர் அன்னர் ஆகலின், தம் இன்று
இமைப்பு வரை அமையா நம்வயின்
மறந்து ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே.

*– கொற்றனார் குறு 218*

"தோழி, தலைவர் நம் உயிருக்கு உயிரைப் போன்றவர். ஆதலின் முன்பு நம்மை இன்றி, இமைப் பொழுதளவேனும் பிரிந்திருந்தலைப் பொருந்தாதவர், இப்பொழுது நம்மை மறந்து சென்று அவ்விடத்தே தங்குதல் வல்ல தலைவர், திறத்தில் பிளவையும் குகைகளையும் உடைய மலைப் பக்கத்தி லுள்ள வெற்றி பொருந்திய பொற்றவைக்குப் பலி கடன் செலுத்துதலை யாம் செய்யோம்; கையில் காப்பு நூலைக் கட்டோம்; நற்குறியையும் பாரோம்; நற்சொல் கேட்கவும் செல்லோம் அவரை நினைத்தலையும் செய்யோம்," என்றாள் தலைவி

## 150. துயரமே பெரிதாயிற்று

கவலை யாத்த அவல நீள் இடைச்
சென்றோர் கொடுமை எற்றித், துஞ்சா
நோயினும் நோய் ஆகின்றே – கூவற்
குரால் ஆன் படு துயர் இராவில் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர் பொறுக்கல்லேன், தோழி நோய்க்கே.

*– கூவன் மைந்தன் குறு 224*

"கிணற்றின் கண்ணே வீழ்ந்த குராற் பசு படும் துன்பத்தை இரவுப் பொழுதில் கண்ட ஊமையன் அதனை வெளியிட முடியாமையால் துன்புற்றது போல என் பொருட்டுத் தோழி படும் வருத்தத்தினால் துயரைப் பொறுக்கும் ஆற்றல் இல்லேனாயினேன். துன்பம் தரும் யா மரங்கள் உள் கவர்ந்த வழிகளில் எம்மைப் பிரிந்து சென்ற தலைவரது கொடுமை நினைத்துத் துயிலாமல் இருக்கும் துன்பத்தைக் காட்டிலும் தோழியின் துன்பம் பெரியது," என்று வருந்தினாள் தலைவி.

## 151. என்னே ஊழியின் வலி!

இவன் இவள் ஐம்பால் பற்றவும், இவள் இவன்
புன் தலை ஓரி வாங்குநள் பரியவும்,
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது,
ஏதில் சிறு செரு உறுப மன்னோ;
நல்லை மன்றம்ம பாலே – மெல்இயல்

துணை மலர்ப் பிணையல் அன்ன இவர்
மணம் மகிழ் இயற்கை காட்டியோயே. – *மோதாசனார் குறு 229*

"இவன் இவளது கூந்தலைப் பிடித்து இழுக்கவும், இவள் அவனது புல்லிய தலைமயிரை வளைத்து இழுப்பாளாய் ஓடவும், இவர் தம் மோதலை அன்புடைய செவிலித் தாயார் இடைமறித்துத் தடுக்கவும் ஒழியாமல் அயன்மை உடைய சிறு பூசல் புரிவார்களாக முன்பிரிந்தனர். இணையாகப் பொருந்தக் கட்டிய மலர்மாலையைப் போல இவர்கள் ஒருமை உள்ளவராய் மனம் கூடி மகிழும் இயல்பை இப் பொழுது உண்டாக்கினாய். ஊழே! உறுதியாக நீ நன்மையை உடையாய் ஆவாய், என்று தலைவனும் தலைவியும் உடன் போதலைக் கண்டோர் கூறினார்.

## 152. நினையாமல் இல்லை அவர்!

உள்ளார் கொல்லோ? – தோழி, – உள்ளியும்,
வாய்ப் புணர்வு இன்மையின் வாரார்கொல்லோ
மரற்புகா அருந்திய மா எருத்து இரலை,
உரற்கால் யானை ஒடித்து உண்டு எஞ்சிய
யாஅ வரி நிழல் துஞ்சும்
மா இருஞ் சோலை மலை இறந்தோரே.

– *ஊண்பித்தை குறு 232*

"தோழியே! மரலாகிய உணவை உண்ட பெரிய பிடரை உடைய ஆண்மான், உரலைப் போன்ற காலுடைய யானை முறித்து உண்டு, குறைபடச் செய்த யா மரத்தின் புள்ளி களை உடைய நிழலின் கண் உறங்குகின்ற மிகப் பெரிய இருண்ட சோலைகளை உடைய மலைகளைக் கடந்து பிரிந்து சென்ற தலைவர், நம்மை நினையாதிருப்பாரோ? அன்றி நம்மை நினைத்தும் வினைமுற்றி மீள்வதற்கு வாய்ந்த வாய்ப்பினை உணராமையினால் வாரார் ஆயினரோ?" என்றாள் தலைவியை நோக்கித் தோழி.

## 153. தலைவியின் ஊர்!

ஓம்புமதி; வாழியோ – வாடை! பாம்பின்
தூங்கு தோல் கடுக்கும் தூவெள் அருவிக்

கல் உயர் நண்ணியதுவே – நெல்லி
மரையினம் ஆரும் முன்றில்
புல் வேய் குரம்பை நல்லோள் ஊரே. – *மாயேண்டன் குறு 235*

*"வாடைக்காற்றே! நெல்லிக்காயை மானின் கூட்டம் உண்ணுகின்ற முன்னிடத்தை உடைய புல்லால் வேயப்பட்ட குடிசைகளை உடைய நல்ல தலைவியினது ஊரானது, பாம்பின் தொங்குகின்ற தோலை ஒத்திருக்கும் தூய வெள்ளிய அருவியை மலையின் உயரத்திலே கொண்டுள்ளது. அங்கேயுள்ள தலைவியை நீ பாதுகாத்து வாழ்வாயாக," என்றாள் தலைவன்*

## 154. விரைந்து சென்றது நெஞ்சம்!

அஞ்சுவது அறியாது, அமர் துணை தழீஇய,
நெஞ்சு நப்பிரிந்தன்று; ஆயினும், எஞ்சிய,
கை பிணி நெகிழின் அஃது எவனோ? நன்றும்
சேய அம்ம, இருவாம் இடையே;
மாக் கடல் திரையின் முழங்கி, வலன் ஏர்பு,
கோட் புலி வழங்கும் சோலை
எனைத்து என்று எண்ணுகோ – முயக்கிடை மலைவே?
– *அள்ளூர் நன்முல்லை குறு 237*

*"பாக! அஞ்சுதலை அறியாமல் நாம் விரும்பும் தலைவியைத் தழுவும் பொருட்டு என் நெஞ்சு நம்மை விட்டுப் பிரிந்து சென்றது. ஆயினும் எஞ்சியுள்ள கையால் தழுவுதல் நெகிழுமாயின், நம் நெஞ்சு 'சென்று தழுவிய அதனாற் பயன் யாது? எனக்கும் தலைவிக்கும் இடையில் உள்ள இடங்கள் மிக்க சேய்மை உடையன. தலைவியோடு சேர்தற்கு இடையில் உள்ள வழித்தடையாகிய கொல்லும் புலியானது கரிய கடலின் ஒலி போல ஆரவாரம் செய்து வலமாக எழுந்து உலாவுகின்ற சோலைகள் எத்தனை என்று எண்ணுவேன்?" என்றான் பொருள் முற்றித் திரும்பும் தலைவன்*

## 155. மாலை வருமுன் தேரைச் செலுத்துக!

பரல் அவற் படு நீர் மாந்தித், துணையோடு,
இரலை நல் மான் நெறிமுதல் உகளும்

மாலை வாரா அளவைக், கால் இயல்
கடு மாக் கடவுமதி – பாக! – நெடு நீர்ப்
பொருகயல் முரணிய உண்கண்
தெரி தீம் கிளவி தெருமரல் உயவே.

*– நாமலார் மகன் இளங்கண்ணன் குறு 250*

*"தேர்ப் பாகனே! பருக்கைக் கற்களை உடைய பள்ளத்திலே தங்கிய நீரை உண்டு ஆண் மான் பெண் மானோடு வழியினிடத்துத் துள்ளி விளையாடுகின்ற மாலைக் காலம் வருவதற்கு முன்னே, ஆழ்ந்த நீரிலுள்ள ஒன்றை ஒன்று எதிர்த்த இரண்டு கயல்களை ஒத்த மையுண்ட கண்களையும், ஆராய்ந்த இனிய சொற்களையும் உடைய தலைவி துன்பச் சுழற்சியில் இருந்து நீங்கக் காற்றுப் போலக் கடுகிச் செல்லும் இயல்புடைய விரைகின்ற குதிரையைச் செலுத்துவாயாக!" எனப் பாங்கனிடம் கூறினான் தலைவன்.*

## 156. வருவார் ஓடோடி!

கேளார் ஆகுவர் – தோழி, – கேட்பின்,
விழுமிது கழிவது ஆயினும், நெகிழ் நூல்
பூச் சேர் அணையின் பெருங் கவின் தொலைந்த நின்
நாள் துயர் கெடப் பின் நீடலர்மாதோ–
ஒலி கழை நிவந்த ஓங்கு மலைச் சாரல்,
புலி புகா உறுத்த புலவு நாறு கல்அளை
ஆறு செல் மாக்கள் சேக்கும்
கோடு உயர் பிறங்கல் மலை இறந்தோரே.

*– பூங்கண்ணன் குறு 253*

*"தோழியே! ஒன்றோடு ஒன்று உராய்ந்து ஒலிக்கின்ற மூங்கில்கள் ஓங்கி வளர்ந்த, உயர்ந்த மலைப்பக்கத்தில் புலி தனக்குரிய உணவை இட்டு வைத்திருக்கும் புலால் நாற்றம் வீசும் மலைக்குகையின்டத்து வழிச் செல்லும் மனிதர் தங்கும் கொடுமுடிகள் உயர்ந்த விளக்கத்தை உடைய மலைகளைக் கடந்து சென்ற தலைவர் நின் துயரைக் கேளார் ஆவார்; கேட்டாராயின் சிறந்த பொருள் நீங்குவதாக இருப்பினும் நெகிழ்ந்த நூலால் கட்டிய மலர்மாலைகள் சேர்ந்த படுக்கையினிடத்தே இருந்து, வருந்துகின்ற பெரிய*

அழகு நீங்கிய நினது இன்றைய துயரம் கெடும்படி பின்பும் தாமதியாமல் வருவார்." என்றாள் தோழி தலைவியை நோக்கி.

## 157. தூது எதுவும் வரவில்லை

இலை இல் அம் சினை இன வண்டு ஆர்ப்ப,
முலை ஏர் மென் முகை அவிழ்ந்த கோங்கின்
தலை அலர் வந்தன; வாரா – தோழி,
துயில் இன் கங்குல் துயில் அவர் மறந்தனர்;
பயில் நறுங் கதுப்பின் பாயலும் உள்ளார் –
'செய்பொருள் தரல் நசைஇச் சென்றோர்
எய்தினரால்' என, வரூஉம் தூதே. – *பார்காப்பான் குறு 254*

"தோழி, இலையில்லாத அழகிய கிளைகளில் திரளான வண்டுகள் ஆரவாரிக்கும்படி, முலையை ஒத்த அழகிய மெல்லிய அரும்புகள் விரிந்த கோங்க மரத்தில் முதல் பூக்கள் தோன்றின. ஈட்டுதற்குரிய பொருளைக் கொண்டு வருதலை விரும்பிச் சென்ற நம் தலைவர் மீண்டு வந்தனர் என்று அறிவித்தற்கு வரும் தூதுகள் இன்னும் வந்தில. நம்மைப் பிரிந்து சென்ற அவர் துயிலுவதற்கு இனிய இராக் காலத்தில் உடன் துயிலுதலை மறந்தனர். தாம் பழகிய நறிய என் கூந்தலாகிய பாயலையும் நினையார் ஆயினர்," என்றாள் தலைவி தோழியை நோக்கி.

## 158. யானை தன் சுற்றத்தைக் காக்கும்!

பொத்து இல் காழ அத்த யாஅத்துப்
பொரி அரை முழுமுதல் உருவக் குத்தி,
மறம் கெழு தடக்கையின் வாங்கி, உயங்கு நடைச்
சிறு கட் பெரு நிரை உறு பசி தீர்க்கும்
தட மருப்பு யானை கண்டனர் – தோழி,
தம் கடன் இறீஇயர் எண்ணி, இடம்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம் வெங் காதலர் சென்ற ஆறே.
– *கடுகுபெருந்தேவன் குறு 255*

"தோழியே! தம்முடைய கடமையை நிறைவேற்றும் பொருட்டு, இடங்கள் தோறும் விருப்பத்தை உடைய பொருள்

முயற்சிக்கண் தோய்ந்த உள்ள பிணிப்பினால் நாம் விரும்பும் தலைவர் பிரிந்து சென்றார். அவர் சென்ற அச்சம் விளைவிப்ப தான அரு வழியில் குறையற்ற வயிரம் பாய்ந்த யா மரங்களின் பொரிந்த திரண்ட அடியைத் தம் கொம்பால் குத்தி வீழ்த்தி வன்மை பொருந்திய வளைந்த கையினால் அதை கொண்டு வந்து தந்து, வருந்திய நடையையும் சிறிய கண்களையும் உடைய பெரிய யானைகளின் மிக்க பசியைத் தீர்க்கின்ற, வளைந்த பெரிய கொம்புகளை உடைய ஆண் யானையைக் காண்பார்," என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

## 159. தேரையும் தடுத்தது கண்ணீர்!

'மணி வார்ந்தன்ன மாக் கொடி அறுகைப்
பிணங்கு அரில் மென் கொம்பு பிணையொடு மாந்தி,
மான் ஏறு உகளும் கானம் பிற்பட,
வினை நலம் படீஇ, வருதும்; அவ் வரைத்
தாங்கல் ஒல்லுமோ, பூங்குழையோய்?' எனச்
சொல்லாமுன்னர், நில்லா ஆகி,
நீர் விலங்கு அழுதல் ஆனா
தேர் விலங்கினவால், தெரிவை கண்ணே.

*– ஆசிரியர் ? குறு 256*

"பொலிவை உடைய குழையை அணிந்தவளே! நீலமணி ஒழுகினாற் போன்ற கரிய கொடியாகிய அறுகினது பிணிப்பு நீங்கிய மெல்லிய தண்டைப் பெண் மானோடு வயிறு நிரம்ப உண்ட ஆண் மான் துள்ளுகின்ற காடு பின்னாகச் சென்று தொழில் நன்மை உண்டாகப் பெற்று மீண்டு வருவோம்; அக் காலத்தளவும் நின்னால் பொறுத்திருக்க இயலுமோ? என்று நாம் சொல்வதற்கு முன்பாகவே தலைவியின் கண்கள் பண்டைய நிலையில் இல்லாமல் கலங்கி நீரால் மாறுபட்டு அழுகை நிற்காமல் உம் தேரைத் தடை செய்தன." என்று தலைவன் தலைவியிடம் உரைத்தான்.

## 160. வருவர்கொல் தோழி?

குருகும் இரு விசும்பு இவரும்; புதலும்
வரி வண்டு ஊத வாய் நெகிழ்ந்தனவே;

**சுரிவளைப் பொலிந்த தோளும் செற்றும்;**
**வருவர்கொல் வாழி – தோழி, பொருவார்**
**மண் எடுத்து உண்ணும் அண்ணல் யானை**
**வண் தேர்த் தொண்டையர் வழை அமல் அடுக்கத்து,**
**கன்று இல் ஓர் ஆ விலங்கிய**
**புன்தாள் ஓமைய சுரன் இறந்தோரே.**

*– கல்லாடனார் குறு 260*

“தோழியே! நாரைகளும் கரிய வானத்தின்கண் உயரப் பறக்கும். புதலிடத்துள்ள போதுகளும் கோடுகளை உடைய வண்டுகள் ஊதுவதனால் மலர்ந்தன. சுழித்த சங்கினால் செய்த வளையினால் விளங்கிய தோள்களும் நெகிழ்ச்சி நீங்கி வளையோடு செறியும். ஆதலினால் பகைவரது நாட்டை வென்று அடிமைப்படுத்தி அவற்றால் வரும் பயன்களை நுகரும் தலைமை பொருந்தி யானையையும் வளவிய தேரை யும் உடைய தொண்டைமான்களுக்கு உரிய சுரப் புன்னைகள் நெருங்கிய மலைப் பக்கத்தில் கன்றில்லாத ஒற்றைப் பசு வினை நிழல் காட்டித் தம்பால் வரச் செய்து தடுத்த புல்லிய அடியை உடைய ஓமை மரங்களுடைய பாலை நிலங்களைக் கடந்து சென்ற தலைவர் வந்து சேர்வார், என்றாள் தோழி தலைவியிடம்.

## 161. யாரும் அறியாது சென்றுவிடு!

**ஊஉர் அலர் எழ, சேரி கல்லென,**
**ஆனாது அலைக்கும் அறன் இல் அன்னை**
**தானே இருக்க, தன் மனை; யானே,**
**நெல்லி தின்ற முள் எயிறு தயங்க**
**உணல் ஆய்ந்திசினால், அவரொடு – சேய் நாட்டு,**
**விண் தொட நிவந்த விலங்கு மலைக் கவாஅன்,**
**கரும்பு நடு பாத்தி அன்ன,**
**பெருங் களிற்று அடிவழி நிலைஇய நீரே.**

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ குறு 262*

“*ஊரிலே பழிமொழி உண்டாக, தெருவில் உள்ளோர் கல்லென்று ஆரவாரிக்க ஓயாமல் நம்மை வருத்துகின்ற*

அறநினைவு இல்லாத தாய் தன் வீட்டில் நின்னைப் பிரிந்து தான் மட்டும் தனியே இருப்பாளாக, யான் நெடுந்தூரத்தில் உள்ள நாட்டின்கண் வானத்தைத் தொடும்படி உயர்ந்து குறுக்கிட்ட மலையின் அடிவாரத்தில் தொடும்படி உள்ள கரும்பு நட்ட பாத்தியைப் போன்ற பெரிய ஆண் யானை யினது அடிச் சுவட்டின்கண் தங்கிய நீரை அத் தலைவரோடு நெல்லிக்காயைத் தின்ற முள்ளைப் போன்ற பற்கள் விளங்கும் படி நீ உண்ணுதலை நினைத்தேன்." என்று தோழி தலைவிக்கு உணர்த்தினாள்.

## 162. தூது அனுப்ப மறந்தாரோ?

நமக்கு ஒன்று உரையார் ஆயினும், தமக்கு ஒன்று
இன்னா இரவின் இன் துணை ஆகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ –
மறப்பு அரும் பணைத் தோள் மரீஇத்
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே?– *நக்கீரர் குறு 266*

"தோழியே! நம்மைப் பிரிந்து சென்ற வன்மையை உடையோராகிய தலைவர் பறவை வாயிலாக விடும் தூது மொழியை, நம்மை மதித்து நமக்கு ஒன்றைக் கூறிவிட்டாரா யினும் தமக்குப் பொருந்திய துன்பத்தை உடைய இராக் காலங்களில் இனிய துணையாக இருந்த மனைத் தோட்டத்தி லுள்ள வேங்கை மரத்திற்கும் தூதுமொழி அனுப்புவதை மறந்தனரோ?" என்றாள் தலைவி பாங்கியிடம்.

## 163. அறனை அறிந்தவர் பிரியார்

இருங் கண் ஞாலத்து ஈண்டு பயப் பெரு வளம்
ஒருங்குடன் இயைவது ஆயினும், கரும்பின்
கால் எறி கடிகைக் கண் அயின்றன்ன
வால் எயிறு ஊறிய வசை இல் தீம் நீர்க்
கோல்அமை குறுந்தொடிக் குறுமகள் ஒழிய ,
ஆள்வினை மருங்கில் பிரியார் – நாளும்
உறல் முறை மரபின் கூற்றத்து
அறன் இல் கோள் நற்கு அறிந்திசினோரே

- *காலெறி கடிகையார் குறு 267*

"நெஞ்சே, நாள்தோறும் வாழ்நாள் முடிவு வரையறுக்கப் பட்ட உயிர்கள்பால் முறை சொல்லும் மரபை உடைய கூற்றுவனது கண்ணோட்டமில்லாத கொலைத் தொழிலை நன்றாக அறிந்தோர், பெரிய இடத்தையுடைய நிலத்தின் கண் திரண்ட பயனை உடைய செல்வம் ஒருங்கே பொருந்துவ தாயினும், கரும்பின் அடிப் பகுதியில் வெட்டிய துண்டத்தை உண்டாற் போன்ற சுவையையுடைய வெண்பல் அமைந்த வாயினிடத்து ஊறிய குற்றமில்லாத இனிய நீரையும், திரட்சி அமைந்த சிறிய வளையையும் உடைய இளைய தலைவி தனியளாய் நீங்கி இருப்ப முயற்சியின் பொருட்டாகத் தாம் மட்டும் பிரிந்து செல்லார்," என்றான் 'நாளது சின்மையும் இளமையது அருமையும்' எண்ணி தன் நெஞ்சிடம் தலைவன்

## 164. தவிர்ப்பான் பயணம்

**அல்குறு பொழுதில் தாது முகை தயங்கப்**
**பெருங் காடு உளரும் அசைவளி போலத்,**
**தண்ணிய கமழும் ஒண்ணுதலோயே!**
**நொந்தனை ஆயின், கண்டது மொழிவல்;**
**பெருந் தேன் கண்படு வரையில் முது மால்பு**
**அறியாது ஏறிய மடவோன் போல,**
**ஏமாந்தன்று, இவ் உலகம்;**
**நாம் உளேம் ஆகப் பிரியலன் தெளிமே.**

***– சிறைக்குடி ஆந்தையார் குறு 273***

"இரவில் தாதுகளை உடைய அரும்பு விளங்க பெரிய காட்டினிடத்தே தடவி வருகின்ற அசையும் மெல்லியப் பூங்காற்றைப் போலக் குளிர்ந்த நறுமணம் வீசுகின்ற ஒள்ளிய நெற்றியை உடையோய், நீ தலைவன் பிரிவான் என்று வருந்தி னாயானால், யான் அறிந்ததைச் சொல்லுவேன் கேட்பாயாக பெரிய தேனிறால் தங்கியிருக்கும் மலைப் பக்கத்தில் அத் தேனிறாலைப் பெறும் பொருட்டாகப் பழைய கண்ணேணியின் மேல் அறியாமல் ஏறிய அறிவில்லாதவனைப் போல் இந்த உலகம் ஏமாந்தது நாம் உயிரோடு இருக்கின்ற வரையில் தலை வன் நின்னைப் பிரிந்து செல்லான் இதனைத் தெளிவாயாக" என்று கூறித் தோழி தலைவிக்குத் துணிவுண்டாக்கினாள்

## 165. தோன்றாது வெம்மை

புறவுப் புறத்தன்ன புன்கால் உகாஅத்து
இறவுச் சினை அன்ன நளி கனி உதிர,
விடுகணை வில்லொடு பற்றிக் கோடு இவர்பு,
வருநர்ப் பார்க்கும் வன்கன் ஆடவர்
நீர் நசை வேட்கையின் நார் மென்று தணியும்
இன்னாக் கானமும், இனிய பொன்னொடு
மணி மிடை அல்குல் மடந்தை
அணிமுலை ஆகம் முயங்கினம் செலினே.

*– உருத்திரன் குறு 274*

*"நெஞ்சே, பொன்னாலும் மணியாலும் இயற்றப்பட்ட அணிகலன்களை அணிந்த அல்குலை உடைய தலைவியினது அழகிய முலைகளோடு கூடிய மார்பை நினைத்துச் சென்றால், புறாவினது முதுகைப் போன்ற புல்லிய அடியை உடைய உகாய் மரத்தினது மணியைப் போன்ற செறிந்த பழங்கள் உதிரும்படி விடுகின்ற அம்பை வில்லோடு பிடித்து உயர்ந்த இடத்தின் மேல் ஏறி, வழியிலே வருபவரைப் பார்க்கும் தறு கண்மையை உடைய ஆறலைக் கள்வர், நீரை விரும்புகின்ற வேட்கையினால் மரப் பட்டையை மென்று அவ் வேட்கை நீங்கும் துன்பம் மிகுந்த காடுகளும் இனியவாகும்." என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான்.*

## 166. எப்போது வரும் பருவ காலம்

ஆசு இல் தெருவின் நாய் இல் வியன்கடை,
செந்நெல் அமலை வெண்மை வெள் இழுது
ஓர் இல் பிச்சை ஆர மாந்தி,
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீஇயரோ, நீயே –
'மின்னிடை நடுங்கும் கடைப் பெயல் வாடை,
எக் கால் வருவது?; என்றி'
அக் கால் வருவர், எம் காதலோரே.

*– ஓரிற் பிச்சையார் குறு 277*

*"அறிவனே, மின்னலைப் போன்ற இடையை உடைய தலைவி நடுங்குதற்குக் காரணமான, இறுதி மழை பெய்யும்*

*வாடைக் காலம் எப்பொழுது வருகிறது என்று கூறுவாயாக அப் பொழுது காதலரும் வருவார். அதனால் அதனை நீ எமக்குச் சொல்வாயாக குற்றமற்ற தெருவினிடத்தே நாயில் லாத அகன்ற வாயிலில் செந்நெல் சோற்று உருண்டை, மிக வெள்ளிய நெய்யுமாகிய ஒரு வீட்டில் இடும் பிச்சையைப் பெற்று வயிறு நிரம்ப உண்டு இந்த முன்பனிக் காலத்தில் விரும்பத்தக்க வெப்ப நீரை, நீரைச் சேமித்து வைக்கும் செப்பில் பெறுவாயாக!" என்று தலைவன் வரும் காலம் அறிந்தவரை தோழி வினவினாள்.*

## 167. எம்மை நினையாத கொடியரானார்

**உறு வளி உளரிய அம் தளிர் மாஅத்து**
**முறி கண்டன்ன மெல்லென் சீறடிச்**
**சிறு பசும் பாவையும், எம்மும், உள்ளார்**
**கொடியர் வாழி – தோழி, – கடுவன்**
**ஊழுறு தீம் கனி உதிர்ப்ப, கீழ் இருந்து**
**ஓர்ப்பன ஓர்ப்பன உண்ணும்**
**பார்ப்புடை மந்திய மலை இறந்தோரே.**

***– பேரிசாத்தன் குறு 278***

*"தோழியே! ஆண் குரங்கு முதிர்ந்த இனிய பழங்களை மரத்தின் மேலிருந்து உதிர்க்க அம் மரத்தின் கீழே இருந்து ஏற்பனவற்றைத் தின்னுகின்ற குட்டிகளை உடைய பெண் குரங்குகள் உள்ள மலையைக் கடந்து சென்ற தலைவர், மிக்க காற்று கோதிய அழகிய தளிரை உடைய மா மரத்ினது தளிரைக் கண்டாற் போன்ற மென்மையான சிறிய அடிகளைக் கொண்ட சிறிதான பசிய தாது முதலியவற்றால் செய்த விளையாட்டுப் பாவையையும் எம்மையும் நினையார் அவர், கொடுமையை உடையார்," என்று தலைவி தோழியிடம் கூறினார்.*

## 168. கடந்தாரோ பாலை நிலத்தை

**வெண் மணல் பொதுளிய பைங் கால் கருக்கின்**
**கொம்மைப் போந்தைக் குடுமி வெண் தோட்டு**
**அத்த வேம்பின் அமலை வான் பூச்**

சுரி ஆர் உளைத் தலை பொலியச் சூடி,
குன்று தலைமணந்த கானம்
சென்றனர் கொல்லோ – சேயிழை! நமரே?

– *குடவாயிற் கீரத்தன் குறு 281*

*"சிவந்த பொன்னணி உடையாய், நம் தலைவர் வெள்ளிய மணலின் கண்ணே தழைத்த பசிய அடியையும் கருக்கையும் திரட்சியையுமுடைய பனையினது உச்சியிலுள்ள வெள்ளிய குருத்தோலையின்கண் வைத்த பாலை நிலத்திலுள்ள வேப்ப மரத்தினது நெருக்கத்தையுடைய வெள்ளிய மலரை அழித்தல் ஆர்த்த மயிரை உடைய தலை விளங்கும்படி அணிந்து கொண்டு மலைகளோடு சேர்ந்த காட்டைக் கடந்து சென்றனரோ?" என்று தலைவி தோழியிடம் இயம்பினாள்.*

## 169. வருவார் மீண்டும்

செவ்வி கொள் வரகின் செஞ் சுவற் கலித்த
கவ்வை நாற்றின் கார் இருள் ஓர் இலை
நவ்வி நாள் மறி கவ்விக் கடன் கழிக்கும்
கார் எதிர் தண் புனம் காணின், கைவளை,
நீர் திகழ் சிலம்பின் ஓராங்கு விரிந்த
வெண் கூதாளத்து அம் தூம்பு புது மலர்
ஆர் கழல்பு உகுவ போலச்,
சோர்குவஅல்ல என்பார்கொல் – நமரே.

– *நாகம் போத்தன் குறு 282*

*'நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் செம்மண்ணை உடைய மேட்டின் மேல் தழைத்த பருவம் வாய்ந்த வரகினது காற்றால் ஒலித்தலை உடைய நாற்றின் மிக்க கருத்த ஓர் இலையை, மானின் இளங்கன்று கவ்வி ஒருவேளைப் பசியைப் போக்கிக் கொள்ளும் கார் காலத்தை ஏற்றுக் கொண்ட திண்ணிய கொல்லையைக் காண்பாராயின், நீர் விளங்கு கின்ற மலைப் பக்கத்தில் ஒருபடித்தாக மலர்ந்த வெள்ளிய கூதாளத்தின் உள் துளை உடைய அழகிய புதிய மலர்கள் காம்பில் கழன்று உதிர்தலைப் போல நின் கை வளைகள் சோர்ந்து வீழ்வன அல்ல என்று எண்ணுவரோ? எண்ணார்," என்று தோழி தலைவிக்குக் கூறினாள்.*

## 170. பாலை நிலத்தார் கொடுமை

'உள்ளது சிதைப்போர், உளர் எனப் படாஅர்;
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு' எனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி – தோழி, – என்றும்
கூற்றத்துஅன்ன கொலை வேல் மறவர்
ஆற்று இருந்து அல்கி, வழங்குநர்ச் செகுத்த
படு முடைப் பருந்து பார்த்திருக்கும்
நெடு மூதிடைய நீர் இல் ஆறே.

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ குறு 283*

*தோழியே! தம்முடைய முன்னோரால் தேடி வைக்கப் பெற்றுத் தம்பால் உளதாகிய செல்வத்தைச் செலவழிப்போன் செல்வர் என்று உலகத்தாரால் சொல்லப்படான். தாமாக ஈட்டிய பொருள் இல்லாதார் முந்தையோர் பொருளின் பயனைத் துய்த்து வாழுதல் இரத்தலைக் காட்டிலும் இழிவுடையது என்று சொன்ன ஆண்மையை யாம் தெளியும் படி எடுத்துக் கூறி, எப்பொழுது கூற்றுவனைப் போன்ற கொலைத் தொழிலைச் செய்யும் வேலையுடைய மறவர் என்ற இனத்தவர் வழியிடத்தே தங்கி வழிப் போவாரைக் கொன்றதனால் உண்டான புலாலைப் பருந்துகள் எதிர்நோக்கித் தங்கியிருக்கின்ற நெடிய பழைய இடத்தை உடையனவாகிய நீரில்லாத பாலை நிலத்து வழிகளிலே தலைவர் சென்றனர் அவர் வாழ்வாராக," என்று தலைவி தோழியிடம் உரைத்தாள்.*

## 171. கூறிச் சென்ற பருவம்

வைகா வைகல் வைகவும் வாரார்;
எல்லா எல்லை எல்லையும் தோன்றார்;
யாண்டு உளர்கொல்லோ? தோழி! ஈண்டு இவர்
சொல்லிய பருவமோ இதுவே; பல் ஊழ்
புன் புறப் பெடையொடு பயிரி, இன் புறவு
இமைக்கண் ஏது ஆகின்றோ!– ஞெமைத் தலை
ஊன் நசைஇ ஒரு பருந்து உகக்கும்
வான் உயர் பிறங்கல் மலை இறந்தோரே.

*– பூதத் தேவன் குறு 285*

*"இனிய ஆண்புறா பலமுறை புல்லிய புறத்தை உடைய பெண்புறாவை அழைத்து இமைப் பொழுதில் எத்தகைய இன்பத்தை உடையதாக ஆகின்றது! இங்ஙனம் அவை இருப்பவும் ஞெமை மரத்தின் உச்சியில் இறந்தோரது தசையை விரும்பி ஒற்றைப் பருந்து இருக்கின்ற வானளாவும் உயர்ந்த விளக்கத்தை உடைய மலையைக் கடந்து சென்ற தலைவர் நாள்தோறும் விடியற்காலம் நீங்கிப் பகற்காலம் வரவும் அப்பொழுதும் வந்திலர். எல்லாப் பகலின் எல்லாப் பகலின் எல்லையாகிய இரவிலும் மீண்டு வந்து தோன்றார். எங்கே இருக்கின்றாரோ? இங்கே அவர் மீண்டும் வருவேன் என்று சொன்ன பருவம் இதுவே; பிறிதன்று" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.*

## 172. துயிலை மறந்தன விழிகள்

**கான இருப்பை வேனில் வெண் பூ**
**வளி பொரு நெடுஞ் சினை உகுத்றலின், ஆர் கழல்பு,**
**களிறு வழங்கு சிறுநெறி புதையத் தாஅம்**
**பிறங்குமலை அருஞ் சுரம் இறந்தவர்ப் படர்ந்து,**
**பயில் இருள் நடுநாள் துயில் அரிது ஆகித்,**
**தெள் நீர் நிகர்மலர் புரையும்**
**நல் மலர் மழைக்கணிற்கு எளியவால், பனியே.**

*– ஓதலாந்தையார் குறு 329*

*"தோழியே! காட்டிலே வளர்ந்த இருப்பை மரத்தில் வேனிற் காலத்திலே மலரும் வெள்ளிய பூக்கள், காற்றால் அலைக்கப்பட்ட நெடிய கொம்புகள் உதிர்வதனால் காம்பினின்றும் கழன்று, களிறுகள் செல்லும் சிறிய வழி மறையும்படி பறக்கின்ற விளங்கிய மலைகளை உடைய கடத்தற்கரிய பாலை நிலத்தைக் கடந்து சென்ற தலைவரை நினைத்துப் பயிலுகின்ற இருளை உடைய நள்ளிரவில் துயிலல் அரிதாகி தெள்ளிய நீரிடத்துள்ள ஒளியுடைய மலரை ஒக்கும் நல்ல மலர்ந்த குளிர்ச்சி பொருந்திய கண்ணினிடத்து நீர்த் துளிகள் எளிதில் அரும்பின" என்று தலைவி வருந்திக் கூறினாள்.*

## 173. விட்டுப் பிரியார் நம்மை

நெடுங் கழை திரங்கிய நீர் இல் ஆர் இடை,
ஆறு செல் வம்பல் தொலைய, மாறு நின்று,
கொடுஞ் சிலை மறவர் கடறு கூட்டுண்ணும்
கடுங்கண் யானைக் கானம் நீந்தி,
இறப்பர்கொல் வாழி – தோழி, – நறுவடிப்
பைங் கால் மாஅத்து அம் தளிர் அன்ன
நல் மா மேனி பசப்ப,
நம்மினும் சிறந்த அரும் பொருள் தரற்கே.

*– வாடாப் பிரமந்தன் குறு 331*

*“தோழியே! நறிய வடுவையும் பசிய அடியையும் உடைய மா மரத்தினது அழகிய தளிரை ஒத்த நல்ல மாமை நிறம் பசலை அடையும்படி நம்மைக் காட்டிலும் தலைவருக்குச் சிறந்ததாகத் தோன்றுகின்ற பொருளைக் கொணரும் பொருட்டு நெடிய மூங்கில் உலர்ந்த நீரில்லாத அரிய இடத்தில் வழிப் போக்கர்கள் அழியும்படி அவர்களுக்கு எதிராக நின்று வளைந்த வில்லை உடைய மறவர்கள் காட்டைக் கொள்ளை யிட்டு வாழும் கடுங்கண் தறுகண்மை உடைய யானைகள் நிறைந்த காட்டைக் கடத்து செல்வாரோ?” என்றாள் தோழி தலைவியிடம்.*

## 174. தேரும் வந்து சேர்ந்தது

திரிமருப்பு இரலை அண்ணல் நல் ஏறு
அரி மடப் பிணையோடு அல்கு நிழல் அசைஇ,
வீ ததை வியல் அரில் துஞ்சி, பொழுது செலச்,
செழும் பயறு கறிக்கும் புன்கண் மாலை,
பின் பனிக் கடைநாள், தண் பனி அற்சிரம்
வந்தன்று, பெருவியற் தேரே, பணைத் தோள்
விளங்கு நகர் அடங்கிய கற்பின்
நலம் கேழ் அரிவை புலம்பு அசாவிடவே.

*– பெருங்குன்றூர் கிழார் குறு 338*

*“மூங்கிலைப் போன்ற தோள்களையும் விளங்கிய இல்லினிடத்தே அடங்கிய கற்பினையும் உடைய அழகு பொருந்திய*

*தலைவியே, மிக்க வெற்றியையுடைய தலைவனது தேரானது, தனிமையால் உண்டான துன்பம் நீங்கும் வண்ணம் முறுக்கின கொம்பையுடை இரலை என்னும் தலைமை உடைய நல்ல ஆண் மான் மென்மையையும் மடப்பத்தையும் உடைய பெண் மானோடு தாம் தங்குதற்குரிய நிழலிடத்தே தங்கி மலர்கள் அடர்ந்த அகன்ற பிணக்கத்தை உடைய தூற்றினிடத்தே உறங்கி பகற்பொழுது போனமையின் செழுமிய பயற்றம் பயிரைக் கறித்துத் தின்னும் துன்பத்தைத் தரும் மாலைக் காலத்தில் பின் பனியையும் உடைய கடை யாமத்தையும் குளிர்ந்த பனியையும் உடைய அச்சிரக் காலம் அதோ வந்தது." என்று தலைவன் வந்ததைத் தோழி தலைவியிடம் அறிவித்தாள்.*

## 175. தலைவனுடன் செல்லுதலே நன்றாம்!

**நினையாய் வாழி – தோழி, – நனைகவுள்**
**அண்ணல் யானை அணி முகம் பாய்ந்தென –**
**மிகு வலி இரும் புலிப் பகுவாய் ஏற்றை –**
**வெண் கோடு செம் மறுக் கொளீஇ, விடர் முகைக்**
**கோடை ஒற்றிய கருங் கால் வேங்கை.**
**வாடு பூஞ் சினையின், கிடக்கும்**
**உயர்வரை நாடனொடு பெயருமாறே..**

***– ஈழத்துப் பூதன் தேவன் குறு 343***

*"தோழியே! மிகுந்த ஆற்றல் படைத்த பெரிய ஆண்புலி, மதத்தால் நனைந்த கவுளை உடைய தலைமைப் பண்பு மிகுந்த யானையினது அழகிய முகத்தில் பாய்ந்ததால் அவ் யானையின் வெள்ளிய கொம்பைத் தனது அரத்தத்தால் செவ்விய கறையைக் கொள்ளுமாறு செய்து பிளப்பை உடைய கற்குகை இடத்துள்ள மேல்காற்று வீசிடவும் கரிய அடியை உடைய வேங்கை மரத்தினது வாடிய பூவைக் கொண்ட கிளையைப் போல இறந்து கிடக்கும் உயர்ந்த மலைநாட்டுத் தலைவனுடன் நீ போகும் திறத்தை நினைப் பாய், நீ வாழ்வாயாக!" என்றாள் தோழி தலைவியிடம்.*

## 176. கலந்தால் நன்மை உண்டாகும்

மல்கு சுனை புலர்ந்த நல்கூர் சுரமுதல்
குமரி வாகைக் கோலுடை நறு வீ

மடமாத் தோகைக் குடுமியின் தோன்றும்
கான நீள் இடை, தானும் நம்மொடு
ஒன்று மணம் செய்தனள் இவள் எனின்,
நன்றே நெஞ்சம்! நயந்த நின் துணிவே.

*– காவிரிப்பூம் பட்டினத்துச் சேந்தன் கண்ணன் குறு 347*

*"நெஞ்சே! முன்பு நீர் மல்கிய சுனை, பின்பு வற்றுதலினால் வறுமையுற்ற பாலை நிலத்தில் வளர்ந்த இளமையை உடைய வாகை மரத்தின் கொம்பின்கண் உள்ள நறிய மலர் மடப்பத்தை உடைய கரிய மயிலினது உச்சிக் கொண்டையைப் போலத் தோன்றுகின்ற நீண்ட காட்டு வழியில் இத் தலைவி தானும் நம்மோடு வந்து பொருந்தும் முயக்கத்தைச் செய்வாளெனின் பொருள் செய்தற்கு விரும்பிய நினது துணிவு நன்மை உடையதே ஆகும்," என்றான் தலைவன்.*

## 177. காணமாட்டாரோ அவர்!

தாமே செல்பஆயின், கானத்துப்
புலம் தேர் யானைக் கோட்டிடை ஒழிந்த
சிறு வீ முல்லைக் கொம்பின், தாஅய்,
இதழ் அழிந்து ஊறும் கண்பனி, மதர்எழில்
பூண் அக வன முலை நனைத்தலும்
காணார்கொல்லோ – மாணிழை! – நமரே

*– மாவளத்தன் குறு 348*

*"மாட்சிமைப்பட்ட அணிகலன்களை அணிந்தவளே, நம் தலைவர் நம்மைவிட்டு தாம் மட்டும் பிரிந்து செல்வாராயின் காட்டினிடத்து மேய்ச்சல் நிலத்தைத் தேடிச் செல்லும் யானையினது கொம்பினிடத்தே, முறிந்து தங்கிய சிறிய பூக்களை உடைய முல்லைக் கொடியின் கொம்பைப் போல இமையைக் கடந்து ஊறுகின்ற கண்ணீர்த் துளியானது பரவி மதர்த்த அழகுடைய அணிகலன்களைத் தன்னிடத்தே கொண்ட நின் முலைகளை நனைத்தலையும் காணாரோ?" என்று தோழி தலைவியிடம் கூறினாள்*

## 178. தடுத்திருப்பின் செல்லார்

அம்ம வாழி – தோழி, – முன் நின்று,
'பனிக் கடுக்குரையம்; செல்லாதீம்' எனச்

சொல்லினம் ஆயின், செல்வர் கொல்லோ –
ஆற்று அயல் இருந்த இருங்கோட்டு அம் சிறை
நெடுங் காற் கணந்துள் ஆள் அறிவுறீஇ,
ஆறு செல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
மலையுடைக் கானம் நீந்தி,
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசினோரே?

*– ஆலத்தூர் கிழார் குறு 350*

“தோழியே! ஒன்று கூறுவேன் கேட்பாயாக வழியின் அயலிலே இருந்த பெரிய கூட்டமாகிய அழகிய சிறகுகளையும் நெடிய காலையும் உடைய கணந்துள் பறவைகள் தமக்கு ஊறு விளைவிக்கும் வேட்டுவ மக்கள் ஊர் என்பதை அறிவுறுத்தி வழிப் போக்கர் கூட்டத்தை அவ் இடத்தினின்றும் நீங்கச் செய்யும், மலையை உடைய நாட்டைக் கடந்து நிலையில்லாத பொருள் வேட்கையினால் நம்மைப் பிரிந்து செல்வோர், அவர் பிரியும் காலத்து அவர் முன்னே நின்று நீர் பிரியின் யாம் பனியின் கடுமையால் தாக்குண்டாற் போல நடுங்கு வோம், ஆதலின் போதலை ஒழிமின் என்று கூறியிருப்போமாயின் போயிருப்பாரோ?” என்றுரைத்தாள் தோழி தலைவியிடம்

## 179. மாலையின் வரவு

நெடு நீர் ஆம்பல் அடைப் புறத்துஅன்ன
கொடு மென் சிறைய கூர்உகிர்ப் பறவை
அகல்இலைப் பலவின் சாரல் முன்னிப்,
பகல் உறை முதுமரம் புலம்பப் போகும்
சிறுபுன் மாலை உண்மை
அறிவேன் – தோழி! – அவர்க் காணா ஊங்கே.

*– கடியலூர் உருத்திரங் கண்ணனார் குறு 352*

“தோழியே! ஆழமான நீரினிடத்து வளர்ந்த ஆம்பலினது இலையின் புறத்தைப் போன்ற வளைந்த மெல்லிய சிறகை உடையனவாகிய கூரிய நகங்களை உடைய வெளவால்கள், அகன்ற இலைகளை உடைய பலா மரங்களைப் பெற்ற மலைச் சாரலை நோக்கிப் பகற்காலத்தில் தான் உறைந்த பழையமரம் தனிக்கும்படி செல்லும் சிறிய புல்லிய மாலைக்

*காலம் உளதாதலை, அத் தலைவரைக் காலத்தில் நான் உணர்ந்தேன். என்றாள் தோழியை நோக்கித் தலைவி.*

## 180. வலிமை எவ்வாறு பெற்றனளோ?

**நிழல் ஆன்று அவிந்த நீர் இல் ஆர்இடைக்**
**கழலோன் காப்பக் கடுகுபு போகி,**
**அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த**
**வெவ் வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய**
**யாங்கு வல்லுநள்கொல் தானே – ஏந்திய**
**செம்பொற் புனை கலத்து அம் பொரிக் கலந்த**
**பாலும் பல என உண்ணாள்,**
**கோல் அமை குறுந் தொடித் தளிர் அன்னோளே?**

***– கயமனார் குறு 356***

*“கையிலே ஏந்திய செம்பொன்னால் ஆன நற்கலத்தில் உள்ள அழகிய பொரியோடு கலந்த பாலையும் மிக்கன என்று கூறி, உண்ணாளாகிய திரட்சியான குறிய வளையல்களை அணிந்த தளிரை ஒத்த மென்மையை உடைய என் மகள் நிழலடங்கி அற்றுப் போன நீரில்லாத கடத்தற்கரிய பாலை நிலத்திடத்தே வீரக் கழலை உடைய தலைவன் தன்னைப் பாதுகாப்ப விரைந்து சென்று நீர்வளமற்ற சுனையின் பக்கத்தில் உலர்ந்த வெப்பத்தை உடைய கலங்கல் நீரை, ‘தவ் வென்னும் ஓசைபட குடிக்க எவ்வாறு வலியளானாள் என்று செவிலித் தாய் பிரிவாற்றாது வருந்திக் கூறினாள்.*

## 181. இனிய செயல் தானே

**கண்ணி மருப்பின் அண்ணல் நல் ஏறு,**
**செங் காற் பதவின் வார் குரல் கறிக்கும்**
**மடக் கண் மரையா நோக்கி, வெய்துற்று,**
**புல் அரை உகாஅய் வரி நிழல் வதியும்**
**இன்னா அருஞ் சுரம் இறத்தல்**
**இனிதோ – பெரும, – இன் துணைப் பிரிந்தே?**

***– செல்லூர்க் கொற்றன் குறு 363***

*“இனிய துணைவியைப் பிரிந்து கண்ணியைச் சுற்றிய கொம் புடைய தலைமையைக் கொண்ட நல்ல மலை எருது,*

*செவ்விய தண்டுகளைப் பெற்ற அறுகினது நீண்ட கொத்தைக் கடித்துத் தின்னும் மடப்பம் பொருந்திய கண்ணை உடைய மலைப் பசுவைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுப், புள்ளிய அடியை உடைய உகாஅய் மரத்தினது புள்ளிகள் மிக்க நிழலின் கண்ணே தங்குகின்ற கடத்தற்கரிய காட்டைக் கடத்தல் இனிமை உடையதோ!" என்று தலைவனிடம் தோழி கூறினாள்*

## 182. ஊர் செல்வோமாக

**அத்த வாகை அமலை வால் நெற்று,**
**அரி ஆர் சிலம்பின், அரிசி ஆர்ப்பக்**
**கோடை தூக்கும் கானம்**
**செல்வாம் – தோழி, – நல்கினர் நமரே.**

*– குடவாயிற் கீரத்தனார் குறு 369*

*"தோழி! நம் தலைவர்அருளாற்றி செய்தனர். ஆதலின் வழியிலே உள்ள வாகை மரத்தின் ஒளியை உடைய வெள்ளிய நெற்றுகள் உள்ளீடு, பரலை உடைய சிலம்பைப் போல ஆரவாரிக்க மேல்காற்று அலைக்கின்ற பாலை நிலத்தில் செல்வோமாக." என்று தலைவியை நோக்கித் தோழி கூறினாள்.*

## 183. இனிதாகுக மாலை

**ஞாயிறு காணாத மாண் நிழற் படீஇய,**
**மலைமுதல் சிறு நெறி மணல் மிகத் தாஅய்,**
**தண் மழை தலையவாகுக – நம் நீத்துச்**
**சுடர் வாய் நெடு வேற் காளையொடு**
**மட மா அரிவை போகிய சுரனே!** *– கயமனார் குறுந் 378*

*"நம்மைப் பிரிந்து, ஒளி பொருந்திய வேலை உடைய இளைய வீரனோடு மடப்பத்தையும் மாமையையும் உடைய தலைவி சென்ற பாலை நிலம், செங்கதிர் சுடாமல் மரத்தின் நிழல் பொருந்திய மலையினிடத்தே உள்ள சிறிய வழியின் கண் மணல் மிகப் பரவப் பெற்றுக் குளிர்ந்த மழையைப் பெய்விப்பாயாக!" என்று செவிலித்தாய் தெய்வத்தை வழி பட்டுக் கூறினாள்*

## 184. வராவிட்டால் என் செய்வோம்

விசும்பின் கண் புதையப் பாஅய், வேந்தர்
வென்று எறி முரசின் நன் பல முழங்கி,
பெயல் ஆனாதே, வானம்; காதலர்
நனிசேய் நாட்டர்; நம் உன்னலரே;
யாங்குச் செய்வாம்கொல் – தோழி, – ஈங்கைய
வண்ணத் துய்ம்மலர் உதிர
முன்னர்த் தோன்றும் பனிக் கடு நாளே.

*– கருவூர்க் கதப்பிள்ளை குறு 380*

*"தோழியே! வானம் மறையும்படி பரவி வேந்தர்கள் பகைவர்களை வென்று அறைகின்ற முரசினைப் போல நன்மையை உடைய பலமுறை முழங்கி முகில் மழை பெய்தலை நீங்காது. தலைவரோ மிகவும் தொலைவான நாட்டில் உள்ளார். அவர் நம்மை நினைத்தாரல்லர். நல் நிறமும் தூய்மையும் உடைய ஈங்கை மலர்கள் உதிர்ந்து நிற்க, இனிமேல் தோன்றுதற்குரிய கடிய பனிப் பருவத்தில் என்ன செய்வோம்?" என்று தோழி, தலைவியை நோக்கிக் கூறினாள்.*

## 185. செல்க இப்போதே!

நீ உடம்படுதலின், யான் தர, வந்து,
குறி நின்றனனே, குன்ற நாடன்;
'இன்றை அளவைச் சென்றைக்க' என்றி;
கையும் காலும் ஓய்வன ஒடுங்கத்
தீ உறு தளிரின் நடுங்கி,
யாவதும் இலை, யான் செயற்கு உரியதுவே.

*– படுமரத்து மோசிகீரன் குறு 383*

*"நீ உடன்போக இசைந்தமையால் நான் கூறத் தலைவன் குறியிடத்தே வந்து நின்றான்; நீயோ, இன்றைய பொழுது கழிந்து செல்லலாம் என்று கூறினாய் கையும் காலும் தளர்வுற்றுச் செயலிழந்து போகும்படி நெருப்பில் விழுந்த தளிரைப் போல நடுங்கி யான் செய்தற்கு உரியது யாதும் இல்லையே" என்று தோழி தலைவியிடம் வருந்திச் சொன்னாள்*

## 186. இனிதாகும் அவளுக்கு

நீர் கால்யாத்த நிரை இதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடாதாகும்;
கவணை அன்ன பூட்டுப் பொருது அசாஅ
உமண் எருது ஒழுங்கைத் தோடு நிரைத்தன்ன,
முளி சினை பிளக்கும் முன்பு இன்மையின்,
யானை கைம்மடித்து உயவும்
கானமும் இனிய ஆம், நும்மொடு வரினே.

*- ஔவையார் குறு 388*

*"தண்ணீரைத் தன்னுடைய அடியிலே கொண்டுள்ள வரிசை யான இதழ்களை உடைய குவளை மலரானது, மேல்காற்று வீசினாலும் வாடாதது ஆகும். கவணைப் போன்ற நுகத்தின் பிணிப்புப் பொருந்தாமையால் வருந்துதலை உடைய உப்பு வணிகருடைய எருதுகள் பூட்டிய வண்டி களின் தொகுதியை வரிசையாக வைத்தாற் போன்ற உலர்ந்த மரக் கிளைகளைப் பிரித்தற்கரிய வன்மை இல்லாமையால் யானை தன் துதிக்கையை மடித்து வருந்துகின்ற பாலை நிலங்களும் நும்மோடு வந்தால் தலைவிக்கு இனிமை உடையனவாகும்." என்று தோழி தலைவனிடம் கூறினாள்.*

## 187. செல்ல வேண்டா

எல்லும் எல்லின்று; பாடும் கேளாய் —
செல்லாதீமோ, சிறுபிடி துணையே! —
வேற்று முனை வெம்மையின், சாத்து வந்து இறுத்தென,
வளை அணி நெடு வேல் ஏந்தி,
மிளை வந்து பெயரும் தண்ணுமைக் குரலே.

*- உறையூர் முதுகொற்றன் குறு 390*

*"சிறிய பெண் யானை போன்றவளுக்குத் துணையாகி யவனே! கதிரவனும் மறைந்தான்; வணிகர் கூட்டம் வந்து அடைந்ததாகப் பகைப்புலத்தே கொள்ளும் பகைமை போல, வளையை அணிந்த நெடிய வேலை ஏந்தி காவல் காட்டினி டத்தே வந்து பெயரும் ஆறலைக் கள்வரது தண்ணுமை என்னும் இன்னியத்தினுடைய முழக்க ஒலியையும் கேட்*

*பாயாக. ஆதலின், நீவிர் இருவரும் போதலை ஒழிமின்.'' என்று வழியில் கண்டோர் உடன் போக்குற்ற காதலர்க்கு அறிவுரை கூறினர்.*

## 188. நாமும் செல்வோம்

நெஞ்சே நிறை ஒல்லாதே; அவரே,
அன்பு இன்மையின், அருள் பொருள் என்னார்
வன்கண் கொண்டு வலித்து வல்லுநரே;;
அரவு நுங்கு மதியினுக்கு இவணோர் போலக்
களையார் ஆயினும், கண் இனிது படீஇயர்;
அஞ்சல் என்மரும் இல்லை; அந்தில்
அளிதோ தானே நாணே –
ஆங்கு அவர் வதிவயின் நீங்கப்படினே!

*– ஆசிரியர் ? குறு 395*

*"என் னெஞ்சம் நிலைநிறுத்தலைச் செய்ய இயலாது; அத் தலைவர் என்னிடம் அன்பு இல்லாத காரணமாக அருளைப் பொருளென்று கருதார் ஆயினார் வன்கண்மையை மேற் கொண்டு என்னை வற்புறுத்தி, அந்த வற்புறுத்தலினால் வன்மை பெற்றோராயினார். அரவினால் உண்ணப்படும் நிலவு திறந்து இவ் உலகத்தில் உள்ளோர் செயலற்றாற் போல எனது துன்பத்தை நீக்காராயினும் இனிமையாகக் கண்முடி துயிலுகின்றனர் அஞ்சற்க எனக் கூறித் தேற்றுவாரு மில்லை ஆதலின், அங்கே அத் தலைவர் தங்குமிடத்திற்கு நாம் நீங்கிச் சென்றால் நம் நாணம் இரங்கத்தக்கது. அது அழிந்து படுமே" என்று தலைவி தோழிக்குச் சொன்னாள்*

## 189. எண்ணினளோ எளிதெனை?

பாலும் உண்ணாள், பந்துடன் மேவாள்,
விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே,
எளிது என உணர்ந்தனள் கொல்லோ – முளி சினை
ஓமை குத்திய உயர் கோட்டு ஒருத்தல்
வேனிற் குன்றத்து வெவ் அறைக் கவாஅன்
மழை முழங்கு கடுங் குரல் ஓர்க்கும்
கழை திரங்கு ஆர் இடை, அவனொடு செலவே?

*– கமயனார்ர் குறு 396*

*"இனிய பாலையும் உண்ணாளாகி, பந்தாடுதலையும் விரும்பாளாகி, முன்பு தன்னோடு விளையாடும் மகளிர் கூட்டத்தோடு விளையாடிய தலைவி, இப்பொழுது, உலர்ந்த கிளைகளை உடைய ஓமை மரத்தினைக் குத்திய உயர்ந்த கொம்பை உடைய ஆண் யானை வேனில் தன்மையை உடைய மலையினிடத்தில் உள்ள வெம்மையாகிய அடிவாரத்தில் முகில் முழங்குகின்ற கடிய முழக்கத்தைக் கூர்ந்து கேட்கும் மூங்கில்கள் உலர்ந்த செல்லுதற்கரிய வழியில் அத் தலைவனோடு உடன் செல்லுதல் எளிமை உடையது என்று அறிந்தாளோ? என்று செவிலித்தாய் வருந்தி உரைத்தாள்.*

## 190. துயர் துடைப்பாரைக் காணேன்

**தேற்றாம் அன்றே – தோழி! தண்ணெனத்**
**தூற்றும் திவலைத் துயர் கூர் காலை,**
**கயல் ஏர் உண்கண் கனங் குழை மகளிர்**
**கையுறை ஆக நெய் பெய்து மாட்டிய**
**சுடர் துயர் எடுப்பும் புன்கண் மாலை,**
**அரும் பெறற் காதலர் வந்தென, விருந்து அயர்பு,**
**மெய்ம் மலி உவகையின் எழுதரு**
**கண் கலிழ் உகுபனி அரக்குவோரே.**

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ குறு 398*

*"தோழியே! குளிர்ச்சி உண்டாகும்படி தூவுகின்ற மழைத் துளியை உடைய துயரம் மிக்க பொழுதில் கயலை ஒத்த மையுண்ட கண்களையும் கனத்த குழையையும் உடைய மகளிர் தம் கையையே கருவியாக நெய்யை வார்த்து விளக்கேற்றிய துயரத்தைத் தரும் மாலைக் காலத்தில் பெறுதற்கரிய தலைவர் வந்தாராக விருந்து செய்து உடம்பு பூரிக்கும் படியான மகிழ்ச்சியோடு, முன் எழுந்த கண் கலங்கியதால் வீழ்கின்ற நீர்த்துளியைத் துடைப்போர் யாரும் இல்லையே," என்றாள் ஆற்றாமை மீதுற்ற தலைவி*

# பாலை

## நற்றிணை

### 191. வேண்டா இந்த வினையே

அழுந்துபட வீழ்ந்த பெருந் தண் குன்றத்து,
ஒலி வல் ஈந்தின் உலவைஅம் காட்டு,
ஆறு செல் மாக்கள் சென்னி எறிந்த
செம் மறுத் தலைய, நெய்த்தோர் வாய,
வல்லியப் பெருந் தலைக் குவளை, மாலை,
மான் நோக்கு இண்டு இவர் ஈங்கைய சுரனே;
வை எயிற்று ஐயள் மடந்தைமுன் உற்று
எல்லிடை நீங்கும் இளையோன் உள்ளம்,
காலொடு பட்ட மாரி
மால் வரை மிளிர்க்கும் உருமினும் கொடிதே!

*– பெரும்பதுமனார் நற் 2*

"நெடுங்காலம் வழங்கி வந்தது பெரிய குளிர்ந்தமலை. அதில் தழைத்த வலிய ஈந்து மரத்தின் கிளைகள் விளங்கும். அழகிய அக் காட்டு வழியில் நடந்து செல்லும் மக்களின் தலையைப் புலிக்குட்டிகள் மோதும். தலை சிவந்த மறுப் பட்டதலை குருதி படிந்ததுவாய் பெரியதலை இவற்றை யுடையன்வாய் விளங்கும் மாலைக் காலத்தில் பதுங்கி யிருக்கும் மரலின் தூறுகளை நிமிர்ந்து நோக்கும் அங்கே இண்டங் கொடி படர்ந்திருக்கும் இங்கை மரமுள்ள காடு உள்ளது அக் காட்டு வழியில், கூர்மையான பற்களைக் கொண்ட தலைமையுடைய மடந்தையை முன்னே நடக்கச்

செய்து பின்னே நடந்து செல்கிறான் தலைவன். ஞாயிறு தோன்றி நிலம் தெளிந்த நேரத்தில் ஊரை விட்டு நீங்கிக் கொண்டிருக்கிறான், இந்தத் தலைவன் இவன் உள்ளம் கடியது; காற்றோடு சேர்ந்த மழையிடத்துத் தோன்றிய பெரிய மலையைப் புரட்டும் இடியைக் காட்டிலும் அது கொடியது," என்றார்கள் தலைவன் தலைவியைக் கண்டிரங்கிய நல்ல மனம் படைத்தோர்.

## 192. அந்தத் துன்பம் இனியும் வேண்டுமோ?

**ஈன் பருந்து உயவும் வான் பொரு நெடுஞ் சினைப்**
**பொரி அரை வேம்பின் புள்ளி நீழல்,**
**கட்டளை அன்ன இட்டு அரங்கு இழைத்துக்,**
**கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டு ஆடும்**
**வில் ஏர் உழவர் வெம் முனைச் சீறூர்ச்**
**சுரன்முதல் வந்த உரன் மாய் மாலை**
**உள்ளினென் அல்லெனோ, யானே–உள்ளிய**
**வினை முடித்தன்ன இனியோள்**
**மனை மாண் சுடரொடு படர் பொழுது எனவே?**

*– இளங்கீரனார் நற் 3*

"நெஞ்சே, ஈன்ற பருந்து அடைகாக்க உட்கார்ந்து வருந்தும் படியானதும், வானத்தைத் தொடும் உயர்ந்த கிளைகளை யுடையதும், பொரிந்த அடிமரத்தையுடையதுமான வேப்ப மரத்தின் புள்ளிகளையுடைய நிழலிலே பொன்னை உரைக்கும் கல்லைப் போல வட்டமான அரங்கு அமைத்து தம் தொழில் கல்லாத சிறுவர்கள் நெல்லிக்காயை விளையாட்டுக் கருவியாகக் கொண்டு ஆடுவர் அங்கே வில்லை ஏராகக் கொண்டு உழும் உழவர் உளர். அவர் வழிப்பறி செய்வோர். அவரது வெய்ய குடியிருப்பினை யுடைய சீறூர் உண்டு. அந்தக் காட்டின் வழியாக முன்னொரு சமயம் யான் சென்றபோது, என் வலிமையைத் தொலைத்த மாலைக் காலத்தில் யான் நினைத்த செயல் ஒன்றுண்டு கருதிய செயல் முடிந்தபோது ஏற்படும் இன்பம் போன்ற வளான இனிய என் காதலி, மனையில் மாட்சிமைப்பட்ட விளக்கை ஏற்றி வைத்து அன்போடு என்னை நினைக்கும் மாலைக் காலம்

*அல்லவா இது - என்று நினைத்தேன் அல்லவா? அதனால் நெஞ்சே, இப்போது யான் வாரேன்," எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான்*

## 193. தோழித் தலைவியை தேற்றுதல்

**சூருடை நனந் தலைச் சுனை நீர் மல்கப்,**
**பெரு வரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்,**
**கல் அலைத்து இழிதரும் கடு வரற் கான் யாற்றுக்**
**கழை மாய் நீத்தம் காடு அலை ஆர்ப்பத்,**
**தழங்கு குரல் ஏறொடு முழங்கி, வானம்**
**இன்னே பெய்ய மின்னுமால்–தோழி,**
**வெண்ணெல் அருந்திய வரி நுதல் யானை**
**தண் நறுஞ் சிலம்பில் துஞ்சும்**
**சிறியிலைச் சந்தின வாடு பெருங் காட்டே.**

*– நல்வெள்ளியார் நற் 7*

*"தோழி, வெண்மையான மூங்கிலின் நெல்லை உண்ட, வரிகளையுடைய நெற்றியைக் கொண்ட யானைகள் குளிர்ந்த நறிய மலையில் தூங்கும் சிறிய இலைகளையுடைய சந்தன மரங்கள் வெப்பத்தால் வாடும்படியான பெரிய காட்டில், அச்சமுள்ள, அகன்ற இடத்திலுள்ள சுனையில் நீர் நிறையவும், பெருமலையின் வரிசைகளில் அருவிகள் ஒலிக்கவும், கற்களை உருட்டிக் கொண்டு இறங்கிக் கடுமையாக வரும் காட்டாற்றில் மிதந்து வரும் மூங்கில்ளை ஒடிக்கும் வெள்ளம் காடுகளை அலைத்து ஓசையிடவும், முழங்கும் ஓசையுடைய இடியோடு முழங்கி மேகம் இப்பொழுதே மழைபெய்ய மின்னுவதைப் பார். தலைவர் சுட்டிய கார்ப் பருவம் வந்தது காண் அவர் வந்து வரைந்து கொள்வார் நீ வருந்தாதே," என்று பொருள் தேடச் சென்ற தலைவர் திரும்புவார் என ஆற்றினாள் தோழி.*

## 194. தொல்லையின்றிச் செல்வாயாக

**அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்**
**வழிபடு தெய்வம் கண் கண்டா அங்கு,**
**அலமரல் வருத்தம் தீர, யாழ நின்**

நல மென் பணைத் தோள் எய்தினம்; ஆகலின்,
பொரிப் பூம் புன்கின் அழற் தகை ஒண் முறி
சுணங்கு அணி வன முலை அணங்கு கொளத் திமிரி,
நிழல் காண்தோறும் நெடிய வைகி,
மணல் காண்தோறும் வண்டல் தைஇ,
வருந்தாது ஏகுமதி – வால் எயிற்றோயே!
மா நனை கொழுதி மகிழ் குயில் ஆலும்
நறுந் தண் பொழில, கானம்;
குறும் பல் ஊர, யாம் செல்லும் ஆறே.

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ 9*

*"வெண்மையான பற்களையுடையவளே, நிலைத்த நற் செயல்களை முயன்று செய்து முடிக்கும் ஆர்வமுள்ள மக்கள் தாம் வழிபடும் தெய்வத்தைக் கண்ணெதிரே கண்டது போல என் மனச் சுழற்சித் துன்பம் நீங்க உனது அழகிய மெல்லிய பருத்த தோள்களை அடைந்து விட்டேன் ஆகையால் பொரி போன்ற பூக்களையுடைய புன்க மரத்தின் அழல் போன்ற ஒள்ளிய தளிர்களை உன் தேமல் படர்ந்த அழகிய கொங்கை களில் அழகு உண்டாகும்படி பூசிக் கொள்க நிழலைக் காணும்தோறும் நீண்ட நேரம் நின்று தங்கி வருக. மணலைக் காணும் தோறும் சிற்றில் இழைத்து வண்டல் விளையாட்டு விளையாடி வருக இவ்வாறு செயற்பட்டு வருந்தாது என் னோடு வருக மாமரத்தின் அரும்புகளைக் கோதி மகிழும் குயில்கள், அவை கூவும் நறிய குளிர்ந்த பொழில்களை யுடைய கானகத்தில் யாம் இருவரும் செல்வோம் அவ் வழியில் சிறிய ஊர்கள் பல உள" எனத் தலைவன் தன்னுடன் வரும் தலைவியிடம் பேசி அழைத்துச் சென்றான்.*

## 195. கை விட்டு விடாதே இவளை

அண்ணாந்து ஏந்திய வன முலை தளரினும்,
பொன் நேர் மேனி மணியின் தாழ்ந்த
நல் நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்,
நீத்தல் ஓம்புமதி – பூக் கேழ் ஊர!
இன் கடுங் கள்ளின் இழை அணி நெடுந் தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்,

வெண் கோட்டு யானைப் போஒர் கிழவோன்
பழையன் வேல் வாய்த்தன்ன நின்
பிழையா நல் மொழி தேறிய இவட்கே. – *ஆசிரியர் ? நற் 10*

"பூக்களின் ஒளிமயமான ஊரனே! குடிப்பதற்கு இனிமையும் குடித்த பின் வெறியூட்டும் கடுமையும் உடைய கள்ளினையும் அணிகள் அணிந்த நெடிய தேர்களையும் உடையவர் வெற்றிச் சோழர். அவர் கொங்கர் என்பாரை அடக்கி வைக்க விரும்பினார். வெண்மையான கொம்பானைகளையுடையவனும் "போஒர்" என்னும் ஊருக்கு உரியவனுமான பழையன் என்னும் தானைத் தலைவனிடம் தெரிவித்தனர் பழையனின் வேல் தப்பாது வாய்க்கும் தன்மையுடையது அவ்வேல் போன்ற உன் பிழையாத நல்ல சொற்களை நம்பித் தெளிந்தவள் இவள். இவளது அண்ணாந்து நிமிர்ந்துள்ள அழகிய கொங்கைகள் தளர்ந்து சாய்ந்த காலத்திலும், பொன் போன்ற இவளது மேனியிலே கருமணி போலத் தாழ்ந்து தொங்கும் நல்ல நீண்ட கூந்தல் நரையோடு முடிக்கப்படும் முதுமைக் காலத்திலும் இவளைக் கை விடாது காப்பாயாக." என்று உடன்போக்கிற்கு உகந்த தலைவியை அழைத்துச் செல்லும் தலைவனிடம் கண்ணீர் மல்கத் தோழி உரைத்தாள்

## 196. உடன் போக்கு உடன்பாடில்லை!

விளம்பழம் கமழும் கமஞ்சூற் குழிசிப்
பாசம் தின்ற தேய் கால் மத்தம்
நெய் தெரி இயக்கம் வெளில்முதல் முழங்கும்
வைகு புலர் விடியல் மெய் கரந்து, தன் கால்
அரி அமை சிலம்பு கழீஇ, பல் மாண்
வரி புனை பந்தொடு வைஇய செல்வோள்,
'இவை காண்தோறும் நோவர் மாதோ;
அளியரோ அளியர் என் ஆயத்தோர்!' என
நும்மொடு வரவுதான் அயரவும்,
தன் வரைத்து அன்றியும் கலுழ்ந்தன கண்ணே,

– *கயமனார் நற் 12*

"*நிறைந்த கருப்பம் காணப்படும் வயிறு போன்ற தயிருடைய தாழிப் பானையில் விளாம்பழம் கமழும் அத்*

*தாழியில் மத்திட்டுத் தயிர் கடைய எதிரே நட்டுள்ள தூணில் தேய்வு காணப்படும். வெண்ணெய் தெரியும் இயக்கத்தின் போது முழக்கம் கேட்கும். இது வைகறைப் பொழுது புலர்ந்து கொண்டிருக்கும் விடியற்காலையிலாகும். இந்த நேரத்தில் தலைவனொடு உடன் போக்கில் செல்ல விரும்பிய தலைவி தன்னைப் பிறர் பார்த்து விடாதபடி மறைத்துத் தன் காலில் அணிந்திருந்த பரலொடு சேர்ந்த சிலம்பைக் கழற்றிப் பல மாட்சிமைப்பட்ட வரிகள் செய்த பந்தொடு சேர்ந்து வீட்டின் ஓரிடத்தில் வைத்து வரச் சென்றவள் நினைத்து விட்டாள். நான் பிரிந்தால் இவை இரண்டினையும் என் ஆயத்தார் காணும் தோறும் என்னை நினைத்து வருந்துவர். அவர் இரக்கப்படத் தகுந்தவர். அவர் வருந்தும்படியான செயல் என்னால் செய்ய முடியாது என்று தீர்மானித்தாள். அவள் கண்கள் கண்ணீர் விட்டன. ஆதலால் தலைவ, உன்னோடு உடன்வர அவள் விரும்பியும் தன் அளவில் நில்லாமல் ஆயத்தார் வருத்தத்தை நினைத்து அவள் கண்கள் கலங்கின," என்றாள் தோழி உடன்போக்குணர்த்திய தலைவனிடம்.*

## 197. நீடு வாழ்வாராக அவர்!

**தொல் கவின் தொலைய, தோள் நலம் சாஅய,**
**நல்கார் நீத்தனர் ஆயினும், நல்குவர்;**
**நட்டனர் வாழி – தோழி, – குட்டுவன்**
**அகப்பா அழிய நூறி, செம்பியன்**
**பகல் தீ வேட்ட ஞாட்பினும் மிகப் பெரிது**
**அலர் எழச் சென்றனர் ஆயினும் – மலர் கவிழ்ந்து**
**மா மடல் அவிழ்ந்த காந்தள் அம் சாரல்,**
**இனம் சால் வயக் களிறு பாந்தட் பட்டெனத்,**
**துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்**
**நெடு வரை விடரகத்து இயம்பும்**
**கடு மான் புல்லிய காடு இறந்தோரே.** – *மாமுலனார் நற் 14*

*"தோழி, என் பழைய அழகு தொலையவும் என் தோள் நலம் கெடவும் இப்போது அருள்செய்யாது என் தலைவர் கைவிட்டாரெனினும், அவர் அருள் செய்வார் என்பது*

*உறுதி குட்டுவனது மதில் அழியும்படி இடித்தொடித்துப் பகலில் தீ வைத்துப் பாழ்செய்தவன் செம்பியன் அப் போரைக் காட்டிலும் மிகப்பெரிய அலர் உண்டாகும்படி தலைவர் பிரிந்து போனாரெனினும் அவர் நட்புடையவர் மலர் தலை கவிழ்ந்து பெரிய இதழ் விரிந்த காந்தள் மணக்கும் அழகிய மலைச்சாரலில் தன் இனம் அமைந்த வலிய ஆண் யானை பெரும் மலைப்பாம்பின் வாய்ப் பட்டது இதனை அறிந்த பெண் யானை நீங்காத துய ரோடு அச்சம் கொண்டு ஒலிக்கும் பேரொலி நீண்ட மலையின் பிளப்புகளில் எதிரொலிக்கும் அவ்வாறானதும் கடிய விலங்குகள் பொருந்தியதுமான காட்டைக் கடந்து சென்றவர் அன்பராதலால் அவர் குறித்த பருவத்து வருவர் அவர் வாழ்க,'' என்று தலைவி வாழ்த்தினாள்*

## 198. நெஞ்சே, பொருளா? காதலியா?

புணரின் புணராது பொருளே; பொருள்வயிற்
பிரியின் புணராது புணர்வே; ஆயிடைச்
செல்லினும், செல்லாய் ஆயினும், நல்லதற்கு
உரியை – வாழி, என் நெஞ்சே, பொருளே,
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடு மீன் வழியின் கெடுவ; யானே,
விழுநீர் வியலகம் தூணி ஆக
எழு மாண் அளக்கும் விழு நிதி பெறினும்,
கனங்குழைக்கும் அமர்ந்த சேயரி மழைக் கண்
அமர்ந்து இனிது நோக்கமொடு செகுத்தனென்;
எனைய ஆகுக! வாழிய பொருளே!

*– சிறைக்குடி ஆந்தையார் நற் 16*

*"பொருள், காதலியோடு இருந்தால் வந்தடையாது; பொருள் வயின் பிரிந்தால் காதலியோடிருக்கும் இன்பம் கிடையாது என் நெஞ்சே, பொருளுக்குச் செல்வதும் செல்லாதிருப்பதுமாகிய இரண்டில் ஒன்றை நல்லதைத் தேர்ந்தெடுத்ததற்கு நீ உரிமையுடையாய் ஆதலால் வாழ்க! பொருள்களோ, வாடாத பூக்களையுடைய பொய்கையின் நடுவில் ஓடும் மீனின்வழி மறைந்து அழிவதுபோல இருந்த*

*இடம் தெரியாமல் அழிந்து போகும். யானோ, சிறந்த கடல் சூழ்ந்த அகன்ற உலகமே அளக்கும் கருவியாகக் கொண்டு ஏழு முறை அளக்கத்தக்க சிறந்த செல்வத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தாலும் அதனை விரும்பேன் இக் கனங் குழையாகிய என் காதலியின் மாறுபட்ட செவ்வரி படர்ந்த குளிர்ந்த கண்கள் பொருத்தி இனிதாகப் பார்க்கும் பார்வை யால் யான் ஆற்றலழிந்தேன் ஆதலால் பொருளே! நீ எத் தன்மையானாலும் ஆகுக. நீ வாழ்க" என்றான் பொருள் கடைக் கூட்டிய நெஞ்சினைத் தலைவன்.*

## 199. விரைவில் வருவார் அவர்!

**பருவரல் நெஞ்சமொடு பல் படர் அகல
வருவர் வாழி – தோழி, – மூவன்
முழு வலி முள் எயிறு அழுத்திய கதவின்,
கானல்அம் தொண்டிப் பொருநன்,வென் வேல்
தெறல் அருந் தானைப் பொறையன், பாசறை,
நெஞ்சம் நடுக்குறூஉம் துஞ்சா மறவர்
திரை தபு கடலின் இனிது கண் படுப்பக்,
கடாஅம் கழீஇய கதன் அடங்கு யானைத்
தடாஅ நிலை ஒரு கோட்டன்ன,
ஒன்று இலங்கு அருவிய குன்று இறந்தோரே.**

*– பொய்கையார் நற் 18*

*"தோழி, வருத்தம் நிறைந்த நெஞ்சத்தோடு பல நினை வாலும் ஏற்பட்ட உன் துன்பங்கள் யாவும் நீங்கத் தலைவன் வருவர். நீ வாழ்வாயாக மூவன் என்பவன் முழு வலிமையை யும் தொலைத்து அவனது முள் போன்ற பல்லைப் பிடுங்கிப் பதித்த கதவையுடைய - கடற்கரைச் சோலையுடைய அழகிய தொண்டி நகரின் தலைவனும், வெற்றிதரும் வேற் படை உடையவனும், பகைவரால் வெல்ல முடியாத தானையை உடையவனுமான பொறையன். என்பானின் பாசறையில், யானை ஒன்றால் நெஞ்சம் நடுங்குற்றுத் தூங்காத வீரர்கள், அது மதம் நீங்கிச் சினம் அடங்கியதால், அலை அடங்கிய கடல்போல இனிமையாகக் கண்முடி உறங்கினர். அதன் பெரியதான நிலையிலுள்ள ஒற்றைக் கொட்டுபோல ஒன்றாகி*

*விளங்கும் அருவியையுடைய குன்றைக் கடந்து சென்றவர் வருவர். நீ வருந்தாதே," என்று தோழி, ஆற்றாத தலைவியிடம் கூறி அமைதிப் படுத்தினாள்.*

## 200. நல்ல ஒன்றைச் செய்தாய்!

'பார் பக வீழ்ந்த வேருடை விழுக் கோட்டு
உடும்பு அடைந்தன்ன நெடும் பொரி விளவின்,
ஆட்டு ஒழி பந்தின், கோட்டு மூக்கு இறுபு,
கம்பலத்தன்ன பைம்பயிர்த் தாஅம்
வெள்ளில் வல்சி வேற்று நாட்டு ஆர் இடைச்
சேறும், நாம்' எனச் சொல்ல – சேயிழை!–
'நன்று' எனப் புரிந்தோய்; நன்று செய்தனையே;
செயல்படு மனத்தர் செய்பொருட்கு
அகல்வர், ஆடவர்; அது அதன் பண்பே.

*– கணக்காயனார் நற் 24*

*"சேயிழாய்! நிலம் பிளவுபட இறங்கிய வேர், பெரிய கிளை, உடும்பு பிடித்திருப்பது போன்ற அடிமரம், இவற்றை யுடைய நெடிய விளா மரத்தின் கிளைகளில் மூக்கு ஊழ்த்து விழுந்த பழங்கள், கம்பளம் விரித்தாற் போன்ற பசிய பயிரில், விளையாட்டொழிந்த பந்துகள் கிடப்பன போலப் பரவிக் கிடக்கும். 'அவ் விளாம் பழங்களை உணவாகக் கொண்டு வேற்று நாட்டிற்கு அரிய வழிகளில் யாம் சேறும்' என்று தலைவர் கூறலும், அது நன்று என விருப்பத்தோடு நீ கூறினாய். அவ்வாறு கூறியதனால் நீ நன்று ஒன்றைச் செய் தாய். ஆடவர் செயல்படும் மனத்தர். ஆகவே பொருள் ஈட்ட அகல்வர். பொருள் - ஆடவரைக் கவர்வது அதன் பண் பாகும்." என்றாள் தோழி தலைவியிடம் உவந்து கூறினாள்.*

## 201. துணையாய் இணைந்த தவறோ?

நோகோ யானே; நெகிழ்ந்தன வளையே –
செவ்வி சேர்ந்த புள்ளி வெள்அரை
விண்டுப் புரையிம் புணர்நிலை நெடுங் கூட்டுப்
பிண்ட நெல்லின் தாய் மனை ஒழியச்,
சுடர் முழுது எறிப்பத் திரங்கிச் செழுங் காய்

முட முதிர் பலவின் அத்தம், நும்மொடு
கெடு துணை ஆகிய தவறோ? வை எயிற்றுப்,
பொன் பொதிந்தன்ன சுணங்கின்,
இருஞ் சூழ் ஓதி, பெருந் தோளாட்கே.

*– சாத்தந்தையார் நற் 26*

*“தலைவனே, உம் பிரிவு உணர்ந்து தலைவியின் வளையல்கள் கழன்றன. அதற்கு யான் வருந்துகிறேன் அழகு சேர்ந்த, எண் அமைந்த, புள்ளிகளைக் கொண்ட, வெளிய அடியையுடைய, மலை போன்ற தொடர்ந்த நிலையிலுள்ள, நெடிய நெறிகூட்டில் போட்டு வைக்கப்பட்ட தொகுதியான நெல்லையுடையது தாய்வீடு. அந்தச் செழிப்பை விட்டு ஞாயிறு தன் வெயிலை முழுதும் வீச, செழித்த பலாக் காய்கள் வாட, முடம்பட்ட முதிர்ந்த பலா மரங்களுடைய காட்டில் உம்மோடு வந்த தவறோ? அவள் வளையல்கள் கழன்றன. கெட்டவிடத்து உதவும் துணையள் கூர்மையான பற்கள், பொன் பொதித்து போன்ற சுணங்குகள், கருமை சூழ்ந்த கூந்தல், பெரிய தோள்கள் இவற்றையுடைய தலைவிக்குக் கைவளையல்கள் நெகிழ்ந்தன. யான் வருந்துகிறேன்,” என்று தலைவி வேறுபட்டமை கூறி வருந்தினாள் தோழி.*

## 202. கள்வனைப் போலக் கொடியராயினரே

என் கைக் கொண்டு தன் கண் ஒற்றியும்,
தன் கைக் கொண்டு என்நல் நுதல் நீவியும்,
அன்னை போல இனிய கூறியும்,
கள்வர் போலக் கொடியன் மாதோ –
மணி என இழிதரும் அருவி பொன் என
வேங்கை தாய ஓங்கு மலை அடுக்கத்து,
ஆடு கழை நிவந்த பைங் கண் மூங்கில்
ஓடு மழை கிழிக்கும் சென்னிக்
கோடு உயர் பிறங்கல், மலைகிழவோனே!

*– முதுகூற்றனார் நற் 28*

*“என் கையைக் கொண்டு தன் கண்ணை ஒற்றியும், தன் கையைக் கொண்டு என் நல்ல நெற்றியைத் தடவியும்; தாய் போல இனிய சொற்களைக் கூறியும் தலைவர் களவுக்*

*காலத்தில் பேரன்பு செய்தார். இப்போது கள்வர் போலக் கொடியவராய் உள்ளார் நீலமணி போல வீழும் அருவி யுடைய தலையில் பொன் போல வேங்கை மலர் பரவிக் கிடக்கும் உயர்ந்த மலைத் தொடர்ச்சியில் ஆடும் மூங்கில் வானில் ஓடும் முகிலைக் கிழிக்கும் கொடு முடியால் உயர்ந்த மலைக்கு உரிமையுடைய, மலை கிழவோனே அக் கொடி யவர் ஆவார்," என்று பிரிவாற்றாத தலைவிக்குத் தோழி ஆற்றுவித்து உரைத்தாள்*

## 203. எவ்வகையில் செல்கின்றாளோ?

**நின்ற வேனில் உலந்த காந்தள்**
**அழல் அவிர் நீள் இடை, நிழலிடம் பெறாஅது,**
**ஈன்று காண் மடிந்த பிணவுப் பசி கூர்ந்தென,**
**மான்ற மாலை வழங்குநர்ச் செகீஇய,**
**புலி பார்த்து உறையும் புல் அதர்ச் சிறு நெறி**
**யாங்கு வல்லுநள்கொல்தானே – யான் 'தன்**
**வனைந்து ஏந்து இள முலை நோவகொல்,' என**
**நினைந்து, கைந்நெகிழ்ந்த அணைத்தற்குத் தான் தன்**
**பேர் அமர் மழைக் கண் ஈரிய கலுழ;**
**வெய்ய உயிர்க்கும் சாயல்,**
**மை ஈர் ஓதி பெரு மடத்தகையே?** – *பூதனார் நற் 29*

*"நிலைத்த வேனிற் காலத்தில் வாடிய காந்தளுடைய, அழல் வீசும் நீண்ட வழியில், நிழலிருக்குமிடம் கிடைக் காமல் குட்டிகள் ஈன்று அவற்றோடு கிடந்த பெண் புலி மிகவும் பசித்ததென்று மயங்கின மாலை வேளையில் வழிப் போவாரைக் கொல்லும் பொருட்டு ஆண் புலி வழியைப் பார்த்துத் தங்கியிருக்கும் புல்லிய வழியாகிய சிறிய பாதை யில் எப்படி அவள் போக முடிந்தவளாய் இருப்பாளோ? அவள் யாரெனில் என் மகள். அழகிய நிமிர்ந்த இளைய கொங்கை வருந்துமோ என்று நினைத்து யான் படுக்கையில் அணைத்திருந்த கை நெகிழ்ந்துவிட்ட அதற்கே அவள் தனது பெரிய அமர்ந்த குளிர்ந்த கண்கள் நீர் வடிய அழுது வெய்ய பெருமூச்சு விடுவாள்; அவள் மென்மையோடு கரிய கூந்தலையும் பெரிய மடப்பத்தையுமுடைய தகுதி*

*நிறைந்தவள்,” என்று அல்லலுற்றாள் மகட்போக்கிய தலைவி யின் தாய்.*

## 204. நீர் சுரந்த ஏரார் விழிகள்!

‘படு சுடர் அடைந்த பகுவாய் நெடு வரை
முரம்பு சேர் சிறுகுடி, பரந்த மாலைப்,
புலம்பு கூட்டுண்ணும் புல்லென் மன்றத்து,
கல்லுடைப் படுவில் கலுழி தந்து,
நிறை பெயல் அறியாக் குறைத்து ஊண் அல்லில்
துவர்செய் ஆடைச் செந் தொடை மறவர்
அதர் பார்த்து அல்கும் அஞ்சுவரு நெறியிடை,
இறப்ப எண்ணுவர் அவர் எனின், மறுத்தல்
வல்லுவம் கொல்லோ, மெல்லியல், நாம்? என
விம்முறு கிளவியள் என் முகம் நோக்கி,
நல் அக வன முலைக் கரை சேர்பு
மல்கு புனல் பரந்த மலர் ஏர் கண்ணே.

*– இளவேட்டனார் நற் 33*

*“தலைவனே, மறையும் ஞாயிறு சேர்ந்த பிளந்த வாயை யுடைய உயர்ந்த மலையில் மேட்டு நிலத்திலுள்ள சிறிய குடியிலே பரந்த மாலை நேரத்தில் தனிமை சேர்ந்திருக்கும் பொலிவிழந்த மன்றத்திலே கல்லையுடைய மடுவிலே ஊறிய கலங்கள் நீரைக் கொண்டு வந்து தந்து நிறைந்த மழையை அறியாத குறைந்த உணவையுடைய இரவு நேரத்தில், துவர் நிறம் செய்த ஆடையையும் செவ்விய அம்புத் தொடையையு முடைய வழிப்பறி செய்வோர் வழி பார்த்துத் தங்கியிருக்கும் அச்சம் தோன்றும் பாதையில் அவர் செல்ல எண்ணுவா ரென்றால் நாம் மறுத்தல் செய்ய முடிந்தவர்களாய் உள் ளோமா? மெல்லியல் சொல் என்று கேட்டாள் அப்போது. விம்முற்ற சொல்லையுடையவளாய் என் முகத்தைப் பார்த்த போது அவளது மலர்போன்ற கண்களிலிருந்து நல்ல மார்பிலுள்ள அழகிய கொங்கையின் முகட்டில் விழுந்து பரக்கும்படி நிறைந்த கண்ணீர் பரந்தன.” என்றுரைத்தாள் தோழி, பிரிவு மேற்கொண்ட தலைவனிடம்.*

## 205. என் பொறுப்பன்று இது!

பிணங்குஅரில் வாடிய பழ விறல் நனந் தலை,
உணங்குஊண் ஆயத்து ஓர் ஆன் தெள் மணி
பைபய இசைக்கும் அத்தம், வை எயிற்று
இவளொடும் செலினோ நன்றே குவளை
நீர் சூழ் மா மலர் அன்ன கண் அழ,
கலை ஒழி பிணையின் கலங்கி மாறி
அன்பிலிர் அகறிர் ஆயின், என் பரம்
ஆகுவது அன்று அவள் அவலம் – நாகத்து
அணங்குடை அருந் தலை உடலி, வலன் ஏர்பு,
ஆர்கலி நல் ஏறு திரிதரும்
கார் செய் மாலை வரூஉம் போழ்தே. – *பேரிசாத்தனார் நற் 37*

*"செடி கொடிகள் ஒன்றோடொன்று பின்னிய சிறுகாடு வாட்டமடைந்தது. ஆனால் பழைமையான சிறப்புடையது. அகன்ற இடத்தையுடைத்து. உலர்ந்த புல் உணவு பெற்ற ஒரு கூட்டத்தில் ஓர் ஆவின் தெளிந்த மணியோசை மெல்ல ஒலிக்கும். அந்தக் காட்டு வழியில் கூரிய பற்களையுடைய இவளோடும் செல்வீரானால் நன்று. அவ்வாறன்றி, நீர் அன்பில்லாது பிரிந்து செல்வீராயின், கலைமானால் ஒழிக்கப் பட்ட பெண்மான் போன்று இவள் கலக்கமடைந்து நீர் சூழ்ந்த சிறந்த குவளை மலர் போன்ற இவள் கண்களிலிருந்து நீர் வடிய அழுவாள். இன்னும் கேளும், பாம்பின் அச்ச முடைய அரிய தலை துணிந்து விழும்படி சினந்து வலப் பக்கமாக எழுந்து ஆரவாரமிக்க நல்ல இடியேறு திரியும். மழை பெய்த மாலைக் காலம் வரும் பொழுது இவள் அவலம் பெரிதாகும். அப்போது இவளைக் காப்பது என் பொறுப்பு ஆகாது." என்றாள் வரைவிடை வைத்துப் பிரியும் தலைவனிடம் தோழி.*

## 206. இந்தப் பிரிவு இனிது வாழவே!

பைங் கண் யானைப் பரூஉத் தாள் உதைத்த
வெண் புறக் களரி விடு நீறு அடி,
சுரன் முதல் வருந்திய வருத்தம் பைபயப்
பாஅர் மலி சிறு கூவலின் தணியும்

நெடுஞ் சேண் சென்று வருந்துவர்மாதோ –
எல்லி வந்த நல் இசை விருந்திற்கு,
கிளா இழை அரிவை, நெய் துழந்து அட்ட
விளர் ஊன் அம் புகை எறிந்த நெற்றிச்,
சிறு நுண் பல் வியர் பொறித்த
குறு நடைக் கூட்டம் வேண்டுவோரே.

*– இளந்தேவனார் நற் 41*

"விளங்கும் அணிகலன் அணிந்த அரிவையே, இரவில் வந்த நல்ல புகழுடைய விருந்தினருக்கு நெய் கலந்து சமைத்த கொழுப்புடைய ஊனின் நறுமணப் புகை உறைந்த உன் நெற்றியில் சிறிய நுண்ணிய பல வியர்வைத் துளிகள் அழுந்தி யிருக்கும குறுநடையுடைய தலைவியாகிய உன், கூட்டத்தை வேண்டுவார் தலைவர். பசிய கண்ணயுடைய யானையின் பருத்த கால் உதைத்த வெள்ளை நிறமான புறத்திலுள்ள களர்நிலம் விடுகின்ற புழுதியில் தோய்ந்து, காட்டின் முதலில் வருந்திய வருத்தம் மெல்ல மெல்லப் பாறையிலுள்ள சிறிய கிணற்றின் நீரால் தணியும்படியாக நெடுந்தூரம் சென்று அவர் வருந்துவர். அவ்வாறு வருந்துவது பின்னர் இனிய இல்லறம் நடத்தவே யாம்" என்று அமைதி கூறினாள் தோழி

## 207. நீ செல்லின் நெஞ்சுடைவாள்

துகில் விரித்தன்ன வெயில்அவிர் உருப்பின்
என்றூழ் நீடிய குன்றத்துக் கவாஅன்,
ஓய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி
ஆர்ந்தன ஒழிந்த மிச்சில் சேய் நாட்டு
அருஞ் சுரம் செல்வோர்க்கு வல்சி ஆகும்
வெம்மை ஆர் இடை இறந்தல் நுமக்கே
மெய்ம்மலி உவகை ஆகின்றது: இவட்கே,
அஞ்சல் என்ற இறை கைவிட்டெனப்,
பைங் கண் யானை வேந்து புறந்து இறுத்தலின்,
களையுநர்க் காணாது கலங்கிய உடை மதில்
ஓர் எயின் மன்னன் போல,
அழிவு வந்தன்றால், ஒழிதல் கேட்டே.

*– எயினந்தையார் நற் 43*

*"வெள்ளையான ஆடையை விரித்தது போல வெயில் விளங்கும் வெப்பத்தையுடைய கோடைக் காலத்தில் உயர்ந்த குன்றத்தின் பக்கத்தில் மிக்க பசியையுடைய செந்நாய், வருந்தும் ஒருவகை மானைக்கொன்று தின்றுவிட்ட மிச்சில் தூர நாட்டிற்கு அருஞ்சுர வழியாகச் செல்வோர்க்கு உணவு ஆகும் வெப்பமுள்ள அந்த அரிய வழியைக் கடத்தல் உமக்கு உடல் பூரிக்கும் மகிழ்ச்சியாய் இருக்கிறது நீ நீங்கும் செய்தி கேள்விப்பட்ட இவளுக்கு, அஞ்சல் என்ற அரசன் கை விட்டது போலவும், பசிய கண்களையுடைய யானைப் படை வேந்தன் மதிலின் வெளியே தங்கியிருத்ததால் தன் துன்பம் நீக்குவாரைக் காணாமல் கலங்கிய உடைந்த மதிலையுடைய ஒரெயின் மன்னன் போலவும் நெஞ்சழிவு வந்தது. ஏற்றது செய்க" என்றாள் தோழி, பிரியும் தலைவனிடம்*

## 208. விரைந்து இழிவது இளமை!

**வைகல்தோறும் இன்பமும் இளமையும்**
**எய் கணை நிழலின் கழியும், இவ் உலகத்துக்;**
**காணீர் என்றலோ அரிதே;அது நனி**
**பேணீர் ஆகுவீர் – ஐய! என் தோழி**
**பூண் அணி ஆகம் புலம்ப, பாணர்**
**அயிர்ப்புக் கொண்டன்ன கொன்றை அம் தீம் கனி,**
**பறை அறை கடிப்பின்,அறை அறையாத் துயல்வர,**
**வெவ் வளி வழங்கும் வேய் பயில் அழுவத்து,**
**எவ்வம் மிகூஉம் அருஞ் சுரம் இறந்து,**
**நன் வாய் அல்லா வாழ்க்கை**
**மன்னாப் பொருட்பிணிப் பிரிதும் யாம் எனவே.**

***– ஆசிரியர் ? நற் 46***

*"நிலையற்ற பொருளைத் தேட விரும்புவீர். 'யாம் பிரிதும்' என்று கூறுவீர் ஆனால் உலகத்திலே எய்த அம்பு குறியில் போய்த் தைக்கும் அளவில் அதன் நிழல் எவ்வளவு விரைவில் மறையுமோ அவ்வளவு விரைவில் இன்பமும் இளமையும் கழியும் இந் நிலையாமையை அறிவீர் காக்க வேண்டியதைக் காப்பீராக ஐய, என் தோழியின் கலன் அணிந்த மார்பு வருந்த, பாணர் பறையை முழக்கும் குறுந்*

தடியோ என ஐயம் கொண்டது போலக் கொன்றையின் அழகிய இனிய கனிகள் காம்புகளோடு பாறையின் அறைந்து விழும்படி கிளைகள் அசைய, வெம்மையான காற்று வீசும் மூங்கில் நெருங்கிய காட்டில் துன்பமிக்க அரிய வழியைக் கடந்து நல்ல வாய்ப்பில்லாத வாழ்க்கைக்கு உரிய நிலையற்ற பொருள் பற்றுக் காரணமாக யாம் பிரிதும் எனக் கூறுவீர் அதனைக் கை விடுவீராக அவளை உடன் கொண்டு செல்லல் நல்லது" என்றாள் தோழி, பிரிவு உணர்த்திய தலைவனிடம்

## 209. விழிகளில் தோன்றும் வெய்ய காடு!

**அன்றை அனைய ஆகி, இன்றும், எம்**
**கண் உளபோலச் சுழலும்மாதோ –**
**புல் இதழ்க் கோங்கின் மெல் இதழ்க் குடைப் பூ**
**வைகுறு மீனின் நினையத் தோன்றிப்,**
**புறவு அணி கொண்ட பூ நாறு கடத்திடைக்,**
**கிடின்என இடிக்கும் கோல் தொடி மறவர்**
**வடி நவில் அம்பின் வினையர் அஞ்சாது**
**அமரிடை உறுதர, நீக்கி நீர்**
**எமரிடை உறுதர ஒளித்த காடே.**

***– பாலை பாடிய பெருங்கடுங்கோ நற் 48***

"தலைவ, புல்லிய புற இதழையுடைய கோங்கு மரத்தின் மெல்லிய இதழ்களையுடைய குடைபோன்ற பூக்கள் விடி வெள்ளிகள் என்று நினைக்கும்படி தோன்றும் அப்படித் தோன்றி வெளியழகு கொண்ட பூக்கள் மணக்கும் காட்டிலே, கிடின் என்ற ஒலியோடு முழக்கி அழகிய வீரவளை அணிந்த மறவர்கள் கூர்மையான அம்பினால் இயற்றும் கொடும்போர் செய்ய அஞ்சாது தோன்றுவர் தோன்றிய மறவர்கள் போரின் நடுவே வருத்தமுற அவர்களைத் துரத்தியும், எம் சுற்றத்தார் எம்மைத் தேடி வந்தபோது யாம் அவரோடு சேர்ந்து கொள்ள விட்டு ஒளிந்து கொண்டும் நீ முன்பு ஒருமுறை செயற்பட்டாய் அவ்வாறு உன் திறமை காட்டப்பட்ட இடமாகிய காடு அன்று எவ்வாறு இருந்ததோ அவ்வாறே இன்றும் எம் கண் முன் இருப்பது போலச் சுழலும் அதில்

*எவ்வாறு செல்வாய்?" என்று பிரிவினை உணர்த்திய தலைவனிடத்தில் தோழி வினவினாள்.*

## 210. நெஞ்சமே நான் வரவில்லை

மாக் கொடி அதிரற் பூவொடு பாதிரித்
தூத் தகட்டு எதிர் மலர் வேய்ந்த கூந்தல்
மணம் கமழ் நாற்றம் மரீஇ, யாம் இவள்
சுணங்கு அணி ஆகம் அடைய முயங்கி,
வீங்கு உவர்க் கவவின் நீங்கல் செல்லேம்;
நீயே ஆள்வினை சிறப்ப எண்ணி, நாளும்
பிரிந்து உறை வாழ்க்கை புரிந்து அமைய்லையே;
அன்பு இலை, வாழி என் நெஞ்சே! வெம் போர்
மழவர் பெரு மகன் மாவண் ஓரி
கை வளம் இயைவது ஆயினும்,
ஐதேகு அம்ம, இயந்து செய் பொருளே.

*– பாலத்தனார் நற்றி 52*

*"கரிய கொடியையுடைய காட்டுமல்லிகைப் பூவோடு தூய பொன் தகடு போன்ற பாதிரிப் பூவையும் சேர்த்துச் சூடிய கூந்தலினுடைய கமழ் மணம் மருவி இவளின் தேமல் படர்ந்த மார்பை அடையப் பொருந்திச் சிறந்த இனிய தழுவலினின்று யாம் நீங்காமலிருக்கிறோம் என் நெஞ்சே! நீயோ, செய்யும் தொழிலைச் சிறப்பாக எண்ணி நாள்தோறும் பிரிந்திருக்கும் வாழ்க்கையை விரும்பி அமைதி கொள்ளாதிருக்கின்றாய். அதனால் நீ அன்பில்லாத நெஞ்சினனாய் உள்ளாய். எனினும் நீ வாழ்க. வெவ்விய போரைச் செய்யும் வீரர்களின் தலைவனாகிய சிறந்த வள்ளல் தன்மையுடைய ஓரி என்பானது கைவளம் நம்மைப் பொருந்து வதாயினும், மனம் பொருந்திச் செய்யும் அப் பொருள்மிக சிறியதேயாம். இவளோடு வாழும் வாழ்வுக்கு இணை யாகாது," என்று தலைவனின் செலவைத் தலைவி நிறுத்தக் கோரினாள்.*

## 211. எங்கே சென்றது என் உள்ளம்?

குறு நிலைக் குரலின் சிறு நனை நறு வீ
வண்டு தரு நாற்றம் வளி கரந்து ஈயக்,

கண் களி பெறூஉம் கவின் பெறு காலை,
எல் வளை ஞெகிழ்த்தோர்க்கு அல்லர் உறீஇச்
சென்ற நெஞ்சம் செய் வினைக்கு அசாவா,
ஒருங்கு வரல் நசையொடு, வருந்தும் கொல்லோ?
அருளான் ஆதலின், அழிந்து இவண் வந்து,
தொல் நலன் இழந்த என் பொன் நிறம் நோக்கி,
'ஏதிலாட்டி இவள்' எனப்
போயின்று கொல்லோ,நோய் தலை மணந்தே?

*– பெருவழுதி நற் 56*

*"தோழி, குறுகிய நிலைமையிலுள்ள குராமரத்தின் சிறிய குளிர்ந்த கமழும் அரும்புகள் வண்டுகளால் மலர்ந்து உண்டாகும் நறுமணம் காற்றோடு கலந்துள்ள அது மனத்திற்கும் கண்ணிற்கும் இனிமையாக இருக்கும். அந்த அழகிய நேரத்தில் ஒளி பொருந்திய என் காதலர்க்கு யான் படும் துன்பத்தை அறிவுறுத்துவதற்காக அவர் சென்றிருக்கும் நாட்டிற்கு என் நெஞ்சம் சென்றது. அங்கே காதலர் செய்யும் தொழிலுக்குத் துணையாக இருந்து ஊக்கமூட்டி வினையை முடித்து அவரையும் அழைத்துக் கொண்டு ஒன்றாகத் திரும்பி வரலாமென்ற விருப்பத்தோடு உடனிருந்து வருந்துகின்றதோ? காதலர் அருள் செய்யாததால் வருந்தி இங்கே விட்ட என் பசலை நிறத்தைப் பார்த்து என்னை அடையாளம் தெரியாமல் இவள் ஏதிலாட்டி இவள் யாரோ அயலாள் என்று துன்பம் கலந்த நிலையோடு போய் விட்டதோ? யாதும் அறியேன்" என்று தலைவி மெலிவடைந்து உரைத்தாள்.*

## 212. அந்தத் திங்கள்

வேர் பிணி வெதிரத்துக் கால் பொரு நரல் இசை
கந்து பிணி யானை அயா உயிர்த்ததன்ன
என்றூழ் நீடிய வேய் பயில்அழுவத்துக்,
குன்று ஊர் மதியம் நோக்கி, நின்று, நினைத்து,
உள்ளினென் அல்லெனோ, யானே – 'முள் எயிற்று,
திலகம் தைஇய தேம் கமழ் திரு நுதல்,
எமதும் உண்டு, ஓர் மதிநாட் திங்கள்,

உரறு குரல் வெவ் வளி எடுப்ப, நிழல் தப
உலவை ஆகிய மரத்த
கல் பிறங்கு உயர் மலை உம்பரஃது' எனவே?

*– இளங்கீரனார் நற் 62*

*"வேர்கள் பின்னிக் கொண்ட மூங்கில்களிலே காற்றுத் தாக்கும் போது எழும் ஒலி, கட்டுத்தறியிலே கட்டிய யானை வருந்தி நெட்டுயிர்ப்பது போல் இருக்கும். அவ்வாறாய கோடைக்காலத்தில் நீடிய மூங்கில் நெருங்கிய காட்டு வழியில் செல்லும்போது குன்றை ஊர்ந்து செல்லும் திங்களைப் பார்த்து, அந் நிலையிலேயே நின்று காதலியை நினைந்து யான் வருந்தினேன் அல்லனோ? முள்போன்ற பற்களையும் திலகம் பொருந்திய மணம் கமழும் அழகிய நெற்றியையு முடைய நிறைமதியான திங்கள் ஒன்று எமக்கு உரிமையானதும் உள்ளது அது முழங்கும் குரலையுடைய வெவ்விய காற்று வீச, நிழல்கெடச் சாய்ந்த கிளைகளையுடைய மரங்களைக் கொண்ட கற்கள் விளங்கும் உயர்ந்த மலையின் அப்பால் உள்ள ஊரில் உள்ளது என்று யான் நினைத்தேன் அல்லனோ?" என்று தலைவன் தன்னுள் மீண்டும் எண்ணினான்*

## 213. எப்படிச் செல்லப் போகிறாளோ?

மிளகு பெய்தனைய சுவைய புன் காய்
உலறு தலை உகாஅய்ச் சிதர் சிதர்ந்து உண்ட
புலம்பு கொள் நெடுஞ் சினை ஏறி, நினைந்து, தன்
பொறி கிளர் எருத்தம் வெறிபட மறுகிப்,
புன் புறா உயவும் வெந் துகள் இயவின்,
நயந்த காதலற் புணர்ந்தனள்ஆயினும்,
சிவந்து ஒளி மழுங்கி அமர்ந்தன கொல்லோ –
கோதை மயங்கினும், குறுந் தொடி நெகிழினும்,
காழ் பெயல் அல்குல் காசு முறை திரியினும்,
மாண் நலம் கையறக் கலுழும் என்
மாயக் குறுமகள் மலர் ஏர் கண்ணே?

*– இனிசந்த நாகனார் நற் 66*

*"உலர்ந்த கிளையுடைய உகாய் என்னும் மரத்தின் மிளகு கலந்தது போன்ற சுவையையுடைய புல்லிய காயை, வண்டு களை விரட்டித் தனியே உண்ட தனிமை கொண்ட நெடிய கிளையில் ஏறியிருந்து தான் உண்ட தவற்றை நினைந்து தனது புள்ளி விளங்கும் பிடரி வெறியேற்படச் சுழன்று வருந்தும் வெவ்விய புழுதியுள்ள வழியில் தான் விரும்பிய காதலனைச் சேர்ந்து சென்றனளாயினும், பூமாலை நெருக்கி னாலும், குறிய வளையல்கள் கழன்றாலும், காஞ்சி என்னும் அணி அணிந்த அல்குலில் பொற்காசுகள் முறை வேறு பட்டாலும், மாட்சிமைப்பட்ட நலம் கைவிட்டுப் போன தென அழும் என் மாமை நிறமுடைய இளமகளின் மலர் போன்ற கண்கள் சிவந்து ஒளி குறைந்து மாறுபட்டனவோ?" என்று தலைவனுடன் சென்ற தலைவியை நினைந்து தாய் கூறினாள்*

## 214. புறாவைக் கண்டு புலம்புகிறாள்

**மன்னாப் பொருட் பிணி முன்னி, 'இன்னதை**
**வளை அணி முன்கை நின் இகுளைக்கு உணர்ந்து' எனப்**
**பல் மாண் இரத்திர் ஆயின், 'சென்ம்' என,**
**விடுநள் ஆதலும் உரியள்; விடினே,**
**கண்ணும் நுதலின் நீவி, முன் நின்று,**
**பிரிதல் வல்லிரோ — ஐய! செல்வர்**
**வகை அமர் நல் இல் அக இறை உறையும்**
**வண்ணப் புறவின் செங்காற் சேவல்**
**வீழ் துணைப் பயிரும் கையறு முரல் குரல்**
**நும் இலள் புலம்பக் கேட்டொறும்**
**பொம்மல் ஓதி பெரு விதுப்புறவே?**

*— வண்ணப்புறக் கந்தரதனார் நற் 71*

*"ஐயனே, நிலையில்லாத பொருளைத் தேடும் கடமையை நினைந்து, வளையலையணிந்த முன் கையையுடைய உன் தோழிக்கு இதை உணர்த்துக என்று பலமுறை இரந்து கேட்கின்றீர் அவளும் செல்க என விடுதற்கும் உரியள் அப்படி விட்டால், அவள் கண்களையும் நெற்றியையும் தட்வி அவள் முன்னே நின்று உம்மால் விடைபெற்றுப் பிரிய*

*முடியுமா? முடியாதே செல்வரது பல கூறுகள் அமைந்த நல்ல இல்லின் உள்ளே வீட்டிறப்பில் வாழும் சிவந்த கால்களையுடைய அழகிய ஆண் புறா தான் விரும்பிய தன் பெண் புறாவைக் கூவி அழைக்கும் குரலைக் கேட்பாள். நீர் இல்லாமல் தனித்திருக்கும் தலைவி கையற்ற அவ் ஒலியைக் கேட்குந் தோறும் பொலிவு பெற்ற கூந்தலையுடைய அவள் பெரு நடுக்க முறுவாள்" என்று தலைவனைத் தோழி தலைவியைப் பிரிந்து செல்லற்க என்று கூறினாள்.*

## 215. எங்ஙனம் ஆற்றுவேன்?

**வேனில் முருக்கின் விளை துணர் அன்ன**
**மாணா விரல வல் வாய்ப் பேஎய்**
**மல்லல் மூதூர் மலர்ப் பலி உணீஇய,**
**மன்றம் போழும் புன்கண் மாலை,**
**தம்மொடும் அஞ்சும் நம் இவண் ஒழியச்**
**செல்ப என்ப தாமே – செவ் அரி**
**மயிர் நிரைத்தன்ன வார் கோல் வாங்கு கதிர்ச்**
**செந்நெல்அம் செறுவின் அன்னம் துஞ்சும்**
**பூக் கெழு படப்பைச் சாய்க்காட்டு அன்ன என்**
**நுதற் கவின் அழிக்கும் பசலையும்,**
**அயலோர் தூற்றும் அம்பலும், அளித்தே.**

*– மூலங்கீரனார் நற் 73*

*"வேனிற் காலத்தில் முள் முருக்கின் விளைந்த கொத்துப் போன்ற மாண்பில்லாத விரல்களையும் வலிய வாயையுமுடையது பேய் அது வளப்பமான மூதூரில் தெய்வத்திற்கிட்ட மலர் தூவிய பலிச் சேற்றை உண்ணுதற்குப் பாழ் மன்றத்து அடையும் அத் துயரமிக்க மாலைக் காலத்தில், தலைவராகிய தம்மோடு இருந்தாலும் அஞ்சும் நாம் இங்கேயிருக்கத் தாம் மட்டும் பிரியப் போவதாகப் பிறர் சொல்வர் செவ்விய மெல்லிய மயிரை நிரைத்து வைத்தாற் போன்ற நீண்ட திரட்சியுடைய வளைந்த நெற்கதிர்களை யுடைய வயல்களில் அன்னம் உறங்கும் அவ்வாறு பொலிவு பெற்ற கொல்லைகளை யுடைய சாய்க்காடு என்னும் ஊர் போன்றது என் நெற்றியழகு அதனை அழிக்கும் பசலையையும் அய*

லோர் தூற்றும் அம்பலையும் எனக்குக் கொடுத்து விட்டுத் தாம் செல்வர் என்ப. இனி யான் எவ்வாறு ஆற்றுவேன்" என்று தலைவன் பிரிவு அறிந்து வருத்தத்துடன் கூறினாள் தலைவி.

## 216. வருந்தாது நீ செல்க!

வருமழை கரந்த வால் நிற விசும்பின்
நுண் துளி மாறிய உலவை அம் காட்டு
ஆல நீழல் அசைவு நீக்கி,
அஞ்சுவழி அஞ்சாது, அசைவழி அசைஇ,
வருந்தாது ஏகுமதி – வால் இழைக் குறுமகள்! –
இம்மென் பெர் அலர் நும் ஊர்ப் புன்னை
வீ மலர் உதிர்ந்த தேன் நாறு புலவின்
கானல் வார் மணல் மரீஇ,
கல் உறச் சிவந்த நின் மெல் அடி உயற்கே!

– *அம்மூவனார் நற் 76*

"முத்தாரம் அணிந்த இளமங்கையே, வரும் மழை மறைந்தது. அதனால் வெண்ணிற வானத்திலிருந்து விழும் நுண்ணிய துளிகள் மாறிப் போயின காற்றுள்ள அழகிய காட்டில் ஆலமரத்தின் நிழலிலே தங்கி, தளர்ச்சி நீக்கி என்னோடு வருவாயாக யான் உன்னோடு இருப்பதால் அஞ்சுவன கண்டாலும் அஞ்சாது வருக இளைப்பாற வேண்டியவிடத்தில் இளைப்பாறி வருக என்னோடு வருந்தாது வருக இம் என்னும் பெரிய அலராகிய பழிச் சொல்லை உடையது நும் ஊர். அவ் ஊர்ப் புன்னை மரத்தின் அரும்பும் மலரும் உதிர்ந்தன. அதனாலே தேன்போல மணப்பதும் புலால் மணப்பதுமான கானலிலேயுள்ள நீண்ட மணலிலே நடந்து சிவந்து போயின. அவை வருந்தாமல் இருக்கும் பொருட்டு மெல்லச் செல்க" என்றான் உடன்போந்த தலைவியிடம் தலைவன்.

## 217. செல்லாது தடுக்க இயலுமோ?

'சிறை நாள் ஈங்கை உறை நனி திரள் வீ,
கூரை நல் மனைக் குறுந் தொடி மகளிர்

மணல் ஆடு கழங்கின், அறைமிசைத் தாஅம்
ஏர் தரல் உற்ற இயக்கு அருங் கவலைப்
பிரிந்தோர் வந்து, நப்புணரப் புணர்ந்தோர்
பிரிதல் சூழ்தலின், அரியதும் உண்டோ?
என்று நாம் கூறிக் காமம் செப்புதும்;
செப்பாது விடினே, உயிரொடும் வந்தன்று –
அம்ம! வாழி, தோழி, –
யாதனின் தவிர்க்குவம், காதலர் செலவே?

*– கண்ணகனார் நற் 79*

*“தோழி, வாழி கேள் அன்று தோன்றிய ஈங்கையின் தேன்துளி மூடியிருக்கும் மிகத் திரண்ட மொட்டுகள், கூரை வேய்ந்த நல்ல மனையில் குறிய வளையல்களை அணிந்த மகளிர் மணலில் விளையாடுவதற்கு இட்ட கழற்சிக் காய்கள் போலக் கற்பாறையின் மேல் பரந்து கிடந்து அழகு தரும் மக்கள் வெல்லுதற்குரிய கவர்ந்த வழியிலே, ‘பிரிந்தோர் இப் பருவத்து வந்து கூடியிருக்கவும், எம்மைக் கூடியிருந்த நீர் இப்போது பிரிந்து போதலைப் பற்றிக் கருதுதலின் அரிய கொடுமை வேறுண்டோ? என்று நாம் கூறி நம் காதலைச் சொல்லுவோம் சொல்லாது விடின் அவர் பிரிந்து போய் என் உயிருக்குத் தீங்கு வந்தாலும் வரும் ஆதலால், காதலர் பிரிந்து செல்வதை எவ்வாறு தடுப்போம்? கூறுக.” என்று தலைவனின் பிரிவை உணர்ந்து வேறுபட்ட தலைவி தோழி யிடம் வினவினாள்*

## 218. எங்ஙனம் தனித்திருப்பேன்

கண்ணும், தோளும், தண் நறுங் கதுப்பும்,
திதலை அல்குலும், பல பாராட்டி,
நெருநலும் இவணர்மன்னே! இன்றே,
பெரு நீர் ஒப்பின் பேஎய் வெண் தேர்
மரன் இல் நீள் இடை மான் நசையுறூஉம்,
சுடுமண் தசும்பின் மத்தம் தின்ற
பிறவா வெண்ணெய் உருப்பு இடந்தன்ன
உவர் எழு களரி ஓமை அம் காட்டு,
வெயில் வீற்றிருந்த வெம்பு அலை அருஞ் சுரம்

ஏகுவர் என்ப, தாமே — தம்வயின்
இரந்தோர் மாற்றல் ஆற்றா
இல்லின் வாழ்க்கை வல்லாதோரே. — *ஆசிரியர் ? நற் 84*

*"தம்மிடம் வந்து இரந்தவர் வறுமையை மாற்ற இயலாத இல்லற வாழ்க்கையில் வல்லமை இல்லாத, நம் தலைவர் என் கண், தோள், குளிர்ந்த நறுங்கூந்தல், தேமல் படர்ந்த அல்குல் ஆகிய இவற்றைப் பலவிதமாகப் பாராட்டி நேற்றும் இங்கே இருந்தார் அது கழிந்தது. இன்று பெரிய நீர்ப் பரப்பைப் போன்ற வெள்ளையான கானலை மரமில்லாத நீண்ட இடத்தில், மான் கூட்டம், நீர் என விரும்பிச் செல்லும் சுட்ட மண்மிடாவில் மத்தால் கடைந்த போது பிறவாத வெண்ணெய் வெப்பத்தால் சிதறியது போன்ற உவர் எழுந்த களர் நிலத்தில் ஓமை மரங்கள் நெருங்கியதுமான காட்டில் வெயில் நிலை பெற்றிருந்த - வெம்மை அலைக்கும் செல்லுதற் கரிய சுரத்தில் தாமே தனியாக ஏகுவர் என்று சொல்லுவர். யான் எப்படி ஆற்றியிருப்பேன்" என்று வருந்தினாள் தலைவி.*

## 219. அறநெறி தவறாதவர்

அறவர், வாழி — தோழி, மறவர்
வேல் என விரிந்த கதுப்பின் தோல
பாண்டில் ஒப்பின் பகன்றை மலரும்
கடும் பனி அற்சிரம், நடுங்கக், காண்தகக்
கை வல் வினைவன் தையுபு சொரிந்த
சுரிதக உருவின ஆகிப் பெரிய
கோங்கும் குவி முகை அவிழ, ஈங்கை
நல் தளிர் நயவர நுடங்கும்
முற்றா வேனில் முன்னி வந்தோரே! — *நக்கீரர் நற் 86*

*"தோழி, கடும் முன்பனியையுடைய அற்சிரக் காலத்தில் மறவரின் வேற்படையின் அலை போல விரிந்த கதுப்பும் தோலுமுடைய பகடன்றையின் மலர் வட்டில்போல மலரும். அக் காலத்தில் நாம் நடுங்குமாறு தலைவர் பிரிந்தார். பின்பு கைத் திறமையுடையவன் அழகு பொருந்தக் கற்கள் கட்டிப் பொன்பெய்து செய்த சுரிதகம் என்னும் தலையணி உருவம்*

*போலாகிப் பெரிய கோங்குமரத்தின் குவிந்த மொட்டுகள் மலரும் அக் காலத்தில் நாம் நடுங்குமாறு தலைவர் பிரிந்தார் பின்பு, ஈங்கையின் நல்ல தளிர்கள் இனிமை தோன்ற இசையவுமான காலமாகிய இளவேனிற் காலத்து நம்மை நினைத்து நம் தலைவர் வந்துவிட்டார். அவர் அறத்தைக் கடைப்பிடித்து வாழ்பவர்; அறவர் அவர் வாழ்க," என்று குறித்த காலத்தில் திரும்பிய தலைவனைப் பாராட்டித் தலைவி தோழியிடம் கூறினாள்*

## 220. நினைப்பாரோ நம்மை

**உள்ளார்கொல்லோ – தோழி! – துணையொடு**
**வேனில் ஓதிப் பாடு நடை வழலை**
**வரி மரல் நுகும்பின் வாடி, அவண**
**வறன் பொருந்து குன்றத்து உச்சிக் கவாஅன்**
**வேட்டச் சீறூர் அகன் கண் கேணிப்**
**பய நிரைக்கு எடுத்த மணி நீர்ப் பத்தர்,**
**புன் தலை மடப் பிடி கன்றோடு ஆர,**
**வில் கடிந்து ஊட்டின பெயரும்**
**கொல் களிற்று ஒருத்தல சுரன் இறந்தோரே?**

*– பாடினார் ? நற் 92*

*"தோழி, முதுவேனிற் காலத்தில் விடாத நடையை யுடைய ஓந்தி என்னும் வழலை தன் துணையோடு வரியுடைய மரலின் மடல் விரியாத குருத்துப் போல வாடியது. அவ் இடத்தில் வறட்சியான குன்றத்து உச்சியின் பக்கத்தில் வேட்டுவச் சீறூர் உண்டு. அங்கே அகன்ற இடத்திலுள்ள கிணற்று நீரை எடுத்துப் பயன்தரும் ஆனிரை குடிக்கும்படி பத்தர் என்னும் குழியில் ஊற்றி பிற உண்ணாதவாறு ஒரு விற்பொறி வைத்து மூடி வைப்பார் அத் தெளிந்த நீரைக் கொல்லும் ஆண் யானை பத்தரின் மேல்வைத்த விற் பொறியை எடுத்து முறித்து விட்டுப் புன்தலைப் பெண் யானையும் கன்றும் நீருண்ண ஊட்டிச் செல்லும். அச் சுரத்தின் வழிச்சென்ற நம் தலைவர் நம்மை நினையாரோ? நினைப்பர் வருந்தாதே" என்றாள் தலைவியிடம் தோழி*

## 221. நீ ஒன்றினைக் கூறுவாயாக

ஒன்று தெரிந்து உரைத்திசின் – நெஞ்சே, புன் கால்
சிறியிலை வேம்பின் பெரிய கொன்று,
கடாஅம் செருக்கிய கடுஞ் சின முன்பின்
களிறு நின்று இறந்த நீர் அல் ஈரத்து,
பால் வீ தோல் முலை அகடு நிலம் சேர்த்திப்
பசி அட முடங்கிய பைங் கட் செந்நாய்
மாயா வேட்டம் போகிய கணவன்
பொய்யா மரபின் பிணவு நினைந்து இரங்கும்
விருந்தின் வெங் காட்டு வருந்ததும் யாமே;
ஆள்வினைக்கு அகல்வாம் எனினும்,
மீள்வாம் எனினும், நீ துணிந்ததுவே.

*– மருதம் இளநாகனார் நற் 103*

*"நெஞ்சே, புல்லிய காம்புகளையுடையதும் சிறிய இலைகளை உடையதுமான வேப்ப மரத்தின் பெரிய கிளைகளை முறித்துத் தள்ளி மதத்தால் செருக்கிய கடுஞ்சினமும் வலிமையுமுடைய களிற்றியானை நின்று சென்ற நீரற்ற யானைக் காடு அது. அதில் பால் இல்லாத தோலையுடைய முலையோடு, வயிறு நிலத்தில் பொருத்திப் பசி வருத்த முடங்கிக் கிடந்த பசிய கண்ணையுடைய பெண் செந்நாயைக் கருதி, கெடாத வேட்டைக்குப் போகிய அதன் கணவனாகிய ஆண் செந் நாயானது நடுநிலை முறையோடு நினைத்து வருந்தும் இவ்வாறான புதிய வெவ்விய காட்டில் வந்து சேர்ந்து யாம் வருந்துகிறோம். ஆள்வினை முயற்சிக்கு மேற் செல்வோம் என்றாலும் திரும்புவோம் என்றாலும் நீ துணிந்த ஒன்றினைத் தேர்ந்தெடுத்து உரைப்பாயாக," என்றான் பொருள் வயிற் பிரிந்த இடைச் சுரந்து தலைவன் தன் நெஞ்சிடம்.*

## 222. நீடு வாழ்க!

முளி கொடி வலந்த முள் அரை இலவத்து
ஒளிர் சினை அதிர வீசி, விளிபட
வெவ் வளி வழங்கும் வேய் பயில் மருங்கில்,
கடு நடை யானை கன்றொடு வருந்த,

நெடு நீர் அற்ற நிழல் இல் ஆங்கண்
அருஞ் சுரக் கவலைய என்னாய்; நெடுஞ் சேண்
பட்டனை, வாழிய – நெஞ்சே! குட்டுவன்
குட வரைச் சுனைய மா இதழ்க் குவளை
வண்டு படு வான் போது கமழும்
அம் சில் ஓதி அரும் படர் உறவே.

*– முடத்திருமாறன் நற் 105*

*“நெஞ்சே, குட்டுவனது குடமாலைச் சுனையிலுள்ள கரிய இதழ்களையுடைய குவளையின் வண்டுபடும் சிறந்த போதானது கமழும் அழகிய சிலவான கூந்தலையுடைய காதலி, நம்மை எண்ணி வருந்தும்படி நாம் வந்துவிட்ட பின் அவளை நினைப்பது அறமா? சாய்ந்த கொடி சுற்றிய முள்ளுள்ள இலவ மரத்தின் ஒளியுள்ள கிளைகள் அதிர்ந்து முறியுமாறு கொடுங்காற்று வீசும் மூங்கில் உள்ள பக்கத்தில் கடும் நடையுடைய யானை, கன்றுகளோடு வருந்தும்படி நீரில்லாத நிழலற்ற அரிய சுரத்திலே கவர்ந்த வழிகள் பல வற்றையும் கடந்து நெடுந்தொலைவு வந்துவிட்ட பின்பு இனிக் காதலியை நினைப்பது சரியன்று.” என்று இடைச் சுரந்து மீளலுற்ற தலைவன் தன் நெஞ்சுடன் பேசினான்.*

## 223. எண்ணி எண்ணிச் சிரிப்பேன்!

உள்ளுதொறும் நகுவேன் – தோழி! – வள் உகிர்ப்
பிடி பிளந்திட்ட நார் இல் வெண் கோட்டுக்
கொடிறு போல் காய வால் இணர்ப் பாலைச்,
செல் வளி தூக்கலின்,இலை தீர் நெற்றம்
கல் இழி அருவியின் ஒல்லென ஒலிக்கும்,
புல் இலை ஓமைய, புலி வழங்கு அத்தம்
சென்ற காதலர்வழி வழிப்பட்ட
நெஞ்சே நல்வினைப் பாற்றே; ஈண்டு ஒழிந்து,
ஆனாக் கௌவை மலைந்த
யானே, தோழி! நோய்ப்பாலேனே. *– ஆசிரியர் ? நற் 107*

*“தோழியே, பெரிய நகமுடைய பெண்யானை பிளந்திட்ட நார் இல்லாத வெள்ளிய பூங்கொத்துகளையும் உடையது வெப்பாலை என்னும் மரம் அதன் அலை தீர்ந்த கிளை*

யிலுள்ள நெற்றுகள், வீசும் காற்று அசைத்தலினால், மலை யிலிருந்து வீழும் அருவியைப் போல ஒல் என ஒலிக்கும், புல்லிய இலைகளையுடைய ஓமை மரத்தை உடையதும் புலி உலவுவதுமான காட்டு வழியில் சென்ற என் காதலரிடம், அவரை வழிப்பட்டுப் பின்னே சென்ற என் நெஞ்சம் நல் வினைப் பயனை அடைந்தது அது போலில்லாமல் இங்கே தங்கி அடங்காத அலரை மேற்கொண்ட யானே, தோழி, தீவினைப் பயனை அடைந்தேன். இந்த இரண்டினையும் நினைக்குந்தோறும் யான் நகுவேன்." என்று தலைவன் பிரிவால் வருந்தி மெலிந்த தலைவி தோழிக்கு உரைத்தாள்

## 224. புகல் வேறு இல்லை

'ஒன்றுதும்' என்ற தொன்று படு நட்பின்
காதலர் அகன்றெனு, கலங்கிப் பேதுற்று,
'அன்னவோ, இந் நன்னுதல் நிலை?' என,
வினவல் ஆனாப் புனையிழை! கேள், இனி
உரைக்கல் ஆகா எவ்வம்; இம்மென
இரைக்கும் வாடை இருள் கூர் பொழுதில்,
துளியுடைத் தொழுவின் துணிதல் அற்றத்து,
உச்சிக் கட்டிய கூழை ஆவின்
நிலை என, ஒருவேன் ஆகி
உலமர, கழியும், இப் பகல்மடி பொழுதே!

– *மிளைப்பெரும்பதுமனார் நற் 109*

"ஒன்றுபடுவோம் என்ற பழைமைப்பட்ட காதலாலே என் காதலர் என்னைப் பிரிந்து சென்றதனால் நீ கலங்கி மயக்கமுற்று, இந் நன்னுதலாள் நிலையும் அன்னவோ என்று என்னைப் பார்த்துக் கேட்க முடியாது வருந்தும் புனையிழாய், கேள். இப்போது உரைக்க முடியாத துன்பம் ஏற்பட்டது. ஒலிக்கும் வாடை இம் என வீசும். இருள்மிக்க இராப் பொழுதில் மழைத்துளியுடைய தொழுவத்தை விட்டு வேறிடத்தில் கட்டப்பட வேண்டுமென்ற காலத்தில் அவ் வாறு செய்யாமல் கயிற்றைத் தொழுவத்தின் உச்சியிலே கட்டி விடப்பட்ட கூழை குட்டையான ஆவின் நிலை எனக்கு ஏற்பட்டது நிற்கவும் படுக்கவும் முடியாத நிலை

ஏற்பட்டது. யான் ஒருத்தியாகி வருந்துமாறு இவ் இரவுப் பொழுது கழியும் போலும்" என்று தலைவன் பிரிவு ஆற்றாத தலைவி தோழியிடம் பேசினாள்.

## 225. எவ்விதம் பெற்றாள் இத் திண்மை!

**பிரசம் கலந்த வெண் சுவைத் தீம் பால்**
**விரி கதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்தி,**
**புடைப்பின் சுற்றும் பூந் தலைச் சிறு கோல்,**
**'உண்' என்று ஓக்குபு பிழைப்ப, தெண் நீர்**
**முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று,**
**அரி நரைக் கூந்தற் செம்முது செவிலியர்**
**பரி மெலிந்து ஒழிய பந்தர் ஓடி,**
**ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்?**
**கொண்ட கொழுநன் குடி வறன் உற்றெனக்,**
**கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்,**
**ஒழுகு நீர் நுணங்கு அறல் போலப்,**
**பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே!**

*– போதனார் நற் 110*

"இனிய வெண்மையான பால், தேன் கலந்தது; சுவையுள்ளது விரிந்த ஒளியுள்ள பொற்கலத்தில் அதனை ஊற்றி ஒரு கையில் ஏந்திக்கொண்டு புடைப்பாகச் சுற்றிய பூப் போன்ற மெல்லிய நுனியையுடைய சிறிய கோலை மற்றொரு கையில் ஏந்தி இதனை உய் என்று கூறிக் கோலை ஓங்கிய செயல் நிறைவேறாது போயிற்று தெளிந்த ஒளியையுடைய முத்துகளை உள்ளே பரவலாகப் போட்ட பொற்சிலம்பை அணிந்த ஒரு சிறு பெண் அது ஒலிப்பக் குதித்துக் குடிக்க மறுத்து ஓடினாள் மெல்லியவாய் நரைத்த கூந்தலையுடைய செவ்விய முதுமைச் செவிலியர் அவளைத் தொடர்ந்து ஓடியும் பிடிக்க முடியாமல் மெலிந்து கை விட்டனர். பந்தரின் கீழ் ஓடிய அச் சிறுபெண் ஏவல் மறுத்தாள். அவ்வாறு ஓடிய சிறு விளையாட்டை உடையவள் நல்ல அறிவும் ஒழுக்கமும் எங்கிருந்து உணர்ந்து கொண்டாளோ? தன்னை அடைந்த கணவனின் குடி வறுமைப்பட்டதாகத் தன்னைப்

பெற்றுக் கொடுத்த தந்தையின் மிகுந்த செல்வத்தை நினை யாதவளாய், ஓடும் நீரிலே கிடக்கும் நுண்ணிய மணல் போல ஒருபொழுது மறுத்து மறுபொழுது உண்ணும் உறுதிப்பாடு உடையவள் ஆயினளே அச் சிறுபெண். இது வியப்பாய் உள்ளது" என்று மனைமாட்சி கண்டுவந்த நற்றாய் கூறினாள்

## 226. கண் முன்னே தோன்றுகின்றன!

**உழை இணந்து உண்ட இறை வாங்கு உயர் சினைப்**
**புல் அரை இரத்திப் பொதிப் புறப் பசுங் காய்**
**கல் சேர் சிறு நெறி மல்கத் தாஅம்**
**பெருங் காடு இறந்தும்,எய்த வந்தனவால்—**
**'அருஞ் செயல் பொருட் பிணி முன்னி, யாமே**
**சேறும்; மடந்தை! 'என்றலின், தான் தன்**
**நெய்தல் உண்கண் பைதல் கூரப்,**
**பின் இருங் கூந்தலின் மறையினள், பெரிது அழிந்து,**
**உதியன் மண்டிய ஒலி தலை ஞாட்பின்**
**இம்மென் பெருங் களத்து இயவர் ஊதும்**
**ஆம்பல்அம் குழலின் ஏங்கிக்,**
**கலங்கு அஞர் உறுவோள் புலம்பு கொள் நோக்கே!**

***— இளங்கீரனார் நற் 113***

"மங்கை, அருஞ்செயல் செய்து தேடும் பொருள் என் உள்ளத்தைப் பிணித்தது அதனை நினைந்து யான் செல் கின்றேன் என்று சொல்லியவுடன் அவள் தான் தனது நெய் தல் மலர் போன்ற மையுண்ட கண்கள் துன்பங் கொண்டன வாய்ப் பெரிதும் வருந்தி பின்னிய கரிய கூந்தலால் முகத்தை மறைத்தாள் உதியஞ்சேரல் நெருங்கித் தாக்கிய ஆரவாரத்தின் இடமாகிய போரில் இம் என்று ஒலிக்கும் பெரிய போர்க் களத்திலே இன்னிசையார் ஊதும் ஆம்பலின் அழகிய குழல் போல ஏங்கி அழுதாள் மனம் கலங்குகின்ற வருத்தமடைந்த வளாகிய தலைவியின் துன்பமடைந்த பார்வைகள் என்னைத் தொடர்ந்து வந்தன. ஆண் மான் அண்ணாந்து தழை தின்ற தால் உயர்ந்து வாங்கிய மேலான கிளைகளையும் புல்லிய அடிமரத்தையும் உடைய இலந்தை மரத்தின் கொத்துகளில் வெளிப்புறமுள்ள பசிய காய்கள் மலை சேர்ந்த சிறு நெறியில்

உதிந்து நிறையப் பரவிக் கிடக்கும் அப் பெரிய காட்டைக் கடந்தும் அப் பார்வைகள் பொருந்த வந்தன. இது என்ன வியப்பு," என்று தலைவியின் துயரங்களை நினைவு கூர்ந்து உரைத்தான், இடைச்சுரத்தில் தலைவன்.

## 227. வேதனை கொள்ளும் நெஞ்சம்!

அடைகரை மாஅத்து அலங்கு சினை பொலியத்
தளிர் கவின் எய்திய தண் நறும் பொதும்பில்,
சேவலொடு கெழீஇய செங் கண் இருங் குயில்
புகன்று எதிர் ஆலும் பூ மலி காலையும்,
'அகன்றோர் மன்ற நம் மறந்திசினோர்' என
இணர் உறுபு, உடைவதன்தலையும் புணர்வினை
ஓவ மாக்கள் ஒள் அரங்கு ஊட்டிய
துகிலிகை அன்ன, துய்த் தலைப் பாதிரி
வால் இதழ் அலரி வண்டு பட ஏந்திப்,
புது மலர் தெருவுதொறு நுவலும்
நொதுமலாட்டிக்கு நோம், என் நெஞ்சே!

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ நற் 118*

"ஆற்றங்கரைப் பக்கமுள்ள மா மரத்தின் அசையும் கிளைகள் விளங்கியிருந்தன. தளிர்கள் அழகு எய்தியிருந்தன. குளிர்ந்த நறுமணமுள்ள சோலையிலே சிவந்த கண்களை யுடைய கரிய பெண் குயில்கள் ஆண் குயில்களோடு விரும்பி உட்கார்ந்து கொண்டு ஒன்றையொன்று எதிர்எதிர் விரும்பிக் கூவின பூக்கள் மலிந்திருக்கும் இளவேனில் காலத்திலும் அகன்று சென்றனர் நம்மை உறுதியாக மறந்தார் என நினைத்த நாம் வருந்திக் கொண்டிருக்கிறோம். அதன் மேலும் தம் தொழிலில் வல்லமையுள்ள ஓவியர்கள் ஒள்ளிய அரக்கைத் தோய்த்த எழுதுகோல் போல மெல்லிய பகுதி கொண்ட பாதிரிப் பூ இருக்கும். வெள்ளையான இதழ்களை யுடைய அம் மலர்களை வண்டுகள் மொய்க்கும் அப் புது மலர்களை வட்டிலில் ஏந்திக் கொண்டு தெருவு தோறும் வந்து விற்பனை செய்யும் பூ விலை மடந்தையர் கூவுவதைக் கேட்டு என் நெஞ்சம் பெரிதும் வருந்தும்," என்று பருவம் கண்டு ஆற்றாது தலைவி வருந்தி உரைத்தாள்

## 228. எப்போது அது சிறப்பாகும்?

பைங் காய் நல் இடம் ஒரீஇய செங் காய்க்
கருங் களி ஈந்தின் வெண் புறக் களரி
இடு நீறு ஆடிய கடு நடை ஒருத்தல்
ஆள் பெறல் நசைஇ, நாள் சுரம் விலங்கித்,
துணைதரும் வம்பலர்க் காணாது, அச் சினம்
பனைக் கான்று ஆறும் பாழ் நாட்டு அத்தம்,
இறந்து செய் பொருளும் இன்பமும் தரும் எனின்,
இளமையின் சிறந்த வளமையும் இல்லை;
இளமை கழிந்த பின்றை, வளமை
காமம் தருதலும் இன்றே; அதனால்,
நில்லாப் பொருட் பிணிச் சேறி;
வல்லே – நெஞ்சே! வாய்க்க நின் வினையே!

– ஆசிரியர் ? நற் 126

*"பசிய காய் நல்ல இடத்திலிருந்து நிறம்மாறிச் செங்காய் ஆகும். பின்னர் அது கருங்களியாகிய கனியாகும் ஈந்த மரத்தில் இப்படியாகும். 'ஈச்ச மரமிக்க வெளிய புறத்தினை யுடைய களர் நிலத்தில் எழுந்த புழுதிபடிந்த கடுநடையுடைய ஆண் யானை மனிதரைப் பெற விரும்பி நாட்காலையில் பாலை நிலத்தில் குறுக்கிடும். அங்கு விரைவில் வரும் அய லாரைக் காணாது தன் சினத்தைப் பனை மரத்தில் மோதித் தீர்த்துக் கொள்ளும் அவ்வாறு பாழ்பட்ட நாட்டின் காடு உள்ளது. அந்தக் காட்டைக் கடந்து சென்று தேடும் பொரு ளும் இன்பம் தரும் என்றால் இளமையைக் காட்டிலும் சிறந்த செல்வம் வேறு இல்லையே. இளமை கழிந்த பின்பு செல்வமானது இன்பத்தைத் தருதலும் இல்லையே? அதனால் நெஞ்சே, நில்லாத பொருள் தேடும் ஆசை உன்னைப் பிணித்தலால் நீ செல்வாய், உன் தொழில் விரை வில் நடந்தேறுக." என்று பொருள் தேட முனைந்த தலைவன் தன் போக்கொழித்து தன் நெஞ்சிடம் கூறினான்.*

## 229. நெஞ்சமே நீ வாழ்வாயாக

தண்ணிய கமழும் தாழ் இருங் கூந்தல்,
தட மென் பணைத் தோள், மட நல்லோள்வயின்

பிரியச் சூழ்ந்தனை ஆயின், அரியது ஒன்று
எய்தினை, வாழிய — நெஞ்சே! — செவ் வரை
அருவி ஆன்ற நீர் இல் நீள் இடைக்,
கயந் தலை மடப் பிடி உயங்கு பசி களைஇயர்.
பெருங் களிறு தொலைத்த முடத் தாள் ஓமை
அருஞ் சுரம் செல்வோர்க்கு அல்குநிழல் ஆகும்
குன்ற வைப்பின் கானம்
சென்று சேண் அகறல் வல்லிய நீயே!

*— பெருங்கண்ணனார் நற் 137*

*"நெஞ்மே, செம்மையான மலையில் அருவி அமைந்திருந்தும் நீரில்லாத நீண்ட வழியில் மெல்லிய தலையுடைய இளம் பிடியின் வருத்தும் பசியைப் பெருங்களிறு நீக்கக் கருதியது களிறு அழித்ததலால் முடமான அடியையுடைய ஓமை மரம் செல்லுதற்கரிய காட்டில் செல்வோர்க்கு தங்கும் நிழலாகும். குன்றத்தின் பகுதியிலுள்ள பாலை நிலத்தில் சென்று அங்கிருந்து நெடுந்தூரம் செல்ல நினைக்கும் வலிமை பெற்ற நெஞ்சம் நீ. மெல்லியதாகக் கமழும் தாழ்ந்த கரிய கூந்தலையும், பெரிய மெல்லிய மூங்கில் போன்ற தோளையும், இளமையுடைய நல்லவனித்திருந்து பிரிந்து போக நினைத்தாயாயின் இவளைக் காட்டிலும் அரியது ஒன்றை நீ அடைந்தாய் என்பது விளங்குகியது. நீ வாழிய" என்று தலைவன் பிரிவின்றி தன் நெஞ்சிடம் நிகழ்த்தினான்*

## 230. விலகேன் சிறிதும்!

இருஞ் சேறு ஆடிய கொடுங் கவுள், கய வாய்,
மாரி யானையின் மருங்குல் தீண்டிப்,
பொரி அரை ஞெமிர்ந்த புழற் காய்க் கொன்றை,
நீடிய சடையோடு ஆடா மேனிக்
குன்று உறை தவசியர் போல, பலவுடன்
என்றூழ் நீள் இடைப் பொற்பத் தோன்றும்
அருஞ் சுரம் எளியமன், நினக்கே; பருந்து படப்
பாண்டிலொடு பொருத பல் பிணர்த் தடக் கை
ஏந்து கோட்டு யானை இசை வெங் கிள்ளி
வம்பு அணி உயர் கொடி அம்பர் சூழ்ந்த

அரிசில் அம் தண் அறல் அன்ன, அவள்
விரி ஒலி கூந்தல் விட்டு அமைகலனே.

*– சல்லியங்குமரனார் நற் 141*

*"நெஞ்சே, கரிய மண்சேறு படிந்த வளைந்த கன்னத்தையும் பெரிய வாயையுமுடைய முகில் போன்ற யானையின் உடம்பு பட்டுப் பொரிந்த அடி மரத்தையும் நெரிந்த உள் தொளையுள்ள சாயையுமுடைய கொன்றை மரங்கள் நீண்ட சடையோடும் நீராடாத உடம்போடும் குன்றிலே தங்கியிருக்கும் தவசியர் போல உள்ளன பலபடியாக உள்ள நெடிய வழியில் வெயில் பொலிவு பெறத் தோன்றும் அரிய பாலை நிலம் உனக்கு உறுதியாக எளிதாய் இருக்கலாம் ஆனால் பருந்து வட்டமிடும்படி நிமிர்ந்த கொம்பையும் உடைய யானைப் படையுடையவன் புகழை விரும்பும் கிள்ளி வளவன் அவனைச் சேர்ந்து அணிசெய்த உயர்ந்த கொடியுடைய அம்பர் நகரம். அதைக் சூழ்ந்த அரிசில் என்னும் ஆற்றின் அழகிய குளிர்ந்த கருமணல் போன்றது, இவளது விரிந்து தழைத்த கூந்தல். அக் கூந்தலின் துயிலை விட்டு அமைந்திருக்கமாட்டேன். அதனால் யான் வாரேன். நீயே சென்று வா" என்று பொருள் தேடச் செல்ல நினைத்த தலைவன் பிரிந்து செல்லாமல் நெஞ்சிற்குக் கூறினான்.*

## 231. குற்றமுடையவள் நானே!

ஐதே கம்ம யானே; ஒய்யெனத்,
தரு மணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து,
ஓரை ஆயமும் நொச்சியும் காண்தொறும்,
நீர் வார் கண்ணேன் கலுழும் என்னினும்,
கிள்ளையும், 'கிளை' எனக் கூஉம்; இளையோள்
வழு இலள் அம்ம தானே; குழீஇ,
அம்பல் மூதூர் அலர் வாய்ப் பெண்டிர்
இன்னா இன் உரை கேட்ட சில் நாள்
அறியேன் போல உயிரேன்;
'நறிய நாறும் நின் கதுப்பு' என்றேனே.

*– கண்ணகாரன் கொற்றனார் நற் 143*

*"யான் வருத்தி மெலிவேனாக புதிதாகக் கொண்டு வந்த மணல் பரப்பிய அழகிய இல்லத்தின் முற்றத்தில் ஓரை விளையாடும் தோழியர் கூட்டத்தையும், விளையாடும் இடத்திலுள்ள நொச்சி வேலியையும் காணுந்தோறும் விரைந்து கண்ணீர் ஒழுகும் கண்ணோடு அழுகின்றேன் அவள் வளர்த்த கிளிகளும் என்னைவிட மிகக் கூடிக் கத்து கின்றன உறவு முறைசொல்லி அவளை விளித்துக் கூவு கின்றன என் இளமகள் குற்றமில்லாதவள் அம்பல் மிகுந்த இந்த மூதூரில் அலர் தூற்றும் வாயுடைய பெண்டிர் கூடி இன்னா இன் உரை கூறக் கேட்ட பின் சில நாள் வரை யிலாவது ஒன்றும் அறியேன் போல் இருந்திருக்க வேண்டும் அவ்வாறு இருக்கத் தவறினேன். "உன் கூந்தலின் நறுமணம் கமழ்கின்றதே" என்று கேட்டு விட்டேன்" என்றாள் தலை வியைப் பெற்ற அன்னை*

## 232. வெற்றியுடன் வரட்டும் அவர்!

**வண்ணம் நோக்கியும், மென் மொழி கூறியும்,**
**'நீ அவண் வருதல் ஆற்றாய்' எனத் தாம்**
**தொடங்கி ஆள்வினைப் பிரிந்தோர், இன்றே,**
**நெடுங் கயம் புரிந்த நீர் இல் நீள் இடை,**
**செங் கால் மராஅத்து அம் புடைப் பொருந்தி,**
**வாங்கு சிலை மறவர் வீங்கு நிலை அஞ்சாது,**
**கல் அளைச் செறிந்த வள் உகிர்க் பிணவின்**
**இன் புனிற்று இடும்பை தீரச், சினம் சிறந்து,**
**செங் கண் இரும் புலிக் கோள் வல் ஏற்றை**
**உயர் மருப்பு ஒருத்தல் புகர் முகம் பாயும்.**
**அருஞ் சுரம் இறப்ப என்ப;**
**வருந்தேன் – தோழி – வாய்க்க, அவர் செலவே!**

*- கள்ளம்பாளனார் நற் 148*

*"தோழி, உன் அழகை நோக்கியும் இனிய சொல் கூறி யும் நீ அங்கு வருதல் ஆற்றாய் என்று சொல்லித் தாம் தொடங்கிய ஆள் வினைக்குப் பிரிந்தார் தலைவர் இன்று, நெடிய பொய்கை பொருந்தியிருந்தும் நீரில்லாத நீண்ட வழியில் சிவந்த அடியையுடைய மரா மரத்தின் அழகிய*

பக்கத்திலே பொருந்திப் போவார் வளைந்த வில்லைக் கொண்ட வழிப்பறி செய்வார்கள் மிக்கிருக்கும் நிலைமைக்கு அஞ்சாது போவார். மலைக் குகையில் கிடந்த பெரிய நகத்தையுடைய பெண் புலி, குட்டி ஈன்று நோயும் பசியு மாய்க் கிடக்கும் அதன் துன்பத்தைத் தீர்க்கச் சினம் கொண்டு சிவந்த கண்ணையுடைய பெரிய கொல்ல வல்ல ஆண் புலி உயர்ந்த கொம்பையுடைய ஆண் யானையின் புள்ளியமைந்த முகத்திலே பாயும். அவ்வாறான செல்லுதற்கரிய காட்டு வழியிலே அவர் செல்வார் என்று சொல்வார்கள், அதற்கு யான் வருந்தேன். நீயும் வருந்தாதே. அவர் சென்ற காரியம் கை கூடுவதாக" என்று பிரிவு உணர்ந்து வேறுபட்ட தலை வியைத் தோழி அமைதிப் படுத்தினாள்.

## 233. அவரிடம் சென்றது என் நெஞ்சம்

**குண கடல் முகந்து, குடக்கு ஏர்பு இருளி,**
**மண் திணி ஞாலம் விளங்கக், கம்மியர்**
**செம்பு சொரி பானையின் மின்னி, எவ் வாயும்**
**தன் தொழில் வாய்த்த இன் குரல் எழிலி**
**தென்புல மருங்கில் சென்று அற்றாங்கு,**
**நெஞ்சம் அவர்வயின் சென்றென, ஈண்டு ஒழிந்து,**
**உண்டல் அளித்து என் உடம்பே – விறல் போர்**
**வெஞ் சின வேந்தன் பகை அலைக் கலங்கி,**
**வாழ்வோர் போகிய பேர் ஊர்ப்**
**பாழ் காத்திருந்த தனி மகன் போன்றே.**

*– தனி மகனார் நற் 153*

"கிழக்குக் கடலில் நீரை முகந்து மேற்கில் எழுந்து இருள் பரப்பி, மண் செறிந்த உலகம் மேன்மை அடைய கம்மியர் செப்புப் பானை கடையும்போது பொறி ஏற்படுவது போல மின்னி எல்லா இடங்களிலும் தன் தொழிலாகிய மழையைப் பொழிந்து விட்டு இனிய முழக்கமுடைய முகில் தென் புலப் பக்கத்தில் சென்று சேர்ந்துவிட்டது அதுபோல என் நெஞ்சம் அவர் இருக்குமிடம் போயிற்று ஆனால் என் உடம்பு இங்குக் தனியாக இருக்கிறது. உண்ணுவதையே தொழிலாகக் கொண்டு இருக்கிறது வெற்றிப் போருடைய

வெஞ்சின வேந்தன் பகைகொண்டு வருத்தக் கலங்கி வாழ்வோர்கள் போய்விட்ட பெரிய ஊரை வீணாகக் காத்திருக்கும் ஒரு தனி மகன் போல என் உடம்பு இருக்கிறது," என்று தலைவன் பிரிந்தால் மெலிவுற்ற தலைவி சொன்னாள்

## 234. இணைக்குயில் அழைக்கும் துன்பம்!

இருங் கண் ஞாலத்து ஈண்டு தொழில் உதவிப்
பெரும் பெயல் பொழிந்த நாள் அமையத்துப்,
பல் பொறி இரவின் செல் புறம் கடுப்ப
யாற்று அறல் நுணங்கிய நாட் பத வேணில்.
இணர் துதை மாஅத்த புணர் குயில் விளித்தொறும்,
நம்வயின் நினையும் நெஞ்சமொடு, கைம்மிகக்
கேட்டொறும் கலுழுமால் பெரிதே – காட்ட
குறும் பொறை அயல நெடுந் தாள் வேங்கை
அம் பூந் தாது உக்கு அன்ன
நுண் பல் தித்தி மாஅயோளே. – *இளவேட்டனார் நற் 157*

"பெரிய இடமகன்ற உலகத்தில் நெருங்கிய தொழில்கள் நடக்க உதவி செய்யப் பெரிய மழை பொழிந்தது. அதன் பின்னாளில், பல புள்ளிகளையுடைய பாம்பு செல்லும் போது அதன் முதுகு நெளிவது பொல ஆற்றுநீர் தெளிவாய் ஓடும். அச் செவ்விய இளவேனில் காலத்தில், பூங்கொத்துகள் நெருங்கிய மா மரத்தில் நெருங்கியிருக்கும் குயில்கள் கூவும் தோறும் நம்மை நினைக்கும் நெஞ்சோடு, பிரிவுத் துன்பம் மிகுந்த குயில் ஒலி கேட்குந்தோறும் பெரிதும் அழுவாள். காட்டகத்தில் சிறிய மலையின் பக்கத்திலிருக்கும் நெடிய அடி மரத்தையுடைய வேங்கையின் அழகிய பூங்கொத்து உதிர்த்தாற் போன்ற நுண்ணிய பல தேமலையுடைய மாமை நிறமுடைய என் காதலி அழுவாளே," என்று பருவம் உணர்ந்த தலைவன் தன் நெஞ்சிற்குரைத்தான்.

## 235. கொடிய பாதை!

'மனை உறை புறவின் செங் காற் பேடைக்
காமர் துணையொடு சேவல் சேரப்,
புலம்பின்று எழுதரு புன்கண் மாலைத்

தனியே இருத்தல் ஆற்றேன்' என்று, நின்
பனி வார் உண்கண் பைதல கலுழ,
'நும்மொடு வருவல்' என்றி; எம்மொடு –
பெரும் பெயர்த் தந்தை நீடு புகழ் நெடு நகர்
யாயொடு நனி மிக மடவை! முனாஅது
வேனில் இற்றித் தோயா நெடு வீழ்,
வழி நார் ஊசலின் கோடை தூக்குதொறும்,
துஞ்சு பிடி வருடும் அத்தம்
வல்லை ஆகுதல் ஒல்லுமோ, நினைக்கே?

*– ஆசிரியர் ? நற்றி 162*

*"பெரிய புகழையுடைய தந்தையின் நீண்ட புகழ் நிலவும் பெரிய இல்லத்தில் பெற்ற தாயோடு பிரியாது வாழும் மிக்க இளமையுடைவளே, முன்பு "மனையுறை செங்கால் புறாவின் பேடை அழகிய துணையாகி ஆண் புறாவோடு சேர அது கண்டு வருத்தம் ஏற்படும்படி தோன்றும், துன்பம் தரும் மாலைப்பொழுதில் யான் தனியே இருத்தல் ஆற்றேன்" என்று கூறி உன் நீர் வடியும் மையுண்ட கண்கள் துன்புற்றனவாய்க் கலங்க என்னைப் பார்த்து உம்மோடு வருவேன் என்று கூறுகிறாய். யான் செல்லும் வழியில் வேனிற் காலத்தில் இத்தி மரத்தின் நிலத்தைத் தீண்டாத நெடிய விழுதிலிருந்து தொங்கும் நார், ஊசல் போலக் காற்று வீசும் தோறும் அம் மரத்தின் கீழே துயிலும் பெண் யானையை வருடும் காட்டில் செல்லுதல் உனக்கு முடியுமோ? முடியாது," என்று தன்னுடன் வர எண்ணிய தலைவிக்குத் தலைவன் உரைத்தான்.*

## 236. காலத்தில் வந்து சேர்ந்தார்!

'உறை துறந்து இருந்த புறவில், தனாது
செங் கதிர்ச் செல்வன் தெறுதலின் மண் பக,
உலகு மிக வருந்தி அயாவுறு காலைச்
சென்றனர் ஆயினும் நன்று செய்தனர்' எனச்
சொல்லின் தெளிப்பவும் தெளிதல் செல்லாய் –
செங்கோல் வாளிக் கொடு வில் ஆடவர்
வம்ப மாக்கள் உயிர்த் திறம் பெயர்த்தென,

வெங் கடற்று அடை முதல் படு முடை தழீஇ,
உறு பசிக் குறு நரி குறுகல் செல்லாது
மாறு புறக்கொடுக்கும் அத்தம்,
ஊறு இலராகுதல் உள்ளாமாறே. – *ஆசிரியர் ? நற் 164*

*"மழைபெய்யாது கைவிட்டிருந்த காட்டில் ஞாயிறு தனது செங்கதிர்களைப் பாய்ச்சி வருத்துதலினாலே மண் வெடித்தது உலக உயிர்கள் மிகவும் வருந்தித் துன்புற்றன அவ்வாறாய முது வேனிற் காலத்தில் தலைவர் காட்டு வழியில் சென்றார் ஆயினும் அவர் நன்று ஒன்றிற்குச் சென்றனர் என்பதால் நன்று ஒன்றைச் செய்தார் என்று சொல்லி உன்னைத் தெளிவடையும் படிசெய்தேன்; அப்போதும் நீ தெளிவடையவில்லை ஏனென்றால், செம்மையான கோல் போன்ற அம்புகளையும் விளைந்த வில்லையுமுடையவர் வழிப்பறி செய்வோர் அவர் வழியிற் செல்லும் புதிய மக்களின் உயிரைப் பறிப்பர் வெவ்விய காட்டில் ஒன்று சேர்ந்த பிணங்களை இலைகளால் மூடி வைப்பர் முடைநாற்றம் வீசும் அவற்றை மிக்க பசியையுடைய சிறுநரியும் நெருங்காமற் வேறு வழியில் செல்லும் இக் காட்டு வழியில் தலைவர் செல்லும் போது எவ்வித இடையூறும் இல்லாதவராய் ஆக வேண்டும் என நாம் உள்ளவில்லையல்லவா?" என்று பொருள் தேடச் செல்லும் தலைவன் குறித்த காலத்தில் மகிழ்விக்க வந்தார் என்று தோழி உரைத்தாள்*

## 237. எதற்கோ பிரிவு?

பொன்னும் மணியும் போலும், யாழ நின்
நன்னர் மேனியும் நாறு இருங் கதுப்பும்;
போதும் பணையும் போலும் யாழ நின்
மாதர் உண்கணும் வனப்பின் தோளும்;
இவை காண்தோறும் அகம் மலிந்து, யானும்
அறம்நிலை பெற்றோர் அனையேன்; அதன்தலை,
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்;
வினையும் வேறு புலத்து இலேனே; நினையின்,
யாதனின் பிரிகோ? மடந்தை!
காதல் தானும் கடலினும் பெரிதே! – *ஆசிரியர் ? நற் 166*

"மடந்தையே, உன் நல்ல மேனி பொன் போன்றது உன் மணம் கமழும் கரிய கூந்தல் நீலமணி போன்றது உன் அழகிய மையுண் கண்கள் குவளை மலர்கள் போன்றன இவற்றின் அழகைக் காணும் போதெல்லாம் உள்ளம் மகிழ்ந்து யானும் அறவழியில் நிலைபெற்றோர் அடைந்த பயன்களையுடையேன் போலே இருக்கிறேன் அதற்கு மேலும் பொன் அணிபூண்ட புதல்வனும் விளையாடக் கற்றுக் கொண்டான் இப்போது வெளியிடத்தில் எனக்கு வேலை யில்லை காதல் கடலினும் பெரியதாய் உள்ளது இவை யாவற்றையும் சிந்தித்துப் பார்த்தால் என்ன காரணத்திற்காக யான் பிரிய வேண்டும்?" என்று பொருள் தேடப் புறப்பட்ட தலைவன், தலைவி வேறுபட அமைதிபடக் கூறினான்.

## 238. எவ்வாறு துணிவாள் இவள்?

**நீர் நசைக்கு ஊக்கிய உயவல் யானை**
**வேனிற் குன்றத்து வெவ் வரைக் கவாஅன்**
**நிலம் செல, செல்லாக் கயந் தலைக் குழவி**
**சேரிஅம் பெண்டிர் நெஞ்சத்து எறிய**
**ஊர் ஆன்கன்றொடு புகுதும் நாடன்**
**பன் மலை அருஞ் சுரம் இறப்பின், நம் விட்டு,**
**யாங்கு வல்லுந! மற்றே – ஞாங்கர்**
**வினைப் பூண் தெண் மணி வீழ்ந்தன நிகர்ப்பக்**
**கழுது கால்கொள்ளும் பொழுது கொள் பானாள்,**
**ஆர்வ நெஞ்சமொடு அளைஇ,**
**மார்பு உறப் படுத்தல் மரீஇய கண்ணே?**

*– ஆசிரியர் ? நற். 171*

"நீர் ஆசைக்கு முயன்ற வருத்தத்தையுடைய பெண் யானை வேனிற் காலத்தில் குன்றத்தின் வெப்பமான மலையடி வாரத்திலுள்ள நிலத்தில் செல்லும் அதனோடு செல்ல முடியாத மெல்லிய தலையையுடைய யானைக் கன்று நின்று விடும் சேரியில் வாழும் அழகிய பெண்டிர் நெஞ்சத்தில் அச்சம் உண்டாகும்படி ஊரிலுள்ள பசுவின் கன்றுகளோடு செல்ல முடியாது யானைக் கன்று புகும் அவ்வாறாய மலை நாடன் நம்மைக் கைவிட்டுப் பல மலைகளுள்ள கடத்தற்கரிய

வழியில் செல்வானானால், வேலைப் பாடுடைய தெளிந்த மணிகள் நீக்கப்பட்ட வேற்படைகள் போலப் பேய்கள் புறப்படும் பொழுது கொண்ட பாதி நாளில் ஆர்வமான நெஞ்சத்தோடு அன்பு கலந்து அவன் மார்போடு பொருந்தப் படுத்தல் விரும்பிய கண்கள் இனி எவ்வாறு துயிலும்?" என வினைமேற் செல்லும் தலைவனிடம் வினவினாள் தோழி

## 239. அன்பில்லையேல் இன்பம் உண்டோ?

'கற்றை ஈந்தின் முற்றுக் குலை அன்ன
ஆள் இல் அத்தத் தாள் அம் போந்தைக்
கோளுடை நெடுஞ் சினை ஆண் குரல் விளிப்பின்,
புலி எதிர் வழங்கும் வளி வழங்கு ஆர் இடைச்
சென்ற காதலர் வந்து, இனிது முயங்கிப்,
பிரியாது ஒரு வழி உறையினும், பெரிது அழிந்து
உயங்கினை, மடந்தை, என்றி தோழி
அற்றும் ஆகும் அஃது அறியாதோர்க்கே
வீழாக் கொள்கை வீழ்ந்த கொண்டி
மல்லல் மார்பு மடுத்தனன்
புல்லு மற்று எவனோ, அன்பு இலங்கடையே?

*– ஆசிரியர் ? நற் 174*

"மடந்தையே, தொகுதியையுடைய ஈந்தின் முற்றிய குலை போன்ற ஆளில்லாத வழியிலுள்ள அடிமரம் திரண்ட அழகிய பனை மரத்தின் குலைகளையுடைய நெடிய மடலில் இருந்து ஆண் பறவை குரல் மூலம் பெண்ணை அழைத்தால் பனை அடியிலிருந்த புலி எதிர்க்குரல் வழங்கும் காற்று வீசும் நெறியிலே சென்ற காதலர் மீண்டுவந்து இனிதாக முயங்கிப் பிரியாது ஓரிடத்தில் தங்கியிருந்தாலும் நீ பெரிதும் மன மழிந்து ஏன் வருந்துகின்றாய்? என்று கேட்கின்றாய் தோழி, அஃது அறியாதவர்க்கு அத் தன்மைத்தும் ஆகும் தலைவன் முன்பு பிற மாதரை விரும்பாத கொள்கையுடையவனாக இருந்தான் இப்போது விரும்பிய கொள்கையை உடைய வனாய் இருக்கிறான் வளப்பமான தன் மார்பைப் பிறர்க்கு ஊட்டுகிறான் அன்பு இல்லாதவிடத்து ஏற்படும் தழுவல் எத் தன்மையதாய் இருக்கும்?" எனத் தான் மேற்கொண்ட

வினை முடித்துத் திரும்பும் தலைவன் ஒரு பரத்தையுடன் தொடர்புற்றுள்ளான் என்று கூறி வருந்தினாள் தலைவி

## 240. எவ்வாறு ஆற்றுவேன் யான்?

பரந்து படு கூர் எரி கானம் நைப்ப,
மரம் தீயுற்ற மகிழ் தலைஅம் காட்டு
ஒதுக்கு அரும் வெஞ் சுரம் இறந்தனர் மற்றவர்;
குறிப்பின் கண்டிசின் யானே; நெறிப் பட,
வேலும் இலங்கு இலை துடைப்பப் பலகையும்
பீலி சூட்டி மணி அணிபவ்வே;
பண்டினும் நனி பல அளிப்ப; இனியே
வந்தன்று போலும் – தோழி! – நொந்து –நொந்து,
எழுது எழில் உண்கண் பாவை
அழிதரு வெள்ளம் நீந்தும் நாளே. – *ஆசிரியர் ? நற் 177*

*"தோழி! பரந்துபட்ட மிக்க தீயானது காட்டை எரித்தது மரங்கள் தீயுற்றன. கண்டோர் மகிழ்ச்சி நீங்கினர் அக் காட்டு வழியில் ஒதுங்கியிருக்கவும் நிழலில்லை 'அக் கொடிய, பாலை நிலத்தை அவர் கடப்பார் என்பது உறுதி அவர் செயற் குறிப்பிடை யான் அறிந்தேன் வேலின் விளங்கும் இலைப் பாகத்தை ஒழுங்குபடத் துடைப்பர் போர்ப் பல கையையும் மயிலிறகு சூட்டி மணி பூட்டி அழகு செய்வர் முன்னைவிட என்னிடம் சிறப்பாக அளி செய்வர் இனி யான் நொந்து நொந்து அழுது, ஓவியர் எழுதத் தகுந்த எழில் கொண்ட என் மையுண்ட கண்களின் பாவையை அழிக்கும் கண்ணீர் வெள்ளத்தில் கண்களின் நீந்தும் நாளும் வந்தது போலும்" என்று தலைவன் வினைமேற் செல்லும் குறிப்பறிந்து தலைவி தோழிக்கு உரைத்தாள்*

## 241. மனையறம் பூண்டு சிறப்பாளோ?

இல் எழு வயலை ஈற்று ஆ தின்றெனப்,
பந்து நிலத்து எறிந்து, பாவை நீக்கி,
அவ் வயிறு அலைந்த என் செய் வினைக் குறுமகள்
மான் அமர்ப்பன்ன மையல் நோக்கமொடு,
யானும் தாயும் மடுப்பத், தேனொடு

தீம் பால் உண்ணாள் வீங்குவனள் விம்மி,
நெருநலும் அனையள் மன்னே; இன்றே,
மை அணற் காளை பொய் புகலாக,
அருஞ் சுரம் இறந்தனள் என்ப – தன்
முருந்து ஏர் வெண் பல் முகிழ் நகை திறந்தே.

*– ஆசிரியர் ? நற் 179*

*"இல்லத்தில் வளர்ந்தெழுந்த வயலைக் கொடியைக் கன்று ஈன்ற பசு தின்றதைப் பார்த்தாள், செய்யும் கடமை களை அறிந்த என் இளைய மகள், கையிலிருந்த பந்தை நிலத்தில் எறிந்து விட்டாள் விளையாடும் பாவையையும் கைவிட்டு விட்டாள் தன் அழகிய வயிற்றில் அடித்துக் கொண்டு வருந்தினாள் மான் மாறுபட்டுப் பார்ப்பது போன்ற மயங்கிய நோக்கத்தோடு அடிக்கடி வருந்தினாள் யானும் அவள் தாயும் தேனொடு கலந்த இனிய பாலை ஊட்ட உண்ணாமல் விம்மி அழுதாள் நேற்றுவரை அப்படி இருந்தாள் அது கழிந்தது இன்று கறுத்த தாடியையுடைய காளை ஒருவனின் பொய்கையில் பற்றுக்கோடாகக் கொண்டு அரிய பாலை வழியில் சென்றாள் என்று சொல்கிறார்களே; மயிற்பீலியின் அடிப்பாகம் போன்ற அழகுடைய தன் வெண்மையான பற்கள் தோன்றப் புன்முறுவல் பூத்து அந்தப் பாவை வழியில் அவனோடு போயினாள் என்று கூறுவர் யான் எவ்வாறு ஆற்றுவேன்" என்றாள் தலைவி தன் தலை வனுடன் உடன் போக்குணர்ந்ததை ஆற்றாளாய தாய்*

## 242. நாரை மிதித்த நெய்தல் மலர்!

ஒரு மகள் உடையேன்மன்னே;அவளும்
செரு மிகு மொய்ம்பின் கூர்வேற் காளையொடு
பெரு மலை அருஞ் சுரம் நெருநல் சென்றனள்;
இனியே,
தாங்கு நின் அவலம் என்றிர்; அது மற்று
யாங்யனம் ஒல்லுமோ? அறிவுடையீரே!
உள்ளின் உள்ளம் வேமே, உண்கண்
மணி வாழ் பாவை நடைகற் றன்ன என்

மணி இயல் குறுமகள் ஆடிய
மணி ஏர் நொச்சியும் தெற்றியும் கண்டே.

*– ஆசிரியர் ? நற் 184*

*"அறிவுடையீரே! யான் ஒருமகள் உடையவள் அந்த ஒரு மகளும் போர் வலிமை மிக்க கூரிய வேலை ஏந்திய காளை ஒருவனோடு பெரிய மலையிலுள்ள அரிய வழியில் நேற்றுச் சென்று விட்டாள் 'இனி உன் துயரத்தைப் பொறுத்துத் தாங்கிக் கொள்க' என்று ஆறுதல் சொல்கின்றீர்கள் அது என்னால் எவ்வாறு முடியும் என் மையுண்ட கண்ணின் கருமணியில் வாழும் பாவை வெளியே வந்து நடை கற்றது போல என் அழகிய தன்மையுடைய இளமகள் விளையாடிய நீலமணி போன்ற நொச்சியையுடைய திண்ணையையும் கண்டு அவளை நினைத்தால் உள்ளம் வேகின்றதே" என்று தலைவனுடன் போகிய தலைவியை எண்ணிப் பெற்றதாய் வருந்தி உரைத்தாள்*

## 243. பிறர்க்கெனை முயலும் பொருள்!

கல் ஊற்று ஈண்டல கயன் அற, வாங்கி,
இரும் பிணர்த் தடக் கை நீட்டி, நீர் நொண்டு,
பெருங் கை யானை பிடி எதிர் ஓடும்
கானம் வெம்பிய வறம் கூர் கடத்திடை,
வேனில் ஓதி நிறம் பெயர் முது போத்துப்,
பாண்யாழ் கடைய, வாங்கி பாங்கர்
நெடுநிலை யாஅம் ஏறும் தொழில –
பிறர்க்கு என முயலும் பேர் அருள் நெஞ்சமொடு
காமர் பொருட் பிணிப் போகிய
நாம் வெங் காதலர் சென்ற ஆறே. *– ஆசிரியர் ? நற் 186*

*"கல்லில் உள்ள ஊற்றில் திரளும் நீரைப் பெரிய சருச் சரை யுடைய நீண்ட துதிக்கை நீட்டி ஊற்றுநிலை நீங்கும் படி வாங்கி முகந்து கொண்டு, பெரிய கையையுடைய ஆண் யானை பெண் யானையின் எதிரே ஓடும் அவ்வாறு காடு முழுவதும் வெப்பம் அடைந்த வறட்சி மிக்க மலை வழியில் வெனிற் காலத்தில் நிறம் மாறும் ஓதி முதுபோத்து, பாணன்*

யாழ் வாசிக்க அதனைக் கேட்டுப் பக்கத்திலுள்ள நீண்டு நிற்கும் யா மரத்தில் ஏறும் தொழிலையுடையதாய் இருக்கும் தனக்கு மட்டும் என்று அல்லாது பிறர்க்கு என முயலும் பெரிய அருள் கொண்ட நெஞ்சத்தோடு விருப்பமான பொருள் முயற்சிக்கண் ஈடுபடும் உள்ளப் பிணிப்பின் காரண மாகச் சென்ற நாம் விரும்பும் காதலர் சென்ற நெறியும் அதுவேயாம் அவர் விரைவில் திரும்புவார் என்பதால் யான் ஆற்றியிருப்பேன்" என்று தன் தலைவி வருந்துவாளே என்று தோழிக்குத் தலைவி உரைத்தாள்

## 244. கலங்காதே எதையும் எண்ணி!

**தம் அல்லது இல்லா நம் நயந்து அருளி**
**இன்னும் வாரார்; ஆயினும், சென்னியர்,**
**தெறல் அருங் கடவுள் முன்னர், சீறியாழ்**
**நரம்பு இசைத்தன்ன இன் குரற் குருகின்**
**கங்கை வங்கம் போகுவர்கொல்லோ –**
**எவ் வினை செய்வர்கொல் தாமே? – வெவ் வினைக்**
**கொலை வல் வேட்டுவன் வலை பரிந்து போகிய**
**கானப் புறவின் சேவல் வாய் நூல்**
**சிலம்பிஅம் சினை வெரூஉம்,**
**அலங்கல் உலவை அம் காடு இறந்தோரே?**

***– ஆசிரியர் ? நற் 189***

"கொடிய தொழிலாகிய கொலைத் தொழிலில் வல்ல வேட்டுவனது வலையைக் கிழித்துக் கொண்டு ஓடிப் போன கானத்துப் புறாச்சேவல், சிலந்தி தன் வாயினாலே உண்டாக்கும் நூலால் கட்டிய பின்னலைக் கண்டு அஞ்சும் என்பதைக் கேட்டிராயோ? அசையும் காய்ந்த கிளைகளை யுடைய காட்டைக் கடந்தவர் தலைவர் அவரில்லாமல் நம் வாழ்வு இல்லை என்னும் கொள்கையுடைய நம்மை அவர் விரும்பி அருள் செய்ய இன்னும் வாரார் ஆயினும் வேறு எங்கும் போயிருக்க மாட்டார் அச்சுறுத்தும் அருங்கடவுள் முன்னர்ச் சென்று அதன் சினம் அடங்கும் பொருட்டுச் சிறிய யாழ் நரம்பின் ஓசையை எழுப்பிப் பாணர் பாடினாற் போன்ற இனிய குரலையுடைய குருகுகள் இருக்கின்ற கங்கை

ஆற்றில் ஓடும் வங்கத்தில் ஏறி எங்கேனும் போய்விடுவாரோ? போகார் அவர் எந்தச் செயலைச் செய்வார்? யாதும் செய்யார் இன்னே வருவார் நீ வருந்தாதே பிரிந்த தலைவன் வருவான்'' என்று பிரிவிடை மெலிந்த தலைவிக்குத் தோழி உரைத்தாள்

## 245. வருந்தாதே வாடைக் காற்றே!

அட்டரக்கு உருவின் வட்டு முகை ஈங்கைத்
துய்த் தலைப் புது மலர்த் துளி தலைக் கலாவ,
நிறை நீர்ப் புனிற்றுப் புலம் துழைஇ, ஆனாய்,
இரும் புறம் தழூஉம் பெருந் தண் வாடை!
நினைக்குத் தீது அறிந்தன்றோ இலமே;
பணைத் தோள் எல் வளை ஞெகிழ்த்த எம் காதலர்
அருஞ் செயல் பொருட் பிணிப் பிரிந்தனராக,
யாரும் இல் ஒரு சிறை இருந்து,
பேர் அஞர் உறுவியை வருத்தாதீமே! - *ஆசிரியர் ? நற் 193*

"பெருங் குளிர்ச்சியுள்ள வாடையே, அரக்கு உருக்கியது போன்ற சிவந்த வட்டமான மொட்டையுடைய ஈங்கையின் மென்மையான தலையையுடைய புதிய பூவின் பனித்துளி உன்னோடு கலக்கச் செய்வாய் அதனோடு நிறைந்த நீர் மிகுந்த புதிய இடங்களைத் துழாவுவாய் அங்கும் அமையாது எமது பெரிய முதுகுப் பக்கம் தழுவுவாய் யாம் உனக்குத் தீது செய்ய அறிந்ததில்லை, அப்படியிருக்க, எம்மை வருத்தாது விடுக எம் தோளும் ஒளியுள்ள வளைகளும் நெகிழும்படி செய்த எம் காதலர் அருஞ் செயலாகிய பொருளீட்டும் செயலில் உள்ளம் பிணித்தல் காரணமாகப் பிரிந்தனர் ஆதலால் யாருமில்லாத ஒரு பக்கமிருந்து பெரிய துன்பத்தில் அழுந்திக் கொண்டிருக்கும் எம்மை வருத்தாது கைவிடுக" என்று வாடைக் காற்றிடம் தலைவி சொன்னாள்

## 246. முகிலைக் கண்டதும் முனைந்து வருவான்

'தோளே தொடி நெகிழ்ந்தனவே; நுதலே
பீர் இவர் மலரின் பசப்பு ஊர்ந்தன்றே;
கண்ணும் தண் பனி வைகின; அன்னோ!

தெளிந்தனம்மன்ற; தேயர் என் உயிர்' என,
ஆழல், வாழி — தோழி! — நீ நின்
தாழ்ந்து ஒலி கதுப்பின் வீழ்ந்த காலொடு,
வண்டு படு புது மலர் உண்துறைத் தரீஇய,
பெரு மட மகளிர் முன்கைச் சிறு கோல்
பொலந் தொடி போல மின்னி, கணங் கொள்
இன் இசை முரசின் இரங்கி, மன்னர்
எயில் ஊர் பல் தோல் போலச்
செல் மழை தவழும், அவர் நல் மலை நாட்டே.

*— நக்கீரர் நற் 197*

*தோள்கள் மெலிவடைய வளைகள் நெகிழ்ந்தன நெற்றி, படரும் பீர்க்கம் பூப்போலப் பசப்பு ஊர்ந்தது; கண்கள் கண்ணீர் தங்கப் பெற்றன அந்தோ' என் உயிர் அழிவது உறுதி, நன்கு தெளிந்துவிட்டேன் என்று சொல்லி நீ துயரில் அழுந்தாதே அழாதே, தோழி உன் தாழ்ந்து செழித்த கூந்தலைப் போல் முகில் இறங்கிக் கால்விட்டு, வண்டுகள் பாடும் புதிய மலர்கள் உள்ள நீர் உண்ணும் துறையைப் பெருக்க பெரிய மடப்பமுள்ள பெண்களின் முன் கையிலே விளங்கும் பொன்னாலாகிய வளைபோல மின்னி தொகுதி யான இனிய ஒலி செய்யும் முரசுபோல கேட்கப் படைபோல அவருடைய நல்ல மலை நாட்டில் முகில் தவழ்ந்து செல்லும் காலம் நீட்டிக்கும் காலை உன்னை நினைந்து திரும்புவான்" என்றாள் தோழி தலைவியிடம்*

## 247. அவள் தந்தையின் ஊர் இதுவே

சேயின் வரூஉம் மதவலி! யா உயர்ந்து
ஓமை நீடிய கான் இடை அத்தம்,
முன்நாள் உம்பர்க் கழிந்த என் மகள்
கண்பட, நீர் ஆழ்ந்தன்றே; தந்தை
தன் ஊர் இடவயின் தொழுவேன்; நுண் பல்
கோடு ஏந்து அல்குல் அரும்பிய திதலை,
வார்ந்து இலங்கு வால் எயிற்று பொலிந்த தாஅர்ச்,
சில் வளை பல் கூந்தலளே, அவளே;
மை அணல் எருத்தின் முன்பின் தடக் கை

வல் வில் அம்பின் எய்யா வண் மகிழ்த்
தந்தைதன் ஊர் இதுவே;
ஈன்றேன் யானே; பொலிக, நும் பெயரே! – *கயமனார் நற் 198*

“நெடுந் தொலைவிருந்து வரும் பெருவலிமை யுடையீர், யா மரம் உயர்ந்து ஓமை மரம் நிரம்பி இருக்கும் இக் காட்டு வழியில் காளை ஒருவனோடு நேற்று அப்பால் நடந்து சென்ற என் மகளை நினைத்தால் என் கண்கள் நீரில் ஆழ்ந்து விடுகின்றன இது அவள் தந்தையின் ஊரிடம், இதில் உங்களை வணங்கி வரவேற்கின்றேன் நுண்ணிய பலவாகிய பக்கமுயர்ந்த அல்குல், தோன்றி இருக்கும் ஒழுங் கோடு நேராக விளங்கும் வெண்மையான பற்கள் விளங்கிய மாலை சிலவாகிய வளையல்களையும் அடர்ந்த கூந்தலும் அவற்றை யுடையவள் என் மகள் கரிய தாடி, பிடரி, வலிய நெடிய கை, வலிய வில்லும் அம்பும் ஓயாத வள்ளண்மை யோடு கூடிய மகிழ்ச்சி இவற்றை யுடைய அவள் தந்தையின் ஊர் இதுவே யாம் அவளைப் பெற்று வளர்த்தவள் யான் அவளை நீங்கள் பார்த்து வருவீர்களானால் சொல்லுங்கள், உங்களுக்கு அறத்தோடு புகழ் உண்டாகும்” என்று தலை வனுடன் போன தலைவியின் தாய், எதிர்வரும் காதலர் இருவரைக் கண்டு மகள் பற்றி வினவினாள்

## 248. காணாய் உன் தந்தையின் காடு!

புலி பொரச் சிவந்த புலால்அம் செங் கோட்டு
ஒலி பல் முத்தம் ஆர்ப்ப, வலி சிறந்து,
வன் சுவல் பராரை முருக்கிக், கன்றொடு
மடப் பிடி தழீஇய தடக்கை வேழம்,
தேன் செய் பெருங் கிளை இரிய, வேங்கைப்
பொன் புரை கவளம் புறந்தருபு ஊட்டும்
மா மலை விடரகம் கவைஇ, காண்வரக்,
கண்டிசின் வாழியோ, குறுமகள்! – நுந்தை,
அறுமீன் பயந்த அறம் செய் திங்கள்
செல் சுடர் நெடுங் கொடி போலப்,
பல்பூங் கோங்கம் அணிந்த காடே.
– *பாலை பாடிய பெருங்கடுங்கோ நற் 202*

"இளம்பெண்ணே, இதோ பார் இந்தக் காட்டை, இதோ பார் இந்த ஆண் யானையை, அது தன் கன்றையும் பெண் யானையையும் தழுவிக் கொண்டு செல்வதைப் பார் புலியொடு பொருத நீண்ட துதிக்கையுடையது யானை வயது முதிர்ந்தால் அதன் கொம்புகளில் முற்றிய பல முத்துகள் ஒலிக்கின்றன வலிமை மிக்க இந்த யானை வயது மேட்டு நிலத்திலுள்ள வேங்கை மரத்தின் அடிப்பாகத்தை முறித்து தேன் உண்டாகும் தேனீக் கூட்டம் பறந்தோடிவிடச் செய்து, வேங்கை மரத்தின் பொன் போன்ற பூக்களையுடைய கிளைகளிலிருந்து இலைகளைக் கவளமாகத் தன் கன்றுக்கும் பெண் யானைக்கும் பாதுகாத்து நின்று ஊட்டும் இடம் இது பெருமையான மலையின் பிளப்பிடங்களையுடைய இடம் அறம் செய்யத் தகுந்த கார்த்திகை மாதம் கார்த்திகை நாளன்று அதாவது திங்கள் நிறைந்த கார்ந்திகை மீனைச் சேரும் நாளில் ஏற்றி வைக்கப்படும் வரிசையாகச் செல்லும் ஒளியையுடைய நீண்ட விளக்குகளின் ஒழுங்கைப் போலப் பல பூக்கள் உள்ள கோங்க மரங்கள் அழகு செய்யும் உன் தந்தையின் காடு இது இவற்றைக் காணத் தக்க முறையில் காண்பாயாக கண்டு கொண்டே என்னோடு வருவாயாக" என்று உடன்போக்குற்ற தலைவிக்கு வருத்தம் மிகாவகையில் உவப்போடு உரைத்தான் தலைவன்

## 249. இவளுடைய அழகு அழியும்

அருவி ஆர்க்கும் பெரு வரை அடுக்கத்து,
ஆளி நன் மான், வேட்டு எழு கோள்உகிர்ப்
பூம் பொறி உழுவை தொலைச்சிய, வைந் நுதி
ஏந்து வெண் கோட்டு, வயக் களிறு இழுக்கும்
துன் அருங் கானம் என்னாய், நீயே
குவளை உண்கண் இவள் ஈண்டு ஒழிய,
ஆள்வினைக்கு அகறிஆயின், இன்றொடு
போயின்றுகொல்லோ தானே – படப்பைக்
கொடு முள் ஈங்கை நெடு மா அம் தளிர்
நீர் மலி கதழ் பெயல் தலைஇய
ஆய் நிறம் புரையும் இவள் மாமைக் கவினே!

*– இளநாகனார் நற் 205*

"நெஞ்சே, அருவி ஒலிக்கும் பெரிய மலையின் பக்கத்தில் ஆளி என்னும் நல்ல விலங்கு இரை விரும்பி எழுந்தது கொல்ல வல்ல நகத்தையும் அழகிய வரிகளையுமுடைய புலியோடு போரிட்டு அதனைக் கொன்று கூரிய நுனியையும் ஏந்திய வெண்கோட்டை உடைய களிற்றைக் கொன்றது கொன்று போட்ட களிற்றை நெருங்க முடியாத காட்டினுள் இழுத்துச் சென்றது அவ்வாறாய காடு என்று எண்ணாமல் குவளை போன்ற மையுண்ட கண்களையுடைய இவள் இங்குத் தனியாக இருக்க நீ ஆள்வினைக்கு அதன் வழியே அகன்று போவாய், நீ போனால் கொல்லையில் வளைந்த முள்ளையுடைய ஈங்கையின் நெடிய கரிய அழகிய தளிரின் மீது விரைவையுடைய மழை நீர் மலியப் பெய்த போதுண் டான அழகிய நிறம் போன்ற இவளது மாமை அழகு இன்றோடு போய்விடும்," என்று தலைவன் கடமை உணர் வால் செல்ல எண்ணுதலும், காதல் உணர்வால் தடை செய்தலும் கொண்ட நெஞ்சிற்குக் கூறினான்

## 250. விரைவில் வரச்செய்யும் முகிலின் முழக்கம்!

விறல் சால் விளங்கு இழை நெகிழ, விம்மி,
அறல் போல் தெள் மணி இடை முலை நனைப்ப,
விளிவு இல கலுழும் கண்ணொடு, பெரிது அழிந்து,
எவன் நினைபு வாடுதி? — சுடர் நுதற் குறுமகள்! —
செல்வார் அல்லர் நம் காதலர்; செலினும்,
நோன்மார் அல்லர் நோயே; மற்று அவர்
கொன்னும் நம்புங் குரையர் தாமே;
சிறந்த அன்பினர்; சாயலும் உரியர்;
பிரிந்த நம்மினும் இரங்கி, அரும்பொருள்
முடியாது ஆயினும் வருவர்; அதன்தலை,
இன் துணைப் பிரிந்தோர் நாடித்
தருவது போலும் இப் பெரு மழைக் குரலே?

— *நொச்சி நியமங்கிழார் நற் 208*

"பிறைபோன்ற நுதலையுடைய இளமடந்தையே, சிறப்பு மிக்கு விளங்கும் அணிகலன்கள் நெகிழவும், நீர்போன்ற தெளிந்த கண்ணீர்த் துளிகள் கொங்கையை நனைப்பவும்

*தொடர்ந்து விம்மியழும் கண்ணோடு பெரிதும் அழிந்து ஏன் கலங்கித் துன்பப்படுகிறாய்? நம் காதலர் உன்னைப் பிரிந்து செல்ல மாட்டார் சென்றாலும் பிரிவுத் துன்பத்தை அவர் பொறுத்துக் கொள்ள மாட்டார் அவர் நம்மேல் பெரிய விருப்பம் கொண்டவர் சிறந்த அன்பினர், அருளும் செய்ய உரியவர் பிரிந்த நம்மைக் காட்டிலும் இரக்கங் கொண்டு அரிய பொருள் விரைவில் முடியாது ஆயினும் திரும்பி வருவார் அதன்மேலும் இந்தப் பெரிய முகிலின் முழக்கம், இனிய துணையைப் பிரிந்தவரைத் தேடிச் சென்று கொண்டு வந்து தருவது போலும்; ஆகவே நீ வருந்தாதே," என்று பொருள் தேடிச் செல்லும் தலைவன் திரும்ப நாள் களாகும் எனத் தலைவி வருந்த அவளை ஆற்றுவித்துரைத் தாள் தோழி*

## 251. இனிது வாழ்க இருவரும்

**பார்வை வேட்டுவன் படு வலை வெரிஇ,**
**நெடுங் கால் கணந்துள்அம் புலம்பு கொள் தெள் விளி**
**சுரம் செல் கோடியர் கது மென இசைக்கும்**
**நரம்பொடு கொள்ளும் அத்தத்து ஆங்கண்,**
**கடுங் குரற் பம்பைக் கத நாய் வடுகர்**
**நெடுங் பெருங் குன்றம் நீந்தி, நம் வயின்**
**வந்தனர்; வாழி – தோழி! – கையதை**
**செம் பொன் கழல் தொடி நோக்கி மா மகன்**
**கவவுக் கொள் இன் குரல் கேட்டொறும்,**
**அவவுக் கொள் மனத்தேம் ஆகிய நமக்கே.**

*– குடவாயிற் கீரத்தனார் நற் 212*

*"தோழி, பார்வை ஒன்று வைத்துப் பிடிக்கும் வேட்டுவன் அமைத்த கொடிய வலைக்கு அஞ்சி நெடிய காலையுடைய "கணந்துள்" என்னும் பறவை தனிமையால் இருந்து கத்தும் தெளிந்த ஓசை, சுரத்திற் செல்லும் கூத்தர்கள் கதும் என இசைக்கும் யாழ் ஓசையோடு ஒத்திருக்கும் அந்தப் பாலை நிலத்தில் கூடிய ஒலியையுடைய பம்பை என்னும் இசைக் கருவியையும் சினங்கொண்ட நாயையுமுடைய வடுகர் இருப்பர் அவ்வாறாய நெடிய பெரிய குன்றத்தைக் கடந்து*

வந்தார் நம் கையிலுள்ள செம் பொன்னாற் செய்த வளைகள் கழல்வதை நோக்கி, நம் சிறந்த புதல்வன் நம்மை அணைத்துக் கொண்டு எழுப்பும் அழுகையொடு சேர்ந்த இனிய குரலைக் கேட்குந் தோறும் அவாக் கொள்ளும் மனத்தையுடைய நமக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி நம்மிடத்துக் காதலர் வந்தனர்" என்றாள் பொருள் முயற்சியில் வென்று திரும்பிய தலைவன் வருகையை நண்பர்கள் வழி அறிந்த தோழி

## 252. கேட்டிருப்பாரோ இடிக்கும் குரலை

'இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வு ஈன்ம' என,
வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை,
'அரும்பு அவிழ் அலரிச் சுரும்பு உண் பல் போது
அணிய வருதும், நின் மணி இருங் கதுப்பு' என,
எஞ்சா வஞ்சினம் நெஞ்சு உணக் கூறி,
மை சூழ் வெற்பின் மலை பல இறந்து,
செய் பொருட்கு அகன்ற செயிர் தீர் காதலர்
கேளார்கொல்லோ – தோழி! – தோள
இலங்கு வளை நெகிழ்த்த கலங்கு அஞர் எள்ளி
நகுவது போல, மின்னி
ஆர்ப்பது போலும் இக் கார்ப் பெயற் குரலே?

– *கருவூர் கோசனார் நற் 214*

"தோழியே! புகழும் இன்பமும் கொடையும் மூன்றும் சோம்பலோடு இருப்பவர்க்கு பொருந்துவதில்லை கிடைத்தல் அரிது எனக் கருதிப் பொருள் தேடும் வினைவயின் பிரிந்த அவர் நம்மில் வேறுபட்ட கொள்கையுடையராய் உள்ளார் அரும்புகள் மலர்ந்த பூக்களின் வண்டுகள் உண்ணும் பல மலர்களை நீலமணி போன்ற கரிய உன் கூந்தலின் அணிய கார் காலத்தில் திரும்பி வருவேன் என்று குறையிலாத உறுதி மொழியை என் மனங் கொள்ளுமாறு கூறிச் சென்றனர் முகில் சூழும் மலைகள் பலவற்றைக் கடந்து தேடும் பொருளுக்காகச் சென்ற குற்றமற்ற காதலர், தோளில் விளங்கிய வளைகள் நெகிழும்படி செய்தார் என் கலங்கிய துன்பத்தைக் கண்டு என்னை எள்ளி நகுவது போல மின்னி, இகழ்ந்து

ஆரவாரம் செய்வது போல முழங்குகின்ற இந்தக் கார் கால மழையின் குரலை அவர் அந்த நாட்டில் கேட்க வில்லையோ?" என்று பொருள் வயிற் பிரிந்த தலைவன் பருவம் வந்தும் திரும்பவில்லையே என வருத்தமுடன் தலைவி கூறினாள்.

### 253. நான் என்ன சொல்வது அவர்க்கு

அன்பினர், மன்னும் பெரியர்; அதன்தலைப்,
'பின்பனி அமையம் வரும்' என, முன்பனிக்
கொழுந்து முந்துறீஇக் குரவு அரும்பினவே;
'புணர்ந்தீர் புணர்மினோ' என்ன இணர்மிசைச்
செங் கண் இருங் குயில் எதிர் குரல் பயிற்றும்
இன்ப வேனிலும் வந்தன்று; நம்வயின்,
'பிரியலம்' என்று தெளித்தோர் தேஎத்து,
இனி எவன் மொழிகோ, யானே - கயன் அறக்
கண் அழிந்து உலறிய பல் மர நெடு நெறி
வில் மூசு கவலை விலங்கிய
வெம் முனை அருஞ் சுரம் முன்னியோர்க்கே?

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ நற் 224*

"தோழி, நம் தலைவர் அன்புடையவர். உறுதியாய் ஆற்றலுள்ள பெரியவர். அதற்கு மேலும் பின்பனிக் காலம் வரும் என்று முன்பனிக் காலத்தில் குரவம் என்னும் மரம் கொழுந்துகளை விட்டு, அதன் பிறகு அரும்புகளைத் தோற்றின. சிவந்த கண்களையுடைய கரிய குயில்கள் மாவின் பூங்கொத்துள்ள கிளைகளில் எதிர் எதிர் உட்கார்ந்து கொண்டு 'கணவனோடு சேர்ந்தவர்கள் பிரியாதீர்கள், பிரிந்தால் சேர்ந்து கொள்ளுங்கள்' என்று குரல் எழுப்பும். அந்த இன்ப இளவேனில் காலம் வந்தது. அவர் நம்மிடத்தில் பிரியமாட்டேன் என்று உறுதி சொன்னார். ஆனால் குளம் நீரில்லாது அழகழிந்து வறண்ட காலத்தில் பல பெரிய நெடிய நெறிகளையும் போர்த் தொழில் நெருங்கிய கவர்ந்த வழிகள் குறுக்கிட்ட வெம்முனைகளையுமுடைய அருஞ் சுரத்தின் வழியாகப் போக நினைத்தவரைப் பற்றி யான் என்ன சொல்ல வல்லேன்?" என்று தலைவன் பிரிவைத்

*தோழி தலைவிக்கு உணர்த்த அது கேட்ட தலைவி நொந்துரைத்தாள்*

### 254. முற்றிலும் எதையும் அழிக்க மாட்டார்

**மரம் சாம் மருந்தும் கொள்ளார், மாந்தர்;
உரம் சாச் செய்யார், உயர்தவம்; வளம் கெடப்
பொன்னும் கொள்ளார், மன்னர் – நன்னுதல்!
நாம் தம் உண்மையின் உளமே; அதனால்
தாம் செய்பொருள் அளவு அறியார்; தாம் கசிந்து,
என்றூழ் நிறுப்ப, நீள் இடை ஒழிய,
சென்றோர்மன்ற நம் காதலர்; என்றும்
இன்ன நிலைமைத்து என்ப;
என்னோரும் அறிய அவ் உலகத்தானே.**

***– கணியன் பூங்குன்றனார் நற் 226***

*"நன்னுதாலாளே! மக்கள், மரம்பட்டுப் போகும்படி அதன் மருந்து முழுவதையும் பறித்துக் கொள்ளமாட்டார்; வலிமை முழுவதும் கெடும்படி உயர் தவத்தைச் செய்ய மாட்டார் மன்னர், தம் குடிமக்கள் வளம் கெடும்படி பொன் வரி வாங்கமாட்டார் அவ்வாறிருந்தும் நம் காதலர் தாம் வருந்த மேற்கொண்டு வெயில் நிலை பெற்றிருப்ப, நீண்ட சுரத்தில் யாம் இங்கே ஒழியச் சென்றனர் அவர் இருப்ப தால் நாம் இருக்கிறோம் அல்லை எனில் இறப்போம் அவர், தாம் செய்யும் பொருளின் அளவு அறியார்; ஆடவர் இயற்கை என்றைக்கும் இவ்வாறான நிலைமையுடையது என்பர் சான் றோர் இவ் உலகத்தில் இதனை எல்லோரும் அறிவர்" என்று பொருள் தேடச் சென்ற தலைவன் பிரிவுக்கு வருந்த தோழி அமைதிப்படுத்த அதற்கு இவ்வாறு விடை தந்தாள் தலைவி*

### 255. ஆராய்ந்து செய்க

**'சேறும், சேறும்' என்றலின், பல புலந்து,
'சென்மின்' என்றல் யான் அஞ்சுவலே;
'செல்லாதீம்' எனச் செப்பின், பல்லோர்
நிறந்து எறி புன் சொலின் திறந்து அஞ்சுவலே;**

அதனால் செல்மின் சென்று விளை முடிமின்; சென்றாங்கு
அவண் நீடாதல் ஓம்புமின்; யாமத்து,
இழை அணி ஆகம் வடுக கொள முயங்கி,
அழையீராகவும் பனிப்போள் தமியே
குழைவான், கண்ணிடத்து ஈண்டித் தண்ணென,
ஆடிய இள மழைப் பின்றை.
வாடையும் கண்டிரோ, வந்து நின்றதுவே?

*– ஆசிரியர் ? நற் 229*

*"செல்வோம் செல்வோம் என்று தலைவர் திரும்பத் திரும்பச் சொன்னார் யான் பலவாறு வெறுப்புக் கொண் டேன் செல்வீராக என்று சொல்வதற்கு யான் அஞ்சித் தயங்கினேன் செல்லற்க எனச் சொன்னால் அது பலர் மனத்திலும் எறியப்பட்ட அவலமான புல்லிய சொல்லாகுமே என்று கருதி அதைச் சொல்ல யான் அஞ்சினேன் அதனால் செல்வீராக, சென்று வினை முடிப்பீராக, சென்று அங்கே நீட்டித்தலைத் தவிர்வீராக என்றேன் மேலும் அணிகலன் அணிந்த மார்பு வடுக் கொள்ளுமாறு யாமத்தில் முயங்கி அருகில் நீங்கல் இருக்கும் போதே நடுங்கும் இவள், நீர் இல்லாது தனியே இருந்தால் மிகவும் வருந்துவாள் இவன் வருந்தும் படியாக இடமெல்லாம் பரவி ஒன்று சேர்ந்து குளிரும்படி இயங்கும் இளமுகிலின் பின்னே வாடைக் காற்றும் வந்து நின்றதே கண்டீரோ? என்றேன். எனவே வினைமுடித்து விரைந்து வருக" என்று தலைவியை ஆற்று வித்தாள் தோழி*

## 256. மறந்து விட்டாரோ?

வளை உடைத்தனையது ஆகிப், பலர் தொழச்,
செவ் வாய் வானத்து ஐயெனத் தோன்றி,
இன்னாப் பிறந்தன்று பிறையே; அன்னோ,
மறந்தனர் கொல்லோ தாமே – களிறு தன்
உயங்குநடை மடப்பிடி வருத்தம் நோனாது,
நிலை உயர் யாஅம் தொலையக் குத்தி,
வெண் நார் கொண்டு கை சுவைத்து அண்ணாந்து,

**அழுங்கல் நெஞ்சமொடு முழுங்கும்**
**அத்த நீள் இடை அழப் பிரிந்தோரே?**

***– கடம் பனூர்ச் சாண்டிலியன் நற் 234***

*"தோழி! வளையை உடைத்தாற் போன்றதாகி பிறை யானது கன்னி மகளிர் பலரும் தொழும்படி செவ்விய இடத்தை உடைய வானத்தின்கண் விரைவாக வெளிப்பட்டு மீண்டும் பிறந்தது ஆண் யானை வருந்திய நடையை உடைய மடப்பத்தை உடைய தனது பிடியினது வருத்தத்தைப் பொறாமல் உயர்ந்த நிலையை உடைய யா மரம் அழியும் படி கொம்பால் குத்தி பசையற்ற வெள்ளிய பட்டையைக் கைக் கொண்டு நீரற்ற வெறுங் கையைச் சுவைத்து மேல் நோக்கி தன் பிடியின் வருத்தத்தைப் போக்க இயலாமையை நினைத்து வருந்தும் நெஞ்சோடு பிளிறுகின்ற நீண்ட அரிய வழியினிடத்து நாம் அழும்படி நம்மைப் பிரிந்து சென்ற தலைவன் அந்தோ நம்மை மறந்தனரோ?" என்றாள் தலைவி தோழியிடம்.*

## 257. பிரிவு அருங்காதலர்

**நனி மிகப் பசந்து, தோளும் சா அய்ப்,**
**பனி மலி கண்ணும் பண்டு போலா;**
**இன் உயிர் அன்ன பிரிவு அருங் காதலர்**
**நீத்து நீடினர் என்னும் புலவி**
**உட்கொண்டு ஊடின்றும் இலையோ? – மடந்தை! –**
**உவக்காண் தோன்றுவ, ஓங்கி – வியப்புடை**
**இரவலர் வருஉம் அளவை, அண்டிரன்**
**புரவு எதிர்ந்து தொகுத்த யானை போல,**
**உலகம் உவப்ப, ஓது அரும்**
**வேறு பல் உருவின், ஏர் தரும் மழையே!**

***– காரிக் கண்ணனார் நற் 237***

*"மடந்தாய், உன் தோள்களும் மிகவும் பசந்து மெலிந்தன. கண்ணீர் நிறைந்த கண்களும் முன் போலின்றி வேறுபட்டன இனிய உயிர்போன்ற பிரிவதற்கரிய காதலர் கைவிட்டு நீட்டித்திருந்தார் அப் புலவியை உள்ளத்திலே கொண்டு நீ ஊடுகின்றாயுமில்லையே! ஆய் அண்டிரன்*

வியப்புடைய இரவலர் வரும்படி அவர்களுக்குக் கொடை கொடுக்கக் கருதித் தொகுத்து வைத்த யானைக் கட்டம் போல முகில் தோன்றும் முகில் கண்டு உலக உயிர்கள் மகிழ்ச்சியடையும் சொல்லுதற்கரிய வேறு பல் உருவத்தோடு எழும் கொண்டல் ஓங்கித் தோன்றுவனவற்றை உங்கே காண். இது அவர் குறித்த பருவம் அன்றோ!'' என்று பருவங் கண்டுரைத்தாள் தோழி

## 258. பாலையை படைத்தவன் பாழுறுக!

ஐதே கம்ம, இவ் உலகு படைத்தோனே –
வை ஏர் வால் எயிற்று ஒள் நுதற் குறுமகள்,
கை கவர் முயக்கம் மெய் உறத் திருகி,
ஏங்கு உயிர்ப்பட்ட வீங்கு முலை ஆகம்
துயில் இடைப்படூஉம் தன்மையது ஆயினும்,
வெயில் வெய்துற்ற பரல் அவல் ஒதுக்கில்,
கணிச்சியில் குழித்த கூவல் நண்ணி,
ஆன் வழிப் படுநர் தோண்டிய பத்தல்
யானை இன நிரை வெளவும்
கானம் திண்ணிய மலை போன்றிசினே.

*– நப்பாலத்தனார் நற் 240*

"கூர்மை பொருந்திய வெள்ளையான பற்களையும் ஒளி பொருந்திய நெற்றியையுமுடைய இளமகளே! கை கவர் முயக்கம் மெய்யிலே தெரிய வேண்டாமென்று மாறுபட்டு ஏங்குகின்ற பெரு மூச்சோடு பொருந்திய பருத்த கொங் கையையுடைய என் உடம்பானது இனித் தனிமையில் துயில வேண்டிய நிலைமையை உடையதாயிற்று ஆயினும் வெயி லால் வெப்பமுற்ற பருக்கைக் கற்கள் மிக்க பள்ளத்தின் ஒரு புறத்தில் ஆன் கூட்டத்தை மேய்க்கும் ஆயர் குந்தாலியால் தோண்டித் குழிசெய்த கிணற்றை அடைந்து சிறு குழி நீரை யானையின் கூட்டம் குடிக்கும் பாலை நிலம் திண்ணிய மலை போன்றதாய் உள்ளது இந்த உலகைப் படைத்தவன் இக் கொடிய பாலை நிலத்தில் சென்று விரைவாக வருந்துக" என்று தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாது உரைத்தாள்

## 259. எண்ணுவது இல்லையோ என்னை?

உள்ளார்கொல்லோ – தோழி! – கொடுஞ் சிறைப்
புள் அடி பொறித்த வரியுடைத் தலைய
நீர் அழி மருங்கின் ஈர் அயிர் தோன்ற,
வளரா வாடை உளர்பு நனி தீண்டலின்,
வேழ வெண் பூ விரிவன பலவுடன்,
வேந்து வீசு கவரியின், பூம் புதல் அணிய,
மழை கழி விசும்பின் மாறி ஞாயிறு
விழித்து இமைப்பது போல் விளங்குபு மறைய,
எல்லை போகிய பொழுதின் எல் உறப்,
பனிக்கால் கொண்ட பையுள் யாமத்துப்,
பல் இதழ் உண்கண் கலுழ,
நில்லாப் பொருட்பிணிப் பிரிந்திசினோரே?

*– மதுரைப் பெருமருதனார் நற் 241*

*"தோழி, வளைந்த சிறகுகளையுடைய பறவைகளின் உள்ளங்காலின் சுவடு பொறித்துள்ள வரிகளை மேற்கொண் டுள்ள, நீரில்லாத பள்ளங்களில் நுண்மணல் தோன்றவும், வளராத வாடைக் காற்று வீசி மிகவும் தீண்டுதலால் கரும்பின் வெள்ளை நிறமான பூக்கள் பலவும் விரிவன, வேந்தனுக்கு வீசும் கவரிபோலப் பிற பூக்களையுடைய புதர்கள் தோறும் அழகு செய்யவும், மழைபெய்து கழிந்த விசும்பில் மாறி மாறி ஞாயிறு விழிந்து இமைப்பது போல் ஞாயிறு தோன்றித் தோன்றி மறையவும் பகல்சென்ற மாலைப் பொழுதில் இரவு வரவும் ஒழுக விடவும், நிலையாக இராத பொருளின் மேல் பற்றுக் கொண்டு நம்மைப் பிரிந்து சென்றவர் நம்மை தலைவன் நினைக்க மாட்டாரோ!" என்று வருத்தமுடன் வினவிய தலைவியைத் தோழி பொறுத்திருக்க வேண்டினாள்*

## 260. அறத்தினும் பொருள் சிறந்ததோ?

தேம் படு சிலம்பில் தெள் அறல் தழீஇய
துறுகல் அயல தூ மணல் அடைகரை,
அலங்கு சினை பொதுளிய நறு வடி மாஅத்துப்
பொதும்புதோறு அல்கும் பூங் கண் இருங் குயில்,

'கவறு பெயர்த்தன்ன நில்லா வாழ்க்கை இட்டு
அகறல் ஓம்புமின், அறிவுடையீர்!' எனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல,
மெய் உற இருந்து மேவர நுவல,
இன்னாது ஆகிய காலை, பொருள்வயிற்
பிரியல் ஆடவர்க்கு இயல்பு எனின்,
அரிது மன்றம்ம, அறத்தினும் பொருளே

*– காமக்காணி நப்பசலையார் நற் 243*

*"தேன் உடையது மலை அதன் பக்கத்தில் தெளிந்த நீர் உண்டு நீர் சூழ்ந்த உருண்டைக் கல் உண்டு அதன் அருகில் தூய மணல் அடைந்த கரை உண்டு. அக் கரையில் மா மரங்கள் உண்டு அவை அசையும் கிளைகளை உடையன; நல்ல மா வடுக்கள் நிரம்பியன மாமரச் சோலை தோறும் தங்கியிருக்கும் பூப்போன்ற கண்களையுடையன கரிய குயில் கள். அறிவுடை யீர், வாழ்க்கை, சூதாடு கருவி மாறி மாறி விழுவதுபோல நிலையில்லாதது அதனால் காதலியரை விட்டுப் பிரியாதீர் என்று சொல்லும். அது கையறத் துறப் போரைப் பார்த்துக் கழறுவது போல இருக்கும். குயில்கள் உடனிருந்து பொருத்த மாகச் சொல்லும் இவ்வாறான இன்னாத நேரத்தில், இளவேனிற் காலத்தில் பொருளின் பொருட்டுப் பிரிவது ஆண்களின் இயல்பு என்றால் அறத்தி னும் பொருள் உறுதியாக அரியதே ஆகும்" என்றாள் பிரி விடை மெலிந்த தலைவி*

## 261. அவன் வருகின்ற பருவம் இதுவோ?

இடூஉ ஊங்கண் இனிய படூஉம்;
நெடுஞ் சுவர்ப் பல்லியும் பாங்கில் தேற்றும்;
மனை மா நொச்சி மீமிசை மாச் சினை,
வினை மாண் இருங் குயில் பயிற்றலும் பயிற்றும்;
உரம் புரி உள்ளமொடு சுரம் பல நீந்திச்,
செய்பொருட்கு அகன்றனர் ஆயினும் பொய்யலர்,
வருவர் வாழி – தோழி! – புறவின்
பொன் வீக் கொன்றையொடு பிடவுத் தளை அவிழ,

இன் இசை வானம் இரங்கும்; அவர்,
'வருதும்' என்ற பருவமோ இதுவே?

*– காப்பியஞ் சேந்தனார் நற் 246*

"தோழி, பார்க்குமிடம் எங்கும் இனியன தோன்றும் நெடிய சுவரிலுள்ள பல்லியும் நம் பக்கத்திலிருந்து ஒலி செய்து தெளிவிக்கும் மனையிலுள்ள பெரிய நொச்சி வேலிக்கு மேலே உயர்ந்த மா மரத்தின் கிளையிலிருந்து கூவும் தொழிலில் மாட்சிமைப்பட்ட கரிய குயில் பலகாலும் கூவும். காட்டில் பொன் போன்ற அரும்பையுடைய கொன்றையும் பிடவும் மலர் முறுக்கு அவிழ்ந்தன இனிய ஓசையுடைய முகில் முழங்கும் அவர் வருவேன் என்ற பருவம் இதுவே ஆதலின் திட்பமான உள்ளத்தோடு அரிய வழிகள் பல கடந்து தேடும் பொருட்குப் பிரிந்து சென்றனராயின் பொய் கூறமாட்டார் இப்போது வருவர் நீ வாழ்க!" என்றாள் தோழி

## 262. தலைவன் பிரிவை ஆற்றிக் கொள்க!

'உலவை ஓமை ஒல்கு நிலை ஒடுங்கிச்,
சிள்வீடு கறங்கும் சேய் நாட்டு அத்தம்,
திறம் புரி கொள்கையொடு இறந்து செயின் அல்லது,
அரும் பொருட் கூட்டம் இருந்தோர்க்கு இல்' என,
வலியா நெஞ்சம் வலிப்பச், சூழ்ந்த
வினை இடை விலங்கல போலும் – புனை சுவர்ப்
பாவை அன்ன பழி தீர் காட்சி,
ஐது ஏய்ந்து அகன்ற அல்குல், மை கூர்ந்து
மலர் பிணைத்தன்ன மா இதழ் மழைக் கண்,
முயல் வேட்டு எழுந்த முடுகு விசைக் கத நாய்
நல் நாப் புரையும் சீறடிப்,
பொம்மல் ஓதிப், புனை இழை குணனே.

*– அம்மெய்யன் நாகனார் நற் 252*

"சேய்மை நாட்டு அரிய நெறியில் ஓமை மரத்தின் காய்ந்த கிளைகள் தளர்ந்த நிலையடைந்து அடங்கிய போது சிள் வண்டு ஒலிக்கும் அவ் வழியில் திறமை வலிமையோடு கூடிய

கொள்கையோடு சென்று செயற்பட்டால் அல்லது அருமை யாகச் சேரும் பொருள் என்பது சான்றோர் கொள்கை அழகு செய்த சுவரிலிருக்கும் பாவை போன்ற குற்றம் தீர்ந்த காட்சியுடைய வியப்படையத் தகுந்த ஒப்புடைய அகன்ற அல்குல் உடைய கருமை மிகுந்து மலர்ப்பினை போன்ற சிறந்த இமைகளைக் கொண்ட குளிர்ந்த கண்கள் உடைய முயல் வேட்டைக்கு எழுந்த மிக விரைவுடைய சினங் கொண்ட நாயின் நல்ல நாவைப் போன்ற சிறந்த அடி களுடையவள் பொலிவு பெற்ற கூந்தல் உடைய அணியத் தகுந்த அணிகலன்கள் உடையோள் இத் தலைவியின் குணங்கள், தகுந்த சான்றோர் தலைவன் செயலை இடையில் விலக்கவில்லை போலும் விலக்கவில்லையானால் ஆற்றி யிருக்க வேண்டியது தான்" என்று பொருள் வயிற் பிரியும் எனக் கவன்ற தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறினாள்

## 263. பிரிய போவதில்லை உன்னை!

நீயே,
பாடல் சான்ற பழி தபு சீறடி,
அல்குல் பெரு நலத்து, அமர்ந்த கண்ணை;
காடே,
நிழல் கவின் இழந்த அழல் கவர் மரத்த,
புலம்பு வீற்றிருந்து நலம் சிதைந்தனவே;
இந் நிலை தவிர்ந்தனம் செலவே: வைந் நுதிக்
களவுடன் கமழப் பிடவுத் தளை அவிழக்,
கார் பெயல் செய்த காமர் காலை,
மடப் பிணை தழீஇய மா எருத்து இரலை
காழ் கொள் வேலத்து ஆழ் சினை பயந்த
கண் கவர் வரி நிழல் வதியும்
தண் படு கானமும் தவிர்ந்தனம் செலவே.

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ நற் 256*

"நீயோ, புலவர்களால் பாடப் பெற்ற, குற்றம் நீங்கிய, சிறிய அடிகளைக் கொண்டு உள்ளாய்; அல்குலோ பெரு நலம் உடையது; பெரிய அழகு அமைந்த பொருத்தமான கண்களையும் கொண்டு உள்ளாய் காடோ, அழகும் நிழலும்

இழந்ததாய், அழல் உண்ட மரங்களையுடையதாய், ஆள்கள் செல்லும் வழிகளை இல்லாததாய், எல்லா நலமும் சிதைந்த தாய் உள்ளது இந் நிலையில் பொருள் கருதிப் பிரிந்து செல்லும் செலவை யான் தவிர்த்தேன் இன்னுங் கேள் கூர்மையான முனையையுடைய களாவின் பூ மலர்ந்து கமழ்ந்து பிடவின் பூ தளையவிழ்ந்து முகில் மழைபொழிந்த அழகிய கார்காலம் இது. கரிய பிடரியையுடைய ஆண் மான்கள் இளைய பெண் மான்களைத் தழுவிக் கொண்டு வயிரம் கொண்ட வேல மரத்தின் தாழ்ந்த கிளைகள் தந்த கண் கவரும் வரி நிழலில் தங்கியிருக்கும் அப்படிப்பட்ட குளிர்ந்த கானகத்தின் வழியே யான் செல்வதையும் நிறுத்தி விட்டேன் இனி நீ வருந்தாதே." என்றான் தலைவன்

## 264. கொடியது வறுமை

தண் புனக் கருவிளைக் கண் போல் மா மலர்,
ஆடு மயிற் பீலியின், வாடையொடு துயல்வர,
உறை மயக்கற்ற ஊர் துஞ்சு யாமத்து,
நடுங்கு பிணி நலிய நல் எழில் சாஅய்த்,
துனி கூர் மனத்தள், முனி படர் உழக்கும்
பணைத் தோள், அரும்பிய சுணங்கின், கணைக் கால்,
குவளை நாறும் கூந்தல், தேமொழி
இவளின் தீர்ந்தும், ஆள்வினை வலிப்பப்,
'பிரிவல்' நெஞ்சு, என்னும் ஆயின்,
அரிது மன்றம்ம, இன்மையது இளிவே.

*— பெருந்தலைச் சாத்தனார் நற் 262*

"குளிர்ந்த புனத்திலுள்ள கருவிளவின் கண் போன்ற, சிறந்த மலர் ஆடும் மயிற்பீலி போல வாடைக் காற்றால் ஆடும் மழைத்துளி நிரம்பப் பெய்த ஊர் உறங்கும் யாமத்தில் நடுக்கும் நொய் வருத்த, நல்ல அழகு அழிந்து துன்பமிக்க மனத்தோடு இருப்பள் வெறுக்கும் துன்பம் கலக்கும் பருத்த தோளையும், அரும்பிய தேமலையும் திரண்ட தண்டுள்ள குவளை மலர் மணம் வீசும் கூந்தலையும், இனிய சொல்லையும் உடைய இவளிடமிருந்து பிரிந்து பொருள் தேடும் முயற்சி வலிமையுடையதால் என் நெஞ்சு யான் இவளைப்

*பிரிவேன் என்று கூறுமானால் வறுமையது இழிவுதான், அம்ம, உறுதியாக மிகக் கொடியதேயாம்!" என்று தலைவன் தலைவி ஆற்றாக் குறிப்பறிந்து தன் நெஞ்சுடன் பேசினான்*

## 265. விரைந்து செல்க ஊர் வந்தது!

**பாம்பு அளைச் செறிய முழங்கி, வலன் ஏர்பு,**
**வான் தளி பொழிந்த காண்பு இன் காலை,**
**அணி கிளர் கலாவம் ஐது விரித்து இயலும்**
**மணி புரை எருத்தின் மஞ்ஞை போல, நின்**
**வீ பெய் கூந்தல் வீசு வளி உளர**
**ஏகுதி – மடந்தை! – எல்லின்று பொழுதே;**
**வேய் பயில் இறும்பின் கோவலர் யாத்த**
**ஆ பூண் தெண் மணி இயம்பும்,**
**ஈகாண் தோன்றும், எமம் சிறு நல் ஊரே.**

*– ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் நற் 264*

*"மடந்தையே, மூங்கில் நிரம்பிய சிறுகாட்டில் கோவலர் ஆவினத்தின் கழுத்தில் கட்டிய தெளிந்த ஓசையுடைய மணி ஒலிக்கும் எமது சிறிய நல்ல ஊர் இதோ பார், தோன்று கிறது பாம்பு தன் புற்றிலே அடங்கிக் கிடக்கும்படி முழக்க மிட்டு வலப் பக்கத்தில் உயர்ந்து, முகில் மழைத்துளிகளைப் பொழிந்த காட்சிக்கு இனிய காலை நேரம் இது அழகு விளங்கும் தோகைகளை வியப்படையும்படி விரிந்து ஆடும், நீலமணி போன்ற கழுத்தையுடைய, மயில் இது. மயில் தோகை போன்ற உன் மலர் சூடிய கூந்தல் வீசும் காற்றால் விரிந்து விளங்கும்படி வெயில் இல்லாத இப்போதே சிறிது விரை வாகச் செல்லுவாயாக" என்று தன்னூர் அண்மையில் வந்து விட்டதை அறிந்த தலைவன் தேர்ப்பாகனை ஊக்கினான்.*

## 266. யார் அறிவார் அவர் உள்ளத்தை?

**குரும்பை மணிப் பூண் பெருஞ் செங் கிண்கிணிப்**
**பால் ஆர் துவர் வாய்ப் பைம் பூண் புதல்வன்,**
**மாலைக் கட்டில், மார்பு ஊர்பு இழிய,**
**அவ் எயிறு ஒழுகிய அவ் வாய் மாண் நகைச்**
**செயிர் தீர் கொள்கை நம் உயிர் வெங் காதலி**

திருமுகத்து அலமரும் கண் இணைந்து அல்கலும்,
பெரும! வள்ளியின் பிணிக்கும் என்னார்,
சிறு பல் குன்றம் இறப்போர்;
அறிவார் யார் அவர் முன்னி அவ்வே?

*– எயினந்தை மகன் இளங்கீரனார் நற் 269*

*"பெரும, குரும்பை போன்ற மணியையுடைய அரையிற் கட்டும் பூண் பெரிய செவ்விய கிண்கிணி, பால் அருந்தும் பவள வாய், இவற்றோடு பசிய பூண்களையும் அணிந்த புதல்வன் மாலை அணிந்த தன் இனிய மார்பில் ஊர்ந்து விளையாடி இறங்குதலால் மகிழ்வாள் தலைவி அதனால் அழகிய பற்களில் படர்ந்த சிறந்த புன்முறுவல் கொள்வாள் குற்றமற்ற கற்பொழுக்கத்தை உடையவள் நம் உயிர்போன்ற விருப்ப மிக்கவள் அத்தகைய காதலியின் திருமுகத்தில் உலாவும் கண்கள் வருந்தி நாள்தோறும் பெரிய மரத்தைச் சுற்றியுள்ள வள்ளிக்கொடி பொல் சுற்றிப் பிணிக்கும் சிறிய பல குன்றங்களைக் கடந்து செல்லத் துணிந்தார் அவர், யாது தான் செய்யமாட்டார்? அவர் கருதியவை யாவையோ? யார் அறிவார்" என்று பொருள் வயிற் பிரியும் தலைவனின் தூது வருடன் பேசி போதலைக் கைவிடுமாறு கூறினாள் தோழி*

## 267. தாழியில் தருக என்னை

இரும் புனிற்று எருமைப் பெருஞ் செவிக் குழவி
பைந் தாது எருவின் வைகு துயில் மடியும்
செழுந் தண் மனையோடு எம் இவண் ஒழியச்,
செல் பெருங் காளை பொய்ம் மருண்டு, சேய் நாட்டுச்
சுவைக் காய் நெல்லிப் போக்கு அரும் பொங்கர்
வீழ் கடைத் திரள் காய் ஒருங்குடன் தின்று,
வீ சுனைச் சிறு நீர் குடியினள், கழிந்த
குவளை உண்கண் என் மகள் ஓரன்ன,
செய் போழ் வெட்டிய பொய்தல் ஆயம்,
மாலை விரி நிலவில் பெயர்பு புறங்காண்டற்கு;
மா இருந் தாழி கவிப்ப,
தா இன்று கழிக, எற் கொள்ளாக் கூற்றே.

*– ஆசிரியர் ? நற் 271*

*“அண்மையில் ஈன்ற கரிய எருமையின் பெரிய செவியை யுடைய கன்று பசிய பூந்தாது உதிர்ந்து எருவாகக் கிடப்ப தில் தங்கித் துயில் மேற்கொண்டு உறங்கும் அவ்வாறாய செழுமையான குளிர்ந்த மனையில் எம்மை இங்கே ஒழியும் படி செய்து விட்டுச் சென்றாள் என் மகள் தன்னோடு செல்லும் பெரிய காளை போன்ற தலைவன் கூறும் பொய்ம் மொழியிலே மயங்கினாள் சேய்நாட்டுச் சுவையான காய் களையுடைய நெல்லி மரச்சோலை வழியே போகும்போது இடையிலே திரண்டு வீழ்ந்த காயை ஒரு சேரத் தின்று பூக்களுள்ள சுனையின் மிகச் சிலவாய நீரைக் குடித்துச் சேர்வாள். குவளை மலர் போன்ற மையுண்ட கண்ணளாய என் மகள் சென்று விட்டாள் ஒரு தன்மையாகிய சிவந்த பனங் குருத்தைக் கண்டு பதனிடுமாறு போடுதலாய மாலைப் பொழுதில் விரிந்த நிலவிலே சென்று பின்னே போய்க் காண்டற்கு விட்ட கூற்றுவன் இதற்கு முன்னரே என்னைப் பெரிய கரிய தாழியிலிட்டுக் களிக்கும்படி செய்திருக்க வேண்டும் என் உயிரைக் கொள்ளாத கூற்றுவன் வலியழிந்து இறந்தொழிவானாக.” என்று தன் மகள் காதலனுடன் சென்றதை ஏற்றாளாயினும் ஊர்ப் பழிப்புக்கு கவன்று இவ்வாறுரைத்தாள்*

## 268. கொடியதன்று அவர் செல்லும் பாதை

**நெடு வான் மின்னி, குறுந் துளி தலைஇப்,<br>படு மழை பொழிந்த பகுவாய்க் குன்றத்து,<br>உழை படு மான் பிணை தீண்டலின் இழை மகள்<br>பொன் செய் காசின், ஒண் பழம் தாஅம்<br>குமிழ் தலை மயங்கிய குறும் பல் அத்தம்,<br>‘எம்மொடு வருதியோ, பொம்மல் ஓதி?’ எனக்<br>கூறின்றும் உடையரோ மற்றே – வேறுபட்டு<br>இரும் புலி வழங்கும் சோலைப்,<br>பெருங் கல் வைப்பின் சுரன் இறந்தோரே?**

*– காவன் முல்லைப் பூதனார் நற் 274*

*“பெரிய மலைப் பகுதியிலுள்ள சோலையில் பெரிய புலி சினங்கொண்டு திரியும் அப் பாலை நிலத்தைக் கடந்து*

சென்றார் காதலர் மலைப் பிளப்புக்களையுடைய குன்றத்தில் நெடிய முகில் மின்னிச் சிறிய துளிகளாகத் தொடங்கின; பெரிய மழையைப் பெய்தது ஆண் மானொடு போந்த பெண் மான் குமிழ மரத்தில் உராய்ந்தது கலன் அணிந்த பெண் ஒருத்தி பொன்னாற் செய்த காசுகளைப் பரப்பினாற் போலக் குமிழ மரம் ஒள்ளிய பழங்களை உதிர்த்தது அக் குமிழ மரங்கள் நிரம்பிய குறிய பல வழிகளையுடைய சுரத்தில் பொலிவு பெற்ற கூந்தலையுடையாய், எம்மொடு வருகிறாயா? எனக் கூறிய சொல்லையுடையவர் தலைவர் ஆதலால் அவர் செல்லும் வழி மழையையுடையது வெம்மையுடைய தன்று நீ வருந்தாதே" என்று தலைவியை ஆற்றுவித்தாள் தோழி

## 269. தும்பியே நீ சென்று கூறுவாய்

கொடியை; வாழி – தும்பி! – இந் நோய்
படுகதில் அம்ம, யான் நினக்கு உரைத்தென;
மெய்யே கருமை அன்றியும், செவ்வன்
அறிவும் கரிதோ அறனிலோய்! – நினக்கே?
மனை உறக் காக்கும் மாண் பெருங் கிடக்கை
நுண் முள் வேலித் தாதொடு பொதுளிய
தாறு படு பீரம் ஊதி, வேறுபட
நாற்றம் இன்மையின், பசலை ஊதாய்;
சிறு குறும் பறவைக்கு ஓடி, விரைவுடன்
நெஞ்சு நெகிழ் செய்ததன் பயனோ? அன்பு இலர்,
வெம் மலை அருஞ் சுரம் இறந்தோர்க்கு
என் நிலை உரையாய், சென்று, அவண் வரவே.

– *தும்பிசேர் கீரனார் நற் 277*

"தும்பீ, இப் பிரிவு நோய்த் துன்பம் குறைவதற்காக யான் உனக்கு உரைத்தேன் உன் உடம்பு கரியது. உன் அறியும் அறிவும் கரியது. ஆதலால் நீ அறமில்லாய் ஆயினாய். மனையைக் காக்கும் பொருட்டு இடப்பட்டது கிடக்கையுடைய நுண்ணிய முள்வேலி அதன்மேலே படர்ந்திருக்கும் தாதொடு நெருங்கிய குலையோடு சேர்ந்த பீர்க்கம் பூ அப் பூவின் தேனை ஊதிவிட்டு, அதற்கு மாறுபட்ட பசலையை

ஊத மாட்டாய் சிறிய குறிய உன் பெட்டையை விரும்பி நீ விரைவாகப் பறந்து சென்று அதன் மனம் மகிழத் தலையளி செய்வாய் அதனால் நீ என்னை மறந்தாய் என்மேல் அன்பில்லாதவராய் வெம்மை அருஞ்சுரம் கடந்து சென்ற காதலருக்கு நீ அங்குச் சென்று என் நிலையை உரைத்து அவர் திரும்பி வரும்படி செய்யாத உன் செயல் விரும்பத் தகுந்ததில்லை ஆதலின் நீ கொடுமையுடையாய்" என்றாள் பிரிவாற்றாத தலைவி தும்பியிடம்

## 270. மலைப்பாதையில் செல்ல வருந்துவளே

**வேம்பின்ஒண் பழம் முணைஇ, இருப்பைத்**
**தேம் பால் செற்ற தீம் பழம் நசைஇ,**
**வைகு பனி உழந்த வாவல், சினைதொறும்,**
**நெய் தோய் திரியில் தண் சிதர் உறைப்ப,**
**நாட் சுரம் உழந்த வாள் கேழ் ஏற்றையொடு**
**பொருத யானைப் புட் தாள் ஏய்ப்பப்,**
**பசிப் பிடி உதைத்த ஓமைச் செவ் அரை**
**வெயில் காய் அமையத்து இமைக்கும் அத்தத்து,**
**அதர் உழந்து அசையினகொல்லோ – ததர்வாய்ச்**
**சிலம்பு கழீஇய செல்வம்**
**பிறருழைக் கழிந்த என்ஆயிழை அடியே?**

*– கயமனார் நற் 279*

"என் மகளின் சிலம்பு கழி நோன்பு என் மனையில் யான் கண்டுகளிக்க நடவாமல் பிறர்மனையில் பிறர் கண்டு களிக்க அது நடக்கவேண்டியதாயிற்று. ஆனால் அவளது மெல்லடிகள் காட்டுவழி நடந்தபோது எவ்வாறு துன்பப்பட்டனவோ! வேம்பின் ஒள்ளிய பழத்தை வெறுத்துத் தேன் போன்ற பால் வற்றிய இனிய இருப்பைப் பழத்தை விரும்பிப் பனி பெய்யும் காலை நேரத்தில் வௌவால் கிளைகள்தோறும் செல்லும் அவற்றின் மேல் நெய் தோய்ந்த திரிச்சுடர் விழுதல் போலத் தண்ணிய பனித்துளிகள் விழும் அக் காலை வேளையில் காட்டினுள் சென்று எப்படி வருந்தினளோ? வாள் போன்ற நிறமுள்ள வரியுடைய ஆண் புலியோடு போரிட்ட ஆண் யானையின் புண்ணுடைய கால் விளங்கித் தெரிவது

போலப், பசித்த பிடியானது உதைத்த ஓமை மரத்தின் சிவந்த அடிப்பாகம் செங்கதிர் வெயில் காயும் போது விளங்கித் தெரியும், அக் காட்டு வழியில் சென்ற என் மகள் அடிகள் எப்படி வருந்தினவோ," என்று வருத்தமுடன் கூறினாள் மகட் போக்கிய தாய்

## 271. அன்பற்றவர்!

மாசு இல் மரத்த பலி உண் காக்கை
வளி பொரு நெடுஞ் சினை தளியொடு தூங்கி,
வெல் போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளும்
நல் வகை மிகு பலிக் கொடையோடு உகுக்கும்
அடங்காச் சொன்றி அம் பல் யாணர்
விடக்குடைப் பெருஞ் சோறு, உள்ளுவன இருப்ப,
மழை அமைந்து உற்ற மால் இருள் நடு நாள்,
தாம் நம் உழையாராகவும், நாம் நம்
பனிக் கடுமையின்,நனி பெரிது அழுங்கித்,
துஞ்சாம் ஆகலும் அறிவோர்
அன்பிலர் – தோழி! நம் காதலோரே.

*– கழாக்கீரன் எயிற்றியார் நற் 281*

"பலிச்சோறு உண்ணும் காக்கை, வெற்றியடையும் போரைச் செய்யும் சோழரது கழார் என்னும் ஊரில் மாசற்ற மரத்திலுள்ள காற்று மோதும் நெடிய கிளையில் அமர்ந்து மழைத் துளியோடு அசைந்து கொண்டிருக்கும் கொள்ளத் தகுந்த நல்ல வகையான மிகுந்த பலிக் கொடையோடு போடப் படும் அடங்காத சோற்றுத் திரள்களோடு அழகிய புது வருவாய் போன்ற இறைச்சியுடைய பெருஞ்சோற்றுத் திரள்களையும் நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும். மழை பொழிந்த மயக்கமான இருளையுடைய நடு நாளில் நம் காதலர் நம் பக்கத்தில் இருக்கவும் நாம் கடுங் குளிரால் மிகப் பெரிதும் துன்புற்றுத் தூங்காமல் இருக்கிறோம் இதைத் தலைவர் அறிவர் எனவே இதற்குத் தக்கப்படி தலைவர் நடக்காததால் அன்பில்லாதவர் ஆகிறார்" என்றாள் தலைவி

## 272. அலையும் நிலையோ என் உடல்?

'புறம் தாழ்பு இருண்ட கூந்தல், போதின்
நிறம் பெறும் ஈர் இதழ்ப் பொலிந்த உண்கண்,
உள்ளம் பிணிக்கொண்டோள் வயின்' நெஞ்சம்,
'செல்லல் தீர்கம்; செல்வாம்' என்னும்:
'செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யாமையோடு இளிவு தலைத்தரும்' என,
உறுதி தூக்காத் தூங்கி, அறிவே,
'சிறிது நனி விரையல்' என்னும்; ஆயிடை,
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு மாறு பற்றிய
தேய்புரிப் பழங் கயிறு போல,
வீவதுகொல் என் வருந்திய உடம்பே?

*– தேய்புரி பழங்கயிற்றினார் நற் 284*

*“முதுகுப்புறம் தாழ்ந்த கரிய கூந்தல், மலர் நிறம்பெறும் குளிர்ந்த இதழ்களையுடைய அழகிய கண்கள், இவற்றை யுடைய தலைவி தன் அன்பால் என் உள்ளத்தைக் கவர்ந்தாள் அவள் சார்பாக என் நெஞ்சம் பேசுகிறது அவளுடைய துன்பத்தைத் தீர்ப்பதற்கு அவளிடம் மீள்வோம் என்று சொல்கிறது ஆனால் என் அறிவு செய்ய வேண்டிய கடமையைச் செய்து முடிக்காமல் இடையில் விட்டுத் துன்பம் செய்தல் அறியாமையோடு இளிவையும் விரைவில் தரும் என்று உறுதியாக ஆய்ந்து காட்டி சிறிது விரைவாகப் போகாதே என்று சொல்லுகிறது. இந்த இரண்டிற்கும் இடையில் உன் உடம்பு வருந்துகிறது. ஒளிபொருந்திய கொம்பு களையுடைய ஆண் யானைகள் இரண்டு ஒன்றோடொன்று மாறாகப் பற்றி இழுக்கும் போது தேய்ந்த புரிகளையுடைய பழங்கயிறு புரி இற்று அறுந்து போவது போல என் வருந்திய உடம்பு அழிந்து போக வேண்டியது தானா?” என்று பொருள் முடியா நின்ற தலைவன் ஆற்றானாகி வினவினான்*

## 273. தோள்களுக்கு அணிகலன்கள்!

ஊசல் ஒண் குழை உடை வாய்த்ததன்ன,
அத்தக் குமிழின் ஆய் இதழ் அலரி

கல் அறை வரிக்கும் புல்லென் குன்றம்
சென்றோர்மன்ற; செலீஇயர் என் உயிர்' எனப்,
புனை இழை நெகிழ விம்மி, நொந்து நொந்து
இனைதல் ஆன்றிசின் – ஆயிழை! – நினையின்
நட்டோர் ஆக்கம் வேண்டியும், ஒட்டிய
நின் தோள் அணிபெற வரற்கும்
அன்றோ – தோழி, அவர் சென்ற திறமே?

– *துறைக்குறுமாலிற் பாலங்கொற்றனார் நற் 286*

*"ஆய்ந்த அணிகலனை அணிந்த தோழி, உடைமரம் மிக்க வழியில் மகளிரின் ஒள்ளிய காதணி கொளுவிய ஊசல் போன்ற மலை நெறியிலுள்ள குமிழ மரத்தின் அழகிய இதழையுடைய மலர்கள் மலைப் பாறையில் கோலம் செய்யும் அப் பொலிவழிந்த குன்றத்தின் வழியில் என் காதலர் சென்றார் இனி என் உயிர் சென்று ஒழிவதாக என்று நீ சொல்லி, உன் அணிகலன்கள் நழுவ விம்மி அழுது, மிக நொந்து, வருந்துகின்றாய் சிறிது அமைவாயாக சிந்திக்கும் போது, நட்புக் கொண்டவர்கள் செல்வம் பெற வேண்டியும் ஒட்டிக் கொண்டவர்களில் ஒருவரான உன் தோள்கள் நல்ல கலன்களை அணியப்பெற வேண்டியும் அன்றோ அவர் சென்ற திறமாகும்." என்றாள் தோழி தலைவியிடம்*

## 274. அவன் தாயும் அவலம் கொள்வாளாக!

மணிக் குரல் நொச்சித் தெரியல் சூடிப்,
பலிக் கள் ஆர்கைப் பார் முது குயவன்
இடு பலி நுவலும் அகன்தலை மன்றத்து,
விழவுத் தலைக்கொண்ட பழ விறல் மூதூர்ப்
பூங் கண் ஆயம் காண்தொறும், எம்போல்,
பெரு விதுப்புறுக மாதோ– எம் இற்
பொம்மல் ஓதியைத் தன் மொழிக் கொளீஇக்,
கொண்டு உடன் போக வலித்த
வன்கண் காளையை ஈன்ற தாயே. – *கயமனார் நற் 293*

*"அழகிய பூங் கொத்தையுடைய நொச்சி மாலை சூடி, பலியிடும் கையையுடைய பரிய முது குயவன் இடும் பலியை உண்ணக் காக்கைகளை அழைக்கின்ற அகன்ற இடத்தை*

*யுடைய மன்றத்தைக் கொண்ட விழா நடக்கும் பழைய வெற்றி யுடைய மூதூரில் என் மகளின் விளையாட்டுத் தோழியரைப் பார்க்கும் போதெல்லாம் யான் நடுங்கித் துன்புறுவேன் எம் இல்லத்திலிருந்த அழகிய கூந்தலையுடைய என் மகளைத் தன் மொழியால் தன் வயப்படுத்தி உடன் கொண்டு போனவன் காளை போன்ற இளைஞன் வன் கண்மையுடைய அவனை ஈன்ற தாய் என்னைப்போல நடுங்கி வருந்துவாளாக" என்று களவு ஒழுக்கத்தில் தலைவியை அழைத்துச் சென்ற தாயும் தன்னைப்போல் நொந்து வருந்தி உரைத்தாள்*

## 275. என்னவாக முடியுமோ?

**என் ஆவது கொல்? தோழி, - மன்னர்**
**வினை வல் யானைப் புகர் முகத்து அணிந்த**
**பொன் செய் ஓடைப் புனை நலம் கடுப்பப்,**
**புழற் காய்க் கொன்றைக் கோடு அணி கொடிஇணர்**
**ஏ கல் மீமிசை மேதக மலரும்,**
**பிரிந்தோர் இரங்கும் அரும் பெறல் காலையும்,**
**வினையே நினைந்த உள்ளமொடு துணைஇச்**
**செல்ப என்ப காதலர்:**
**ஒழிதும் என்ப நாம் வருந்து படர் உழந்தே.**

*- குதிரைத் தறியனார் நற் 296*

*"தோழியே, மன்னரின் தொழில் வினையில் வல்ல யானையின் புள்ளியை யுடைய முகத்திலே அணிந்த பொன்னால் செய்யப்பட்ட முகபடாம் போலத் துளையை யுடைய காய்கள் காய்க்கும் கொன்றையின் கிளையினிடத்தே கொடிபோல் பூத்திருக்கும் பூங் கொத்துகள் உயர்ந்த பாறை யின் மேலே மேன்மையாக மலர்ந்திருப்பதைப் பார் இக் காலம் பிரிந்தவர் இரங்கும் கார் காலம் பெறுதற்குரிய இக் காலத்தில் காதலர் தன் வினையையே நினைந்த உள்ளத் தோடு விரைவாகச் செல்வார். நாம் வருந்தும் துன்பத்தை உழந்து காவோம் இனி ஆவது என்ன இருக்கிறது?" என்று வருந்தினாள் தோழியிடம் தலைவி*

## 276. பொருள் தான் அருமையோ?

வம்ப மாக்கள் வரு திறம் நோக்கிச்,
செங் கணை தொடுத்த செயிர் நோக்கு ஆடவர்
மடி வாய்த் தண்ணுமைத் தழங்கு குரல் கேட்ட
எருவைச் சேவல் கிளைவயிற் பெயரும்
அருஞ் சுரக் கவலை, அஞ்சுவரு நனந்தலைப்
பெரும் பல் குன்றம் உள்ளியும் மற்று இவள்
கரும்புடைப் பணைத் தோள் நோக்கியும், ஒரு திறம்
பற்றாய் – வாழி எம் நெஞ்சே! நல் தார்ப்
பொற்றேர்ச் செழியன் கூடல் ஆங்கண்,
ஒருமை செப்பிய அருமை, வான் முகை
இரும் போது கமழும் கூந்தல்,
பெரு மலை தழீஇயும் நோக்கு இயையுமோமற்றே?

*– விற்றூற்று வண்ணக்கன் தத்தனார் நற் 298*

*நெஞ்சே! வாழி, வழிப்பறி செய்யும் மறவர் புதிய மக்கள் வழியில் நடந்துவரும் திறத்தை எதிர்பார்த்து நிற்பர். சிவந்த அம்புகளைத் தொடுப்பர். சினப்பார்வையுடைய அவர் மடிந்த வாயினால் எழுப்பும் ஓசை கேட்ட பருந்தின் சேவல் அச்சமுள்ள தன் இனத்திடம் போய்ச் சேரும். அவ்வாறாய அரிய சுரத்தின் கவர்ந்த வழிகளில் அச்சந் தரும் பரந்த இடத்தையுடைய பெரிய பல குன்றங்களைக் கடந்து பொருள் தேட வேண்டும் என்று நினைத்தும், இவளது கரும் பெழுதிய பருத்த தோள்களைப் பார்த்தும் ஒரு பக்கமும் பற்ற மாட்டாது உள்ளாய். நல்ல மாலை அணிந்த பொன்னாற் செய்யப்பட்ட தேரையுடைய செழியனது கூடலில் ஒப்பற்ற தனிமையாகப் பொருள்தேடி வரத் தோழி சொல்லிய அருமையான மொழியினைக் கேட்டோம் யாம் பெரிய மலை நெறியேச் சேர்ந்த பின்பு வெள்ளையான அரும்பு மலர்ந்த பெரிய மலரின் மணம் வீசும் கூந்தலையுடையாளை நோக்குதற்கு இயையுமோ? இயையாதன்றே" என்று பொருள் வயிற் பிரிபவனைத் தடுத்து நிறுத்தினாள் தோழி*

## 277. அறியவில்லையோ அவர்?

இழை அணி மகளிரின் விழை தகப் பூத்த
நீடு சுரி இணர சுடர் வீக் கொன்றைக்
காடு கவின் பூத்தஆயினும், நன்றும்
வரு மழைக்கு எதிரிய மணி நிற இரும் புதல்
நறை நிறம் படுத்த நல் இணர்த் தெறுழ் வீ
தா அம்தேரலர்கொல்லோ – சேய் நாட்டுக்,
களிறு உதைத்து ஆடிய கவிழ் கண் இடு நீறு
வெளிறு இல் காழ வேலம் நீடிய
பழங்கண் முது நெறி மறைக்கும்,
வழங்கு அருங் கானம் இறந்திசினோரே?

*– மதுரை மருதன் இயநாகனார் நற் 302*

*“நெடுந் தொலைவிலுள்ள நாட்டில் களிறு உதைத்துப் போட்ட கவிழ்ந்து கிடக்கும் மிகுதியான புழுதி வெள்ளை அல்லாத வயிரமுள்ள வேலமரம் வளர்ந்த துன்பமுள்ள பழைய வழிய மறைத்துவிடும் செல்ல முடியாத அவ் வழியில் அரிய கானம் கடந்து சென்றனர் தலைவர் அணி கலன்களை அணிந்த பெண்கள் போல விரும்பும் படியாகப் பூத்த நீண்ட சுரிந்த பூங்கொத்திலுள்ள விளங்கும் மலரை யுடைய கொன்றைக் காடு அழகுறப் பூத்துள்ளது. அது கண்டு அவர் கார் காலத்தை அறியவில்லை போலும். ஆயினும் பெரிதும் வரு மழைக்கு எதிர்நோக்கி மலர்ந்த நீலமணியின் நிறம் போன்ற பெரிய புதர்களின் நறும்புகை நிறம் சேர்ந்த நல்ல பூங் கொத்தையுடைய எறுழ மரத்தின் மலர்கள் பரந்து கிடக்கும் இவற்றை நோக்கியும் அவர் கூதிர் காலத்தை அறியவில்லை போலும். அறிந்தால் திரும்பி விடுவார் என்று தலைவி பருவம் கண்டு உரைத்தாள்.*

## 278. துன்புறுத்துவானோ அவனை?

வரி அணி பந்தும், வாடிய வயலையும்,
மயில் அடி அன்ன மாக் குரல் நொச்சியும்,
கடியுடை வியல் நகர் காண வரத் தோன்றத்,
தமியே கண்ட தண்டலையும் தெறுவர,

நோய் ஆகின்றே – மகளை! நின் தோழி,
எரி சினம் தணிந்த இலை இல் அம் சினை
வரிப்புறப் புறவின் புலம்புகொள் தெள்விளி,
உருப்பு அவிர் அமையத்து, அமர்ப்பனள் நோக்கி
இலங்கு அலை வெள் வேல் விடலையை
விலங்கு மலை ஆர் இடை நலியும் கொல் எனவே.

*– கயமனார் நற் 305*

“என் மகளே கேளாய் உன் தோழி என் மகள் அவள் காதலனோடு போய் விட்டாள் அவள் விளையாடும் வரி அழகுள்ள பந்தும், வாடிய வயலைக் கொடியும் மயில் அடி போன்ற இலையையும், சிறந்த பூங் கொத்தையும் உடைய நொச்சியும் பாதுகாப்பான அகன்ற இல்லத்தில் காணும்படி தோன்றுகின்றன அவளில்லாது தனியாகக் கண்ட சோலையும் என்னை வருத்துகின்றது ஞாயிறு வெப்பம் அடங்கிய பொழுதில் விளங்கும் அழகிய மரக் கிளையிலிருந்து வரி யுள்ள முதுகையுடைய புறாவின் வருத்தம் கொள்ளத் தகுந்த தெளிந்த ஓசைகேட்டு வெப்பம் விளங்கும் பொழுதில் மிளிரும் இலை போன்ற ஒளி பொருந்திய வேலை ஏந்திய இளைஞனைப் பொருந்தப் பார்த்து மலை குறுக்கிடும் வழியில் என் மகள் வருத்தம் கொள்வாளோ என்று எனக்கு வருத்தம் உண்டாகிறது” என்றாள் தலைவியின் தோழியிடம் அவளை ஈன்ற தாய்.

## 279. பிரிந்து செல்வது எவ்விதம்?

**செல விரைவுற்ற அரவம் போற்றி,**
**மலர் ஏர் உண்கண் பனி வர, ஆயிழை –**
**யாம் தற் கரையவும், நாணினள் வருவோள்,**
**வேண்டாமையின் மென்மெல வந்து,**
**வினவலும் தகைத்தலும் செல்லாள் ஆகி,**
**வெறி கமழ் துறு முடி தயங்க நல் வினைப்**
**பொறி அழி பாவையின் கலங்கி, நெடிது நினைந்து ,**
**ஆகம் அடைதந்தோளே; அது கண்டு,**
**ஈர் மண் செய்கை நீர் படு பசுங் கலம்**

பெரு மழைப் பெயற்கு ஏற்றாங்கு, எம்
பொருள் மலி நெஞ்சம் புணர்ந்து உவந்தன்றே.

*- எயினந்தைமகன் இளங்கீரனார் நற். 308*

"என் பொருட் பயணத்திற்கு யான் விரைவுபடுத்திய ஆரவாரத்தை ஆய்ந்த கலன் அணிந்த தலைவி அறிந்தனள் குவளைமலர் போன்ற அவள் மையுண்ட கண்களில் நீர் வடியக் கலங்கியிருந்தாள் யான் அவளை அருகில் வரும்படி அழைத்தேன் நாணி வந்தாள் என் பிரிவை அவள் விரும்ப வில்லை எனவே மெல்ல மெல்ல வந்தாள் என் பயணம் பற்றிக் கேட்கவும் முடியாமல் அதைத் தடுக்கவும் முடியாமல் இருந்தாள் மணம் கமழ்கின்ற செறிந்த தன் தலைமுடி விளங்க இருந்தாள் நல்ல வேலைப்பாடமைந்த இயங்கும் பாவை இயந்திரம் அற்று அழிந்தது போலக் கலங்கினாள் மிகவும் நினைந்துருகினாள் என் மார்பில் சாய்ந்து அடைந் தாள் அதுகண்டு, ஈர மண்ணால் செய்த, நீர் ஊற்றி வைக்கும் பசுமையான மண்கலம் பெருமழை பெய்த நீரை ஏற்றுக் கரைந்து அழிவதுபோலப் பொருள் வேட்கையுடைய என் நெஞ்சம் கரைந்து மாறி அவளுடன் ஒன்றுபட்டு மகிழ்ந்தது."

## 280. என்ன பாடுபடுவாளோ அவள்?

நோகோ யானே, நோம் என் நெஞ்சே –
'பனிப் புதல் ஈங்கை அம் குழை வருடச்,
சிறை குவிந்திருந்த பைதல் வெண் குருகு,
பார்வை வேட்டுவன், காழ் களைந்தருள,
மாரி நின்ற மையல் அற்சிரம்
யாம் தன் உழையம் ஆகவும், தானே,
எதிர்த்த தித்தி முற்றா முலையள்,
கோடைத் திங்களும் பனிப்போள் –
வாடைப் பெரும் பனிக்கு என்னள்கொல்?' எனவே.

*- கழார்க் கீரன் எயிற்றியார் நற் 312*

"பொருள் விரும்பி என்னை நொந்து கொள்ளும் என் நெஞ்சமே, படரும் தேமலையும் முற்றாத கொங்கையையும் உடைய என் காதலி, யான் அவள் அருகில் பிரியாதிருந்த

கோடைப் பருவத்திலும் நடுங்குபவள் குளிர்ந்த புதரிலுள்ள ஈங்கையின் அழகிய தளிர் தடவத் தன் சிறகு குவிந்திருந்த வருத்தமிக்க வெண்மையான குருகைப் பார்வை விலங்குள்ள வேட்டுவன், அதன் கட்டை அவிழ்த்துவிட மாரிக் காலம் நின்ற மயக்கமுள்ள முன் பனிப் பருவத்திலும் வாடைக் காற்றோடு கலந்து வீசும் பெரிய பின் பனிப் பருவத்திலும் தனியாக இருந்து என்ன பாடு படுவாளோ என்று யான் வருந்துகிறேன்" என்று வினையின் பொருட்டு பிரியும் தலைவன் கோடையிலியேயே நடுங்கும் தலைவி மற்ற பருவங்களில் எவ்வாறுள்ளாளோ என்று தன் நெஞ்சிற்குக் கூறினான்

## 281. வாழ்க நீடுழி

'முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்;
வாழ் நாள் வகை அளவு அறிஞரும் இல்லை;
மாரிப் பித்திகத்து ஈர் இதழ் அலரி
நறுங் காழ் ஆரமொடு மிடைந்த மார்பில்,
குறும் பொறிக் கொண்ட கொம்மை அம் புகர்ப்பின்
கருங் கண் வெம் முலை ஞெமுங்கப் புல்லிக்
கழிவதாக, கங்குல்' என்று
தாம் மொழி வன்மையின் பொய்த்தனர், வாழிய –
நொடி விடுவன்ன காய் விடு கள்ளி
அலங்கல் அம் பாவை ஏறிப், புலம்பு கொள்
புன் புறா வீழ் பெடைப் பயிரும்
என்றூழ் நீளிடைச் சென்றிசினோரே!

– *முப்பேர் நாகனார் நற் 314*

"முதிர்ந்தோர் இளமையை மீண்டும் அடைய மாட்டார்; வாழ்நாளின் வகையையும் அளவையும் அறிந்த அறிஞருமில்லை ஆகவே மாரிக் காலத்தில் மலரும் பிச்சிப் பூவின் குளிர்ந்த இதழ்களையுடைய பூமாலையும் மணக்கும் வயிர முள்ள சந்தனத்தின் தேய்வையையும் அணிந்த மார்பிலே, கச்சணிந்த, இளைய அழகிய, கரிய கண்கள் அமைந்த விருப்பமிகு கொங்கைகள் அழுத்தும்படி தழுவிக் கங்குல் கழிவதாக" என்று கூறினார் தலைவர் அவர், தம் மொழியை

வன்மையான நெஞ்சுடைமையான் பொய்த்தனர் எனினும் யாதொரு தீதின்றி அவர் வாழ்க நொடி விடுவது போலக் காய்களை விடும் கள்ளியின் அசையும் பாவை போன்ற கிளைகளில் ஏறித், தனிமை கொண்ட புல்லிய புறாவானது தான் விரும்பும் பெடையை அழைக்கும் வெயில் மாறாத நீண்ட வழியில் அவர் சென்றார்" என்றாள் தலைவி தன் நெஞ்சுடன் பேசியவளாய்

## 282. பிடியானையின் புலம்பல்

நினைத்தலும் நினைதிரோ – ஐய! அன்று நாம்
பணைத் தாள் ஓமைப் படு சினைபயந்த
பொருந்தாப் புகர் நிழல் இரந்தனெமாக,
நடுக்கம் செய்யாது, நண்ணுவழித் தோன்றி,
ஒடித்துமிசைக் கொண்ட ஓங்கு மருப்பு யானை
பொறி படு தடக்கை சுருக்கி, பிறிது ஓர்
ஆறு இடையிட்ட அளவைக்கு, வேறு உணர்ந்து,
என்றூழ் விடர் அகம் சிலம்ப,
புன் தலை மடப் பிடி புலம்பிய குரலே?

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ நற் 318*

"ஐயனே! அன்றொரு நாள் நாம் பருத்த அடிப்பாகத்தை யுடைய ஓமை மரத்தின் தாழ்ந்த கிளை தந்த பொருந்தாத புள்ளியுள்ள நிழலின் கீழ் தங்கியிருந்தபோது நாம் இருந்த இடத்திற்கு ஆண், பெண் யானைகள் இரண்டும் நமக்கு அச்சமூட்டாது அங்கு வந்தன வந்து தழையை ஒடித்துத் தின்றன உயர்ந்த மருப்பையுடைய யானை புள்ளிகளை யுடைய தன் நீண்ட துதிக்கையைச் சுருட்டித் தூக்கி வேறொரு வழியாகப் போகத் தொடங்கியது அந்த அள விற்குத் தன் துணை விலகியதைக் கண்டதும் அதையே பிரிவு என்று வேறுபட உணர்ந்த புல்லிய தலையையுடைய பெண் யானை வெயிலடிக்கும் மலைப்பிளப்புகள் எல்லாம் எதிரொலிக்குமாறு புலம்பிய குரலை நீர் நினைத்தலும் செய்கின்றீரோ?" என்றாள் தோழி, பிரிவு உணர்த்தப்பட்ட தலைவனை நோக்கி

## 283. செல்வதை நிறுத்துக!

கவிதலை எண்கின் பரூஉ மயிர் ஏற்றை
இரை தேர் வேட்கையின் இரவில் போகி,
நீடு செயல் சிதலைத் தோடு புனைந்து எடுத்த
அரவு வாழ் புற்றம் ஒழிய, ஒய்யென
முரவு வாய் வள் உகிர் இடப்ப வாங்கும்,
ஊக்கு அருங் கவலை நீந்தி மற்று இவள்
பூப்போல் உண்கண் புது நலம் சிதைய,
வீங்கு நீர் வாரக் கண்டும்,
தகுமோ? – பெரும! – தவிர்க நும் செலவே.

*– மதுரைக் காருலவியங் கூத்தனார் நற் 325*

*"பெரும், கவிந்த தலையையும் பருத்த மயிரையும் உடைய ஆண் கரடி இரை தேடும் வேட்கையாலே இரவில் போனது கரையான் கூட்டம் நீண்ட உழைப்பினால் கட்டி யெடுத்த பாம்பு வாழும் புற்றை அடைந்தது புற்றிலுள்ள எல்லாக் கரையானும் ஒழியும்படி விரைவாக ஒடித்து வாயை யுடைய பெரிய நகங்களாலே பிளந்து எடுத்தது அவ்வாறான, மனத்தால் நினைத்தற்கரிய கோணல் வழிகளைக் கடந்து நீ செல்ல வேண்டும். இவளது பூப்போன்ற மையுண்ட கண்களின் புத்தழகு சிதையவும் மிக்க கண்ணீர் ஒழுகவும் அவற்றைக் கண்டும் நீ செல்லுதல் தகுமோ, உன் செலவு தவிர்க" என்றாள் தோழி தலைவனிடம்*

## 284. காலம் தாழ்த்தாது வருவார்

வரையா நயவினர் நிரையம் பேணார்,
கொன்று ஆற்றுத் துறந்த மாக்களின் அடு பிணன்
இடு முடை மருங்கில், தொடும் இடம் பெறாஅது,
புனிற்று நிரை கதித்த, பொறிய முது பாறு
இறகு புடைத்து இற்ற பறைப் புன் தூவி
செங் கணைச் செறித்த வன்கண் ஆடவர்
ஆடு கொள் நெஞ்சமோடு அதர் பார்த்து அல்கும்,
அத்தம் இறந்தனர் ஆயினும், நத் துறந்து
அல்கலர் வாழி – தோழி, – உதுக் காண்:

இரு விசும்பு அதிர மின்னிக்,
கருவி மா மழை கடல் முகந்தனவே!

*– மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் நற் 329*

*"தோழி, நம் காதலர் அளவில்லாத நயமுடையவர் அளறு போன்ற தீய நெறிகளை விரும்பாதவர் வன்கண் மறவர், கொன்று வழியிலே போட்ட மக்களின் அடுபிணம் முடை நாற்றம் எழுப்பும் அதன் பக்கத்தில், புள்ளிகளை யுடைய முது பருந்து ஈன்றணிமையாய் இருந்தும் சென்று தின்ன இயலாமல் வெறுத்துக் கடந்து, தன் சிறகுகளை அடித்துப் பறந்து போகும் அப்போது அது உதிர்த்த பறக்கும் புல்லிய இறகுகளை வன்கண் மறவர் எடுத்துத் தம் சிவந்த அம்பிலே கட்டுவர் தாம் வெற்றிகொள்ளும் நெஞ்சத்தோடு வழி பார்த்துத் தங்குவர் அம் மலை வழியிலே நம் காதலர் சென்றனராயினும் நம்மைக் கைவிட்டு அங்குத் தங்கார் பெரிய விசும்பு அதிரும்படி மின்னி இடி முதலான தொகுதி யோடு கூடிய கரிய முகில் மழை பெய்வதற்காகக் கடல் நீரை முகந்து வந்தது காண்க" என்றாள் தலைவியிடம் அவள் தோழி, பருவம் காட்டி*

## 285. பல்லி சொன்ன பலன்!

மழை தொழில் உலந்து, மா விசும்பு உகந்தென,
கழை கவின் அழிந்த கல் அதர்ச் சிறு நெறிப்
பரல் அவல் ஊறல் சிறு நீர் மருங்கின்,
பூ நுதல் யானையொடு புலி பொருது உண்ணும்
சுரன் இறந்து, அரிய என்னார், உரன் அழிந்து,
உள் மலி நெஞ்சமொடு வண்மை வேண்டி,
அரும் பொருட்கு அகன்ற காதலர் முயக்கு எதிர்ந்து,
திருந்திழைப் பணைத் தோள் பெறுநர் போலும்;
நீங்குகமாதோ நின் அவலம் – ஓங்குமிசை,
உயர் புகழ் நல் இல் ஒண் சுவர்ப் பொருந்தி
நயவரு குரல பல்லி,
நள்ளென யாமத்து, உள்ளுதொறும் படுமே.

*– கள்ளிக்குடிப் பூதம்புல்லனார் நற் 333*

*"ஓங்கிய இடத்திலுள்ள உயர்ந்த புகழையுடைய நல்ல இல்லத்தில் விளக்கமான சுவரில் பொருந்தியிருந்து நன்மை வருவதாகக் கூறும் குரலையுடைய பல்லி, இருள் செறிந்த யாமத்தும் யாம் நம் காதலரை நினைக்குந் தோறும் ஒலிக்கும் முகில் மழைபொழிந்து உலர்ந்து பெரிய விசும்பை அடைந்தது மூங்கிலின் அழகு அழிந்த மலை வழியின் சிறு பாதையில் பருக்கைக் கற்களுள்ள பள்ளத்தில் ஊறிய சிறிய நீருள்ள பக்கத்தில் அழகிய நுதலையுடைய யானையொடு புலி போரிட்டு நீர் உண்ணும் அவ்வாறாய சுரத்தைக் கடந்து செல்லுதல் அரிய என்னாது, வலிமை அழிந்தாலும் உள்ளே கிளர்ச்சி கொண்ட நெஞ்சத்தோடு செல்வர் வள்ளன்மை செய்ய விரும்பி அரும் பொருட்கு அகன்றார் காதலர் அவர் உன் முயக்கத்தை விரும்பித் திருந்திய கலன் அணிந்த உன் பருத்த தோள்களைப் பெறுவர் போலும் இனி உன் அவலம் நீங்குக" என்றாள் தலைவியிடம் தோழி*

## 286. மறந்து விட்டாரோ சிறந்த நெறியை?

**உலகம் படைத்த காலை – தலைவ!**
**மறந்தனர் கொல்லே சிறந்திசினோரே –**
**முதிரா வேனில் எதிரிய அதிரல்,**
**பராரைப் பாதிரிக் குறு மயிர் மா மலர்,**
**நறு மோரோடமொடு, உடன் எறிந்து அடைச்சிய**
**செப்பு இடந்தன்ன நாற்றம் தொக்கு உடன்,**
**அணி நிறம் கொண்ட மணி மருள் ஐம் பால்**
**தாழ் நறுங் கதுப்பில் பையென முள்கும்**
**அரும் பெறல் பெரும் பயம் கொள்ளாது,**
**பிரிந்து உறை மரபின பொருள் படைத்தோரே.**

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ நற் 337*

*"தலைவனே, தலைவியின் கூந்தல் அழகிய நல்ல நிறம் பொருந்திய நீலமணி போன்றது ஐந்து பகுதியாக முடித்தற் குரியது நீண்டு தொங்கி மணக்கும் தன்மையுடையது இள வேனிலை எதிர்பார்த்து மலரும் காட்டு மல்லிகை மலர், பருத்த அடி மரத்தோடு குறுகிய நுண்ணிய மயிரையுடைய சிறந்த பக்களைக் கொண்ட பாதிரி மலர், நறுமணமுள்ள*

செங்கருங்காலி மலர் ஆகிய மூன்று மலர்களையும் கொய்து ஒன்றாகச் சேர்த்து ஒரு செப்பின் உள்ளே அடைத்து வைத்திருந்து பின்பு அப் பூக்களடங்கிய அச் செப்பைத் திறந்து வைத்தது போன்ற நறுமணம் ஒருங்கே அமையப் பெற்றது கூந்தல் அக் கூந்தலில் துயின்று மெல்ல முயங்கும் அருமையாகப் பெறும் பெரிய பயனைப் பெறாது பிரிந்து வாழ்கின்ற மரபுகளைக் கொண்டதாகப் பொருள் முறை களைப் படைத்தனர் அந்தச் சிறந்த நம் முன்னோர்கள் உலகியல் முறைகளை வகுத்தபோது பொருள் தேடும் முறை களில் பிரியாது வாழும் முறை ஒன்றை வகுத்தமைக்க மறந்தனர் போலும்" என்றாள் தோழி தலைவனிடம்.

## 287. காட்டினேன் கண்களால்

'மா என மதித்து மடல் ஊர்ந்து, ஆங்கு
மதில் என மதித்து வெண் தேர் ஏறி,
என் வாய் நின் மொழி மாட்டேன், நின் வயின்
சேரி சேரா வருவோர்க்கு, என்றும்
அருளல் வேண்டும், அன்பு உடையோய்!' எனக்,
கண் இனிதாகக் கோட்டியும் தேரலள்:
யானே – எல்வளை! – யாத்த கானல்
வண்டு உண் நறு வீ நுண்ணிதின் வரித்த
'என் எனப் படுமோ?' என்றலும் உண்டே.

– மோசிகீரனார் நற் 342

"அன்புடையோய், மா என மதித்து மடல் ஊர்ந்தும் ஆங்கு மதில் என மதித்துப் பேய்த் தேர் ஏறியும் மயங்கிய தலைவற்கு, என் வாயினால் உன் மொழியைச் சென்று கூற மாட்டேன் உன்னிடம் சேரிக்குச் சேர வருபவர்க்கு என்றும் அருள் செய்தல் வேண்டும்" என்று யான் கண்ணினால் இனியதாகக் காட்டியும் அவள் தெளியவில்லை ஒளி பொருந்திய வளையல்களை உடையவளே, இனி, வேலி கட்டிய கானலில் வண்டுகள் தேனை உண்ணும் நறிய மலர்கள் உதிர்ந்து நுண்ணிதாகக் கோலம் செய்த இடத்தில் என் தலையை அவள் சேவடியில் யான் சேர்த்தால், அத் தலைவர் செயல் இப்போது எப்படியுள்ளது என்று அவள்

தலைவி வினவலும் உண்டாகும்" என்றாள் ஆற்றாது தன்னுள்ளே சொல்லிக் கொண்ட தோழி

## 288. மாலைப் பொழுதைக் கண்டும் வாராரோ?

முல்லை த்ாய கல் அதர்ச் சிறு நெறி
அடையாது இருந்த அம் குடிச் சீறூர்த்
தாது எரு மறுகின், ஆ புறம் தீண்டும்
நெடு வீழ் இட்ட கடவுள் ஆலத்து,
உகு பலி அருந்திய தொகுவிரற் காக்கை
புன்கண் அந்திக் கிளைவயின் செறியப்,
படையொடு வந்த பையுள் மாலை
இல்லைகொல் வாழி – தோழி! – நத்துறந்து
அரும் பொருட் கூட்டம் வேண்டிப்
பிரிந்து உறை காதலர் சென்ற நாட்டே?

– *கருவூர் கதப்பிள்ளை சாத்தனார் நற் 343*

"தோழியே, வாழி! ஆக்கள் முல்லைக் கொடி படர்ந்த மலையின் வழியாகிய சிறிய நெறியை அடையாது, அழகிய குடிகள் வாழும் சீறூரில் பூக்களின் தாதுகள் எருவாக உதிர்ந் திருக்கும் தெருவில் செல்லும் அந்த ஆக்களின் முதுகிலே கடவுள் உறையும் ஆலமரம் விட்ட நெடிய விழுது தீண்டும் அங்குப் போடப்பட்ட பலிச் சோற்றைத் தொக்க விரல்களை யுடைய காக்கைகள் தின்னும் துன்பந் தரும் அந்தி நேரத்தில் தம் சுற்றத்திடம் சேரும் பிரிந்தாரை வருத்தும் தென்றல், குழலிசை என்னும் படையோடு வந்த துன்பந்தரும் மாலை நம்மைத் துறந்து அரிய பொருளைச் சேர்க்க விரும்பிப் பிரிந்துறையும் நம் காதலர் சென்ற நாட்டில் இல்லையோ? இருக்குமானால் அவர் திரும்பியிருப்பார்" என்றாள் தலைவி

## 289. தழுவ விரும்பினால் போதும்

குண கடல் முகந்து, குடக்கு ஏர்பு இருளித்,
தண் கார் தலைஇய நிலம் தணி காலை,
அரசு பகை நுவலும் அரு முனை இயவின்,
அழிந்த வேலி அம் குடிச் சீறூர்
ஆள் இல் மன்றத்து, அல்கு வளி ஆட்டத்,

தாள் வலி ஆகிய வன்கண் இருக்கை,
இன்று, நக்கனைமன் போலா – என்றும்
நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்
பெருந் தண் கொல்லிச் சிறுபசுங் குளவிக்
கடி பதம் கமழும் கூந்தல் '
மட மா அரிவை தட மென் தோளே.

*– எயினந்தை மகன் இளங்கீரனார் நற் 346*

*"நெஞ்சே, கிழக்குக் கடலில் நீரை முகந்து மேற்குத் திக்கில் சென்று இருளித் தண்ணிய முகில் மழை பெய்து விட்டது நிலம் குளிர்ந்த காலை, அரசர்கள் பகையினால் அழிந்தது என்று சொல்லப்படும் அரிய முனையின் வழியில் அழிந்த வேலியுடைய, அழகிய குடிகளிருந்த சீறூரில் ஆள் இல்லாத மன்றத்தில் மெல்லெனக் காற்று வீசியது. முயற்சி வலிமையாகிய தறுகண்மையுடைய இருக்கையில் இப்போது இருப்பது போல் கருதுகிறாய் என்றும், நிறைவுற்ற மதி போல விளங்கும் பொறையனுடைய பெரிய குளிர்ந்த கொல்லி மலையின் சிறிய மலைப்பச்சை சூடிய மணம் செவ்வியதாகக் கமழும் கூந்தலை யுடைய இளைய அழகிய பெண்ணின் பெரிய மெல்லிய தோள்களை நினைத்து இப்போது மகிழ்ந்தாய் அத் தோள்கள் இங்கு அடைய முடியாதன" என்று பொருள் தேடப் புகுநத தலைவன் ஆற்றாது தன் நெஞ்சிற்குக் கூறினான்*

## 290. எவ்விதம் வந்தாளோ?

இலை மாண் பகழிச் சிலை மாண் இரீஇய
அன்பு இல் ஆடவர்அலைத்தலின், பலருடன்
வம்பலர் தொலைந்த அஞ்சுவரு கவலை,
அழல் போல் செவிய சேவல் ஆட்டி,
நிழலொடு கதிக்கும் நிணம் புரி முது நரி
பச்சூன் கொள்ளை மாந்தி வெய்துற்று,
தேர் திகழ் வறும் புலம் துழைஇ, நீர் நயந்து,
பதுக்கை நீழல் ஒதுக்கு இடம் பெறாஅ
அருஞ் சுரக் கவலை வருதலின் வருந்திய
நமக்கும் அரிய ஆயின; அமைத் தோள்

மாண்புடைக் குறுமகள் நீங்கி,
யாங்கு வந்தனள்கொல்? அளியள் தானே!

*– மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் நற் 352*

“இலை வடிவ மாட்சிமைப்பட்ட அம்பை வில்லிலே மாண்புற இருத்தி, உயிர்களிடத்து அன்பில்லாத மறவர் செல்வர் அதனாலே பலருடன் புதியவர் இறந்து கிடப்பர் அஞ்சத்தக்க அந்தக் கவர்ந்த வழியில், அழல் போன்ற சிவந்த செவியையுடைய கழுகுச் சேவல்கள் பிணங்களைத் தின்ன வரும் அப்போது அவற்றை விரட்டி அலைத்து ஊனைத் தின்ன விரும்பும் முதிய நரி தன் நிழலொடு விளையாடும் பசிய ஊனை மிகுதியாகத் தின்ற நரி நீர் வேட்கையுற்றுப் கானல் நீர் விளங்கும் வற்றிய புலத்தில் அலையும் நீரை விரும்பிக் கற் குவியலின் நிழலிலே ஒதுங்கி இருக்க இடம் பெறாது வருந்தும் அவ்வாறான செல்லுதற்கரிய பலவாய வழிகளில் நாம் வந்தனாலே வருந்திய நமக்கும் அவ் வழியில் கண் மூடி விழித்தவுடன் நம் காதலி காணப்படுகிறாள் அவ் வழியில் மூங்கில் போன்ற தோளையுடைய மாண்புடைய இளமடந்தை இல்லம் நீங்கி யாங்கு வந்தனள் இரங்கத் தகுந்தவள்” என்று தலைவன் பாலை வழியிலே ஆற்றானாய்த் தனக்குள் சொல்லிக் கொண்டான்

## 291. விளையாடி மகிழ்க நீ

வினை அமை பாவையின் இயலி, நுந்தை
மனை வரை இறந்து வந்தனை; ஆயின்,
தலை நாட்கு எதிரிய தண் பத எழிலி
அணி மிகு கானத்து அகன் புறம் பரந்த
கடுஞ் செம் மூதாய் கண்டும் கொண்டும்,
நீ விளையாடுக சிறிதே; யானே,
மழ களிறு உரிஞ்சிய பராரை வேங்கை
மணல் இடு மருங்கின் இரும் புறம் பொருந்தி,
அமர் வரின் அஞ்சேன், பெயர்க்குவென்;
நுமர் வரின் மறைகுவென் மாஅயோளே!

*– மதுரை மருதன் இளநாகனார் நற் 362*

*"மாமை நிறத்தை உடையவளே, கைவேலைத் திறமை அமைந்த பாவை ஒன்று நடந்து வந்ததுபோல் உன் தந்தையின் இல்லத்தின் எல்லையைக் கடந்து என்னோடு வந்துவிட்டாய் வருந்தாதே முதல்நாள் தோன்றிய குளிர்ந்த நிலையையுடைய முகில்கள் இந்த அழகு மிக்க காட்டின் அகன்ற இடங்களில் பரவின விரைந்து செல்லும் தம்பலப்பூச்சிகளைக் கண்டதும் பிடித்தும் நீ சிறிது விளையாடுக யானும் இளைய களிற்றி யானைகள் தம் உடலைத் தேய்த்துக் கொண்ட பருத்த அடி மரத்தையுடைய இவ் வேங்கையின் பெரிய பின் புறத்தில் மணல் பரந்த பக்கத்தில் தங்கியிருக்கிறேன் இங்கே தங்கி யிருக்கும் போது வழிப்பறி செய்வோர் முதலானோர் போர் செய்ய வந்தால் அஞ்சாமல் அவர்களோடு போர் செய்து அவர்கள் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்வேன் உன் சுற்றத்தார் உன்னைத் தேடி வந்தால் யான் மறைந்து கொள்வேன் ஏனென்றால் யான் உன் சுற்றத்தாரோடு போர் செய்தால் எவர் தோற்றாலும் நீ வருந்துவாய். எனவேதான் நான் மறைந்து கொள்வேன்" என உடன்போக்கில் உவந்து வந்த தலைவிக்குத் தலைவன் அன்புரை கூறினான்*

## 292. மனைவியைப் பிரிபவர் மடமை!

அரவுக் கிளர்ந்தன்ன விரவுறு பல் காழ்
வீடுறு நுண் துகில் ஊடு வந்து இமைக்கும்
திருந்துஇழை அல்குல், பெருந் தோட் குறுமகள்
மணி ஏர் ஐம்பால் மாசு அறக் கழீஇக்,
கூதிர் முல்லைக் குறுங் கால் அலரி
மாதர் வண்டொடு கரும்பு பட முடித்த
இரும் பல் மெல் அணை ஒழியக், கரும்பின்
வேல் போல் வெண் முகை விரியத் தீண்டி,
முதுக் குறைக் குரீஇ முயன்று செய் குடம்பை
மூங்கில் அம் கழைத் தூங்க, ஒற்றும்
வட புல வாடைக்குப் பிரிவோர்
மடவர் வாழி, இவ் உலகத்தானே!

*– மதுரைஈழத்துப் பூதன் தேவனார் நற் 366*

"நெஞ்சே, அரவு படமெடுத்தாற் போன்றதும் பலவாகக் கலந்த மணிகள் பதித்த நுண்ணிய துகிலின் ஊடு வந்து இமைக்கும் திருந்திய இழை அணிந்ததும் ஆகிய அல்குலையும் பெரிய தோளையுமுடையவள் இளமடந்தை அவள் நீலமணி போன்ற கூந்தலை மாசு அறக் கழுவிக் கூதிர் காலத்தில் மலரும் முல்லையில் குறும் காம்பு நீக்கிய மலர்களை முடித்தவள் அழகிய பெண் வண்டோடு ஆண் வண்டும் மொய்க்க முடித்த மிகப் பலவான மெல்லிய கூந்தலையுடையவள் அக் கூந்தல் அணையிலே கிடந்து துயில்வதை விட்டொழிப்பது அறியாமை கரும்பின் வேல் போன்ற வெண்முகை விரியும்படி தீண்டுவது வாடை. அறிவு மிக்க தூக்கணம் குருவி முயன்று செய்த கூட்டினை மூங்கிலின் அழகிய கழை அசையத் தாக்குவது வட புலவாடை அவ் வாடைக் காலத்தில் பிரிவோர் இவ் உலகத்து மிக அறியாமை யுடையவராவார்" என்று பொருள் திரட்டப் புறப்பட்ட தலைவன் தன் நெஞ்சிற்குள் சொன்னான்

## 293. அன்னம் என நடந்தாள்

பைம் புறப் புறவின் செங் காற் சேவல்
களரி ஓங்கிய கவை முடக் கள்ளி
முளரி அம் குடம்பை ஈன்று, இளைப்பட்ட
உயவு நடைப் பேடை உணீஇய, மன்னர்
முனை கவர் முது பாழ் உகு நெற் பெறூஉம்
அரண் இல் சேய் நாட்டு அதர் இடை மலர்ந்த
நல் நாள் வேங்கைப் பொன் மருள் புதுப் பூப்
பரந்தன நடக்க, யாம் கண்டனம் மாதோ; –
காண் இனி வாழி என் நெஞ்சே! நாண் விட்டு
அருந் துயர் உழந்த காலை
மருந்து எனப்படூஉம் மடவோளையே.

– *பாலை பாடிய பெருங்கடுங்கோ நற் 384*

"என் நெஞ்சேமே, களர் நிலத்தில் உயர்ந்தோங்கிய கவையுள்ள முட்களையுடைய கள்ளியின் உச்சியிலே கள்ளிகளால் ஆக்கிய அழகிய கூட்டில் முட்டையிட்டுக் குஞ்சு பொறித்துக் காவல் செய்து கொண்டிருக்கும் வருந்திய நடையுடைய பெண்

புறா, உண்ணுதற்குப் பசிய முதுகையும் சிவந்த கால்களையும் உடைய ஆண் புறா இரை தேடி, மன்னர்கள் போர் செய்த போர்க்களத்தில் சென்று முதிர்ந்த பாழ் நிலத்திலே சிதறி உதிர்ந்து கிடக்கும் நெல்லைப் பெற்றுக் கொண்டு வந்து கொடுக்கும் அப்படியான பாதுகாப்பில்லாத தூர நாட்டுப் பாதையில் நல்ல நாட் காலையில் மலர்ந்த வேங்கையின் பொன் போன்ற புது மலர்கள் உதிர்ந்து பறந்து கிடக்கும் அந்த மலரின் மேல் அன்னம் நடப்பது போலத் தலைவி நடந்து வருவதை நான் கண்டது போல நீயும் கான்க நாணத்தை விட்டு அருந் துன்பத்தை அடைந்து யான் வருந்தியபோது, மருந்து கிடைத்தது எனப்படுவது போல மடவோள் நம்மொடு நடந்து வருவதைக் காண்பாயாக" என்று தன் நெஞ்சிடம் கூறினான் தலைவன்

## 294. அழித்துக் கொள்ளாதே அழகை

நெறி இருங் கதுப்பும், நீண்ட தோளும்,
அம்ம! நாளும் தொல் நலம் சிதைய,
ஒல்லாச் செந் தொடை ஒரீஇய கண்ணிக்
கல்லா மழவர் வில்லிடை விலங்கிய
துன் அருங் கவலை அருஞ் சுரம் இறந்தோர்
வருவர் வாழி – தோழி, – செரு இறந்து
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்த
வேல் கெழு தானைச் செழியன் பாசறை
உறை கழி வாளின் மின்னி, உதுக்காண்,
நெடும்பெருங் குன்றம் முற்றிக்
கடும் பெயல் பொழியும் கலிகெழு வானே.

*– பொதும்பில கிழார் நற் 387*

"தோழி, வாழி போரில் வென்று தலையானங்கானத்து யாவரும் அஞ்சும்படி சென்று தங்கிய வேற்படை பொருந்திய சேனைகளையுடைய பாண்டியன் நெடுஞ்செழியன் தனது பாசறையிலே உறையிலிருந்து வெளியே உருவிய வாளைப் போல மின்னி, நெடிய பெரிய மலையைச் சூழ்ந்து முழக்க மிட்டுக் கொண்டல் விரைந்து மழையைப் பொழியும் உன் நெறிந்த கரிய கூந்தலும் நீண்ட தோளும் கெடவும் இயற்கை

*அழகு நாள்தோறும் சிதையவும் பிரிந்தவர் தலைவர் மாலை யணிந்த தன் தொழிலைத் திருந்தக் கல்லாத பாலை நில வீரர்கள் வில்லிலிருந்து தப்பிய பொருந்தாத சிவந்த அம்பு எய்வதை நீங்கிய நெருங்க முடியாத கவர்ந்த வழிகளை யுடைய கடத்தற்கரிய சுரத்தைக் கடந்த காதலர் இப்போது திரும்பி வருவர் நீ வருந்தாதே" என்று தோழி பருவம் காட்டித் தலைவிக்கு ஆறுதல் சொன்னாள்*

## 295. பிரிந்து போகவே மாட்டார்

ஆழல் மடந்தை! அழுங்குவர் செலவே –
புலிப் பொறி அன்ன புள்ளிஅம் பொதும்பின்
பனிப் பவர் மேய்ந்த மா இரு மருப்பின்
மலர்த் தலைக் காரான் அகற்றிய தண்ணடை
ஒண் தொடி மகளிர் இழை அணிக் கூட்டும்,
பொன் படு கொண்கான நன்னன் நல் நாட்டு
ஏழிற்குன்றம் பெறினும் பொருள்வயின்
யாரோ பிரிகிற்பவரே – குவளை
நீர் வார் நிகர் மலர் அன்ன, நின்
பேர் அமர் மழைக் கண்தெண் பனி கொளவே.

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ நற் 391*

*"மடந்தையே, நீர் ஒழுகும் ஒளி பொருந்திய குவளை மலர்போன்ற உனது பெரிய அமர்ந்த குளிர்ந்த கண்க ளிலிருந்து நீர் ஒழுக நீ அழாதே அவர் செல்வதைத் தவிர்ப் பார் உன்னை விட்டுப் பிரிய மாட்டார் சிறுத்தைப் புலியின் உடலில் இருக்கும் புள்ளிகள் போலப் புள்ளிகள் அமைந்தி ருக்கும்படி சோலையில் படர்ந்திருக்கும் குளிர்ந்த கொடி களை மேய்ந்த மிகப்பெரிய கொம்பையும் பரந்த தலையை யும் உடைய எருமை கழித்துப் போட்ட மலைப் பச்சையை ஒள்ளிய வளையல் அணிந்த பெண்கள் தமது பொன் அணி கலன்களோடு அணிவர் அவ்வாறான வளப்பம் மிக்க பொன் உள்ள கொண்கானம் என்பதிலுள்ள நன்னனது நல்ல நாட்டிலுள்ள எழிற் குன்றத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற் படினும் பொருள் கொண்டு வருவதற்காகத் தலைவர் உன்னை விட்டுப் பிரியமாட்டார்" என்று பிரிவு உணர்த்தப்*

*பட்டபோது ஆற்றாத தலைவிக்குத் தோழி வருத்தம் ஆற்றக் கூறினாள்*

**296. மறு பிறவியில் காதலனை மறப்பேனோ?**

**தோளும் அழியும், நாளும் சென்றென;**
**நீள் இடை அத்தம் நோக்கி வாள் அற்றுக்**
**கண்ணும் காட்சி தௌவின; என் நீத்து**
**அறிவும் மயங்கி; பிறிது ஆகின்றே;**
**நோயும் பெருகும்; மாலையும் வந்தன்று;**
**யாங்கு ஆகுவென்கொல் யானே? ஈங்கோ**
**சாதல் அஞ்சேன்; அஞ்சுவல், 'சாவின்**
**பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்,**
**மறக்குவேன்கொல், என் காதலன்' எனவே.**

*- அம்மூவனார் நற் 397*

*"அவர் வருவதாகக் குறித்த பருவம் கழிந்தது அதனால் என் தோள்களும் மெலிந்தன அவர் சென்ற நீண்ட காட்டு வழியை நோக்கி நோக்கி என் கண்களும் ஒளியற்றுக் காணும் தன்மையை இழந்தன என்னைக் கைவிட்டு அறிவும் மயக்க மடைந்து வேறுபட்டது நோயும் பெருகியது, மாலைப் பொழுதும் வந்துவிட்டது யான் எப்படி ஆவேனோ? இங்கே யான் சாதலுக்கு அஞ்சேன் ஆனால் வேறொன்றிற்கு அஞ்சு வேன் இறந்தபின் பிறப்பு வேறொன்று என்னைப் பெரிதும் வாட்டுகிறது மற்றபடி யான் ஆற்றுவேன்" என்று பிரிவை ஆற்றாத தலைவியை ஆற்றி இருக்கக் கூறிய தோழியிடம் தலைவி இவ்வாறு சொன்னாள்*

# பாலை

## அகநானூறு

### 297. சொன்ன சொல் மறந்தாரோ தலைவர்!

'வண்டு படத் ததைந்த கண்ணி, ஒண் கழல்
உருவக் குதிரை மழவர் ஒட்டிய
முருகன் நற் போர் நெடு வேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண்
சிறு காரோடன் பயினொடு சேர்த்திய
கல் போல் பிரியலம்' என்ற சொல்தம்
மறந்தனர் கொல்லோ – தோழி, – சிறந்த
வேய் மருள் பணைத் தோள் நெகிழ, சேய் நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் – நிலம் பக,
அழல் போல் வெங்கதிர் பைது அறத் தெறுதலின்:
நிழல் தேய்ந்து உலறிய மரத்த; அறை காய்பு,
அறுநீர்ப் பைஞ் சுனை ஆம் அறப் புலர்தலின்,
உகு நெல் பொரியும் வெம்மைய; யாவரும்
வழங்குநர் இன்மையின், வெளவுநர் மடிய,
சுரம் புல்லென்ற ஆற்ற; அலங்கு சினை
நார் இல் முருங்கை நவிரல் வான் பூச்
சூரல்அம் கடு வளி எடுப்ப, ஆருற்று:
உடை திரைப் பிதிர்வின் பொங்கி, முன்
கடல் போல் தோன்றல – காடு இறந்தோரே?

*– மாமூலனார் அகநானூறு 1*

"தோழியே, தலைவர் தொலைவில் உள்ள நாட்டிலிருந்து பொன் அணி முதலிய அணி கலன்களை ஈட்டி வருதற் பொருட்டுச் சிறந்த மூங்கிலைப் போன்று பருத்திருந்த என் தோள்கள் மெலியுமாறு என்னை விட்டுப் பிரிந்து போனார்

தலைவர் சென்ற காட்டு நிலம் பிளக்குமாறு தீயைப் போன்ற ஞாயிற்றின் கதிர் பசுமை நீங்கிடக் காய்தலால், நிழல் சுருங்க வற்றிப் போன மரங்களையுடையது பாறைகள் கொதித்து நீர் இல்லாத பசிய சுனைகளிலும் ஈரம் இல்லாத வண்ணம் காய்தலால் உலர்ந்து அங்குச் சொரியும் மூங்கில் நெற்கள் பொரிதற்குக் காரணமான வெப்பத்தை உடையன தன்பால் செல்பவர் எவரும் இல்லாததால் வழிப்பறி செய்ப வரும் தம தொழிலைத் துறந்து சோம்பியிருத்தலால் சுரம் பொலிவில்லாத நெறியையுடையது அசையும் கிளைகளை யுடைய நார் இல்லாத முருங்கையின் குலைந்த வெண்மை யான மலர்கள் கடுமையான சூறாவளியான காற்று வாரி வீச, உடைந்த அலையின் துளிகளைப் போலப் பரந்து கிடத்தலால் கடலின் கரையின் தோற்றம் போல் தோன்று கின்றது இத் தகைய காட்டினைக் கடந்து சென்றார் நம் தலைவர் அங்ஙனம் காட்டைக் கடந்து போன அவர், வண்டுகள் மொய்க்குமாறு மலர்ந்த பூக்களால் ஆன கண்ணி மாலையையும் ஒண்மையான கழலையும் உடைய அஞ்சத் தக்க குதிரைகளையுடைய மழவரை வென்று புறம் காட்டி ஓடச் செய்த சிறந்த போர் ஆற்றலை உடைய வேளிர் குலத் தலைவனான 'ஆவி' என்னும் மன்னனுக்குரிய, அறுத்துத் திருத்திய கொம்பினையுடைய யானை நிற்கும், முருகப் பெருமான் வீற்றிருக்கின்ற பொதினி மலையின் சாரலான அவ் இடத்தில், சிறியவனான சாணைக்கல் செய்பவன் அரத் தோடு சேர்த்துச் செய்த கல்லைப் போன்று யான் உன்னைப் பிரிய மாட்டேன் என்று தலைவர் முன்று கூறிய சொல்லை மறந்து விட்டாரோ?" என்று பிரிவிடை ஆற்றாளாய தலை மகள் தோழிக்குச் சொன்னாள்

## 298. எவ்வாறு போக்குவது துன்பத்தை?

இருங் சுழி முதலை மேஎந்தோல் அன்ன
கருங் கால் ஓமைக் காண்பு இன் பெருஞ் சினைக்

கடியுடை நனந்தலை, ஈன்று இளைப்பட்ட,
கொடு வாய்ப் பேடைக்கு அல்குஇரை தரீஇய
மான்று வேட்டு எழுந்த செஞ் செவி எருவை –
வான் தோய் சிமைய விறல் வரைக் கவாஅன்,
துளங்கு நடை மரையா வலம் படத் தொலைச்சி,
ஒண் செங் குருதி உவற்றி உண்டு அருந்துபு,
புலவுப் புலி துறந்த கலவுக் கழி கடு முடை,
கொள்ளை மாந்தரின் – ஆனாது கவரும்
புல் இலை மராஅத்த அகன் சேண் அத்தம்,
கலம் தரல் உள்ளமொடு கழியக் காட்டிப்,
பின் நின்று துரக்கும் நெஞ்சம்! நின் வாய்
வாய்போல் பொய்ம்மொழி எவ்வம் என் களைமா –
கவிர் இதழ் அன்ன காண்பு இன் செவ் வாய்,
அம் தீம் கிளவி, ஆய் இழை, மடந்தை
கொடுங் குழைக்கு அமர்ந்த நோக்கம்
நெடுஞ் சேண் ஆர் இடை விலங்கும் ஞான்றே?

*– எயினந்தை மகனார் இளங்கீரனார் அக 3*

"பெரிய உப்பங்கழியில் உள்ள முதலையின் முதுகில் பொருந்திய தோலைப் போன்ற கரிய அடிப் பக்கத்தை உடையது ஓமை மரம். அம் மரத்தின் காண்பதற்கு இனிய பெரிய கிளையில் காவலை உடைய இடத்தில் குஞ்சுகளை ஈன்று காவற்பட்ட வளைந்த வாயையுடைய பேடை உள்ளது அப் பேடைக்கு மிக்க இரையைக் கொணர்ந்து தரும் பொருட்டு, மயங்கி இரையை விரும்பி எழுந்த சிவந்த செவி யையுடைய ஆண் கழுகு சென்றது அது வானை அளாவிய உச்சி பொருந்திய சிறந்த மலைச் சாரலில், அசைந்த நடையையுடைய பெண்மானை வலப்பக்கமாய் விழும்படி கொன்று வீழ்த்தி அதன் ஒளியுடைய சிவந்த குருதியைக் குடித்துப் புலால் நாற்றம் வாய்ந்த புலி விட்டுச் சென்ற மூட்டுவாய் கழிந்த மிக்க நாற்றம் உடைய புலாலைக் கொள்ளை புரியும் கள்வர் போன்று விடாது நரிகள் கவர்ந்து செல்லும் இத்தகைய இடமான பொலிவில்லாத இலைகளை யுடைய மா மரங்கள் பொருந்திய அகன்ற நீண்ட வழியில், தலைவிக்கு அணிகலன்களை ஈட்டி வரும் எண்ணத்தால்

*கடந்து செல்வதாகக் காட்டி எம்மைப் பின்னிருந்து தூண்டும் நெஞ்சமே, முருக்க மலரைப் போன்ற காண்பதற்கு இனிய சிவந்த வாயையும், அழகிய இனிய மொழியையும், ஆராய்ந் தெடுத்த அணிகளையும் அணிந்த நம் தலைவியின், குழை யுடன் மாறுபட்ட பார்வையானது மிக நீண்ட காட்டில் தோன்றித் தடுக்கும் போது நின் வாயின் மெய் போன்ற பொய்ம் மொழி எம் வருத்தத்தை எப்படிப் போக்குவ தாகும்? கூறுவாயாக!"*

## 299. பிரியின் இவள் உயிர் வாழாள்

அளி நிலை பெறாஅது அமரிய முகத்தள்,
விளி நிலை கொள்ளாள், தமியள், மெல்மெல,
நலம் மிகு சேவடி நிலம் வடுக் கொளாஅ,
குறுக வந்து, தன் கூர் எயிறு தோன்ற
வறிது அகத்து எழுந்த வாய் அல் முறுவலள்,
கண்ணியது உணரா அளவை, ஒண்ணுதல்,
வினை தலைப்படுதல் செல்லா நினைவுடன் –
முளிந்த ஓமை முதையல் அம் காட்டு,
பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி,
மோட்டு இரும் பாறை, ஈட்டு வட்டு ஏய்ப்ப,
உதிர்வன படூஉம் கதிர் தெறு கவாஅன்,
மாய்த்த போல மழுகு நுனை தோற்றி,
பாத்தியன்ன குடுமிக் கூர்ங் கல்,
விரல் நுதி சிதைக்கும் நிரை நிலை அதர,
பரல் முரம்பு ஆகிய பயம் இல், கானம்
இறப்ப எண்ணுதிர் ஆயின் – "அறத்தாறு
அன்று" என மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன ஆக என்னுநள் போல,
முன்னம் காட்டி, முகத்தின் உரையா,
ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றி,
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு,
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன் தலைத்
தூ நீர் பயந்த துணை அமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை, மா மலர்

மணி உரு இழந்த அணி அழி தோற்றம்
கண்டே கடிந்தனம், செலவே – ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ, பிரிதும் நாம் எனினே!

*– பாலை பாடிய பெருங்கடுங்கோ அக 5*

*"நெஞ்சே, ஒளி பொருந்திய நெற்றியுடைய நம் தலைவி, யான் மிகுதியாகப் பாராட்டியதால் யான் பொருள் வயின் பிரிவேன் என்று உணர்ந்து கொண்டாள் அதைப் பொறாமல் மாறுபட்ட முகத்துடன், நாம் அழைத்தலைக் கேளாமலே நாண் முதலியவற்றைத் துறந்தவளாய், மென்மெலச் செல்லும் இயல்புடையவளாய்ச் சிவந்த அடியால் நிலத்தில் சுவடு தோன்ற அண்மையில் வந்தாள் முன்பெல்லாம் பல் தோன்றாது முறுவலித்து நகும் தன் இயல்புக்கு மாறாகத் தன் கூர்மையான பற்கள் வெளிப்படுமாறு தன்னிடத்து எழுந்த மெய்ம்மை அல்லாத முறுவல் கொண்டவளாய், யான் எண்ணியதை உணரும் முன்னம் பொருள் வயின் பிரிதலை உடன்படாத எண்ணத்துடன் என்னை நோக்கி னாள். நோக்கி, காய்ந்த ஓமை மரங்களையுடைய காட்டில் நெல்லி மரத்தின் பளிங்கு போன்ற பல காய்கள் உயர்ந்த பெரிய பாறையில் சிறுவர் விளையாடுவதற்காகச் சேர்த்து வைத்த வட்டுக் காய்களைப் போல் உதிர்ந்து கிடக்கும் ஞாயிற்றின் கதிர்கள் காயும் பக்க மலைகள் அவற்றின் பதித்து வைத்தாற் போன்ற கூர்மையான பரற் கற்கள் தீட்டப் பட்டவை போல் தேய்ந்த கூர்முனையைத் தோற்றுவித்து வழியில் செல்பவரின் கால் விரல் நுனியைச் சிதைக்கும்படி கல் ஒழுங்குடையவை அவ் வழிகள் பொருந்திய பரற் கற் களையுடைய மேட்டு நிலமான வளம் இல்லாத காட்டைக் கடந்து செல்ல நீவிர் எண்ணுவீராயின்*

*'காதல் உடையவரை விட்டுப் பிரிதல் அற நெறியன்று' எனக் கூறிய உம் வாயிற் பிறந்த பழைமையான சொல் அங்ஙனம் கூறிய அளவிலேயே கழிக என்று எனக்குக் கூறுபவள் போல், தன் முகத்தின் குறிப்புக் காட்டி அறி வித்து, ஓவியத்தின் முகத்தில் காணப்படும் அதன் உள்ளக் குறிப்பைப் போன்று என் முகத்தில் தோன்றும் மெய்ப்*

*பாட்டால் தோன்றும் கருத்தை உணர்ந்தாள் அதனை உணர்ந்த அளவில் கண்ணில் நீர் பெருகிக் கண் பாவையை மறைத்துத் ததும்பும் துன்பக் கண்ணீருடன் கூடிய நோக்கத் துடன், தன் மார்பில் அணைத்துக் கொண்ட மகனின் புல்லிய தலையில் சூட்டப் பட்ட தூய நீரில் தோன்றிய செங்கழுநீர் மாலையை மோந்து நெடு மூச்செறிந்தாள் அப்போது அம் மாலையில் உள்ள மலர் பவளம் போன்ற வடிவை இழந்தது அக் காட்சியைக் கண்டு யாம் இவளைப் பிரிந்து செல்வதைத் தவிர்ந்தேம்*

*ஆகவே, யாம் பக்கத்தில் இருக்கவும், நாம் பிரிந்து செல்வோம் என இவ்வாறு நினைந்து வருந்தும் இயல்புடைய நம் காதலி, யாம் நினைத்த படியே பிரிந்து செல்வோம் என்றால் உயிர் வாழாள் என்பது திண்ணம் எனவே நாம் செல்லுவது எங்ஙனம்?" என்று பொருள் வயிற் பிரியக் கருதிய தலைவன் தன் நெஞ்சிற்குச் சொன்னான்*

## 300. கண்டதுண்டோ என் மகனை?

முலை முகம்செய்தன; முள் எயிறு இலங்கின;
தலை முடிசான்ற; தண் தழை உடையை;
அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல்;
மூப்புடை முது பதி தாக்கு அணங்கு உடைய;
காப்பும் பூண்டிசின்; கடையும் போகலை;
பேதை அல்லை – மேதைஅம் குறுமகள்!
பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை, புறத்து என,
ஒண் சுடர் நல் இல் அருங் கடி நீவி,
தன் சிதைவு அறிதல் அஞ்சி – இன் சிலை
ஏறுடை இனத்த, நாறு உயிர் நவ்வி! –
வலை காண் பிணையின் போகி, ஈங்கு ஓர்
தொலைவு இல் வெள் வேல் விடலையொடு, என் மகள்
இச் சுரம் படர் தந்தோளே, ஆயிடை,
அத்தக் கள்வர் ஆ தொழு அறுத்தென,
பிற்படு பூசலின் வழிவழி ஓடி,
மெய்த் தலைப்படுதல் செல்லேன் இத் தலை,
நின்னொடு வினவல் கேளாய்! – பொன்னொடு

புலிப் பல் கோத்த புலம்ப மணித் தாலி
ஒலிக் குழைச் செயலை உடை மாண் அல்குல்,
ஆய் சுளைப் பலவின் மேய் கலை உதிர்த்த
துய்த் தலை வெண் காழ் பெறூஉம்
கல் கெழு சிறுகுடிக் கானவள் மகளே. – *கயமனார் அக 7*

*இனிய முழக்கம் உடைய ஆண் மானான இனத்தை உடைய உயிர்ப்புத் தோன்றும் இளைய மானே, என் மகளை நோக்கி 'அறிவை உடைய என் இளைய மகளே, உனக்குக் கொங்கைகள் அரும்பின முள் போன்ற பற்கள் விழுந்து புதிய பற்கள் தோன்றி ஒளிவிட்டன நின் தலையில் கோதை முடிப்பதற்கு உடையாக உடையை, ஆதலால் நீ சுழன்று திரியும் ஆயத்தாருடன் எங்கும் செல்லாதே பழமை மிக்க இவ் ஊரின் இடங்கள் தாக்கி வருந்தும் தெய்வங்களை உடையன ஆதலால் இனி நீ நின்னையே காக்கும் காவலையும் மேற்கொள்க நம் முன்றிலின் பக்கத்தும் போகாதே இனி நீ பேதைப் பருவத்தை உடையவள் அல்லை பெதும்பைப் பருவத்திலும் வெளியே போனாய்' என்று யான் கடிந்து கூறினேன் அதைக் கேட்டுப் பொன்னால் ஆன புலிப்பல் கோக்கப்பட்ட தனிமணித் தாலியையும் தழைத்த அசோகின் தளிரால் ஆன தழையுடையால் சிறப்புற்ற அல்குலையும் உடைய, பலாவினது சிறந்த சுளைகளை உண்ணும் முசுக் கலைகளால் உதிர்க்கப்பெற்ற வெண்மையான பலா மரத்தின் வித்துகள் எங்கும் எளிதாகப் பொறுக்கி எடுக்கின்ற மலையில் பொருந்திய சிறு குடியை யுடைய, கானவன் மகளான என் மகள் தன் குற்றத்தை நான் அறிந்தற்கு அஞ்சி மிக்க ஒளியுடைய எங்கள் நல்ல இல்லத்தின் அரிய காவலைக் கடந்து, வலையைக் கண்ட பெண்மான் அதனிற்று தப்பி ஓடுமாறு போலத் தோல்வியறியாத வேலையுடைய ஒரு தலைவனுடன் இக் காட்டில் உள்ள இந்த வழியில் சென்று விட்டாள் அப்போதே அரிய காட்டில் கள்வர் பசுக்களைத் தொழுவினின்று கவர்ந்து கொண்டு, செல்லவும், அவர் பின்னால் சென்று கரந்தையார் செய்யும் போரைப் போல, பின்னால் விரைந்து சென்றேன் அவள் உருவத்தைக் காணேன் ஆதலால் மானே, அவளை நீ பார்த்தாயோ?*

*என்று நின்னைக் கேட்டேன் அவர்கள் சென்ற நெறியை எனக்குக் கூறுவாயாக" என்று மகட் போக்கிய தாய் சுரத்திடைச் சென்று மானினைக் கண்டு வினவினாள்*

## 301. காதலிபாற் சென்ற என் நெஞ்சம்!

கொல் வினைப் பொலிந்த, கூர்ங் குறும் புழுகின்,
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்பு நுனை ஏய்ப்ப அரும்பிய இருப்பை,
செப்பு அடர் அன்ன செங் குழை அகம்தோறு,
இழுதின் அன்ன தீம் புழல் துய்வாய்
உழுது காண் துளைய ஆகி, ஆர் கழல்பு,
ஆலி வானின் காலொடு பாறி,
துப்பின் அன்ன செங் கோட்டு இயவின்,
நெய்த்தோர் மீமிசை நிணத்தின் பரிக்கும்
அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர் –
கொடு நுண் ஓதி மகளிர் ஒக்கிய
தொடி மாண் உலக்கைத் தூண்டு உரல் பாணி,
நெடு மால் வரைய குடிஞையோடு இரட்டும்
குன்று பின் ஒழியப் போகி, உரம் துரந்து,
ஞாயிறு படினும், 'ஊர் சேய்த்து' எனாது,
துனை பரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும், விரைந்து வல் எய்தி, பல் மாண்
ஓங்கிய நல் இல் ஒரு சிறை நிலைஇ,
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவி,
கன்று புகு மாலை நின்றோள் எய்தி,
கை கவியாச் சென்று, கண் புதையாக் குறுகிப்,
பிடிக் கை அன்ன பின்னகம் தீண்டித்,
தொடிக் கை தைவரத் தோய்ந்தன்றுகொல்லோ –
நாணொடு மிடைந்த கற்பின், வாள் நுதல்,
அம் தீம் கிளவிக் குறுமகள்
மென் தோள் பெற நசைஇச் சென்ற என் நெஞ்சே?

*– கல்லாடனார் அக 9*

*"நாணம் என்ற குணத்துடன் கலந்துள்ள கற்பு என்ற பண்பையும் ஒளியுடைய நெற்றியையும் அழகிய இனிய*

சொல்லையும், இளமையையும் உடைய எம் தலைவியின் மென்மையான தோளைப் பெற்று மகிழ்தற்கு மிகவும் விரும்பி எமமைக் கைவிட்டுச் சென்றது எமது உள்ளம் வில் வீரர் தம் அம்புக்கூடு நிறைய இட்ட கொல்லும் தொழிலால் சிறப்புப் பெற்ற கூர்மையும் குப்பியும் உடைய அம்புகளின் நுனியைப் போன்று இருப்பை மொட்டுகள் மலர்ந்தன இருப்பையின் ஒருங்கே செறிந்து அரும்பியுள்ள செப்புத் தகட்டைப் போன்ற சிவந்த தளிர்களிடந்தோறும் நெய் போன்ற இனிய துளையையுடைய பூக்கள் விளங்கின அவை தம் ஆர்க்குக் கழன்று, காம்பினை விலக்கிக் காணத் தக்க துளையை உடையனவாய் விளங்கின அவை வானத்திினின்று விழும் பனிக்கட்டியைப் போல் காற்றாலே சிதறுண்டு பவளம் போன்ற சிவந்த மேட்டு வழிகளில் குருதியின் மேல் கிடக்கும் நிணங்கள் போன்று விரவிக் கிடக்கும் அரிய வழிகளை யுடைய சிறிய ஊர் அந்த ஊரில், வளைந்த கூந்தலை உடைய மகளிர் அவர்கள் பூணால் சிவந்த உலக்கையால் மலை நெல்லைக் குற்றும் உரலினின்றும் எழும் ஒலி, பெரிய பக்க மலையில் உள்ள ஆந்தை ஒலியுடன் மாறி மாறி ஒலிக் கும் குன்றுகள், அவை பிற்பட்டுக் கிடக்கச் சென்று, கதிரவன் மறையினும் ஊர் தொலைவில் உள்ளது எனக் கருதாமல் விரைவில் செல்லும் குதிரைகளை மேலும் விரை வாகச் செலுத்தவேண்டும் எனச் செலுத்துகின்ற மடிதல் இல்லாத போக்கை உடைய எம்மைவிட எம் மனம் விரைந்து போய், பல கட்டுக்களால் சிறப்புற உயர்ந்த நல்ல வீட்டில் ஓரிடத்தில் நின்று என் வருகையை நினைந்து நற்குறியைக் குறிக்கும் பக்கத்தில் பல்லி சொல்லும் போதெல்லாம் அதனைப் போற்றி வாழ்த்திப் பசுவின் கன்றுகள் இல்லத்துக்கு வரும் மாலைக் காலத்தே நின்ற நம் தலைவியை அடைந்து, கையைக் கவித்துக்கொண்டு போய் நெருங்கி அவளது கண்ணைப் புதைத்துப் பெண் யானையின் துதிக்கையைப் போன்ற கூந்தலைத் தீண்டி, அவளது வளையல் அணிந்த கை பொருந்தத் தழுவியதோ!" என்று வினைமுற்றி மீண்ட தலைவன் தேர்ப்பாகனிடம் கூறினான்

## 302. இரவுக் குறிவரின் தலைவி உயிர் வாழாள்

வானம் ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம்
நெருப்பு எனச் சிவந்த உருப்பு அவிர் அம் காட்டு,
இலை இல மலர்ந்த முகை இல் இலவம்
கலி கொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த
அம் சுடர் நெடுங் கொடி பொற்பத் தோன்றிக்,
கயம் துகள் ஆகிய பயம் தபு கானம்,
எம்மொடு கழிந்தனர்ஆயின், கம்மென
வம்பு விரித்தன்ன பொங்கு மணற் கான் யாற்றுப்
படு சினை தாழ்ந்த பயில் இணர் எக்கர்
மெய் புகுவு அன்ன கை கவர் முயக்கம்
அவரும் பெறுகுவர் மன்னே! நயவர,
நீர் வார் நிகர் மலர் கடுப்ப, ஓ மறந்து
அறு குளம் நிறைக்குந போல, அல்கலும்
அழுதல் மேவல ஆகிக்,
பழி தீர் கண்ணும் படுகுவமன்னே! — *ஔவையார் அக 11*

*"வானில் உலவும் விளங்கும் ஒளியையுடைய ஞாயிற்று மண்டிலமானது தீயைப் போன்று சுட்டதால் வெப்பமானது கானல் நீராகத் திகழும் காடு அக் காட்டில் இலைகள் இல்லாமல் அரும்பு இல்லாமல் மலர்ந்த இலவ மரங்கள், ஆரவாரம் உடைய மகளிர் கூட்டம் மகிழ்ந்து எடுத்த அழகிய கார்த்திகை விளக்குகளின் ஒழுங்கு போல் விளங்கின்றன அங்குக் குளங்கள் துகள் படிந்திருக்கும் மழை வளம் தவறிய காடு அத்தகைய காட்டில் நம் தலைவர் நம்மை உடன் அழைத்துச் சென்றால், மார்புக் கச்சினை ஒருவகை ஆடை விரித்து வைத்தாற்போன்று விளங்கும் மணல் மிக்க காட்டாற்றின், மிகுந்த பூங் கொத்துக்களையுடைய பெரிய மரக்கிளைகள், தாழ்ந்த மணல் மேட்டில், உடல்கள் ஒன்றில் ஒன்று புகுவதைப் போன்று கை விரும்பும் அணைதலை அன்பு தோன்ற அவரும் பெறுவர் என் குற்றம் இல்லாத கண்களும் நீரைச் சிந்தும் மலரைப் போன்று ஒழிதலின்றி, நீர் வற்றிய குளத்தை நிறைக்கும் கால்வாய்களைப் போன்று, நாள்தோறும் அழுது கண்ணீர் வடித்தலைப் பொருந்தாதன*

வாய் இன்பம் உண்டாகத் துயில்வோம் இவ்வாறு இரு வகையிலும் இன்பம் உண்டாகும் செயலைச் செய்திலர் என்பதற்கே வருந்துகிறேன் பிரி வாற்றாது வருந்துவேன் அல்லேன்" என்று தோழிக்குப் பொறுத்திருப்போர் எனத் தலைவி கூறினாள்

## 303. தேடும் பொருட்குக் குறை ஒழிக!

தென் கடற் பிறந்த முத்தின் ஆரமும்,
முனை திறை கொடுக்கும் துப்பின், தன் மலைத்
தெறல் அரு மரபின் கடவுட் பேணி,
குறவர் தந்த சந்தின் ஆரமும்,
இரு பேர் ஆரமும் எழில் பெற அணியும்,
திரு வீழ் மார்பின் தென்னவன் மறவன் –
குழியில் கொண்ட மராஅ யானை
மொழியின் உணர்த்தும் சிறு வரை அல்லது,
வரை நிலை இன்றி இரவலர்க்கு ஈயும்,
வள் வாய் அம்பின், கோடைப் பொருநன் –
பண்ணி தைஇய பயம் கெழு வேள்வியின்,
விழுமிது நிகழ்வது ஆயினும் – தெற்கு ஏர்பு,
கழி மழை பொழிந்த பொழுது கொள் அமையத்து,
சாயல் இன் துணை இவட் பிரிந்து உறையின்,
நோய் இன்றாக செய்பொருள்! வயிற்பட
மாசு இல் தூ மடி விரிந்த சேக்கை,
கவவு இன்புறாமைக் கழிக – வள வயல்
அழல் நுதி அன்ன தோகை ஈன்ற
கழனி நெல் ஈன் கவைமுதல் அலங்கல்
நிரம்பு அகன் செறுவில் வரம்பு அணையாத் துயல்வர,
புலம்பொடு வந்த பொழுது கொள் வடை,
இலங்கு பூங் கரும்பின் ஏர் கழை இருந்த
வெண் குருகு நரல, வீசும்
நுண் பல் துவலைய தண் பனி நாளே!

*– பெருந்தலைச் சாத்தனார் அக 13*

தனது தென் கடலில் பிறந்த முத்தாகிய ஆரமும், பகைவர் திறைப் பொருளாகக் கொடுக்கும் வலிமையுடைய

தான தனது பொதிய மலையில் பகைவரால் வெல்வதற்கு அரிய குறவர் முருகனை வணங்கித் தந்த நறிய சந்தனமாகிய ஆரமும், ஆகிய இந்தப் பெரிய இருவகை ஆரங்களையும் அழகுற அணிபவன் பாண்டிய மன்னன் அவனுடைய படைத் தலைவனும், குடியினின்று பிடிக்கப்பட்ட, பழகாத காட்டு யானைகளை உரிய மொழிகளால் தொழிலை அறிவிக்கும் சிறிது காலமே அல்லாது தனக்கென வரைந்து வைத்துக் கொள்ளும் தன்மையில்லாது இரவலர்க்கு ஈந்துவிடும் வள்ளன்மை கொண்ட கூர்மை வாய்ந்த அம்பையுடைய கோட்டூர்க்குத் தலைவன் பண்ணி என்பவன் அவன் போர்க் களத்தில் செய்த களவேள்வியைப் போல நீவிர் தேடி வரும் பொருளால் சிறந்த பயன் விளைவதானாலும், முகில்கள் தெற்கே எழுந்து போய் மிகுந்த மழையைப் பெய்யும் கூதிர்ப் பருவத்தை உலகம் கொள்ளுகின்ற காலம் பிரிந்து வாழ இயலாத காலம் அக் காலத்தில் உனக்கு இனிய துணையான மென்மை வாய்ந்த இவளைப் பிரிந்து போய் வேற்று நாட்டில் தங்குவீரானால், வளம் மிகுந்த வயலில், தீக் கொழுந்தைப் போன்ற தோடுகளை ஈன்ற, வயல் நெல்லின் பலவாய்க் கிளைத்த முதலிலிருந்து தோன்றிய நெற்கதிர்கள் நிரம்பிய வயலிடத்து வரப்புகளை அணையாகக் கொண்டு கிடந்து அலையத் தனிமைத் துன்பத்தைக் கொண்டு வரும் பனிக்கால வாடைக் காற்று விளங்கும் பூக்களையுடைய கரும்பின் ஓங்கிய தண்டின் மீதிருந்த வெண் நாரை ஒலிக்கும்படி வீசும் நுட்பமான பலவான துளிகளைக் கொண்ட குளிர்ந்த காலத்தில், பொருள் ஈட்டும் பொருட்டாக நீ அயல் நாட்டில் தங்கின், எம் தலைவி வெள்ளாடை விரிக்கப் பட்ட படுக்கையில் தழுவும் இன்பம் அடையாமல் அப் பனிக்காலம் கழியினும் கழிக அது பற்றி நான் கவலவில்லை நீ தேடுகின்ற பொருளுக்கு எக் குறையும் வராமல் இருக்க வேண்டுமே, அதுபற்றியே கவலை கொள்கின்றேன்.

## 304. சென்ற ஊர் நன் மக்களை உடையதாகுக!

எம் வெங் காமம் இயைவது ஆயின்,
மெய்ம் மலி பெரும் பூண், செம்மற் கோசர்

கொம்மைஅம் பசுங் காய்க் குடுமி விளைந்த
பாகல் ஆர்கைப் பறைக் கட் பீலித்
தோகைக் காவின் துளுநாட்டு அன்ன,
வறுங் கை வம்பலர்த் தாங்கும் பண்பின்
செறிந்த சேரிச் செம்மல் மூதுர்,
அறிந்த மாக்கட்டு ஆகுகதில்ல —
தோழிமாரும் யானும் புலம்ப,
சூழி யானைச் சுடர்ப் பூண் நன்னன்
பாழி அன்ன கடியுடைய வியல் நகர்ச்
செறிந்த காப்பு இகந்து, அவனொடு போகி
அத்த இருப்பை ஆர் கழல் புதுப் பூத்
துய்த்த வாய, துகள் நிலம் பரக்க,
கொன்றை அம் சினைக் குழற்பழம் கொழுதி,
வன் கை எண்கின் வய நிரை பரக்கும்—
இன் துணைப் படர்ந்த கொள்கையொடு ஒராங்கு,
குன்ற வேயின் திரண்ட என்
மென் தோள் அஞ்ஞை சென்ற — ஆறே!

*— மாமூலனார் அக 15*

*"தோழியரும், அன்னையான யானும், தனிமை அடைந்து வருந்த எங்களைக் கைவிட்டுப் போனாள் முகபடாத்தை உடைய யானையையும், ஒளிரும் அணிகலன்களையும் உற்ற நன்னன் என்ற குறுநில மன்னனின் தலைநகரம் பாழி அந் நகரத்தைப்' போன்ற காவலையுடையது எம் இல்லம் இதில் உள்ள செறிந்த காவலையும் கடந்து தலைவனுடன் புறப் பட்டுத் தன் இனிய துணைவனை நினைந்த எண்ணத்தால் ஒருங்கு கூடி மலை மூங்கிலைப் போல் திரண்ட மென்மை யான தோளையுடைய என் மகள் சென்றாள் சென்று அடைந்ததும், அரிய சுரத்தில் உள்ள இருப்பை மரத்தின் புதிய பூக்களைத் தின்ற வாயை உடையனவாய் நிலத்தில் தூசி பறக்கச் சென்று கொன்றையின் கிளைகளில் உள்ள குழலைப் போன்ற காய்களைக் கோதி, வலிய கைகளையுடைய கரடி களின் கூட்டம் பரந்து செல்லும் இயல்புடையது அவள் சென்ற நெறி அந் நெறி, எமது மிக்க விருப்பம் கை கூடுவ தாயின் மெய்ம்மை பேசுவதால் சிறந்த பெரிய அணிகளை*

அணிந்து தலைமை சான்ற கோசர்களின் திரண்ட பசிய காய் முற்றின பாகற் பழத்தைத் தின்னும், பறை போன்ற வட்டமான கண்களையுடைய, தோகைகளையுடைய மயில்கள் மிக்க சோலைகளைப் பெற்ற துளு நாட்டைப் போன்று, பொருளில்லாதவராய் வரும் புதியவரைப் புரக்கும் நல்ல பண்புடைய நெருங்கிய சேரிகளைக் கொண்ட தலைமை யுடைய முதிய ஊர்களில் முகமறிந்த மக்களை உடையதாகுக," என்று மகள் போக்கிய தாய் உரைத்தாள்

## 305. என் மகள் வல்லவளோ பாலையில் செல்ல?

வளம் கெழு திரு நகர்ப் பந்து சிறிது எறியினும்,
இளந் துணை ஆயமொடு கழங்கு உடன் ஆடினும்,
'உயங்கின்று, அன்னை! என் மெய்' என்று அசைஇ,
மயங்கு வியர் பொறித்த நுதலள், தண்ணென,
முயங்கினள் வதியும்மன்னே! இனியே,
தொடி மாண் சுற்றமும் எம்முள் உள்ளாள்,
நெடு மொழித் தந்தை அருங் கடி நீவி,
நொதுமலாளன் நெஞ்சு அறப் பெற்ற என்
சிறு முதுக்குறைவி சிலம்பு ஆர் சீறடி
வல்லகொல், செல்லத் தாமே – கல்லென
ஊர் எழுந்தன்ன உரு கெழு செலவின்,
நீர் இல் அத்தத்து ஆர் இடை, மடுத்த,
கொடுங் கோல் உமணர், பகடு தெழி தெள் விளி
நெடும் பெருங் குன்றத்து இமிழ் கொள இயம்பும்,
கடுங் கதிர் திருகிய வேய் பயில், பிறங்கல்
பெருங் களிறு உரிஞ்சிய மண் அரை யாஅத்து
அருஞ் சுரக் கவலைய அதர் படு மருங்கின்,
நீள் அரை இலவத்து ஊழ் கழி பல் மலர்,
விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்,
நெய் உமிழ் சுடரின் கால் பொரச் சில்கி,
வைகுறு மீனின் தோன்றும்
மை படு மா மலை விலங்கிய சுரனே? – *கயமனார் அக 17*

"செல்வம் பொருந்திய அழகிய மனையில் சிறிது நேரம் பந்து ஆடினாலும், தன் இளைய துணைவரான தோழி

யருடன் கழங்காட்டம் ஆடினாலும், 'தாயே, என் உடல் வருந்துகின்றது' என்று தளர்ந்து வியர்வை பொருந்திய நெற்றியுடையவளாய் என்னுடல் குளிருமாறு என்னைத் தழுவிக் கொள்வாள் என் மகள்! அந்தோ, அஃது இப்போது கழிந்தது! அத்தகைய இயல்புடையவள் வளையலை அணிந்த தோழியரையும் எம்மையும் நினைத்துப் பாராதவளாய், மிக்க புகழையுடைய தன் தந்தையின் அரிய காவலைக் கடந்து சென்றாள் சென்று, 'கல்' என்ற ஓசையுடன் ஓர் ஊரே எழுந்து போவதைப் போன்ற அச்சம் மிகுந்த, செல்லுதலை யுடைய கொடிய கோல்களையுடைய உப்பு வாணிகர் நீர் இல்லாத அரிய இடங்களில் தடைப்படும் போதெல்லாம் தம் காளைகளை அதட்டி ஓட்டுபவர். அங்ஙனம் ஓட்டும் தெளிந்த ஒலியானது நெடிய பெரிய மலையிலே தாக்குண்டு எதிரொலிக்கும் கடும் வெயிலில் முறுகிய மூங்கில்கள் மிகுந்து வளர்ந்துள்ள பக்க மலையிடங்களையுடையது பெரிய ஆண் யானைகள் உராய்ந்ததால் சேற்று மண்ணை யுடைய அடிப் பகுதியைக் கொண்ட யா மரங்களையுடையது அரிய பாலை. அதன் பிளவுபட்ட வழிகளில் பொருந்திய பக்கங்களில், நீண்ட அடியைக் கொண்ட இலவ மரத்தின் முதிர்ந்த பல மலர்கள், விழாக்களைத் தன்னிடத்தே கொண்ட பழைய வெற்றியுடைய முதிய ஊரில், நெய்யை வார்த்த விளக்கின் சுடர் விழுவதைப்போல் விழும்படி காற்று வீசுவ தால் எஞ்சியுள்ளவை சிலவாகி, விடியற் காலத்துக் காணப் படும் விண் மீன் போல் தோன்றும் இத்தகைய இயல் புடைய முகில்கள் தங்கும் பெரிய மலைகள் குறுக்கிட்டு நிற்கும் காட்டு வழியில் சென்றாள் என் மகள்

அங்ஙனம் அவள் செல்வதற்கு, அயலவரின் மனத்தைத் தனக்கே உரியதாகப் பெற்ற என் சிறிய மூதறிவினையுடைய வளின் சிலம்பு அணிந்த சிறிய அடிகள் வல்லமை உடையனவோ? என்று வினவினாள் மகட் போக்கிய செவிலித் தாய

## 306. மறவாதே எம்மை

அன்று அவண் ஒழிந்தன்றும் இலையே; வந்து நனி
வருந்தினை – வாழி, என் நெஞ்சே! – பருந்து இருந்து

உயா விளி பயிற்றும், யா உயர், நனந்தலை,
உருள் துடி மகுளியின் பொருள் தெரிந்து இசைக்கும்
கடுங் குரற் குடிஞைய நெடும் பெருங் குன்றம்,
எம்மொடு இறத்தலும் செல்லாய்; பின் நின்று,
ஒழியச் சூழ்ந்தனைஆயின், தவிராது,
செல் இனி; சிறக்க, நின் உள்ளம்! வல்லே
மறவல் ஓம்புமதி, எம்மே – நறவின்
சேயிதழ் அனைய ஆகி, குவளை
மா இதழ் புரையும் மலிர் கொள் ஈர் இமை,
உள்ளகம் கனல உள்ளுதொறு உலறி,
பழுங்கண் கொண்ட, கலிழ்ந்து வீழ், அவிர் அறல்
வெய்ய உகுதர, வெரீஇ, பையென,
சில் வளை சொரிந்த மெல் இறை முன்கை
பூ வீ கொடியின் புல்லெனப் போகி,
அடர்செய் ஆய் அகல் சுடர் துணை ஆக,
இயங்காது வதிந்த நம் காதலி
உயங்கு சாய் சிறுபுறம் முயங்கிய பின்னே!

*– பொருந்தில் இளங்கீரனார் அக 19*

“என் நெஞ்சே, வாழி! நீ நாம் புறப்படும் நாளன்று நான் வரமாட்டேன் என்று சொல்லி இல்லத்திலேயே தங்கி விட்டாயுமில்லை இத்துணையும் வந்து மிகுதியாக வருத்தம் அடைந்தாய் பருந்து, தங்கி வழிச் செல்பவர் வருத்தம் அடையும் படியான ஓசையைப் பலகாலும் செய்யும் யா மரங்கள் உயர்ந்த அகன்ற இடங்கள் அங்கு உருளும் இழுகு பறையின் ஓசையினைப் போல் பொருள் தெரிய ஒலிக்கும் கடுமையான குரலைக் கொண்ட ஆந்தைகள் உள்ள நீண்ட பெரிய மலை இவற்றை எம்முடன் தொடர்ந்து வந்து கடக்கவும் செய்ய மாட்டாய் பின்னால் தங்கி விட எண்ணு வாயானால் தடை இல்லாது இப்போதே விரைவாகப் போவாயாக! உன் உள்ளம் எண்ணியது நிறைவேறுவதாகுக! முன்பு குவளை மலரின் கரிய இதழைப் போன்ற நீர் மிகுதல் கொண்ட கண்களின் இமை, பின்பு நறவம் பூவின் சிவந்த இதழைப் போன்று விளங்கி உள்ளம் கொதித்தலால் நினைக்கும் போதெல்லாம் வற்றித் துன்பம் கொள்வதற்குக்

*காரணமான விரைந்து விழுகின்ற கண்ணீர்த் துளிகள் வெம்மை உடையனவாய்ச் சொரிய அதனால் அவள் தன் நிலைமை மற்றவர் அறிவர் என்று அஞ்சி, நாம் பிரிந்த போதே கழன்று விழுந்த வரிகளையுடைய முன் கைகள், மலர்கள் உதிரப் பெற்ற பூங்கொடிகள் போல் பொலிவின்றி விளங்கு மாறு மெல்லச் சென்று பொன் தகட்டால் ஆன அழகிய அகலிடத்துத் தான் ஏற்றிய விளக்கே துணையாய், எங்கும் இயங்க வன்மையற்று ஓரிடத்தே தங்கியுள்ளாள் இத்தகைய நம் காதலியின் வருந்தி மெலிந்த பிடரைத் தழுவிப் பின்பு எம்மை மறத்தலை நீக்குவாயாக" என்று பொருள் தேடும் நெஞ்சினன், பிரிந்த தலைவன், தலைவியின் நலனை நயந்து நினைந்த நெஞ்சுக்குக் கூறினான்*

## 307. என்னோடு இப்போதே வருக

மனை இள நொச்சி மௌவல் வால் முகைத்
துணை நிரைத்தன்ன, மா வீழ், வெண் பல்,
அவ் வயிற்று, அகன்ற அல்குல், தைஇத்
தாழ் மென் கூந்தல், தட மென் பணைத் தோள்,
மடந்தை மாண் நலம் புலம்பச், சேய் நாட்டுச்
செல்லல் என்று, யான் சொல்லவும், ஒல்லாய்,
வினை நயந்து அமைந்தனை ஆயின், மனை நகப்
பல் வேறு வெறுக்கை தருகம் – வல்லே
எழு இனி, வாழி, என் நெஞ்சே! – புரி இணர்
மெல் அவிழ் அம் சினை புலம்ப வல்லோன்
கோடு அறை கொம்பின் வீ உகத் தீண்டி,
மராஅம் அலைத்த மண வாய்த் தென்றல்,
சுரம் செல் மள்ளர் சுரியல் தூற்றும்
என்றூழ் நின்ற புன் தலை வைப்பில்,
பருந்து இளைப்படூஉம் பாறு தலை ஓமை
இருங் கல் விடரகத்து, ஈன்று இளைப்பட்ட,
மென் புனிற்று அம் பிணவு பசித்தெனப் பைங் கண்
செந்நாய் ஏற்றை கேழல் தாக்க,
இரியற் பிணவல் தீண்டலின், பரீஇச்
செங் காய் உதிர்ந்த பைங் குலை ஈந்தின்

பரல் மண் கவல முரண் நிலம் உடைத்த
வல் வாய்க் கணிச்சி, கூழ் ஆர், கோவலர்
ஊறாது இட்ட உவலைக் கூவல்,
வெண் கோடு நயந்த அன்பு இல் கானவர்
இகழ்ந்து இயங்கு இயவின் அகழ்ந்த குழி செத்து,
இருங் களிற்று இன நிரை, தூர்க்கும்
பெருங் கல் அத்தம் விலங்கிய காடே.

*– காவன் முல்லைப் பூதனார் அக 21*

*"என் நெஞ்சமே, நம் காதலி, வீட்டின் முன் பக்கத்தில் வளர்ந்துள்ள நொச்சியின்மீது படர்ந்துள்ள முல்லைக் கொடியினது வெண்மையான அரும்புகளை வரிசையாய் வைத்தாற் போன்ற, வண்டுகள் விரும்புதற்குக் காரணமான வெண்மையான பற்கள், அழகிய வயிறு, பரந்த அல்குல், பின்னப்பட்டுத் தாழ்ந்த கூந்தல், மெல்லிய மூங்கில் போன்ற, தோள் ஆகியவற்றை உடையவள் அவளது மாட்சிமை யுடைய பெண்மை நலம் முழுவதும் துணையின்றித் தனிமை அடைந்து வருந்துமாறு அவளைப் பிரிந்து தொலைவில் உள்ள நாட்டுக்குச் செல்லாதே என்று யான் சொல்லவும் நீ அதற்கு உடன் படாமல் பொருளீட்டுதலை விரும்பி இது வரை வந்தாய் ஆதலால், நீ எண்ணியபடியே வினைமீது சென்று நம் இல்லம் விளக்கம் அடையுமாறு பலவகைப் பட்ட செல்வங்களையும் முயன்று திரட்டி வருவோம்! இன்பத்தை விரும்பாதே! வலப்பக்கமாகச் சுரிந்த பூங் கொத்துகள் மெத்தென்று மலர்கின்ற அழகிய கிளைகள் அம் மலர்கள் உதிரப் பெற்று வறிதாகுமாறு உடல் வலிமை யுடையவன் ஒருவன் அக் கிளைகளை அடிக்கின்ற கோல் போன்று மலர்கள் உதிரப் புடைத்து மரா மரத்தை அசைத்த லால், அம் மலரின் மணம் தனக்கும் வாய்க்கப் பெற்றது தென்றற் காற்று அது, பாலை நில வழியில் செல்லும் போர் மறவரின் சுருண்ட மயிரின் மீது அந்த மலர்களைச் சொரியும் அங்கு வெயிலின் வெப்பம் நிலைத்து நிற்கும் இடங்களை உடையவை ஊர்கள்*

*அத்தகைய ஊர்களில் பருந்துகள் முட்டையிட்டு அடை காப்பதற்கு இடமான வற்றிச் சிதறிய நுனிகளையுடைய ஓமை*

*மரங்களையுடைய மலையின் குகையுள் குட்டிகளை ஈன்று அவற்றைக் காக்கின்ற ஈன்றணிமையுடைய பெண்நாய், பசி யோடிக்கும் என எண்ணி இரங்கிப் பசுமையான கண்ணை யுடைய செந்நாயான ஆண் நாய், தன் பெட்டைக்கு இரை தருதற்காக, ஆண் பன்றியைத் தாக்கி வீழ்த்தும் அதனால், அச்சத்தால் கெட்டு ஓடும் பெண் பன்றி உராய்தலால அறு பட்டுச் செங்காய்கள் உதிர்ந்த பசிய குலைகளையுடைய ஈந்தின் முதிராத விதைகள் பரவிய மண்ணையுடைய வன்னிலம் அதைக் கூழுண்ணும் இயல்புடைய, கிணற்றைத் தோண்டும் தொழிலுடையோர் தம் வலிய வாயையுடைய குந்தாலியால் தோண்டுவர் அதினின்று நீர் வராமையினால் கைவிட்டுப் போவர் சருகுகள் நிரம்பிய வறிய கிணறு அது*

*அக் கிணற்றை, பெரிய ஆண் யானைகளும் அவற்றின் பெண் யானைகளும் கன்றும் ஆகிய கூட்டம், தம் வெண்மை யான கொம்புகளைக் கொள்ள எண்ணிய அன்பில்லாத கொடியவர்களான வேடர்கள் தமக்குத் துன்பம் வரும் என எண்ணாமல் தம் மனம் போனபடி திரியும் வழியில், தம்மை வீழ்த்திப் பற்றிக் கொள்வதற்காக வஞ்சகமாய்த் தோண்டிச் சருகால் மூடி வைத்த குழி என எண்ணிக் கல் முதலியவற்றால் தூர்க்கும் பெருங்கற் குவியல்கள் வழிகளைத் தடுக்கும் இத் தகைய காட்டில் யாம் செல்வதற்கு இனி நெஞ்சே இப் போதே விரைந்து எழுந்து வருவாயாக!" என்று பொருள் தேடப் பிரிந்த தலைவன் இடைவழியில் மீளலுள்ளபோது நெஞ்சிற்கு இவ்வாறு கூறினான்.*

## 308. தலைவர் மீண்டுவரும் காலம் இதுவோ?

மண்கண் குளிர்ப்ப, வீசித் தண் பெயல்,
பாடு உலந்தன்றே, பறைக் குரல் எழிலி;
புதல்மிசைத் தளவின் இதல் முட் செந் நனை
நெருங்கு குலைப் பிடவமொடு ஒருங்கு பிணி அவிழக்
காடே கம்மென்றன்றே; அவல
கோடு உடைந்தன்ன கோடற் பைம் பயிர்
பதவின் பாவை, முனைஇ, மதவு நடை
அண்ணல் இரலை அமர் பிணை தழீஇ,

தண் அறல் பருகித் தாழ்ந்துபட்டனவே;
அனையகொல் – வாழி, தோழி! – மனைய
தாழ்வின் நொச்சி, சூழ்வன மலரும்
மௌவல், மாச் சினை காட்டி
அவ் அளவு என்றார், ஆண்டுச் செய் பொருளே!

– *ஒரோடோகத்துக் கந்தரத்தனார் அக 23*

*“தோழியே! முரசின் குரல் போன்ற ஒலியையுடைய கொண்டல் இந் நிலத்தில் உள்ள இடம் எல்லாம் குளிர, மழையைப் பெய்து ஒலியடங்கியது புதரின் மீது படர்ந்த செம் முல்லையின் சிவல் முள்ளைப் போன்று சிவந்த அரும்பு, நெருங்கிய குலையையுடைய பிடாவின் அரும்புடன் ஒருங்கே கட்டவிழ்ந்து விரிந்து மலர, அதனால் காடு கம் மென்று மணம் கமழ்வதாயிற்று பள்ளங்களில் உள்ள சங்கு உடைந்தது போன்று விளங்கும் வெண்காந்தளின் பசிய பயிருடன் அறுகங்கிழங்கையும் தின்று தெவிட்டுதலால் வெறுத்துச் செருக்கிய நடையையும் தலைமையையும் உடைய ஆண் மான் பெண் மானைத் தழுவிக் குளிர்ந்த நீரைப் பருகி ஓரிடத்தே தங்கி விட்டது இல்லத்தில் உள்ள முல்லை மலரும் இடமான குறிய நொச்சியின் கரிய சினையைச் சுட்டிக் காட்டித் தாம் வேற்று நாட்டில் இருந்து பொருள் ஈட்டும் காலத்து எல்லை அம் முல்லைக் கொடி பூக்கத் தொடங்கும் கார்ப் பருவத் தொடக்கமே தாம் திரும்பிவரும் என்று கூறினார் அல்லரோ? 'இக் காலம் அதுதானோ?அதையும் தாண்டி நிற்பதோ! கூறுவாயாக!” என்று தலை மகன் பிரிந்தபோது தலைவி தோழியைக் கேட்டாள்*

## 309. விரைவில் வருவார் தலைவர்

“நெடுங் கரைக் கான்யாற்றுக் கடும் புனல் சாஅய்,
அவிர் அறல் கொண்ட விரவு மணல் அகன் துறைத்
தண் கயம் நண்ணிய பொழில்தொறும், காஞ்சிப்
பைந் தாது அணிந்த போது மலி எக்கர்,
வதுவை நாற்றம் புதுவது கஞல,
மா நனை கொழுதிய மணி நிற இருங் குயில்
படு நா விளி யானடுநின்று, அல்கலும்

உரைப்ப போல, ஊழ் கொள்பு கூவ,
இனச் சிதர் உகுத்த இலவத்து ஆங்கண்,
சினைப் பூங் கோங்கின் நுண் தாது பகர்நர்
பவளச் செப்பில் பொன் சொரிந்தன்ன,
இகழுநர் இகழா இள நாள் அமையம்
செய்தோர் மன்ற குறி" என, நீ நின்
பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப,
வாராமையின் புலந்த நெஞ்சமொடு,
நோவல், குறுமகள்! நோயியர், என் உயிர்! என,
மெல்லிய இனிய கூறி, வல்லே
வருவர் வாழி – தோழி! – பொருநர்
செல் சமம் கடந்த வில் கெழு தடக் கைப்
பொதியிற் செல்வன், பொலந்தேர்த் திதியன்,
இன் இசை இயத்தின் கறங்கும்
கல்மிசை அருவிய காடு இறந்தோரே.

*– ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் அக 25*

*"தோழியே, நீண்ட கரையையுடைய காட்டாற்றின் விரைவு மிக்க நீர் வறண்டிட, விளங்கும் அறலின் தன்மை கொண்ட மணல் பரந்த் அகன்ற துறையிடத்தில் உள்ள குளிர்ந்த மடுக்கள் பொருந்திய சோலைகளில் எல்லாம் காஞ்சி மரத்தின் அழகிய தாதுகளைக் கொண்ட மலர்கள் மிக உதிர்ந்துள்ள மணல் மேடுகள் புதிய மணம் கமழ விளங்கும் மாமரத்தின் தளிரைத் தின்ற நீலமணி போன்ற கரிய நிறமுடைய குயில்கள், இனிய தம் நாவினால் பிணக்கம் கொண்ட காதலர்க்கு இரங்கி நாள் தோறும் அவர்தம் பிணக்கைத் தீர்க்கத் தாம் நடு நிலைமை மேற்கொண்டு அறம் கூறுவது போன்று மாறி மாறிக் கூவும். கூட்டமான வண்டுகள் மலர்கள் நிறைந்த கிளைகளையுடைய கோங்க மரத்தின்மீது உதிர்த்து விட்ட நுண்ணிய தாதுகள் இலவ மலரில் வீழ்ந்தன. அவை பொன் பொடி விற்பவர் பவளச் செப்பில் அப்பொன் பொடியை வைத்தாற் போன்று தோன்றும். பிரிவால் அடையும் துயர்களைப் புறக்கணித்துப் பிரிபவரும், அங்ஙனம் பிரிய ஒண்ணாத இளவேனில் பருவத்தை அன்றோ தாம் மீண்டு வரும் பருவமாகக் குறித்துச் சென்றார் எனக் கூறி, நீ*

*நினது நோதலையுடைய மையுண்ட கண்கள் நீர் வடிந்துச் சொரிந்து கொண்டிருக்கத் தலைவர் வாராமையினால் வெறுத்த நெஞ்சுடன் வருந்தாதே*

*திதியன், போர் செய்யும் பகைவர் எதிர்த்து வரும் போரை வென்ற வில்லைக் கொண்ட கையை உடையவன் பொதிய மலைக்குரிய செல்வன்; பொன்னால் ஆன தேரினை உடையவன்; அவனது இனிய வெற்றி முரசினைப் போல் ஒலிக்கும் மலையுச்சியினின்று விழும் அருவிகளையுடைய காடுகளைத் தாண்டிப் பொருள் ஈட்டுதற்குச் சென்ற நம் தலைவர், 'இளையவளே, நீ இங்ஙனம் துன்பம் அடையு மாறு செய்த என் உயிர் வருந்துவதாக!' என்றாற் போல், இனிய சொற்களைப் பேசிக் கொண்டு விரைவாக வருவார் எனவே, கவலை கொள்ளாதே!" என்று பருவம் கண்டு அழிந்த தலைவியைத் தோழி ஆற்றுவித்தாள்*

## 310. நின் பார்வை பிரிந்துசெல்ல விடாது

"கொடு வரி இரும் புலி தயங்க, நெடு வரை
ஆடு கழை இரு வெதிர் கோடைக்கு ஒல்கும்
கானம் கடிய என்னார், நாம் அழ;
நின்றது இல் பொருட் பிணிச் சென்று இவண் தருமார்,
செல்ப' என்ப, என்போய்! நல்ல
மடவைமன்ற நீயே; வடவயின்
வேங்கடம் பயந்த வெண் கோட்டு யானை,
மறப் போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்
கொற்கை அம் பெரும் துறை முத்தின் அன்ன
நகைப் பொலிந்து இலங்கும் எயிறு கெழு துவர் வாய்
தகைப்பத் தங்கலர் ஆயினும், இகப்ப
யாங்ஙனம் விடுமோ மற்றே – தேம் படத்
தெள் நீர்க்கு ஏற்ற திரள் காற் குவளைப்
பெருந்தகை சிதைத்தும், அமையா, பருந்து பட,
வேத்து அமர்க் கடந்த வென்றி நல் வேல்
குருதியொடு துயல்வந்தன்ன நின்
அரி வேய் உண்கண் அமர்த்த நோக்கே?

*– மதுரைக் கணக்காயனார் அக 27*

"வளைந்த கோடுகளையுடைய பெரிய புலி, வெளிப் பட்டுத் தோன்ற, நீண்ட மலையில் அசையும் தண்டையுடைய வன்மையான மூங்கில்கள் அவை மேல்காற்று மோதுதலால் வளையும் அத்தகைய காட்டு நெறி. அது கொடியது என எண்ணாமல் நாம் பிரிவால் அழுது கொண்டிருக்க, ஓரிடத் தும் நிலைத்து நில்லாத பொருட் பற்றினால் பிரிந்து போய், அப் பொருளை ஈட்டிவரத் தலைவர் சுரம் செல்வர் என ஊரார் உரைப்பர் எனக் கூறும் தலைவியே, நீ பெரிதும் அறிவிலியே ஆவாய்.

"வடக்குத் திக்கில் உள்ள வேங்கடமலை தோற்றுவித்த வெண்மையான கொம்புகளைக் கொண்ட சிறந்த யானைப் படையினாலே மறத் தன்மை கொண்ட போர்த் தொழில் செய்கின்ற பாண்டிய மன்னர் அறநெறி நின்று காவல் செய்கின்ற கொற்கைப் பட்டினத்துக் கடலினது பெரிய துறையில் குளிக்கும் உயர்ந்த முத்துகளைப் போன்ற புன் முறுவலால் சிறந்து விளங்கும் நின் பற்கள் பொருந்திய, பவளம் போன்ற நின்வாய் ஒன்றே அவர் நின்னைப் பிரியாது தடுப்பதற்குப் போதுமானதன்றோ! அவ்வாறு தடுப்பதால் தடைப்பட்டுத் தங்காராயினும், தேன் உண்டாகத் தெளிந்த நீரை ஏற்ற திரண்ட தண்டையுடைய குவளை மலரின் சிறந்த அழகைக் கெடுத்தும் அமையாது, பருந்துகள் வந்து சூழ மன்னர் தம் போர்களை வென்ற வெற்றி பொருந்திய நல்ல வேல் இரத்தம் தோய்ந்து பிறழ்வது போன்ற நின் சிவந்த வரிகள் படர்ந்த மையுண்ட கண்ணின் பார்வை, அவர் உன்னை நீங்கிச் செல்ல எவ்வாறு விட்டு விடும்? விடாது ஆதலால் நீ வருந்தாதே!" என்று செலவு உணர்ந்து வேறு பட்ட தலைவிக்குத் தோழி இயம்பினாள்

## 311. நின்னிடமே இருந்தது என் நெஞ்சம்

"தொடங்கு வினை தவிரா, அசைவு இல் நோன் தாள்,
கிடந்து உயிர் மறுகுவது ஆயினும், இடம் படின்
வீழ் களிறு மிசையாப் புலியினும் சிறந்த
தாழ்வு இல் உள்ளம் தலைத்தலைச் சிறப்பச்
செய்வினைக்கு அகன்ற காலை, எஃகு உற்று

இரு வேறு ஆகிய தெரி தகு வனப்பின்
மாவின் நறு வடி போல, காண்தோறும்
மேவல் தண்டா மகிழ் நோக்கு உண்கண்
நினையாது கழிந்த வைகல், எனையதூஉம்,
வாழலென் யான்" எனத் தேற்றி, பல் மாண்
தாழக் கூறிய தகைசால் நல் மொழி
மறந்தனிர் போறிர் எம்" எனச் சிறந்த நின்
எயிறு கெழு துவர் வாய் இன் நகை அழுங்க
வினவல் ஆனாப் புனையிழை! – கேள் இனி –
வெம்மை தண்டா எரி உகு பறந்தலை,
கொம்மை வாடிய இயவுள் யானை
நீர் மருங்கு அறியாது, தேர் மருங்கு ஓடி
அறு நீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும்
உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கு அருங் கடத்திடை,
எள்ளல் நோனாப் பொருள் தரல் விருப்பொடு
நாணுத் தளை ஆக வைகி, மாண் வினைக்கு
உடம்பு ஆண்டு ஒழிந்தமை அல்லதை
மடம் கெழு நெஞ்சம் நின் உழையதுவே!

*– வெள்ளாடியனார் அக 29*

*"தலைவ, தான் தொடங்கிய வினையைக் கைவிடாத தளர்ச்சியற்ற வலிய முயற்சியினை உடையதும், பட்டினியாய் இருந்து உயிர்விட நேரிடினும் தான் வீழ்த்திய களிறு இடப் பக்கம் வீழ்ந்தால் அதைத் தின்னாதது புலி அப் புலியினை விட மேம்பட்ட தளர்ச்சியற்ற ஊக்கம் மேன்மேல் மிகப் பொருளீட்டுதற்குப் பிரிந்து சென்றீர், அக் காலத்தில், 'கத்தி யால் அறுக்கப் பெற்று இரண்டு பிளவாக விளங்கும் அழகையுடைய மாம் பிஞ்சின் பிளவைப் போன்ற, காணுந் தொறும், களிப்புக் குறையாத பார்வையையுடைய மை பூசப்பெற்ற கண்களை நினைக்காமல் கழியும் நாளில் யான் சிறிதும் உயிர் தாங்கியிரேன்' எனக் கூறித் தெளிவித்துப் பல மாண்புகளும் பொருந்தக் கூறிய அழகு மிக்க நல்ல மொழியை எம்மிடம் மறந்து விட்டீர் போலும்! எனச் சிறந்த நின் பற்கள் விளங்கும் பவளத்தை ஒத்த வாயின் இனிய நகை கெட*

வினவும் அழகிய அணிகளை அணிந்தவளே இப்போது யான் கூறுவதைக் கேட்பாயாக :

வெம்மை குறையாத தீப்பொறி பறக்கும் பாழிடத்தே உணவின்மையாலே உடலின் பருமை குறையப்பெற்ற யானைகள் நீர் உள்ள இடம் அறியாமல், கானல் நீர் தோன்றும் இடம் எல்லாம் ஓடி, நீர் இல்லாத ஆற்றில் சிக்கிக் கிடக்கும் ஓடத்தைப் போன்று வழியிடத்து வருந்திக் கிடக்கும் காடு அது நினைப்பவரை நடுங்கச் செய்யும்; ஊக்கமானது அழியும்; அத்தகைய காட்டில் சென்று, மற்றவர் இகழ்வதைப் பொறுத்துக் கொள்ளாது பொருள் ஈட்டி வரும் விருப்பத்துடன் தொடங்கிய செயலை முடிக்க வேண்டும் என்ற மானமே அத் தொழிலுடன் கட்டும் கயிறாகக் கட்டுண்டிருந்தேன்; மாட்சிமையுடைய பொருள் ஈட்டும் செயல் செய்தற்கு இன்றியமையாத என் உடல் மட்டும் அயல் நாட்டில் இருந்ததே அல்லாமல் அறியாமையுடைய என் உள்ளமோ எப்போதும் உன் பக்கத்திலேயே இருந்தது அங்ஙனமானால் உனக்குக் கூறிய மொழியை நான் மறப்பதும் முடியுமோ?" என்று வினைமுற்றி மீண்ட தலைவன், 'எம்மை நினைந்தீரோ' என்ற தலைவிக்குக் கூறினான்

## 312. தலைவரைப் பழிப்பவர் இல்லையே

நெருப்பு எனச் சிவந்த உருப்பு அவிர் மண்டிலம்
புலங்கடை மடங்கத் தெறுதலின், ஞொள்கி,
'நிலம் புடை பெயர்வது அன்றுகொல், இன்று?' என
மன் உயிர் மடிந்த மழை மாறு அமையத்து,
இலை இல ஓங்கிய நிலை உயர் யா அத்து
மேற் கவட்டு இருந்த பார்ப்பினங்கட்குக்,
கல்லுடைக் குறும்பின் வயவர் வில் இட,
நிண வரிக் குறைந்த நிறத்த அதர்தொறும்,
கணவிர மாலை இடூஉக் கழிந்தன்ன
புண் உமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண் உமிழ் கழுகின் கானம் நீந்தி
'சென்றார்' என்பு இலர் – தோழி! – சென்றோர்
வில் அலைத்து உண்ணும் வல் ஆண் வாழ்க்கைத்

தமிழ் கெழு மூவர் காக்கும்
மொழி பெயர் தேஎத்த பல் மலை இறந்தே.

*– மாமூலனார் அக 31*

தோழியே, தீயைப் போன்று சிவந்த வெம்மையுடைய ஞாயிறு விளைநிலத்தில் உள்ள பயிரைத் தீய்ந்தொழிய அழித்தது. அதனால் இன்று இவ் உலகம் குறைந்து நிலம் தன் நிலையினின்று பிறழும் காலம் வந்ததோ எனக் கூறு மாறு நிலை பெறும் உயிர்கள் இறந்து போதற்கு ஏதுவாக மழை பெய்யாது ஒழிந்த காலம் இக் காலத்தில், இலைகள் இல்லாமல் மிக ஓங்கிய நிலையையுடைய யா மரத்தின் மேல் உள்ள கழுகுகள் தம் குஞ்சுகளுக்கு, கற்களை உடைய சிறிய ஊரில் உள்ள மறவர்கள் அம்புகளை எய்வதால் பொலி வில்லாத வழிகள் தோன்றும் செவ்வரி மாலை அணியப் பட்டுக் கிடந்தாற் போன்ற நிண ஒழுங்கும் புண்ணினின்று வெளிப்படும் குருதியும் தம்மைச் சூழக் கிடந்தவரின் கண் களைக் கவர்ந்து போய்க் கொடுக்கும்

அத்தகைய கழுகுகள் பொருந்திய காட்டைக் கடந்தது, விற்போரில் பகைவரை அழித்து அந்த வெற்றியால் அடை யும் திறைப் பொருள்களை உண்டு வாழ்கின்ற வலிய ஆண்மை பொருந்திய வாழ்க்கையையுடையவர் தமிழ் நாட்டை ஆளும் மூவர் அம் மூவராலும் பாதுகாக்கப் பெறும் வேற்று மொழியையுடைய நாடுகளில் உள்ள பல மலை களையும் கடந்து தலைவர் சென்றார் என்று அவரைத் தூற்றார் இவள் ஆற்றாது வருந்தினாள் என்று என்னையே பழிக்கின்றனர். அதற்கே யான் வருந்துகின்றேன் என்று தலைவி தோழிக்குக் கூறினாள்.

## 313. வினைவயின் போவோம் நெஞ்சே வா

வினை நன்றாதல் வெறுப்பக் காட்டி,
மனை மாண் கற்பின் வாணுதல் ஒழிய,
கவை முறி இழந்த செந் நிலை யாஅத்து
ஒன்று ஓங்கு உயர் சினை இருந்த, வன் பறை,
வீளைப் பருந்தின் கோள் வல் சேவல்
வளை வாய்ப் பேடை வரு திறம் பயிரும்

இளி தேர் தீம் குரல் இசைக்கும் அத்தம்
செலவு அருங்குரைய என்னாது, சென்று, அவள்
மலர் பாடு ஆன்ற, மை எழில், மழைக் கண்
தெளியா நோக்கம் உள்ளினை, உளி வாய்
வெம் பரல் அதர குன்று பல நீந்தி,
யாமே எமியம் ஆக, நீயே
ஒழியச் சூழ்ந்தனைஆயின் – முனாஅது
வெல் போர் வானவன் கொல்லி மீமிசை,
நுணங்கு அமை புரையும் வணங்கு இறைப் பணைத் தோள்,
வரி அணி அல்குல், வால் எயிற்றோவயின்
பிரியாய் ஆயின் நன்றுமன் தில்ல,
அன்று நம் அறியாய் ஆயினும், இன்று நம்
செய்வினை ஆற்றுற விலங்கின்,
எய்துவை அல்லையோ பிறர் நகு பொருளே?

*– மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் அக 33*

“என் நெஞ்சமே! பொருள் ஈட்டும் செய்கை அறம் முதலிய நன்மை தருவதை மிகவும் எடுத்துக்கூறி, மாண்பு பொருந்திய கற்பினை உடைய ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட நம் தலைவி வீட்டில் இருக்க அவளைப் பிரியச் செய்தனை, பிரிந்தோம் பிரிந்து, வந்த வழிகள் மழை வளம் இல்லாததால் தளிர்கள் தளிர்க்காத கிளைகளையுடைய யா என்ற மரத்தில் மிக உயர்ந்துள்ள கிளையில் இருந்த வலிமை வாய்ந்த இறகையும் வீளை ஒலியையும் உடைய சேவற் பருந்து வளைந்த வாயையுடைய தன் பேடைப் பருந்து தன்னிடம் வருமாறு அழைக்கும் இளி என்னும் இசை போன்ற இனிய குரல் ஒலித்துக் கொண்டிருக்கும் அரிய வழிகள் அவை செல்வதற்கு அருமையானவை என்று புறப் பட்ட அப்போதே கூறாமல், இத்துணை தொலைவும் வந் தோம் வந்த பின்பு, தலைவியின் தன் பெருமை குறைவதற்குக் காரணமான மை பூசப்பெற்ற கண்களின் மயக்கத்தைத் தரும் நோக்கத்தை நினைத்து, உளியின் வாய் போன்று கூர்மையான பரற் கற்கள் பொருந்திய வழிகளையுடைய குன்றுகள் பல வற்றையும் கடந்து வந்தோம் வந்த நாம், தனிமைப்பட நீ எம்மை விட்டு நீங்கித் திரும்பிச் செல்ல எண்ணினாய்!

*வெல்லும் போரைச் செய்யும் சேர மன்னனின் கொல்லி மலையின் உச்சியில் உள்ள சிறிய மூங்கிலைப் போன்ற வளைந்த முன் கையையுடைய பெரிய தோளையும், தேமல் படர்ந்த அல்குலையும், வெண்மையான பற்களையும் உடைய தலைவி இடத்திருந்து பிரியாமல் இருந்திருப்பாயானால் அது நன்றாய் இருந்திருக்கும்! ஆனால் அதை நீ செய்ய வில்லையே!*

*யாம் தலைவியைப் பிரியும் நாளில் நம் இயல்பான வலியின்மையை அறியாய் ஆயினும் இன்று நாம் செய்யும் வினையை, இந்த இடைவழியில் வந்தபோது விலக்குவா யானால், மற்றவர் சிரிக்கத் தக்க இகழ்ச்சியை அடைவாய் அல்லையோ! எனவே, பொருள் ஈட்டச் செல்வோம்! என்னுடன் வா!" என்று தலைவன் பாலை நிலத்திடையில் தன் நெஞ்சிற்குச் சொன்னான்.*

**314. மார்பு துணையாகத் துயிலச் செய்வானாக**

**ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளான்,**
**வான் தோய் இஞ்சி நல் நகர் புலம்ப –**
**தனி மணி இரட்டும் தாளுடைக் கடிகை,**
**நுழை நுதி நெடு வேல், குறும் படை, மழவர்**
**முனை ஆத் தந்து, முரம்பின் வீழ்த்த**
**வில் ஏர் வாழ்க்கை விழுத் தொடை மறவர்**
**வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்,**
**நடுகல் பிலி சூட்டி, துடிப்படுத்து,**
**தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்**
**போக்கு அருங் கவலைய புலவு நாறு அருஞ் சுரம்**
**துணிந்து, பிறள் ஆயினள் ஆயினும், அணிந்து அணிந்து,**
**ஆர்வ நெஞ்சமொடு ஆய் நலன் அளைஇ, தன்**
**மார்பு துணையாகத் துயிற்றுகதில்ல –**
**துஞ்சா முழவின் கோவற் கோமான்**
**நெடுந் தேர்க் கொடுங்கால் முன் துறை,**
**பெண்ணை அம் பேரியாற்று நுண் அறல் கடுக்கும்**
**நெறி இருங் கதுப்பின் என் பேதைக்கு,**
**அறியாத் தேஎத்து ஆற்றிய துணையே!**

*– குடவாயில் கீரத்தனார் அக 35*

"தலைவ! வானை அளாவிய மதில் பொருந்திய நல்ல இந்த இல்லமானது தனிமையை அடையப் பெற்று, வளர்த்த எம்மையும் எண்ணிப் பாராது என் மகள் சென்றாள். அவள் சென்ற வழி ஒப்பில்லாத மணி மாறி மாறி ஒலிப்பதும், கடையாணி இடப்பட்ட காம்பையும் கூர்மையான முனையையும் உடையதுமான நீண்ட வேலை உடையவராய் வெட்சியாரின் போர் முனையில் அவரை வென்று பசுக்களை மீட்டு அவ் வெட்சியாரை வீழ்த்தினர். பின் அவரால் கொல்லப் பட்டனர்; அவர் வில்லையே ஏராகக் கொண்டு வாழும் வாழ்க்கையை உடைய சிறந்த கரந்தைப் போர் வீரர். அவர்தம் உடலை மூடிய வலிய ஆண் தன்மைக்கு அறிகுறியான கற்குவியலின் மேல் நின்ற தெய்வத் தன்மையுடைய அந்தக் கரந்தை வீரர் ஆவியை வழிபடுதற்கு அந்த மறவரின் பெயரும் பெருமையும் பொறித்து நாட்டப் பெற்ற நடுகல்லில் மயிற் பீலியைச் சூட்டித் துடியை அடித்து, நெல்லினால் ஆக்கிய கள்ளுடன் செம்மறி ஆட்டுக்குட்டியையும் பலி கொடுக்கும் இயல்புடைய, செல்வதற்கு அரிய பாலைவழி அதில் என் மகள் செல்லத் துணிந்தாள்; இதனால் அவள் என்னை அயலாள் ஆக்கினாள்.

என்றாலும், இடைவிடாது முழவின் இனிய ஓசை ஒலிக்கின்ற திருக்கோவலூரையுடைய மன்னனான பெருந் தேரை உடையவன். மலையமான் திருமுடிக்காரி. அவனது 'கொடுங் கோல்' என்ற ஊரில் உள்ளதான பெண்ணை என்ற ஆற்றின் அழகிய துறையில் உள்ள கரிய மணலை ஒத்த நெளிந்த கரிய கூந்தலையுடைய என் மகளுக்கு அறியாதவர் உள்ள நாட்டில் அவளை அழைத்துச் சென்றான் அவளுடைய துணைவன்.

அவன், அன்பு மிகுந்த உள்ளத்துடன் மலர் முதலியவற்றால் அவளைப் பலகாலும் அழகு படுத்தி நோக்கி; அவளது அழகிய நலனை நுகர்ந்து தன் மார்பே பற்றுக் கோடாகத் துயிலச் செய்வானாக!" என்று மகட் போக்கிய நற்றாய் தெய்வத்திடம் முறையிட்டாள்.

## 315. துணை இருப்பவர்க்கே பருவம் உரியது

**மறந்து, அவண் அமையார் ஆயினும், கறங்கு இசைக்**
**கங்குல் ஓதைக் கலி மகிழ் உழவர்**

பொங்கழி முகந்த தா இல் நுண் துகள்,
மங்குல் வானின், மாதிரம் மறைப்ப,
வைகு புலர் விடியல் வை பெயர்த்து ஆட்டி
தொழிற் செருக்கு அனந்தர் வீட, எழில் தகை
வளியொடு சினைஇய வண் தளிர் மாஅத்துக்
கிளி போல் காய கிளைத் துணர் வடித்துப்
புளிப்பதன் அமைந்த புதுக் குட மலிர் நிறை
வெயில் வெரிந் நிறுத்த பயில் இதழ்ப் பசுங் குடை,
கயம் மண்டு பகட்டின் பருகி, காண் வர
கொள்ளொடு பயறு பால் விரைஇ, வெள்ளிக்
கோல் வரைந்தன்ன வால் அவிழ் மிதவை
வாங்கு கை தடுத்த பின்றை, ஓங்கிய
பருதிஅம் குப்பை சுற்றி, பகல் செல,
மருதமர நிழல், எருதொடு வதியும்
காமர் வேனில்மன் இது
மாண் நலம் நுகரும் துணை உடையோர்க்கே!

*– விற்றூற்று மூதெயினனார் அக 37*

*"தோழி நம் தலைவர் நம்மை மறந்து வேற்று நாட்டிலே தங்கிவிட்டார் என்பதை அறிவேன். ஆயினும், இப்பொழுது நிகழும் பருவம் யாதென்று எண்ணினாய்? இது மாண்புடைய பெண்மை நலத்தைத் துய்க்கும் துணையைப் பிரியாதார்க்கு மட்டும் ஆற்றியிருப்பதற்குரியது.*

*ஊர் தோறும் உள்ள ஆடல் அரங்கிலும் பாடல் அரங்கிலும் இனிய இசை ஒலிக்கும் இரவில் கள்ளைக் குடித்ததால் மிக்க களிப்பையுடைய உழவர் ஆள்களை அழைக்கும் ஆரவாரத்துடன் இருள் புலரும் விடியற் காலை யில் வைக்கோல் போரைப் பிரித்துக் கடாவிடுத்து தூற்றிக் குவிக்கின்றனர். தூற்றாத பொலியினின்றும் கூடைகளால் வாரப்பட்ட நெல்லுடன் கலந்து வலியற்ற நுட்பமான துகள் கள் எழுந்து இருண்ட முகில்களைப் போன்று திசைகளை மறைக்கும்படித் தூற்றி நெல்லைக் குவிக்கின்றனர். பின்பு, தொழில் செய்தலால் வந்த இளைப்பும் கள் உண்டதால் வந்த மயக்கமும் உறக்க மயக்கமும் ஒருங்கே நீங்கும்படி, இனிய தென்றல் காற்றால் தோற்றுவிக்கப்பட்ட வளமான தளிர்*

*களையுடைய மா மரத்தில் கிளி வடிவில் காய்த்துள்ள காய் களைக் கொத்தாகப் பறித்துப் புதிய மண் குடத்தில் இட்டுப் புளிப்புச் சுவை உண்டாகுமாறு பதப்படுத்திய அக் காய்களி னின்று பெருகிய சாற்றை, வெயிலில் முதுகுப்பக்கம் வாட வைத்தால் வேண்டியபடி விளையும் பனையோலையால் ஆன குடையான உண்கலத்தில் வார்த்துக் குளத்து நீரில் வாய் வைத்துப் பருகும் எருமைக் கடாக்களைப் போல் வாயால் வேண்டுமளவு பருகுகின்றனர். பின்பு கொள்ளும் பயறும் பாலுடன் கலந்து சமைத்த வெள்ளிக்கம்பியை ஓரளவாகத் துண்டுசெய்து இட்டது போன்ற வெண்மையான சோற்றுப் பருக்கைகளையுடைய கூழையும் வயிறாரப் பருகி இனி வேண்டா என வளைந்த கையால் தடுக்கின்றனர். பின்பு மருத மர நிழலில் வட்ட வடிவாகக் குவித்து வைத்த அழகிய நெற் குவியலைச் சூழ்ந்து தம் எருதுகளுடனே தங்குகின்றனர். இத்தகைய இளவேனில் பருவம் இது! இப் பருவத்தில் பிரிந்து வாழ்பவர் ஆற்றி இருத்தலும் முடியுமோ!" என்று தலைவன் பிரிவை ஆற்றுவித்த தோழிக்கு எதிராக தலைவி இவ்வாறு கூறினாள்.*

## 316. நீ ஊடுதல் முறையன்று

'ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப் படர்ந்து,
உள்ளியும் அறிதிரோ, எம்?' என, யாழ நின்
முள் எயிற்றுத் துவர் வாய் முறுவல் அழுங்க,
நோய் முந்துறுத்து நொதுமல் மொழியேல், நின்
ஆய் நலம் மறப்பெனோ மற்றே? சேண் இகந்து
ஒலி கழை பிசைந்த ஞெலி சொரி ஒண் பொறி
படு ஞெமல் புதையப் பொத்தி, நெடு நிலை
முளி புல் மீமிசை வளி கழற்றுறாஅக்
காடு கவர் பெருந் தீ ஒடுவயின் ஒடலின்,
அதர் கெடுத்து அலறிய சாத்தொடு ஒராங்கு
மதர் புலி வெரீஇய மையல் வேழத்து
இனம் தலை மயங்கிய நனந் தலைப் பெருங் காட்டு
ஞான்று தோன்று அவிர் சுடர் மான்றல் பட்டெனக்
கள் படர் ஓதி! நிற் படர்ந்து உள்ளி,

அருஞ் செலவு ஆற்றா ஆர் இடை, ஞெரேரெனப்
பரந்து படு பாயல் நவ்வி பட்டென
இலங்கு வளை செறியா இகுத்த நோக்கமொடு,
நிலம் கிளை நினைவினை நின்ற நிற் கண்டு
'இன்னகை! இனையம் ஆகவும், எம்வயின்
ஊடல் யாங்கு வந்தன்று?' என, யாழ நின்
கோடு ஏந்து புருவமொடு குவவு நுதல் நீவி
நறுங் கதுப்பு உளரிய நன்னர் அமையத்து
வறுங் கை காட்டிய வாய் அல் கனவின்
ஏற்று ஏக்கற்ற உலமரல்
போற்றாய் ஆகலின், புலத்தியால், எம்மே!

*– மதுரைச் செங்கண்ணனார் அக 39*

"வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடையவளே! பொருள் தேட முயலாமையை இகழ்ந்து பொருள் செய்ய ஊக்கிய நெஞ்சத்துடன் பொருள் ஈட்டும் நெறியில் சென்று எம்மை என்றேனும் நினைத்துப் பார்த்தீரோ என வினவினாய் அது போழ்து நின் முள் போன்ற கூர்மையான பற்களை யுடைய பவளம் போன்ற வாயில் நான் எதிர்பார்க்கின்ற புன் முறுவல் இல்லை. அதற்கு மாறாகத் துன்பத்தை நின் கண்ணிலும் முகத்திலும் காட்டினாய் இங்ஙனம் எனக்குப் பொருந்தாதவற்றைக் கூறி என்னையும் வருத்தாதே! நின்னிடம் பலகாலும் ஆராய்ந்து மகிழ்வதற்குக் காரணமான நின் பேரழகை நான் மறப்பேனா? மறவேன்

அன்பையுடையவளே, நின்னை மறக்கவில்லை என்பதற்கு ஒருசான்றைக் கூறுவேன், கேள்! உன்னைப் பிரிந்து நெடுந் தொலைவு சென்றேன் அங்கு மூங்கில் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து தேய்வதால் அந்த மூங்கில் சொரியும் ஒள்ளிய தீப்பொறிகள், அங்குள்ள மூங்கில் சருகுகள் மறையும்படி மூண்டெழுந்து செங்குத்தாய் நிற்கும் உலர்ந்த ஊகம் புல்லின் மேன்மேலும் மூண்டெழுந்து அக் காட்டையே தன்னகப் படுத்தி எரியும் தீயானது, காற்று பரவும் இடம் எல்லாம் பரந்து சென்று எரித்தது. அங்ஙனம் எரிப்பதால், அத் தீ தம்மையும் பற்றுமோ என அலறியழும் வாணிகக் கூட்டத்து டன் செருக்கையுடைய புலியைக் கண்டு அஞ்சிய மயக்கம்

உடைய யானைக் கூட்டம் பல இடத்தும் திரிதற்கு இடமான பெரிய காடு அதில் மாலையில் மறையும் காலத்துத் தாழ்ந்து தோன்றும் ஞாயிறு மறைந்தது.

அப்போது உன்னை எண்ணி எண்ணி மேலே செல்வதற் குரிய பயணமும் இல்லாது கை விட்ட அந் நிலையில் யான் அவ் வழியில் பாயலில் படுத்துறங்கினேன் அப்போது ஒரு பெண் மான் தோன்றினாற்போல் தோன்றி என்னைப் பார்க்காமல் நிலத்தினை நோக்கிய நோக்கமோடு, உடல் மெலிந்ததால் கழன்று விழும் வளையலை வீழாதபடி மேலே ஏற்றி நிறுத்தி, நிலத்தைக் காலால் கீறுதற்குக் காரணமான வருத்தம் கொண்டவளாய நின்னைக் கனவில் கண்டேன் கண்டு, இனிய நகையை உடையாய்! யான் இவ்வாறாகவும் என்னிடம் உனக்கு ஊடல் எவ்வாறு ஏற்பட்டது! நான் உன்னுடைய கடை நிமிர்ந்த அழகிய புருவங்களையும் சிறிய நெற்றியையும் கையால் தடவி நறுமணக் கூந்தலையும் கோதி உன்னைத் தழுவ முயன்றேன். அத்தகைய சமயத்தில் விழித் தெழுந்தேன் உன்னைத் தழுவுதல் போன்ற என் கையை வெறுங்கையாக்கிய பொய்யான அக் கனவை எண்ணி ஏங்கிய என் மனச் சுழற்சியை நீ அறிந்து கொள்ளவில்லை ஆதலால் என்னை நினைத்ததும் உண்டோ? என்று ஊடல் கொள் கின்றாய்" என்று பொருள் முற்றிய தலைவன் தலைவியைக் கண்டு கூறினான்

## 317. மாயோன் வருந்தினாளோ

வைகு புலர் விடியல், மை புலம் பரப்ப,
கரு நனை அவிழ்ந்த ஊழுறு முருக்கின்
எரி மருள் பூஞ் சினை இனச் சிதர் ஆர்ப்ப,
நெடு நெல் அடைச்சிய கழனி ஏர் புகுத்து,
குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர,
அரிகால் போழ்ந்த தெரி பகட்டு உழவர்
ஓதைத் தெள் விளி புலம்தோறும் பரப்ப,
கோழிணர் எதிரிய மரத்த, கவினி,
காடு அணி கொண்ட காண்தகு பொழுதில்,
நாம் பிரி புலம்பின் நலம் செலச் சாஅய்,

நம் பிரிபு அறியா நலனொடு சிறந்த
நல் தோள் நெகிழ, வருந்தினள்கொல்லோ —
மென் சிறை வண்டின் தண்கமழ் பூந் துணர்
தாது இன் துவலை தளிர் வார்ந்தன்ன
அம் கலுழ் மாமை கிளைஇய,
நுண் பல் தித்தி, மாஅயோளே? — *குன்றியனார் அக 41*

*"மென்மையான சிறகையுடைய வண்டுகள் பொருந்திக் கிண்டுதலால் குளிர்ந்த மணம் கமழும் மா மர மலர்க் கொத்துகளில் உள்ள தாதுடன் கூடிய தேன்துளி தளிரிலே ஒழுகியது போன்ற அழகு ஒழுகும் மாமை நிறத்தில் தோன்றிய நுட்பமான பல தேமல் புள்ளிகளை உடையோள் தலைவி.*

*இரவெல்லாம் இருந்த இருள் புலரும் விடியற்காலத்தில் எருமைகள் புல் மேய்வதற்குக் கொல்லைகளில் பரந்து செல்லும்; முருக்க மரத்தின் பெரிய அரும்புகள் முறுக்கு அவிழ்ந்த தீயைப் போன்று மலர்ந்த பூக்களையுடைய கிளைகளில் எல்லாம் கூட்டங் கூட்டமாக வண்டுகள் ஒலிக்கும்; வயலினின்றும் அரிந்து கொண்டு போய்க் குவித்த பெரும் போர்கள் தோட்டங்களில் விளங்கும்; பின்பு ஏர் களைப் புகுவித்து நெல் விளைந்த அந்தப் புன்செய்கள் நெல் தாளான குடுமிகளைக் கொண்ட கட்டிகளை உடையனவாய் விளங்க நிலம் பிளப்ப உழுது, ஆராய்ந்த எருதுகளைக் கொண்ட உழவர்களின் ஏர் ஓட்டும் தெளிந்த ஒலி எல்லா இடங்களிலும் பரவும். அழகு பொருந்திய செழிப்பான மலர்க் கொத்துகள் தோன்றிய மரங்களை உடைய காடு அழகு பெற்ற காட்சியுடைய இந்த இளவேனிற் காலம்*

*இதில்; நம் பிரிவு என்பதை அறியாமல் இயற்கையழ குடன் கூடிய மிகவும் சிறப்பாக விளங்கிய தலைவியின் தோள் கள் இப்போது நாம் பிரிந்திட்ட இயல்பால் மிகவும் மெலிந்து நெகிழ்தலால் வருந்தினாளோ!" என்று தலைவன் பொருள் வயின் பிரிந்தவிடத்து தலைவியை நினைந்து உரைத்தான்.*

## 318.பிரிதலைக் கைவிட்டோம்

கடல் முகந்து கொண்ட கமஞ்சூல் மா மழை
சுடர் நிமிர் மின்னொடு வலன் ஏர்பு, இரங்கி,

என்றூழ் உழந்த புன் தலை மடப் பிடி
கை மாய் நீத்தம் களிற்றொடு படீஇய,
நிலனும் விசும்பும் நீர் இயைந்து ஒன்றி,
குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது
கதிர் மருங்கு அறியாது, அஞ்சுவரப் பாஅய்,
தளி மயங்கின்றே தண் குரல் எழிலி; யாமே
கொய் அகை முல்லை காலொடு மயங்கி,
மை இருங் கானம் நாறும் நறு நுதல்,
பல் இருங் கூந்தல், மெல் இயல் மடந்தை
நல் எழில் ஆகம் சேர்ந்தனம். என்றும்
அளியரோ அளியர் தாமே – அளி இன்று
ஏதில் பொருட்பிணிப் போகி, தம்
இன் துணைப் பிரியும் மடமையோரே!

*– மதுரையாசிரியர் நல்லந்துவனார் அக 43*

*"நெஞ்சமே, குளிர்ச்சியையும் இடி முழக்கத்தையும் உடைய முகில்களையுடைய கார் காலம் வந்தது ஆதலால் கடலில் நீரை முகந்து நிறைந்த சூலையுடைய முகில்கள், ஒளி மிக்க மின்னல்களுடனே வலப்பக்கமாக எழுந்து சென்று ஒலித்துப் பெய்யும் முதுவேனில் வெயில் வெப்பத்தால் வருந்திய பெண் யானைகள் தத்தம் ஆண் யானைகளுடன் நீர் நிலைகளில் தம் உயர்த்திய கையை மறைக்கும் அளவுக்குப் பெருகி வரும் வெள்ளத்தில் மூழ்கி இன்பம் அடையும். நிலத்தையம் வானத்தையும் மழைநீர் பொருந்தி ஒன்றுவதால், சிறிது நீரையுடைய நாழிகை வட்டிலில் ஒழுகிய நீர் போக எஞ்சிய நீர் நிற்கும் கோடுகளை எண்ணிப் பொழுதை அறிவதே அல்லாது கதிரவன் உள்ள இடம் இதுவென அறியப்படாததால் உலகம் அச்சம் கொள்ளும் இவ்வாறாக எங்கும் பரவி மழை பொழியும்*

*இத்தகைய கார்ப் பருவத்தில் யாம் பொருள் வயின் பிரிவோம் எனின் யாமும் மேற்கொண்ட செயலைச் செய்து முடியோம்; நம் தலைவியும் பிரிவாற்றாமல் இறந்துபடு வாள். ஆதலால் இதை உணர்ந்த யாம் மலரைப் பறிக்கும் தோறும் மீண்டும் தழைக்கின்ற வளமிக்க முல்லையின் மணம் வாடைக் காற்றுடன் கலந்து வீசும் காடு மணப்பதைப்*

*போன்று மணக்கும் பலவான கூந்தலையும், நறுமணம் உடைய நெற்றியையும், மென்மையான சாயலையும் கொண்ட நம் காதலியின் நல்ல அழகுடைய மேனியைச் சேர்ந்தோம் இப் பருவத்தில் இரக்கம் இல்லாது பொருள் ஈட்டும் பற்றுக் கொண்டு பிரிந்து போய்த் தம் இனிய தலைவியைப் பிரியும் அறிவிலிகள் எம்மால் எப்போதும் இரங்கத்தக்கவரே ஆவார்" என்று தலைவன் பொருள் கடை கூட்டிய நெஞ்சிற்கு உரைத்தான்*

## 319. 'ஆதிமந்தி போல வருந்துவேனோ'

வாடல் உழுஞ்சில் விளை நெற்று அம் துணர்
ஆடுகளப் பறையின் அரிப்பன ஒலிப்பக்,
கோடை நீடிய அகன் பெருங் குன்றத்து
நீர் இல் ஆர் ஆற்று நிவப்பன களிறு அட்டு
ஆள் இல் அத்தத்து உழுவை உகளும்
காடு இறந்தனரே, காதலர், மாமை,
அரி நுண் பசலை பாஅய், பீரத்து
எழில் மலர் புரைதல்வேண்டும். அலரே,
அன்னி குறுக்கைப் பறந்தலை, திதியன்
தொல் நிலை முழுமுதல் துமியப் பண்ணி
புன்னை குறைத்த ஞான்றை, வயிரியர்
இன் இசை ஆர்ப்பினும் பெரிதே, யானே,
காதலற் கெடுத்த சிறுமையொடு, நோய் கூர்ந்து,
ஆதிமந்தி போலப், பேதுற்று
அலந்தனென் உழல்வென்கொல்லோ – பொலந்தார்,
கடல் கால் கிளர்ந்த வென்றி நல் வேல்,
வானவரம்பன் அடல் முனைக் கலங்கிய
உடை மதில் ஓர் அரண் போல,
அஞ்சுவரு நோயொடு, துஞ்சாதேனே!

*– வெள்ளி வீதியார் அக 45*

*"தோழியே, நம் காதலர் மழை இல்லாமையால் வற்றிய வாகையின் முதிர்ந்த நெற்றுகளைக் கொண்ட கொத்து, கூத்தாடும் களத்தில் ஒலிக்கும், கோடைத் தன்மை கொண்ட அகன்ற பெரிய குன்று. அதில் உள்ள நீர் இல்லாத அரிய*

வழியில், உயர்ந்த களிற்றைக் கொன்று மக்கள் இயங்காத நெறியில் புலி திரியும் காட்டைக் கடந்து சென்றார்

"என் மாமை நிறம் தலைவர் இல்லாததால் அழகிய நுண்ணிய பசலை பரவுவதால் பீர்க்கின் அழகிய மலரை ஒப்பதாகும் ஊரில் எழும், பழியானது 'அன்னி' என்பவன் 'குறுக்கை' என்ற ஊரின் போர்க்களத்தில் திதியன் என்பவனின் பழமையுடைய நிலையையுடைய புன்னை மரத்தின் பெரிய அடியை வெட்டித் துண்டித்த காலத்தில் கூத்தர்கள் அவனது வெற்றிப் புகழைப் பாடிய பாணரின் இனிய இசையால் உண்டான ஆரவாரத்தை விடப் பெரிதாகிறது

"பொன்னால் ஆன மாலையையும் கடலில் உண்டான போரை வென்ற வெற்றியையும் நல்ல வேலையும் உடையவான வரம்பன் என்ற மன்னனின் கொலைத் தொழிலையுடைய போர் முனையில், அவன் கலக்கம் அடைந்து ஓட, அம் மன்னனின் படையால் உடைக்கப்பட்ட ஓர் அரணைப் போன்று அச்சம் கொண்ட துயரத்தால் உறங்காதவன் ஆனேன் இத்தகைய நான் திருமாவளவனின் மகள் ஆதி மந்தியைப் போல் காதலனைக் கடல் கொண்டு போனதால் அவரைக் காணாத துன்பத்துடன் துன்பம் மிகப் பெற்றுத் தேடித் திரிவேனோ? இனி இறப்பது திண்ணம்!" என்று தோழி பொறுத்திருக்கக் கூறியபோது தலைவி இவ்வாறு பிரிவினால் வருந்தி எதிருரை உரைத்தாள்

## 320. என்னுடன் நெஞ்சே வருக!

அழிவு இல் உள்ளம் வழிவழிச் சிறப்ப
வினை இவண் முடித்தனம்ஆயின், வல் விரைந்து
எழு இனி – வாழிய நெஞ்சே! – ஒலி தலை,
அலங்கு கழை நரலத் தாக்கி, விலங்கு எழுந்து,
கடு வளி உருத்திய கொடி விடு கூர் எரி
விடர் முகை அடுக்கம் பாய்தலின், உடன் இயைந்து,
அமைக் கண் விடு நொடி கணக் கலை அகற்றும்
வெம் முனை அருஞ் சுரம் நீந்தி, கைம்மிக்கு,
அகன் சுடர் கல் சேர்பு மறைய, மனைவயின்
ஒண் தொடி மகளிர் வெண் திரிக் கொளாஅலின்,

குறு நடைப் புறவின் செங் காற் சேவல்
நெடு நிலை வியல் நகர் வீழ்துணைப் பயிரும்
புலம்பொடு வந்த புன்கண் மாலை,
'யாண்டு உளர்கொல்?' எனக் கலிழ்வோள் எய்தி,
இழை அணி நெடுந் தேர்க் கை வண் செழியன்
மழை விளையாடும் வளம் கெழு சிறுமலைச்
சிலம்பின் கூதளங் கமழும் வெற்பின்
வேய் புரை பணைத் தோள் பாயும்
நோய் அசா வீட, முயங்குகம் பலவே.

*– ஆலம் பேரி சாத்தனார் ஆக 47*

"என் நெஞ்சமே, நாம் மேற்கொண்ட வினைகெடுமாறு வருந்தாதே, நீ வாழ்க! தளர்ச்சி இல்லாத நம் உள்ளம் மேலும் மேலும் ஊக்கத்தாலும் சிறப்ப, இங்கு யாம் மேற் கொண்டிருக்கும் பொருள் ஈட்டும் வினையை நன்றாக முடித்தோமானால், சூறைக் காற்றானது, தழைத்த தலையை யுடைய அசையும் மூங்கிலை ஒலி ஏற்படும்படி தாக்கி வெப்பமுறச் செய்ததால் கொழுந்து விட்டெரியும் காட்டுத் தீயானது பிளப்பையும் முழைஞ்சினையும் உடைய மலைப் பக்கங்களில் பரவுவதால் மூங்கில் கணுக்கள் வெடிக்கும் அதனால் எழும் ஒலி கூட்டமான கலைமான்களைத் துரத்தும் கொடிய போர் நிகழும் இடங்களை உடையது அரிய பாலை வழி

அதனைக் கடந்து, பெரு ஞாயிறு மேற்கு மலையைச் சேர்ந்து மறைய, இல்லங்களில் ஒளிமிக்க வளைகளையுடைய மகளிர் விளக்கில் உள்ள வெண்மையான திரியைக் கொளுத்து வர் அப்போது குறுகிய நடையையுடைய சிவந்த காலை யுடைய ஆண் புறா உயர்ந்த மேல் நிலைகளையுடைய பெரிய மனையில் தன்னிடம் அன்புள்ள பெடையை அழைக்கும் இத்தகைய மாலைப் பொழுதில், 'நம் தலைவர் இப்போது எங்கு உள்ளாரோ?' என எண்ணிக் கலங்கி அழுது கொண்டி ருப்பாள் தலைவி, அவளை அடைந்து, அணிகள் அணியப் பெற்ற பெரிய தேரையுடைய கொடைத்தன்மை பொருந்திய செழியனின் முகில்கள் தங்கும் வளம் பொருந்திய சிறுமலை என்ற பெயரையுடைய குன்றின், கூதாள மலர் மணம்

கமழும் பக்க மலையிலே வளம் உண்டாக வளரும் மூங்கில் போன்ற தோள்களில் பரவும் நோய் வருத்தம் நீங்கப் பல முறையும் தழுவுவோம் ஆதலால் நெஞ்சே, இப்போது வினையின் பொருட்டு என்னுடன் மிக விரைந்து எழுவாயாக!" என்று பாலை நிலத்து இடைவழியில் வருந்திய தன் நெஞ்சிற்குத் தலைவன் உரைத்தான்

## 321. சென்றனளே என்மகள்

'கிளியும் பந்தும் கழங்கும் வெய்யோள்
அளியும் அன்பும் சாயலும் இயல்பும்
முன்நாள் போலாள்; இறீஇயர், என் உயிர்' எனக்
கொடுந் தொடைக் குழவியொடு வயின்மரத்து யாத்த
கடுங் கட் கறவையின் சிறுபுறம் நோக்கி,
குறுக வந்து குவவுநுதல் நீவி
மெல்லெனத் தழீஇயினேனாக என் மகள்
நன்னர் ஆகத்து இடைமுலை வியர்ப்பப்
பல் கால் முயங்கினள் மன்னே! அன்னோ!
விறல் மிகு நெடுந்தகை பல பாராட்டி
வறன் நிழல் அசைஇ, வான் புலந்து வருந்திய
மட மான் அசா இனம் திரங்கு மரல் சுவைக்கும்
காடு உடன்கழிதல் அறியின் – தந்தை
அல்குபதம் மிகுத்த கடியுடை வியல் நகர்
செல்வழிச் செல்வுழி மெய்ந்நிழல் போலக்
கோதை ஆயமொடு ஓரை தழீஇத்
தோடு அமை அரிச் சிலம்பு ஒலிப்ப, அவள்
ஆடுவழி ஆடுவழி, அகலேன் மன்னே!

*– வண்ணப்புறக் கந்தரத்தனார் அக 49*

"பைங்கிளிக்கு மழலை பேசக் கற்றுக் கொடுத்தலையும் பந்தாடுதலையும் கழங்காடுதலையும் மிகுதியாய் விரும்பும் என் மகள் இப்போது அவற்றை விரும்புவதில்லை! இவள் பிற உயிர்களிடத்துக் கொள்ளும் அருளாலும் சுற்றத்தாரிடம் காட்டும் அன்பாலும் தன் உடலில் உள்ள மென்மையாலும் செயலாலும் முன் நாள்களில் இருந்தாற்போல் இல்லை இதற்குக் காரணம் காணமாட்டாது வருந்தி என் உயிர்

கெடுவதாக என்று என்னையே நான் நொந்து கொள்ள லானேன் வளைவான தொடைகளையுடைய தன் இளங் கன்றுடன் ஓரிடத்தே கட்டப்பெற்ற விரைந்து விரைந்து கன்றைப் பார்க்கும் பசுவைப் போன்று, அவளுடைய முதுகை அடிக்கடி பரிந்து பார்த்து அணுகிச் சென்று குவிந்து திரண்ட அவளுடைய அழகிய நெற்றியைத் தடவி அன்புடன் மெத்தென்று அவளைத் தழுவினேன். அவ்வளவில் என் மகள் தனது நல்ல மார்பகத்து முலைகள் வியர்ப்ப முன்னாள் போலன்றிப் பல முறையும் ஆர்வத்துடன் தழுவிக் கொண்டாள் அது இப்போது கழிந்தது!

ஐயோ! அவளது உள்ளத்தைக் கவர்ந்த வெற்றி மிக்க நெடுந்தகைமையுடைய காளை, பலபடியாகப் பாராட்டி மனம் மகிழ்வித்து உலர்ந்த அரிய நிழலில் இருந்து இளைப் பாறி மழை பொய்த்ததால் உணவு பெறாமல் வருந்திய இளைய மானினது இளைப்புற்ற கூட்டமானது நீர் வற்றிய மரல் புல்லைக் கடித்துப் பார்ப்பதற்கான வலிய பாலையில் தலைவன் தன்னுடன் அழைத்துச் சென்றான். அதை நேற்றே அறிந்திருப்பின், அவளுடைய தந்தையின் உணவுமிக்குள்ள காவல் பொருந்திய பெரிய மனையின் செல்லும் இடந் தோறும் இடந்தோறும் உடலின் நிழலைப் போல் சென்று, அவள் மலர் மாலை அணிந்த தன் தோழியருடன் விளை யாடும் விளையாட்டை மேற்கொண்டு பூத்தொழில் அமைந்த பரலையுடைய தன் சிலம்புகள் ஒலிக்குமாறு அவள் விளை யாடும் இடந்தோறும் அகலாமல் நான் இருப்பேன், அதுவும் கழிந்ததே! இனி என்ன செய்வேன்?" என் உடன் போக்குற்ற தலைவி நினைந்து மனையிருந்து வருந்தி உரைத்தாள்

## 322. பொருள் பிரிவைக் கைவிடுக

ஆள் வழக்கு அற்ற சுரத்திடைக் கதிர் தெற,
நீள் எரி பரந்த நெடுந் தாள் யாத்து,
போழ் வளி முழங்கும், புல்லென் உயர்சினை,
முடை நசை இருக்கைப் பெடை முகம் நோக்கி,
ஊன் பதித்தன்ன வெருவரு செஞ் செவி
எருவைச் சேவல் கரிபு சிறை தீய,

வேனில் நீடிய வேய் உயர் நனந்தலை
நீ உழந்து எய்தும் செய்வினைப் பொருட்பிணி
பல் இதழ் மழைக் கண் மா அயோள்வயின்
பிரியின் புணர்வதுஆயின், பிரியாது,
ஏந்து முலை முற்றம் வீங்க, பல் ஊழ்
சேயிழை தெளிர்ப்பக் கவைஇ, நாளும்
மனைமுதல் வினையொடும் உவப்ப,
நினை – மாண் நெஞ்சம்! – நீங்குதல் மறந்தே.

*– பெருந்தேவனார் அக 51*

'ஆள்களின் நடமாட்டம் இல்லாத பாலை வழி அங்குக் ஞாயிற்றின் கதிர்கள் காய்வதால் மிகுந்த வெப்பம் பரவியுள்ளது நீண்ட அடியையுடைய யா என்ற மரத்தில் ஊடுருவிச் செல்லும் காற்று முழங்கும் பொலிவில்லாத உயர்ந்த கிளையில், புலால் விருப்பத்துடன் இருக்கும் தன் பெட்டையின் முகத்தைப் பார்த்து, ஊன் துண்டு ஒன்றைப் பதித்து வைத்தாற் போன்ற சிவந்த செவியையுடைய ஆண் பருந்தின் இறகு கரிந்து தீய்ந்திடும். இத்தகைய வேனில் வெம்மை மிக்க மூங்கில் உயர்ந்த அகன்ற காடு

அக் காட்டில், நீ வருத்தப்பட்டுச் செய்யும் வினைகளால் அடையப்படும் பொருள், பல இதழ்களை உடைய மலர் போன்ற கண்ணை உடைய நம் தலைவியிடத்தினின்றும் யாம் பிரிந்து செல்வதால் கைகூடுவதானால், மனமே, நீ இப்போது நம் தலைவியை விட்டுப் பிரிந்து போவதை மறந்து அவளைப் பிரியாமலே நாள்தோறும் நம் காதலியின் உயர்ந்த கொங்கைகள் விம்மவும், அணிகள் ஒலிக்கவும், பல முறை தழுவி, அவள் இல்லத்தில் இருந்து செய்யும் விருந்தோம்பல் முதலிய செயல்களில் அவளுடன் மகிழ்ந்திருக்கவே எண்ணுவாயாக! பொருள் வயின் பிரிவைக் கைவிடுவாயாக!" என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான்.

## 323. பொருளே நம் தலைவர் விரும்புவது

அறியாய், வாழி தோழி! இருள் அற
விசும்புடன் விளங்கும் விரை செலல் திகிரிக்,
கடுங் கதிர் எறித்த விடுவாய் நிறைய,

நெடுங் கால் முருங்கை வெண் பூத் தாஅய்,
நீர் அற வறந்த நிரம்பா நீள் இடை,
வள் எயிற்றுச் செந்நாய் வருந்து பசிப் பிணவொடு
கள்ளிஅம் காட்ட கடத்திடை உழிஞ்சில்
உள் ஊன் வாடிய கரிமுக்கு நொள்ளை
பொரி அரை புதைத்த புலம்ப கொள் இயவின்,
விழுத் தொடை மறவர் வில் இட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன் நிழல் வதியும்
அருஞ் சுரக் கவலை நீந்தி, என்றும்,
'இல்லோர்க்கு இல்' என்று இயைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப, நம்மினும்
பொருளே காதலர் காதல்;
'அருளே காதலர்' என்றி, நீயே.

*– சீத்தலைச் சாத்தனார் அக 53*

*"தோழியே, என்னை ஆற்றுவிக்கும் நீ வாழி! நீ தலைவரின் இயல்பை அறியமாட்டாய் இருள் நீங்க வானம் எல்லாம் விளங்குதற்குக் காரணமாய் விரைந்து செல்லும் பகலவனின் கடுமையான கதிர் எறித்திட, அதனால் நிலத்தின் பிளவு பட்ட இடங்களில் எல்லாம் நீண்ட அடிப்பகுதியை உடைய முருங்கை மரத்தின் வெண்மையான மலர்கள் உதிர்ந்து இடை வெளி மறையுமாறு பரவுகின்றன இத்தகைய நீர் இல்லாத வறட்சியுடைய செல்லுதற்கு இயலாததான நீண்ட இடம்.*

*கள்ளிக் காட்டை உடைய கல் நிலத்தின் மீது நிற்கும் வாகை மரத்தினை, உள்தசை வாடப் பெற்ற சுரிந்த மூக்கை யுடைய சிறிய நத்தைகள் பொருக்குடைய அடிப்பகுதி பொருந்திய மரத்தைப் போல் தோன்றுமாறு மறைக்கும் இயங்குபவர் இல்லாமையால் தனியாய் உள்ள வழி அதன் பக்கத்தில் அம்பை மறவர் வில்லில் வைத்து எய்ய இறந்த வரின் பெயரும் பீடும் எழுதிய எழுத்துகளையுடைய நடு கல்லின் இனிய நிழலில் கூர்மையான பற்களையுடைய செந்நாய் இரை பெறாமையால் வருந்தும் தன் பெட்டை நாயுடன் தங்கும் இத்தகைய நெறியைக் கடந்து, வறியவர்க்கு என்றும் இல்லை என்று கூறி இயன்றதைச் செய்யாது மறைக்காத நெஞ்சம் வற்புறுத்துவதால் நம் தலைவர் நம்மை*

விட அதிகமாகக் காதலித்தது பொருளையே! ஆனால் நீயோ காதலரின் காதல் நம்மிடம் அருளே என்கின்றாய்! ஆதலால் நீ அறியாய்" என்று வற்புறுத்திய தோழிக்குத் தலைவி எதிருரை கூறினாள்

## 324. நீங்கவில்லையே என் உயிர்

காய்ந்து செலற் கனலி கல் பகத் தெறுதலின்,
ஈந்து குருகு உருகும் என்றூழ் நீள் இடை,
உளி முக வெம் பரல் அடி வருத்துறாலின்,
விளி முறை அறியா வேய் கரி கானம்,
வயக் களிற்று அன்ன காளையொடு என் மகள்
கழிந்ததற்கு அழிந்தன்றோ இலெனே! ஒழிந்து யாம்
ஊது உலைக் குருகின் உள் உயிர்த்து, அசைஇ,
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு
கண்படை பெறேன், கனவ – ஒண் படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழி கள மருங்கின் வாள் வடக்கிருந்தென,
இன்னா இன் உரை கேட்ட சான்றோர்
அரும் பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்,
பெரும்பிறிது ஆகியாங்கு, பிரிந்து இவண்
காதல் வேண்டி, எற் துறந்து
போதல் செல்வா, என் உயிரோடு புலந்தே.

*– மாமூலனார் அக 55*

*"அன்புடையவரே, கேளுங்கள், இம் மண்ணுலகத்தை வெப்பப்படுத்தி வானத்தில் இயங்கும் கதிரவன் மலையும் பிளக்குமாறு காய்ந்திடலால் கடந்து செல்லும் பறவைகள் வருந்துவதற்குக் காரணமான வெப்பம் மிக்க நீண்ட இடத்தில், உளியைப் போன்ற முனையையுடைய கொடிய பரற்கற்கள் அடியில் பதிந்து வருத்துதலால், அவ் வழியில் இறக்கும் இடம் எது என்று அறியலாகாத் மூங்கில் கரியும் காடு அக் காட்டில் வலிய ஆண் யானையைப் போன்ற ஆடவனுடன் என் மகள் உடன் போனதற்காக நான் வருந்தவில்லை; அவள் போய்த் தொலையட்டும்*

*யான் என் மகளைப் பிரிந்திருந்து, உலையில் ஊதும் துருத்தியைப் போலப் பெருமூச்சு விட்டு உள்ளம் மெலிந்து தீயில் வேவதைப் போன்று வெவ்விய நெஞ்சமோடு உறக்கமும் அடையப்பெறாமல் வெப்பம் மிக்க பாலையில் அவள் இயங்குவதை என் மனக்கண்ணில் கொணர்ந்து கனவைப் போல் கண்டிருக்குமாறு செய்தனள்*

*ஒளி பொருந்திய படையையுடைய கரிகாலனுடன் வெண்ணிப் போர்க்களத்தில் போரிட்டபோது பட்ட புறப் புண்ணிற்குப் பெரிதும் நாணமடைந்த சேரலாதன் என்ற சேர மன்னன், தான் தோல்வியை அடைந்த போர்க்களத்திலேயே வாள் ஏந்திய கையுடன் வடக்கு நோக்கி உண்ணா நோன்புடன் இருந்து உயிர் நீக்க இருந்தான் அதனைக் கண்ட சான்றோர், பெறுவதற்கு அரிய துறக்கத்துக்கு அவனுடன் செல்வதற்காக உயிர் நீந்தனர், அது போல, இவ் உலகத்து ஆசையை விரும்பி என்னைவிட்டுப் பிரிந்து போகாத என் உயிருடன் மாறு பட்டே நான் இங்ஙனம் வருந்துகின்றேன்," என்று புணர்ந்து டன் போன தலைவனுக்கு இரங்கிய தாய் தெருட்டிய அக்கம் பக்கத்தவர்க்குத் தலைவி உரைத்தாள்*

## 325. அல்லும் பகலும் வருந்தினாள்

**சிறு பைந் தூவிச் செங் காற் பேடை**
**நெடு நீர் வானத்து, வாவுப் பறை நீந்தி,**
**வெயில் அவிர் உருப்பொடு வந்து, கனி பெறாஅது,**
**பெறு நாள் யாணர் உள்ளி, பையாந்து,**
**புகல் ஏக்கற்ற புல்லென் உலவைக்**
**குறுங் கால் இற்றிப் புன் தலை நெடு வீழ்**
**இரும் பிணர்த் துறுகல் தீண்டி, வளி பொர,**
**பெருங் கை யானை நிவப்பின் தூங்கும்**
**குன்ற வைப்பின் என்றூழ் நீள் இடை**
**யாமே எமியம்ஆக, தாமே**
**பசு நிலா விரிந்த பல் கதிர் மதியின்**
**பெரு நல் ஆய் கவின் ஒரீஇ, சிறு பிர்**
**வீ ஏர் வண்ணம் கொண்டன்று கொல்லோ –**
**கொய் சுவற் புரவிக் கொடித் தேர்ச் செழியன்**

முதுநீர் முன்துறை முசிறி முற்றிக்
களிறு பட எருக்கிய கல்லென் ஞாட்பின்
அரும் புண் உறுநரின் வருந்தினள், பெரிது அழிந்து,
பானாட் கங்குலும் பகலும்
ஆனாது அழுவோள் – ஆய் சிறு நுதலே?

*– நக்கீரர் அக 57*

*"நெஞ்சே, சிறிய மெல்லிய சிறகுகளையும் சிவந்த காலையும் உடைய பெண் வௌவால் பரந்த தன்மையுடைய வானத்தில் தாவிப் பறக்கும் தொழிலால் மிகத் தொலைவைக் கடந்து போய், வெயில் விளங்கும் நண்பகற் காலத்திலேயே ஆராய்ந்து பார்த்தும் தனக்கு உணவான இரை கிடைக்காமையால் தான் முன்பு கனிகளைப் பெறும் நாளின் வளத்தை நினைத்துத் துன்பம் அடைந்து, முன்பு போல் மரங்களில் புகுவதற்கு ஏங்கியிருக்கும் பொலிவற்ற கிளைகளையும் குறிய அடியையும் உடைய இற்றி மரத்தின் நீண்ட விழுதானது பெரிய பொருக்கையுடைய உருண்டைக் கல்லைத் தீண்டிக் காற்று வீசுவதால், பெரிய கையையுடய யானை, கையை உயர்த்தினாற் போல் விளங்கும் அடர்ந்த பிடரி மயிரைப் பெற்ற குதிரைகளை உடைய கொடி கட்டப்பட்ட தேரினன் பாண்டியன் அவன் சிறந்த துறை முகத்தைக் கொண்ட 'முசிறி' என்னும் பட்டினத்தை, யானைப் படையை அழித்த 'கல்' என்ற ஆரவாரத்தையுடைய போரில், விழுப்புண் மறவரைப் போல் மிகவும் மனம் வருந்தி நள்ளிரவிலும் பகலிலும் ஓயாமல் அழுது கொண்டிருக்கிறாள் தலைவி அவளது அழகிய சிறிய நெற்றி குளிர்ந்த நிலவொளி பரவிய பல கதிர்களை உடைய திங்களைப் போன்ற பெரிய சிறந்த ஆராயும் அழகு நீங்கச் சிறிய பீர்க்கினது மலரை ஒத்த நிறத்தைக் கொண்டதோ!" என்று பொருள் வயின் பிரிந்த தலைமகன், தலைவியை நினைந்து கூறினான்*

## 326. தலைவர் விரைவில் வருவார்

தண் கயத்து அமன்ற வண்டு படு துணை மலர்ப்
பெருந் தகை இழந்த கண்ணினை, பெரிதும்
வருந்தினை, வாழியர், நீயே! – வடாஅது

வண் புனல் தொழுநை வார் மணல் அகன்துறை
அண்டர் மகளிர் தண் தழை உடீஇயர்
மரம் செல மிதித்த மாஅல் போல,
புன் தலை மடப் பிடி உணீஇயர், அம் குழை
நெடு நிலை யாஅம் ஒற்றி, நனை கவுள்
படி ஞிமிறு கடியும் களிறே – தோழி! –
சூர் மருங்கு அறுத்த சுடர் இலை நெடு வேல்
சினம் மிகு முருகன் தண் பரங்குன்றத்து
அந்துவன் பாடிய சந்து கெழு, நெடு வரை,
இன் தீம் பைஞ் சுனை ஈரணிப் பொலிந்த
தண் நறுங் கழுநீர்ச் செண் இயற் சிறுபுறம்
தாம் பாராட்டிய காலையும் உள்ளார்,
வீங்கு இறைப் பணைத் தோள் நெகிழ, சேய் நாட்டு
அருஞ் செயற் பொருட்பிணி முன்னி, நப்
பிரிந்து, சேண் உறைநர் சென்ற ஆறே.

*– மதுரை மருதன் இளநாகன் அக 59*

“தோழியே, கேள், நீ இப்போது குளத்தில் செறிந்த வண்டுகள் வந்து மொய்க்கும் இரட்டையாய் உள்ள தாமரை மலர் போன்று விளங்கும் அழகை இழந்து பசலையுடைய கண்களை உடையவளாய் உள்ளாய் பிரிவாற்றாது பெரிதும் வருந்துகின்றாய் நீ இவ்வாறு வருந்துவது உன் பெருந் தன்மைக்குப் பொருத்தமற்றது! நீ வாழ்க!

சூரபன்மனையும் அவனுடைய உறவினரையும் அழித்த ஒளி பொருந்திய இலை போன்ற நீண்ட வேலை உடைய சினம் மிக்க முருனின் குளிர்ந்த திருப்பரங்குன்றம் அது நல்லந்துவனரால் பாடப்பட்டது சந்தன மரங்கள் மிக்கு உயர்ந்த அம் மலையில் உள்ள இனிய சுனையிலே பொருந்திய நறுமணப் பூவுடன் இயன்ற அலங்கரித்தலால் அழகுடன் விளங்கும் கொண்டை அசை தலையுடைய நின் முதுகை நம் தலைவர் பாராட்டினார் அக் காலத்தையும் எண்ணிப் பாராமல் பருத்த இறையினையுடைய மூங்கில் போன்ற தோள் மெலியும்படி தொலைவான நாட்டில் செய்யும் பொருள் ஈட்டலை நினைத்து நம்மைப் பிரிந்து போனவரின் வழியில், வடக்குத் திக்கில் உள்ள நீர்வளம் பொருந்திய

*யமுனை ஆற்றின் மணலை உடைய அகன்ற துறையில், நீராடிய ஆயர் மகளிர் குளிர்ந்த தழையை உடுத்திக்கொள்ளக் குருந்த மரம் வளையும்படி மிதித்துத் தந்தான் கண்ணன். அவனைப் போல, ஆண் யானை, இளைய பெண் யானை அழகிய தளிரை உண்ணுதற்கு முன்பு உயர்ந்த நிலையை உடைய யா மரத்தை வளைத்துத் தந்து, மத நீரால் நனைந்த கன்னத்தில் படியும் வண்டுகளை ஓட்டும். அத்தகைய நிகழ்வைக் கண்டு தலைவர் மீண்டு வருவார். அதுவரை நீ ஆற்றியிருத்தல் வேண்டும்." என்று தலைவன் பிரிவினால் வேறுபட்ட தலைவிக்குத் தோழி கூறினாள்.*

## 327. அயல் நாட்டில் தங்கியிரார் தலைவர்

'நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார் பிறர் கொள விளிந்தோர்' எனத்
தாள் வலம்படுப்பச் சேட் புலம் படர்ந்தோர் –
நாள் இழை நெடுஞ் சுவர் நோக்கி, நோய் உழந்து
ஆழல் வாழி, தோழி! – தாழாது,
உரும் எனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங் கால்
வரி மாண் நோன் ஞாண் வன் சிலைக் கொளீஇ,
அரு நிறத்து அழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண் கோடு கொண்டு
நறவு நொடை நெல்லின் நாள் மகிழ் அயரும்
கழல் புனை திருந்தடிக் களவர் கோமான்
மழ புலம் வணக்கிய மா வண் புல்லி
விழவுடை விழுச் சீர் வேங்கடம் பெறினும்,
பழகுவர் ஆதலோ அரிதே – முனாஅது
முழவு உறழ் திணி தோள் நெடு வேள் ஆவி
பொன்னுடை நெடு நகர்ப் பொதினி அன்ன நின்
ஒண் கேழ் வன முலைப் பொலிந்த
நுண் பூண் அகம் பொருந்துதல் மறந்தே.

*– மாமூலனார் அக 61*

*"தோழியே வாழி! கேட்பாயாக: இயமனால் கொள்ளப் பட்டு இறவாமல் மற்றவர் தம் பொருளைக் கொள்ளும் படியாக நன்முயற்சியில் தலைப்பட்டு அது காரணமாக உயிர்*

*நீத்தவர் இவ் உலகில் தவம் செய்தவரே ஆவார் என்ற இம் மேற்கோளுடன், தம் முயற்சியில் தலைப்பட்டவர், நம்மைப் பிரிந்து தொலைவில் உள்ள நாட்டுக்குச் சென்றவர் நம் பெருமான், அவர் சென்ற நாள்களைக் கணக்கிடுதற்குக் கோடிட்ட நீண்ட சுவரில் அவற்றை எண்ணி எண்ணித் துன்பத்துள் ஆழ்ந்திடாதே!*

*"மின்னியபோதே காலம் தாழ்க்காமல் இடிபோல் ஆரவாரித்து எழுகின்ற மன வெழுச்சியுடன், புதியகாலும் சிறந்தவரியும் கொண்ட வலிய வில்லில் நாணினை ஏற்றிப் பகைவரின் அரிய மார்பில் செலுத்தும் அம்பை உடைய இளைஞர் பலர் அவருடன், தலைமையுடைய யானைகளின் வெண்மையான கொம்புகளைக் கவர்ந்து கொண்டவன், அக் கொம்புடன் கள்ளை விற்றுக் கொண்ட நெல்லால் நாட் காலத்தே களியாட்டம் அயர்கின்றவன், கழலை அணிந்த திருந்திய அடியையுடைய கள்வர் பெருமான்! மழவரின் நிலத்தை வணங்கச் செய்தவன் மிகுந்த வள்ளன்மையை யுடையவன் ஆகிய 'புல்லி' என்பவனின், விழாக்கள் மிக்க சிறப்புடைய வேங்கட மலையைப் பெறுவதானாலும், பழைமை வாய்ந்த முழவு போன்ற வலிய தோளையுடைய பெரிய வேள் ஆன ஆவியின், பொன் மிக்க பெரிய நகரான பொதினியைப் போன்ற நின் ஒளி விளங்கும் அழகிய முலை யால் சிறந்த நுட்பமான, பூணை அணிந்த மார்பில் புணரும் புணர்ச்சியை மறந்து அங்குக் காலம் தாழ்த்திருந்து பழகார் வினை முற்றியதுமே விரைந்து வருகுவர் ஆதலால் ஆற்றி யிருப்பாயாக!" என்று தலைவன் பொருள் வயின் பிரிய வேறுபட்ட தலைவிக்குத் தோழி கூறினாள்.*

## 328. தண்ணுமை ஒலிகேட்டுப் பொறுப்பாளோ?

**கேளாய்; வாழியோ! மகளை! நின் தோழி**
**திரு நகர் வரைப்பகம் புலம்ப, அவனொடு**
**பெரு மலை இறந்தது நோவேன்; நோவல் –**
**கடுங்கண் யானை நெடுங் கை சேர்த்தி,**
**முடங்கு தாள் உதைத்த பொலங் கெழு பூழி**
**பெரும் புலர் விடியல் விரிந்து வெயில் எறிப்ப**

கருந் தாள் மிடற்ற செம் பூழ்ச் சேவல்
சிறு புன் பெடையொடு குடையும் ஆங்கண்
அஞ்சுவரத் தகுந கானம் நீந்தி,
கன்று காணாது, புன் கண்ண, செவி சாய்த்து,
மன்று நிறை பைதல் கூர, பல உடன்
கறவை தந்த கடுங் கால் மறவர்
கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ,
முதுவாய்ப் பெண்டிர் செது காற் குரம்பை,
மட மயில் அன்ன என் நடை மெலி பேதை
தோள் துணையாகத் துயிற்றத் துஞ்சாள்,
'வேட்டக் கள்வர் விசியுறு கடுங் கண்
சேக் கோள் அறையும் தண்ணுமை
கேட்குநள்கொல்?' எனக் கலுழும் என் நெஞ்சே.

*– கருவூர்க் கண்ணம்புல்லனார் அக 63*

*"என் தலைவி தன் காதலுடன் சென்றாள் என்பதால் நீ இங்ஙனம் வருந்த வேண்டா என்று கூறும் என் மகளே! நீ வாழ்க! உன் ஆருயிர்த் தோழியான தலைவி நம் இல்லம் தனிமைப்பட உன்னால் கூறப்படும் அவனுடன் பெரிய மலை வழியில் சென்றமைக்காக நான் வருந்தவில்லை நான் எதன் பொருட்டு வருந்துகிறேன் என்பதைக் கேட்பாயாக :*

*அஞ்சாமை உடைய யானைகள் நீண்ட கையை நிலத்தில் ஊன்றி வளைந்த காலால் நிலத்தை உதைத்ததால் உண்டான பொன் தூள் கலந்த புழுதியில், இருள் நீங்கி விடிந்த விடியற் காலையில் கதிரவனின் வெயில் எங்கும் எரிக்கும் போது, கரிய மாலை போன்ற கோட்டை உடைய கழுத்தினை உடைய குறும்பூழ்ச் சேவல் பறவை தன் பெட்டையுடன் அப் புழுதியில் குளிக்கும் இத்தகைய இயல்புடைய அச்சம் தரக் கூடிய காடு அதனைக் கடந்து, தம் கன்றுகளைக் காணாதன வாய்த் துன்பம் கொண்டு செவிகளைச் சாய்த்துக் கேட்டலால் மன்றில் செறிந்து நிறைதலால் உண்டாகும் துன்பம் மிக, கரந்தையாரின் பசுக்கள் பலவற்றையும் கவர்ந்து கொணர்ந்த, விரைந்து நடக்கும் காலை உடைய வெட்சி மறவர்க்குரிய கல் என்னும் ஆரவாரத்தை உடைய சிறிய ஊரில் இரவில் தங்கி முதிய பெண்டிர் தனித்து உறைகின்ற சோர்ந்த கால்களை*

*உடைய சிறிய குடிலில், மடப்பத்தையுடைய மயில்போன்ற நடையால் வருந்திய பேதையானவள், அவன் தன் தோளில் கிடத்தித் துயிலச் செய்யவும் துயிலாதவளாய் வேட்டைத் தொழிலுடன் பிறர் நாட்டு ஆக்களையும் கவரும் களவுத் தொழிலை உடைய எயின மறவர் ஏறுகளைப் பற்றிக் கட்டுதற் பொருட்டு வாரால் இழுத்துக் கட்டப்பட்ட கடிய ஒலி யையுடைய கண்ணிடத்தில் அடிக்கப்படுதலால் எழுகின்ற தண்ணுமையின் ஒலியைக் கேட்டுப் பொறுத்துக் கொள் வாளோ? உயிர் நீப்பாளோ? என்ற ஐயத்தினால் கலங்கு கின்றது மனம் அந்த மனத்துக்காகவே யான் இப்போது வருந்துகின்றேன்" என்று தலைவி தலைவனுடன் சென்ற போது செவிலி தன் மகளுக்கு இவ்வாறு கூறினாள்*

## 329. உடன்போக்கை ஏற்றுக் கொண்டார்

**உன்னம் கொள்கையொடு உளம் கரந்து உறையும்**
**அன்னை சொல்லும் உய்கம், என்னதூஉம்**
**ஈரம் சேரா இயல்பின் பொய்ம்மொழிச்**
**சேரிஅம் பெண்டிர் கௌவையும் ஒழிகம்;**
**நாடு கண் அகற்றிய உதியஞ் சேரற்**
**பாடிச் சென்ற பரிசிலர் போல**
**உவ இனி – வாழி, தோழி! அவரே,**
**பொம்மல் ஓதி! நம்மொடு ஓராங்குச்**
**செலவு அயர்ந்தனரால் இன்றே – மலைதொறும்**
**மால் கழை பிசைந்த கால் வாய் கூர் எரி,**
**மீன் கொள் பரதவர் கொடுந் திமில் நளி சுடர்**
**வான் தோய் புணரிமிசைக் கண்டாங்கு,**
**மேவரத் தோன்றும் யாஅ உயர் நனந்தலை**
**உயவல் யானை வெரிநுச் சென்றன்ன**
**கல் ஊர்பு இழிதரும் புல் சாய் சிறு நெறி,**
**காடு மீக்கூறும் கோடு ஏந்து ஒருத்தல்**
**ஆறு கடிகொள்ளும் அருஞ் சுரம், 'பணைத் தோள்**
**நாறு ஐங் கூந்தல், கொம்மை வரி முலை**
**நிரை இதழ் உண்கண், மகளிர்க்கு**
**அரியவால்' என அழுங்கிய செலவே!** – *மாமூலனார் அக 65*

"பொலிவுடைய கூந்தலை உடையவளே, தோழியே வாழி! நம் தலைவர், மலைகள் தோறும் பெரிய மூங்கில்கள் உராய்ந்து கொள்வதால் உண்டாகிக் காற்றும் கூடப் பெறுத லால் மிக்கு எரியும் நீடச் சுடர்கள், கடலில் மீனைப் பிடிக்கும் பரதவரின் வளைந்த படகில் தோன்றும் மிக்க சுடர்கள் வானத்தை அளாவிய கடல் அலைமீது காணப் படுவது போல் விளங்கும் யா என்ற மரங்கள் உயர்ந்துள்ள அகன்ற பாலையிடத்தில் புசியால் மெலிந்து வருந்திய யானையின் முதுகில் நடந்து செல்வது போன்று, பாறையில் ஏறியும் இறங்கியும் செல்லும், மூங்கில்கள் சாய்ந்த சிறிய வழிகளை உடையவும் காட்டினை மேம்படச் சொல்வதற்குக் காரணமான கொம்புகளையுடைய ஆண் யானை வழியைக் காவல் மேற்கொண்டிருப்பதற்கு மணம் கமழும் கூந்தலையும் திரண்ட தேமலையுடைய முலையையும், பூப்போன்ற கண் களையும் உடைய மகளிர்க்குச் செல்ல அரியனவாகும் எனக் கூறி, இதுகாறும் தலைவர் தடுத்து வந்த உடன் போக்கினை அதனை, அடர்த்தியான கூந்தலை உடையவளே! இன்று உடன் போக்கைத் தடுத்த நம் தலைவரே நம் எண்ணத்துடன் ஒன்றுபட்டவராய் உடன்போக்கை விரும்பினார்

நம் எண்ணத்தை உணர்ந்து கொண்ட உணர்வுடன் அதனைத் தன்னுள்ளத்தில் மறைத்துக் கொண்டிருக்கின்ற நம் அன்னை கூறும் இன்னாச் சொல்லைக் கேட்டு வருந்தும் வருத்தத்தினின்றும் தப்புவோம் அதுவுமே அல்லா மல், அன்பு சிறிதும் இல்லாதவரும் பொய் கூறுபவருமான இவ் ஊர்ப் பெண்டிரின் அலரினின்றும் தப்புவோம் பிற நாட்டை வென்று கொண்டமையால் தன் நாட்டை விரிவு படுத்திய உதியஞ் சேரலாதனைப் பாடிச் செல்லும் பரிசில ரைப் போல் இப்போது மகிழ்வாயாக!

## 330. கொடியதாயிற்றே தலைவர் சென்ற வழி

யான் எவன் செய்கோ? தோழி! பொறி வரி
வானம் வாழ்த்தி பாடவும், அருளாது
உறை துறந்து எழிலி நீங்கலின், பறைபு உடன்,
மரம் புல்லென்ற முரம்பு உயர் நனந்தலை,

அரம் போழ் நுதிய வாளி அம்பின்,
நிரம்பா நோக்கின், நிரயம் கொண்மார்,
நெல்லி நீளிடை எல்லி மண்டி,
நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேல் ஊன்று பலகை வேற்று முனை கடுக்கும்
மொழி பெயர் தேஎம் தருமார், மன்னர்
கழிப் பிணிக் கறைத்தோல் நிரை கண்டன்ன
உவல் இடு பதுக்கை ஆள் உகு பறந்தலை,
'உரு இல் பேஎய் ஊராத் தேரோடு
நிலம் படு மின்மினி போல, பல உடன்
இலங்கு பரல் இமைக்கும்' என்ப – நம்
நலம் துறந்து உறைநர் சென்ற ஆறே!

*– நோய்பாடியார் ஆக 67*

*தோழி! நம் இன்பத்தைக் கைவிட்டுத் தலைவர் சென்ற வழி, புள்ளியையும் வரிகளையும் உடைய வானம்பாடிப் பறவை மழைத்துளியை வேண்டிப் பாடவும், சிறிதும் இரக்கம் இல்லாமல் மழைதுளித்தலின்றி முகில் வானத்தினின்று அகன்று போயது; அதனால் இலைகள் கரிந்து தேய்ந்த நிலைமையுடன் மரங்கள் வற்றிப் பொலிவில்லாமல் போயின பருக்கைக் கற்களைக் கொண்ட அகன்ற பாலை நிலப்பரப்பு அதில் அரத்தால் அராவிப் பிளந்த பிறைவாய் அம்பையும் இடுங்கிய நோக்கையும் உடையவராய் வந்து பசுக்கூட்டத்தைக் கவர்பவராகிய வெட்சி மறவரையுடைய நெடிய வழி இடங்களில், இரவில் போய் வளைத்து அறப்போர் செய்து வென்று இறந்துவிட்ட கரந்தை வீரருள் மானப் பண்புடைய மறவரின் பெயரும் வீரச் சிறப்பும் பொறிக்கப்பட்டு நெறிதோறும் மயில் தோகை அணியப்பட்ட நிலைமையுடைய நடுகற்கள் நாட்டப்பட்டிருக்கும் அங்கு அந்தந்த மறவர்கள் கைக்கொண்டிருந்த வேல்களை நட்டுக் கேடயங்களுக்கு சார்த்தப்பட்டுள்ளன அவை போர்க்களத்தைப் போல் காட்சி தரும் இயல்புடையவை அத்தகைய மொழி வேறுபட்ட வேற்று நாட்டைக் கைக்கொள்ள வேண்டித் தம் கழியில்*

பிணித்த கேடயம் ஏந்திய காலாட்படையை அணி வகுத்து நிறுத்தினாற் போன்ற தோற்றம் உடையவை போரில் இறந்த வர் வீரர் உடல்களைத் தழையால் மூடிக் கற்களைக் கொண்டு குவித்து வைத்த பதுக்கைகள் நிறைந்திருக்கும் அத்தகைய பாலைப் பரப்பிலே, வடிவம் இல்லாத பேயின் பெயரை அடை மொழியாய்க் கொண்ட, ஏறி ஊர்தற்கு இயலாத தேர் - கானல் நீரான பெய்த்தேர் பரந்திருத்தலால் விளங்கும் பருக்கைக் கற்கள் பற்பல ஒருசேர நிலத்திலே வீழ்ந்த மின்மினிப் பூச்சி களைப் போல் விளங்கும் என அறிந்தவர் உரைப்பர்

இங்ஙனம் அறிந்தவர் கூறக் கேட்ட நான் என்செய்வேன்! இத்தகைய கொடிய வழியில் சென்ற நம் தலைவர் என்ன ஆயினாரோ? என எண்ணி வருந்துகின்றேன்" என்று தலைவன் பொருள் வழிப் பிரிந்த வழி தோழிக்குத் தலைவி கூறினாள்

## 331. விரைவில் வருவார் தலைவர்

ஆய்நலம் தொலைந்த மேனியும், மா மலர்த்
தகை வனப்பு இழந்த கண்ணும், வகை இல
வண்ணம் வாடிய வரியும், நோக்கி
ஆழல் ஆன்றிசின் நீயே. உரிதினின்
ஈதல் இன்பம் வெஃகி, மேவரச்
செய் பொருள் திறவர் ஆகி, புல் இலைப்
பராரை நெல்லி அம் புளித் திரள் காய்
கான மட மரைக் கணநிரை கவரும்
வேனில் அத்தம் என்னாது, ஏமுற்று,
விண் பொரு நெடுங் குடை இயல் தேர் மோரியர்
பொன் புனை திகிரி திரிதரக் குறைத்த
அறை இறந்து அகன்றனர் ஆயினும், எனையதூஉம்
நீடலர் – வாழி, தோழி! – ஆடு இயல்
மட மயில் ஒழித்த பீலி வார்ந்து, தம்
சிலை மாண் வல் வில் சுற்றிப், பல மாண்
அம்புடைக் கையர் அரண் பல நூறி
நன்கலம் தரூஉம் வயவர் பெருமகன்
சுடர் மணிப் பெரும் பூண் ஆஅய் கானத்துத்

**தலை நாள் அலரின் நாறும் நின்**
**அலர் முலை ஆகத்து இன் துயில் மறந்தே.**

*– உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார் அக 69*

*“தோழி வாழ்க! ஆராயும் அழகு தொலைந்த மேனியையும், கரிய மலரின் சிறந்த அழகினை இழந்துவிட்ட கண்ணையும் முந்தைய இயல்புடன் இல்லாது அழகு வாடிய திதலையையும் நோக்கி வருந்துதல் வேண்டா! நம் தலைவர் ஈவதால் உண்டாகும் இன்பம் தமக்கு உரிமையாக வேண்டும் என விரும்பி, அத்தன்மை வந்தடைவதற்காகப் பொருள் ஈட்டும் திறத்தில் முயல்பவராகிச் சென்றார் சிறிய இலையையும் பருத்த அடியையும் உடைய நெல்லியின் புளிப்பையுடைய காயினைக் காட்டில் இளைய காட்டுமானின் கூட்டம் தின்கின்ற வெப்பம் மிக்க வழி என்றும் பாராமல், துன்பத்தை இன்பமாகக் கொண்டு, வானத்தைத் தொடும் பெரிய மலையிடத்து இயங்குகின்ற தேரையுடைய மோரிய மன்னர், பொன்னால் இயன்ற உருள் தடையில்லாமல் செல்வதற்காகச் செதுக்கிய பாறைக் கற்களையுடைய மலை வழியைக் கடந்து அப்பாற்பட்ட நாட்டுக்குச் சென்றார்*

*ஆயினும், ஆடும் தன்மையுடைய இளைய மயில் உதிர்த்த தோகையை இரண்டாக் கிழித்துத் தம் ஒலிமாட்சியுடைய வலிய வில்லில் சுற்றிப் பல்வேறு வகைப்பட்ட மாட்சியுடைய அம்புகளைக் கைக்கொண்டு சென்று, பகைவரின் பல அரண்களையும் அழித்து, அம் மன்னர் தரும் அணிகலன்களைக் கொணர்ந்து தருகின்ற வன்மைமிக்க மறவர்களின் தலைவனான ஒளியுடைய பெரிய அணிகளை அணிந்த ‘ஆய்’ என்ற வள்ளலின் காட்டில், அன்றலர்ந்த மலர் போல் மணக்கும் நின் அடிப்பகுதி பரந்த முலையையுடைய மார்பில் துயிலும் இனிய உறக்கத்தை மறந்து சிறிதும் காலம் தாழ்த்தி இரார் விரைவில் வருவார்!” என்று பொருள் வயின் பிரிந்த தலைவன் காலம் நீட்டிக்க ‘வருவர்’ எனத் தலைவிக்குத் தோழி ஆற்றுவித்தாள்*

## 332. என் உயிர் நீங்கும் காலம் போலும்

**நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு, குறைந்தோர்**
**பயன் இன்மையின் பற்று விட்டு, ஒரூஉம்**

நயன் இல் மாக்கள் போல, வண்டினம்
சுனைப் பூ நீத்து, சினைப் பூப் படர,
மை இல் மான் இனம் மருள, பையென
வெந்து ஆறு பொன்னின் அந்தி பூப்ப,
ஐயறிவு அகற்றும் கையறு படரோடு
அகல் இரு வானம் அம் மஞ்சு ஈனப்,
பகல் ஆற்றுப்படுத்த பழங்கண் மாலை
காதலர்ப் பிரிந்த புலம்பின் நோதக
ஆர் அஞர் உறுநர் அரு நிறம் சுட்டிக்
கூர் எஃகு எறிஞரின் அலைத்தல் ஆனாது
எள் அற இயற்றிய நிழல் காண் மண்டிலத்து
உள் ஊது ஆவியின் பைப்பய நுணுகி,
மதுகை மாய்தல் வேண்டும் – பெரிது அழிந்து,
இது கொல் – வாழி, தோழி! என் உயிர்
விலங்கு வெங் கடு வளி எடுப்பத்
துளங்கு மரப் புள்ளின் துறக்கும் பொழுதே?

*– அந்தியிளங்கீரனார் அக 71*

*"தோழியே, வாழி! தாம் முன்பு நட்புச் செய்தவர் செல்வம் குறைந்து வறியவர் ஆனமையின் அவரால் தமக்குப் பயன் இல்லாததைக் கண்டு, அவரிடம் தாம் கொண்ட அன்பைத் துறந்து தங்கட்குப் பயன்படத் தக்க செல்வரை ஆராய்ந்து கண்டு நட்புக் கொள்ளும் எண்ணத்துடன் கைவிட்டுப் போவர் மக்கள் அல்லாத கயமை மாக்கள் அவர் போன்று வண்டுக் கூட்டம் சுனையில் மலர்ந்துள்ள பூக்களைத் துறந்து கோட்டு மலர்களை விரும்பிச் செல்லும்; குற்றம் இல்லாத மான் கூட்டம் மயங்கும்; உலையில் வெந்து ஆறிய பொன் போன்ற நிறம் உடைய செவ்வந்தி அரும்புகள் மலரும்; வியக்கத் தக்க நல்லறிவையும் போக்கி விடுவற்குக் காரணமான செயலற்ற துன்பத்துடன் பெரிய வானமானது முகில்களைத் தரும் இத்தகைய ஞாயிறு மறைந்த மாலைக் காலம்*

*"முன்னமே காதலரைப் பிரிந்த தனிமையால் வருந்தி இருக்கவும், மிக்க துன்பத்தை அடைந்திருப்பவர் ஒருவரது அரிய மார்பைக் குறித்துக் கூர்மையான வேலை எறிவார்*

*போல் வருந்துவதை ஒழியாததாயிற்று குற்றம் இல்லாமல் இயற்றப்பட்ட உருவம் பார்க்கும் கண்ணாடியின் உள்ளே, ஊதிய ஆவி முன் பரந்து பின் சுருங்கும், அது போன்று சிறிது சிறிதாகக் குறைந்து வந்து என் வலிமை மாய்வது ஆயிற்று*

*"மிகக் கடிய சூறாவளிக் காற்று வீச, அசையும் மரத்தில் உள்ள பறவை போன்று மிகவும் அழிந்து எனது உடலைத் துறந்து போகும் காலம் இதுவே போலும்!" என்று பொருள் வயின் பிரிந்த தலைவனின் பிரிவாற்றாது வருந்திய தலைவிக்குத் தோழி உரைத்தாள்*

## 333. வருவாய் தலைவர் வருவதைக் காண

பின்னொடு முடித்த மண்ணா முச்சி
நெய் கனி வீழ் குழல் அகப்படத் தைஇ,
வெருகு இருள் நோக்கியன்ன கதிர் விடுபு
ஒரு காழ் முத்தம் இடைமுலை விளங்க,
வணங்குறு கற்பொடு மடம் கொளச் சாஅய்,
நின் நோய்த் தலையையும் அல்லை; தெறுவர
'என் ஆகுவள்கொல், அளியள்தான்?' என,
என் அழிபு இரங்கும் நின்னொடு யானும்
ஆறு அன்று என்னா வேறு அல் காட்சி
இருவேம் நம் படர் தீர வருவது
காணிய வம்மோ – காதல்அம் தோழி!
கொடி பிணங்கு அரில இருள் கொள் நாகம்
மடி பதம் பார்க்கும், வயமான் துப்பின்
ஏனல்அம் சிறுதினைச் சேணோன் கையதைப்
பிடிக் கை அமைந்த கனல் வாய்க் கொள்ளி
விடு பொறிச் சுடரின் மின்னி, அவர்
சென்ற தேஎத்து நின்றதால் மழையே

*– எருமை வெளியனார் அக 73*

*"காதலை உடைய தோழியே, நம் தலைவர் சென்ற நாட்டில், கொடிகள் பின்னிய சிறு காட்டில் இருண்ட நிறமுடைய யானையின் தளர்ச்சி அடையும் நேரத்தைப் பார்த்துக் காத்திருக்கும் ஆண் சிங்கத்தின் வன்மை வாய்ந்த*

வன்; தினையின் வகையுள் ஒன்றான சிறு தினையைக் காக்கும் பரண் மீதுள்ளவன்; அவனது கையில் உள்ளதும், கையில் பொருந்தியதும் தீயை உடையதுமான கொள்ளிக் கோல் வீசும்போது வெளிப்படும் சுடர்ப் பொறிகளைப் போல் மின்னி மழை பெய்தது'

ஆதலால் பின்னப்பட்ட அளவிலே முடிக்கப்பட்ட வேறு அலங்காரம் ஏதும் செய்யப்படாத கொண்டையில் நெய் பூசப்பட்ட கூந்தலை ஒரு சேரக் கட்டிக் காட்டுப் பூனை இருளில் விழித்து நோக்கியதைப் போல் ஒரு முத்துமாலை ஒளிவிட்டு முலையிலே விளங்க, அருந்ததி போன்ற கற்பால் மடம் மிக, மெலிவடைந்து நீ அடையும் நோயினால் மட்டும் வருந்திடவில்லை. எனது நிலை நோக்கி உனக்கு அச்சம் வருதலால், 'நம்மால் இரங்கத் தக்க இவள், நம் பெரு மானின் பிரிவாற்றாமையால் என் ஆகுவாளோ, அறியேன்' என்று என் வருத்தத்திற்கும் வருந்துகின்றாய் அங்ஙனம் நெறியன்று என எண்ணாத வேற்றுமையில்லாத அறிவை உடைய நம் இருவரின் வருத்தமும் நீங்க, நம் தலைவர் வருதலைக் காண வருவாயாக!" என்று பொருள் வயின் பிரிந்த தலைவன் மீள்வதைக் கண்டு தலைவியிடம் தோழி கூறினாள்

## 334. அழிந்த அழகைத் தருவார் உண்டோ?

"அருள் அன்று ஆக, ஆள்வினை, ஆடவர்
பொருள்" என வலித்த பொருள் அல் காட்சியின்
மைந்து மலி உள்ளமொடு துஞ்சல் செல்லாது,
எரி சினம் தவழ்ந்த இருங் கடற்று அடைமுதல்
கரி குதிர் மரத்த கான வாழ்க்கை,
அடு புலி முன்பின், தொடு கழல் மறவர்
தொன்று இயல் சிறுகுடி மன்று நிழற் படுக்கும்
அண்ணல் நெடு வரை, ஆம் அறப் புலர்ந்த
கல் நெறிப் படர்குவர் ஆயின் – நல் நுதல்
செயிர் தீர் கொள்கை, சில் மொழி, துவர் வாய்,
அவிர் தொடி முன்கை, ஆய்இழை மகளிர்
ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்து,
ஆராக் காதலொடு தாரிடைக் குழையாது

சென்று படு விறற் கவின் உள்ளி, என்றும்
இரங்குநர் அல்லது, பெயர்தந்து, யாவரும்
தருநரும் உளரோ, இவ் உலகத்தான்?' என –
மாரி ஈங்கை மாத் தளிர் அன்ன
அம் மா மேனி, ஐது அமை நுசுப்பின்;
பல் காசு நிரைத்த, கோடு ஏந்து, அல்குல்;
மெல் இயல் குறுமகள்! – புலந்து பல கூறி
ஆனா நோயை ஆக, யானே
பிரியச் சூழ்தலும் உண்டோ
அரிது பெறு சிறப்பின் நின்வயினானே?

*– மதுரைப் போத்தனார் அக 75*

*"மழைக் காலத்தில் விளங்கும் இண்டைக் கொடியினது கருமையான தளிரைப் போன்ற அழகிய மாமை நிறத்தை உடைய மேனியையும், நுட்பமாய் விளங்கும் இடையையும் பல பொன் காசுகளையும் வரிசையாய்க் கோக்கப்பட்ட மேகலை அணிந்த பக்கம் உயர்ந்த அல்குலையும் உடைய மென்மையான சாயலையுடைய குறு மகளே, நான் சொல் வதைக் கேட்பாயாக:*

*ஆடவர் அருளே உறுதிப் பொருளாய் விளங்க அதனைப் பொருள் அன்று ஆகிவிடும்படிக் கைவிட்டு, முயற்சியே உறுதிப் பொருள் ஆகும் எனத் துணிவதற்குக் காரணமான உண்மையற்ற அறிவினை உடைய வலிமை மிக்க உள்ளத்தால் மடிந்து இராது*

*எரிகின்ற தீத்தழல் பரவிய பெருங்காட்டில் புகுமிடத்தில் இலைகள் முதலியன கரிந்து உதிரப் பெற்ற மரங்களை உடைய காட்டில் வாழும் வாழ்க்கையை உடைய கொல்லும் புலியைப் போன்ற வலிமையை உடைய கட்டப்பெற்ற கழலையுடைய மறவர்கள் பழைமையுடைய தம் சிறிய ஊரில் உள்ள மன்றத் தின் நிழலில் உறங்கும் பெருமையுடைய பெரிய மலையில் உள்ள நீர் இல்லாமல் உலர்ந்த வழியில் செல்வர்*

*அவ்வாறு செல்வாரானால், நல்ல நெற்றியையும் குற்றம் இல்லாத கொள்கையையும், சில சொற்களையும், பவளம் போன்ற வாயையும், விளங்கும் வளையல் அணியப் பெற்ற கையையும், ஆராய்ந்து எடுக்கப்பட்ட அணிகளையும் உடைய பெண்களின் முத்து மாலை சூடப்பெற்ற பரந்த முலையை*

யுடைய மார்பில் மிக்க விருப்பத்துடன் கணவரும் புணரும் போது அக் கணவரின் மார்பில் அணிந்த மலர் மாலை புணர்ச்சியில் அகப்பட்டுக் குழைந்திடாமலேயே அம் மகளிட மிருந்து அகன்று போகும் மிக்க அழகினை எண்ணி எண்ணி இரங்குவர் அங்ஙனம் இரக்கம் கொள்வாரே அல்லாமல் எவரேனும் அந்த அழகை மீட்டுக் கொணர்ந்து கொடுப்பவர் இவ் உலகத்தில் உண்டோ? என்று இப்படிப் பல சொற் களையும் வெறுத்துச் சொல்லித் துன்பத்தை உடையவளாய் உள்ளாய். இங்ஙனமாக, நான் அரிதாகப் பெற்ற சிறப்பைக் கொண்ட உன்னிடமிருந்து பிரிய நான் எண்ணுவதும் உண்டோ?" என்று 'பொருள் வயின் பிரிவர்' என்று வேறு பட்ட தலைவிக்குப் 'பிரியார்' என்று தோழி சொன்னாள்

## 335. செஞ்சே பிரிந்து செல்லவதைக் கைவிடு

'நல் நுதல் பசப்பவும், ஆள்வினை தரீஇயர்,
துன் அருங் கானம் துன்னுதல் நன்று' எனப்
பின்னின்று சூழ்ந்தனை ஆயின், நன்று இன்னாச்
சூழ்ந்திசின் – வாழிய, நெஞ்சே! – வெய்துற
இடி உமிழ் வானம் நீங்கி, யாங்கணும்
குடி பதிப்பெயர்ந்த கட்டுடை முது பாழ்,
கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறி கண்டு அழிக்கும் ஆவண மாக்களின்
உயிர் திறம் பெயா, நல் அமர்க் கடந்த
தறுகணாளர் குடர் தரீஇ, தெறுவர,
செஞ் செவி எருவை, அஞ்சுவர இகுக்கும்
கல் அதர்க் கவலை போகின், சீறூர்ப்
புல் அரை இத்திப் புகர் படு நீழல்
எல் வளி அலைக்கும், இருள் கூர் மாலை,
வானவன் மறவன், வணங்குவில் தடக் கை,
ஆனா நறவின் வண் மகிழ், பிட்டன்
பொருந்தா மன்னர் அருஞ் சமத்து உயர்த்த
திருந்துஇலை எஃகம் போல
அருந் துயர் தரும், இவள் பனி வார் கண்ணே.

– *மருதனிளநாகனார் அக 77*

"என் நெஞ்சே, நீ வாழ்க! நம் தலைவியின் ஒளி பொருந்திய நெற்றி பசலை அடையவும், முயற்சியால் பொருள் ஈட்டுவதற்கு அடைவதற்கு அரிய காட்டு வழியில் பிரிந்து செல்லுதல் நல்லது என்று என்பின் நின்று எண்ணினை ஆயின் மிகவும் கொடியதை எண்ணினாய்

'இடிகளை உமிழும் கொண்டல், உலகத்துள் வெம்மை மிக மழை பெய்யாமல், நீங்குவதால் எவ் இடத்தும் மக்கள் தம் தம் இருப்பிடங்களினின்றும் நீங்கிச் செல்வதற்குக் காரணமான பலரும் சுட்டிக் கூறும் பாழான பாலை நிலத்தில் தம் உயிர் மறவர் புகுகின்ற மேனிலை உலகம் புகும் தன்மையவாய்த் தம் உடம்பை விட்டுப் போகுமாறு காண்ப வர்க்கு அச்சம் உண்டாகுமாறு பகைவரை வென்று விழுப்புண் அடைந்து வீழ்ந்திறந்தனர் வீரர் ஊர் மக்கள் தம் விருப்புக் குரிய தலைவர் பெயர் எழுதப்பட்ட குடவோலை கொள்ளும் பொருட்டுக் கயிற்றால் கட்டப்பட்ட குடங்களில், நடுவரால் பொறிக்கப் பட்ட இலச்சினையை ஆராய்ந்து பார்த்துப் பின் அழித்துக் குடங்களிலிருந்து ஓலைகளைக் கைவிட்டு எடுக்கும் ஆவணக்களரி மக்களைப் போன்று சிவந்த காதினை உடைய பருந்து அவ் வீரரின் உடம்பில் உள்ள குடல்களை வெளியே இழுத்துப்போடும் இத்தகைய இயல்புடைய கற்கள் பொருந்திய கவர்த்த வழியில் செல்லின், அவ் வழியில் உள்ள சிறிய ஊர்களில் பொலிவு இல்லாத அடிப்பகுதியை உடைய இத்தி மரத்தின் புள்ளியுடைய நிழலில் மாலையில் இரவைக் கழிக்கப் படுப்போம் அல்லேமோ!

அப்போது நம்மால் துறக்கப்பட்ட இவளது நீர் ஒழுகும் கண்கள் நம் அகக் கண் முன் தோன்றிடும். அவை, சேர மன்னனின் படைத் தலைவனான வளைந்த வில்லையுடைய பெரிய கையை உடையவனும் இடைவிடாது கள்ளின் களிப்பை விரும்புபவனும் ஆகிய 'பிட்டன்' என்பான் பகை மன்னருடன் செய்யும் அரிய போரில் செலுத்திய திருந்திய இலைகளையுடைய வேல் பகைவர்க்குத் துன்பத்தை உண்டாக் குவது போன்று நமக்கும் பெருந்துன்பத்தைத் தரும். ஆதலால், இப்போது பிரிந்து செல்லும் கருத்தைக் கைவிடு வோமாக, எனத் தலைவன் தன் நெஞ்சை நோக்கியுரைத்தான்

## 336. நெஞ்சே, என்னை நின் பேதைமை

தோட் பதன் அமைத்த கருங் கை ஆடவர்
கனை பொறி பிறப்ப நூறி, வினைப் படர்ந்து,
கல்லுறுத்து இயற்றிய வல் உவர்ப் படுவில்,
பார் உடை மருங்கின் ஊறல் மண்டிய
வன் புலம் துமியப் போகி, கொங்கர்
படு மணி ஆயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லும்
சேதா எடுத்த செந் நிலக் குரூஉத் துகள்
அகல் இரு விசும்பின் ஊன்றித் தோன்றும்
நனந்தலை அழுவம், நம்மொடு துணைப்ப,
'வல்லாங்கு வருதும்' என்னாது, அல்குவர
வருந்தினை – வாழி, என் நெஞ்சே! – இருஞ் சிறை
வளை வாய்ப் பருந்தின் வான் கட் பேடை
ஆடுதொறு கனையும் அவ் வாய்க் கடுந் துடிக்
கொடு வில் எயினர் கோட் சுரம் படர
நெடு விளி பயிற்றும் நிரம்பா நீள் இடை
கல் பிறங்கு அத்தம் போகி
நில்லாப் பொருட் பிணிப் பிரிந்த நீயே.

*– குடவாயிற் கீரத்தனார் அக 79*

*என் நெஞ்சே வாழ்க! அசைந்து நடக்குந்தோறும் ஒலிக்கும் அழகிய வாயினை உடைய கடிய துடியையும் வளைந்த வில்லையும் உடைய மறவர் பகைவரை வளைத்துக் கொள்ளும் சுரத்தில் செல்ல, பெரிய இறகையும் வளைந்த வாயையும் உடைய பருந்தின் வெண்மையான கண்ணை யுடைய பெட்டைப் பருந்து, தன் துணையை நோக்கி நீண்ட கூப்பீடு செய்யும், நீண்ட இடமான கற்கள் விளங்கும் காட்டில் நடந்து எவ் இடத்தும் நிலைத்து நில்லாத பொருள் மீது உள்ள பற்றால் பிரிந்தாய்*

*இத்தகைய நீ தோளில் தொங்கும்படி விடும் கட்டுச் சோற்றை உடைய வலிய கையை உடைய ஆடவர், கிணறு வெட்டும் தொழிலில் புகுந்து மிக்க தீப்பொறி பறக்கப் பாறைகளை வெட்டித் தோண்டி அமைப்பர் மிக்க உவர்ப்புத் தன்மையுடைய அக் கிணற்றில் மண் உள்ள பக்கத்தில் ஊறிய நீரைக் குடிப்பதற்காகக் கொங்கரின் ஒலிக்கும் மணி பூண்ட ஆயமான செவ்விய பசுக்கள் வலிய நிலங்கள் துகளாகுமாறு*

*போகும் அதனால் எழுப்பப்பட்ட செம்மண்ணான நிறம் பொருந்திய புழுதி அகன்ற சிவந்த வானம் போல் தோன்றும் அத்தகைய இடம் அமைந்த காட்டில் நம் காதலி நமக்குத் துணையாக வரும்படிச் செல்வோம் என்னாது அவளைப் பிரிந்து இங்கே வந்து தங்கிய அளவிலே வருந்துகின்றனை, என்னை நின் பேதைமை!"என்று பொருள் வயின் பிரிந்த தலைவன் இடைவழியில் தன் நெஞ்சிற்குக் கூறினான்*

## 337. பிரிந்து நீ செல்வாயோ?

நாள் உலா எழுந்த கோள் வல் உளியம்
ஓங்குசினை இருப்பைத் தீம் பழம் முனையின்,
புல் அளைப் புற்றின் பல் கிளைச் சிதலை
ஒருங்க முயன்று எடுத்த நனை வாய் நெடுங் கோடு,
இரும்பு ஊது குருகின், இடந்து, இரை தேரும்
மண் பசு வறந்த ஆங்கண், கண் பொரக்
கதிர் தெற, கவிழ்ந்த உலறுதலை நோன் சினை
நெறி அயல் மராஅம் ஏறி, புலம்பு கொள
எறி பருந்து உயவும் என்றூழ் நீள் இடை
வெம் முனை அருஞ் சுரம் நீந்தி – சிறந்த
செம்மல் உள்ளம் துரத்தலின், கறுத்தோர்
ஒளிறு வேல் அழுவம் களிறு படக் கடக்கும்
மா வண் கடலன் விளங்கில் அன்ன, எம்
மை எழில் உண்கண் கலுழ –
ஐய! சேறிரோ, அகன்று செய் பொருட்கே?

*– ஆலம்பேரி சாத்தனார் அக 81*

*"எம் தலைவ! எம்மைப் பிரிந்து சென்று தேடப்படும் பொருளுக்குச் சிறந்த உம் உள்ளம் உம்மைத் தூண்டுதலால், சினம் மூண்டு எழுந்த பகைவரின் ஒளிரும் வேலையுடைய போர்க்களத்தினை யானைகள் மடிய வெல்லும் மிக்க வன்மையுடைய 'கடலன்' என்பவனின் 'விளங்கில்' என்ற மூதூரைப் போன்ற இன்பமும் அழகும் நிரம்பிய எம் அழகிய மையுண்ட கண்களையுடைய தலைவி பிரிவாற்றாது அழுது புலம்புமாறு, விடியற்காலத்தில் எழுந்து உலாவிய தன் இரையைக் கொள்வதில் வல்லமையுடைய கரடி, உயர்ந்த*

*கிளைகளையுடைய இருப்பை மரத்தின் இனிய கனிகளைத் தின்று வெறுத்தால் பல கிளைகளாய கறையான் தன் நனைந்த வாயினால் ஒருங்கு கூடி வருந்திக் கட்டிய புல்லிய வளைகளையுடைய புற்றின் நெடிய உச்சியை இரும்பு உலையில் ஊதும் துருத்தியைப் போல் உயிர்த்துப் பெயர்த்து, புற்றாஞ் சோறாம் இரையைத் தேடியுண்ணும் இத்தகைய இயல்புடைய மண் பிளவுபட்ட வறண்ட பாலை நிலம்*

*அங்கு வெயில் கண்களைப் பார்க்க இயலாதபடி ஞாயிறு காய்தலால் நெறியின் பக்கத்தில் உள்ள வெண் கடப்ப மரங்களின் இலைகள் வாட்டம் அடைந்து கவிழ்ந்துள்ள உச்சியை உடைய கிளைகளில் ஏறி இரையைப் பாய்ந் தெடுக்கும் பருந்தானது தனிமை அடைந்து வருந்தும் இத் தகைய வெப்பம் மிக்க நீண்ட இடங்களான கொடிய முனைகளையுடைய அரிய சுரத்தினைத் தாண்டி எம் பெரு மாட்டியைப் பிரிந்து பொருள் ஈட்டச் செல்வீரோ?" என்று பிரிவுணர்த்திய தலைவனுக்குத் தலைவியின் குறிப்பறிந்து கூறினாள் தோழி*

## 338. தலைவியின் குணங்கள் வந்தன

வலம் சுரி மராஅத்துச் சுரம் கமழ் புது வீச்
கரி ஆர் உளைத் தலை பொலியச் சூடிக்
கறை அடி மடப் பிடி கானத்து அலற,
களிற்றுக் கன்று ஒழித்த உவகையர், கலி சிறந்து,
கருங் கால் மராஅத்துக் கொழுங் கொம்பு பிளந்து,
பெரும் பொளி வெண் நார் அழுந்துபடப் பூட்டி
நெடுங் கொடி நுடங்கும் நியம மூதூர்,
நறவு நொடை நல் இல் புதவுமுற் பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன் புல்லி
வியன் தலை நல் நாட்டு வேங்கடம் கழியினும்,
சேயர் என்னாது, அன்பு மிகக் கடைஇ,
எய்த வந்தனவால் தாமே – நெய்தல்
கூம்பு விடு நிகர் மலர் அன்ன
ஏந்து எழில் மழைக் கண் எம் காதலி குணனே.

*– கல்லாடனார் அக 83*

"நெஞ்சே, வலப்பக்கமாக சுரிந்து மலரும் வெண் கடம்பின் மணம் கமழ்கின்ற புதிய மலர்களைச் சுருண்ட தலைமயிரின் கண் தலையாட்டம் போல் அசையுமாறு அணிந்து, உரல் போன்ற அடியை உடைய இளம் பெண் யானை காட்டில் அலறுமாறு அதன் ஆண் கன்றைப் பிரித்துக் கொண்ட மகிழ்ச்சி உடையவராய், ஆரவாரம் மிக்கார் ஆயினர் வலிய அடிமரத்தை உடைய வெண்கடம்ப மரத்தின் வளமான கொம்பைப் பிளந்து அதனின்று உரித்த பெரிய வெண்மையான நார்க் கயிற்றால் யானைக் கன்றை அழுந்தக் கட்டிக் கொணர்ந்து பெரிய கொடிகள் அசையும் கடைத் தெருக்களையுடைய ஊரில் கள் விற்கும் நல்ல வீட்டின் வாயிலில் பிணிப்பர் அவர் தம் வேட்டுவத் தொழிலே அல்லாது வேற்றுத் தொழிலை அறியார் அத் தகைய வேடர்க்குத் தலைவன் புல்லி அவனது பரந்த இடத்தை உடைய நல்ல நாட்டில் உள்ள திருவேங்கட மலையைக் கடந்த பின்பும், நெய்தல் மலரின் அரும்பு மலர்ந்த ஒளியுடைய மலரைப் போன்ற அழகையுடைய குளிர்ந்த கண் களையுடைய காதலியின் குணங்கள் தொலைவில் சென்றவர் என்னாது அன்பு மிகவும் செலுத்தலால் இங்கும் நம்மை வந்து அடைதற்கு வந்தன" என்று தலைவன் இடைச் சுரத்தில் தன் நெஞ்சிற்குச் சொல்லினான்

## 339. விரைவில் தலைவர் வருவார்

'நல் நுதல் பசப்பவும், பெருந் தோள் நெகிழவும்
உண்ணா உயக்கமொடு உயிர் செலச் சாஅய்,
இன்னம் ஆகவும், இங்கு நத் துறந்தோர்
அறவர்அல்லர் அவர்' எனப் பல புலந்து,
ஆழல் – வாழி, தோழி! – சாரல்,
ஈன்று நாள் உலந்த மெல் நடை மடப் பிடி,
கன்று, பசி களைஇய, பைங் கண் யானை
முற்றா மூங்கில் முளை தருபு, ஊட்டும்
வென் வேல் திரையன் வேங்கட நெடு வரை
நல் நாள் பூத்த நாகு இள வேங்கை
நறு வீ ஆடிய பொறி வரி மஞ்ஞை

நனைப் பசுங் குருந்தின் நாறு சினை இருந்து.
துணைப் பயிர்ந்து அகவும் துணைதரு தண் கார்,
வருதும், யாம்' எனத் தேற்றிய
பருவம்காண் அது; பாயின்றால் மழையே.

– *காட்டூர்கிழார் மகனார் கண்ணனார் அக 85*

*"என் தோழியே வாழ்க! அழகான நெற்றி பசலை கொள்ளவும், பெரிய தோள் மெலிந்திடவும், உண்ணாமை யால் ஆன வருத்தத்தால் உயிர் நீங்க மெலிவை அடைந்து, நாம் இந் நிலையை அடைந்திட நம்மை விட்டுப் பிரிந்து சென்றார் நம் தலைவர் ஆதலால் அவர் அறமுடையவர் அல்லர்' என்று இப்படிப் பலவும் சொல்லி வெறுத்துத் துன்பத்தில் அழுந்தாதே, ஆற்றியிரு*

*மலைச் சாரலில் உள்ள அணிமை நீங்க மெல்லிய நடை வாய்ந்த இளைய பெண் யானை அதன் கன்றின் பசியைப் போக்குவதற்குப் பசுமையான கண்ணையுடைய ஆண் யானை மூங்கிலின் இளைய முளையினைக் கொண்டு வந்து உண்ணச் செய்யும் இத்தகைய இயல்பு கொண்ட வெற்றி பொருந்திய வேலையுடைய 'திரையன்' என்பவனின் வேங்கடம் மலையில் நல்ல நாள் காலையில் நறு மணமுடைய மலர்களின் பூந்தாது படிந்த புள்ளிகளுடன் கூடிய வரிகளை உடைய மயில், தேனை உடைய பசிய குருந்த மரத்தின் நறுமணம் கமழும் கிளையிலிருந்து தன் துணையை அழைத்திடும் இந் நிகழ் வுக்குக் காரணமான விரைந்து வரும் குளிர்ந்த கார்ப்பருவமே நாம் வருவேம் எனத் தெரிவித்த பருவமாகும் அதற்குள் மழையும் பரவுகின்றது அதை வந்து பார்! நம் தலைவர் இப்போதே வருவார்' என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றுவித்தாள்"*

## 340. அணைந்து மகிழ்வாய் காதலியை

தீம் தயிர் கடைந்த திரள் கால் மத்தம்,
கன்று வாய் சுவைப்ப, முன்றில் தூங்கும்
படலைப் பந்தர்ப் புல் வேய் குரம்பை,
நல்கூர் சீறூர் எல்லித் தங்கி,
குடுமி நெற்றி நெடு மரச் சேவல்

தலைக் குரல் விடியற் போகி, முனாஅது,
கடுங்கண் மறவர் கல் கெழு குறும்பின்
எழுந்த தண்ணுமை இடங் கட் பாணி,
அருஞ் சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணெனக்
குன்று சேர் கவ்லை, இசைக்கும் அத்தம்,
நனி நீடு உழந்தனை மன்னே! அதனால்
உவ இனி – வாழிய, நெஞ்சே! – மை அற
வைகு சுடர் விளங்கும் வான் தோய் வியல் நகர்ச்
சுணங்கு அணி வன முலை நலம் பாராட்டித்
தாழ் இருங் கூந்தல் நம் காதலி
நீள் அமை வனப்பின் தோளுமார் அணைந்தே.

*– மதுரைப் பேராலவாயர் அக 87*

*“என் நெஞ்சே, வாழ்க இனிய தயிரைக் கடைந்த திரட்சி யான காலையுடைய மத்து, கன்றானது தன் வாயால் சுவைத்திடும்படி முற்றத்தில் தொங்கும் மர நிழலான பந்தலை யும் புல்லால் வேயப்பட்ட கூரையையும் உடைய வறிய சிறிய ஊர் அந்த ஊரில் இரவில் தங்கிச் சூட்டையுடைய நீண்ட மரத்தில் உள்ள சேவலின் முதல் குரல் தோன்றும் விடியற்காலத்தில் எழுந்து சென்று, பழைமை உடைய வன்கண்மை உடைய மறவரின் கற்கள் பொருந்திய காட்டரண் களில் உண்டான தண்ணுமைப் பறையின் அகன்ற கண்ணில் எழும் ஒலி, அரிய சுரவழியில் செல்பவர்க்கு அச்சத்தை உண்டாக்கும் குன்றைச் சார்ந்த கவர்த்த நெறிகளையுடைய காட்டில் நீ மிகவும் வருந்தினாய்*

*அதனால் இருள் நீங்க விடிவிளக்கு விளங்கும் வானை அளாவிய நம் மாளிகையில் தாழ்வான கரிய கூந்தலை உடைய காதலியின் சுணங்கு படர்ந்த அழகிய கொங்கையின் இன்பத்தைப் பாராட்டி நீண்ட மூங்கில் போன்ற அழகிய தோளையும் அணைந்து இனி மகிழ்ச்சி அடைவாயாக!” என்று வினைமுற்றி மீளும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான்*

### 341. நீள் வழியைக் கடப்பளோ என் மகள்?

தெறு கதிர் ஞாயிறு நடு நின்று காய்தலின்,
உறு பெயல் ஒடு தேர் நனந்தலை,

உருத்து எழு குரல குடிஞைச் சேவல்,
புல் சாய் விடரகம் புலம்ப, வரைய
கல் எறி இசையின் இரட்டும் ஆங்கண்,
சிள்வீடு கறங்கும் சிறியிலை வேலத்து
ஊழுறு விளைநெற்று உதிர, காழியர்
கவ்வைப் பரப்பின் வெவ் உவர்ப்பு ஒழிய,
களரி பரந்த கல் நெடு மருங்கின்,
விளர் ஊன் தின்ற வீங்குசிலை மறவர்
மை படு திண் தோள் மலிர வாட்டி,
பொறை மலி கழுதை நெடு நிரை தழீஇய
திருந்து வாள் வயவர் அருந் தலை துமித்த
படு புலாக் கமழும் ஞாட்பில், துடி இகுத்து,
அருங் கலம் தெறுத்த பெரும் புகல் வலத்தர்
வில் கெழு குறும்பில் கோள் முறை பகுக்கும்
கொல்லை இரும்புனம் நெடிய என்னாது,
மெல்லென் சேவடி மெலிய ஏக
வல்லுநள் கொல்லோ தானே – தேம் பெய்து
அளவுறு தீம் பால் அலைப்பவும் உண்ணாள்,
இடு மணற் பந்தருள் இயலும்
நெடு மென் பணைத் தோள், மாஅயோளே?

*– மதுரைக் காஞ்சிப் புலவர் அக 89*

*“தேனை வார்த்துக் கலந்த பாலைக் குடிக்க வேண்டி, கோல் கொண்டு அச்சப்படுத்திடவும் கொள்ள மறுத்து மணல் பரப்பிய பந்தலுக்குள் அங்கும் இங்கும் ஓடும் இயல்புடைய நீண்ட மென்மையான மூங்கில் போன்ற தோளை யுடைய மாநிறத்தையுடையவள் என் மகள்*

*அவள் எல்லாவற்றையும் அழிக்கும் கதிர்களையுடைய ஞாயிறு வானத்தில் நடுநின்று காய்தலால் மிக்க மழைநீர் வற்றிப்போன கானலையுடைய அகன்ற பாலையின் பரப்பையும் சினம் கொண்டு எழுந்த குரலையுடைய பேராந்தையின் சேவல் பசும் புற்களும் அழிந்திட்டால் தம் பொந்துகள் தனிமைப்பட அவற்றை விட்டு அகன்று பறந்து போய் மலையில் இருந்து, அம் மலையினின்றும் சரியும் கற்கள் உருண்டு விழும்போது ஏற்படும் ஓசை போன்று குரலை உடையனவாய் மாறி மாறி*

*குழறும் இடம் சிறிய இலையை யுடைய வேல மரத்தில் முறையாய் முற்றி விளைந்த நெற்று உதிரச் சிள்வீடு என்னும் வண்டுகள் ஒலிக்கும் ஆரவாரம் மிக்க பரப்பைக் கொண்டதும் வண்ணார் எடுக்கும் உவர் மண் ஒழியக் களர்மண் பந்து உள்ளதுமான கற்களை இடையே கொண்ட நீண்ட இடம்*

*நிணமான ஊனைத் தின்ற விசை கொண்ட வில்லை யுடைய மறவர்கள், கருமை பொருந்திய வலிய தோள்கள் பூரிக்கச் சுமை மிக்க கழுதைகளின் நீண்ட நிரைகளைப் பின்பற்றி வரும் செப்பமுடைய வாளைக் கொண்ட வீரர்களான வாணிகளர்களை வெட்டி, அவர்களின் தலைகளைத் துண்டித்து மிகுந்த புலால் நாற்றம் வீசும் போர்க் களத்தில் தம் வெற்றிக்கு அறிகுறியாய் மெல்லத் துடியை முழக்கி, அரிய அணிகளைத் திறையாகப் பெற்றுக் குவித்த போர் விருப்பத்தை யுடைய மறவர்கள், விற்கள் பொருந்திய அரண்களில் அவரவர் கொள்ள வேண்டிய முறையில் பிரித்துத் தருவது இத்தகைய வறிய குறுங்காட்டையும் தினைப் புனங்களையும் உடைய வழிகள் இவை நீண்டவை என எண்ணாமல், தன் மென்மையான சிவந்த அடிகள் வருந்த, அவனுடன் நடந்து செல்லற்கு வல்லமையுடையவளோ?" என்று மகட் போக்கிய செவிலித்தாய் சொன்னாள்*

## 342. விரைவில் வருவார் தலைவர்

விளங்குபகல் உதவிய பல் கதிர் ஞாயிறு
வளம் கெழு மா மலை பயம் கெடத் தெறுதலின்,
அருவி ஆன்ற பெரு வரை மருங்கில்
சூர்ச் சுனை தழைஇ நீர்ப்பயம் காணாது,
பாசி தின்ற பைங் கண் யானை
ஓய் பசிப் பிடியொடு ஒருதிறன் ஒடுங்க,
வேய் கண் உடைந்த வெயில் அவிர் நனந்தலை
அரும் பொருள் வேட்கையின் அகன்றனர் ஆயினும்,
பெரும் பேர் அன்பினர் – தோழி! – இருங் கேழ்
இரலை சேக்கும், பரல் உயர் பதுக்கைக்
கடுங்கண் மழவர் களவு உழவு எழுந்த
நெடுங் கால் ஆசினி ஒடுங்காட்டு உம்பர்,

விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசி என அறியாப் பணை பயில் இருக்கை,
தட மருப்பு எருமை தாமரை முனையின்,
முடம் முதிர் பலவின் கொழு நிழல் வதியும்,
குடநாடு பெறினும் தவிரலர் –
மடமான் நோக்கி! நின் மாண் நலம் மறந்தே.

*– மாமூலனார் அக 91*

"தோழியே! உலகம் ஒளியுடன் விளங்குவதற்குக் காரண மான பகலைத் தந்த பல கதிர்களையுடைய ஞாயிறு, வளம் வாய்ந்த பெரிய மலை பயன் கெடும்படி காய்ந்தது அதனால் பசிய கண்களையுடைய யானை, அருவிகள் நீர் இல்லாது ஒழிந்த பக்கமலையில் தீண்டி வருத்தும் தெய்வங்களையுடைய சுனைகளில் இறங்கிக் கையால் துழவிப் பார்த்தும் பயன் காணாமையால் அங்கு உலர்ந்துள்ள பாசியைத் தின்னும் அது தன் இயக்கம் ஓய்ந்து போதற்குக் காரணமான பசியுடன் தன் பெண் யானையுடன் ஒரு பக்கத்தே ஒடுங்கிக் கிடக்கும் அங்கு மூங்கில்களின் கணுக்கள் உடையுமாறு காய்கின்ற வெயில் விளங்கும் இத்தகைய அகன்ற பாலை நிலத்தில் தலைவர் நம்மைப் பிரிந்து சென்றார் ஆயினும் அவர் நம்மிடம் பேரன்புடையவர் அல்லரோ?

ஆதலால், கரிய நிறம் உடைய இரலை மான்கள் உறங்கும் பரற் கற்களால் உயர்ந்த கற்குவியலில் அஞ்சாமை உடைய மழ நாட்டினர், பசுக்களைக் களவு செய்பவர்க்கு உதவியாய் வளர்ந்த நீண்ட அடியை உடைய ஆசினிப் பலவின் மரங் களையுடையது, ஒடுங்காடு என்னும் ஊர் அதற்கு அப்பால் இறுக்கமாகப் பிணித்த முழவை உடைய குட்டுவன் காத்த லால் பசி என்பதை அறியாத மருதவளம் மிக்க ஊர்களை யுடையது வளைந்த கொம்பை உடைய எருமை தான் மேய்ந்த தாமரையை வெறுக்குமானால் வளைந்த தன்மையுடைய பலாவின் கொழுவிய நிழலில் தங்குதற்கு இடமானது குட நாடு அதனையே பெறுவதானாலும், இளமையுடைய மான் போலும் பார்வையை உடையவளே, உன் மாட்சிமையுடைய அழகை மறந்து அங்குத் தங்க மாட்டார் எனத் தோழி தலைவியை நோக்கிக் கூறி அவளை ஆற்றுவித்தாள்

**343. நெஞ்சே வா மாயோனை முயங்குவோம்**

**கேள் கேடு ஊன்றவும், கிளைஞர் ஆரவும்,**
**கேள் அல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்,**
**ஆள்வினைக்கு எதிரிய ஊக்கமொடு புகல் சிறந்து,**
**ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்**
**அறம் கெழு நல் அவை உறந்தை அன்ன**
**பெறல் அரு நன் கலம் எய்தி, நாடும்**
**செயல் அருஞ் செய்வினை முற்றிலம் ஆயின்;**
**அரண் பல கடந்த, முரண் கொள் தானை,**
**வாடா வேம்பின் வழுதி கூடல்**
**நாள் அங்காடி நாறும் நறு நுதல்**
**நீள் இருங் கூந்தல் மாஅயோளொடு**
**வரை குயின்றன்ன வான் தோய நெடு நகர்,**
**நுரை முகந்தன்ன மென் பூஞ் சேக்கை**
**நிவந்த பள்ளி, நெடுஞ் சுடர் விளக்கத்து**
**நலம் கேழ் ஆகம் பூண் வடுப் பொறிப்ப,**
**முயங்குகம் சென்மோ – நெஞ்சே! – வரி நுதல்**
**வயம் திகழ்பு இழிதரும் வாய் புகு கடாஅத்து,**
**மீளி மொய்ம்பொடு நிலன் எறியாக் குறுகி**
**ஆள் கோள் பிழையா, அஞ்சுவரு தடக் கை**
**கடும் பகட்டு யானை நெடுந் தேர்க் கோதை**
**திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை**
**தெண் நீர் உயர் கரைக் குவைஇய**
**தண் ஆன்பொருநை மணலினும் பலவே.**

*– கணக்காயனார் மகனார் நக்கீரனார் அக 93*

*“நம் உறவினரைத் துன்பம் போக்கித் தாங்கிடவும் மேலும் சுற்றத்தார் பெருகவும் உறவினர் அல்லாதவர், உறவினர் போல் பொருந்தியிருக்கவும் காரணமான முயற்சிக்குப் பொருந்திய ஊக்கத்தினோடும் கூடிய விருப்பினால் சிறந்து, ஆத்தி மாலை அணிந்து பகைவரைக் கொல்லுகின்ற போரையுடைய சோழரின் அறம் பொருந்திய நல்ல அவையுடைய உறையூரைப் போன்ற பெறுவதற்கு அரிய அணிகலன்களை அடைந்து, எல்லாரும் விரும்பும் செய்வதற்கு அரிய பொருள் ஈட்டும் தொழிலைச் செய்து முடித்தோம்*

பகைவரின் அரண்கள் பலவற்றையும் வென்ற வன்மை வாய்ந்த படைகளையுடைய வாடாத வேம்பு மாலையை அணிந்தவன் பாண்டியன் அவனது மதுரையில் உள்ள நாளங்காடியைப் போன்ற நறுமணம் கமழும் நறிய நெற்றியையும் நீண்ட கூந்தலையும் உடைய மாம நிறத்தை உடையவள் நம் தலைவி

அவளுடன், மலையைக் குடைந்து செய்தாற் போன்ற வானை அளாவிய நீண்ட நம் இல்லத்தில், எண்ணெயின் நுரையை முகந்து இட்டாற் போன்ற மென்மையான மலர்களால் ஆன படுக்கையையுடைய நீண்ட சுடரையுடைய விளக்கின் ஒளியில் நன்மையுடைய நம் மார்பில் தலைவியின் மார்பின் பூண்கள் வடுக்களை உண்டாக்கும்படியாய், வரி பொருந்திய நெற்றியையும் வாயில் புகும் மதநீரையும் வலிமை விளங்கும் மறத்தன்மை ஆற்றலுடன் பகைவர் படையை அணுகி ஆளைப் பற்றி நிலத்தில் அறைந்து கொல்லும் தொழிலில் தவறாத அச்சம் வருதற்குக் காரணமான ஆண் யானையையும், பெரிய தேரினையும் உடைய சேரனின் செல்வம் மிக்க அகன்ற தலைநகரமான கருவூரில், தெளிந்த நீரையுடைய குளிர்ந்த ஆன் பொருநை ஆற்றின் உயர்ந்த கரையில் உள்ள மணலை விடப் பலமுறை தழுவிக் கொள் வோம்; எனவே, நெஞ்சே வருந்தாது என்னுடன் வருவாயாக!" என்று வினைமுற்றித் திரும்பும் தலைவன் தன் நெஞ்சிடம் கூறினான்

## 344. உடன் போக்குக்கு இசைந்த காரணம்

பைபயப் பசந்தன்று நுதலும்; சாஅய்
ஐது ஆகின்று, என் தளிர் புரை மேனியும்;
பலரும் அறியத் திகழ்தரும், அவலமும்
உயிர் கொடு கழியின் அல்லதை, நினையின்
எவனோ? – வாழி, தோழி! – பொரிகால்
பொகுட்டு அரை இருப்பைக் குவிகுலைக் கழன்ற
ஆலி ஒப்பின் தூம்புடைத் திரள் வீ
ஆறு செல் வம்பலர் நீள் இடை அழுங்க,
ஈனல் எண்கின் இருங் கிளை கவரும்

சுரம் பல கடந்தோர்க்கு இரங்குப என்னார்,
கௌவை மேவலர் ஆகி, 'இவ் ஊர்
நிரையப் பெண்டிர் இன்னா கூறும்
புரையஅல்ல, என் மகட்கு' எனப் பரைஇ
நம் உணர்ந்து ஆறிய கொள்கை
அன்னை முன்னர், யாம் என், இதற் படலே?

*– ஒரோடோகத்துக் கந்தரத்தனார் அக 95*

*'தோழியே வாழி! என் நெற்றியும் மெல்லப் பசந்தது; தளிர் போன்ற என் மேனியும் மெலிந்து தேய்வதாயிற்று ஊரில் உள்ளவர் பலரும் அறியுமாறு விளங்கும் என் துன்ப மும் என் உயிரைக் கொண்டு போவதே அல்லாது வேறு என்ன செய்யும்?*

*பொரிந்த அடியையும் முருடுகளையுடைய அரையினை யும் உடைய இருப்பை மரத்தினை குவிந்த குலையினின்றும் உதிர்ந்த பனிக்கட்டிகளைப் போன்ற உள் துளையுடைய திரண்ட மலர்களை, வழியில் தடைப்பட்டுத் தங்குமாறு, குட்டிகளை ஈன்ற கரடிகளின் கூட்டம் கவர்ந்து உண்ணும் இத்தகைய பல சுரங்களையும் கடந்து சென்ற நம் தலைவர் பொருட்டுத் தலைவியர் இரங்குதல் இயல்பே என எண்ணாத வராய், அலர் தூற்றுவதையே விரும்பியவராய் இந்த ஊரில் உள்ள பெண்டிர் கூறும் கொடிய சொற்கள் என் மகளுக்குப் பொருந்துவன அல்ல எனத் தெய்வத்தை வழிபட்டு நம் களவொழுக்கத்தை உணர்ந்து அமைதி அடைந்துள்ள கொள்கையை உடைய நம் அன்னை, முன் நாம் காணப் படின் அவள் நிலை என்னவாகும்? எனவே நான் நம் அன்னை முன் செல்ல அஞ்சியே தலைவனுடன் உடன்போக இசைந்தேன்' என்றாள் தலைவி*

## 345. அழாமல் இருப்பது எப்படி?

'கள்ளி அம் காட்ட புள்ளி அம் பொறிக் கலை
வறன் உறல் அம் கோடு உதிர, வலம் கடந்து,
புலவுப் புலி துறந்த கலவுக் கழி கடு முடை,
இரவுக் குறும்பு அலற நூறி, நிரை பகுத்து,
இருங் கல் முடுக்கர்த் திற்றி கெண்டும்

கொலை வில் ஆடவர் போலப், பலவுடன்
பெருந் தலை எருவையொடு பருந்து வந்து இறுக்கும்
அருஞ் சுரம் இறந்த கொடியோர்க்கு அல்கலும்
இருங் கழை இறும்பின் ஆய்ந்துகொண்டு அறுத்த
நுணங்கு கண் சிறு கோல் வணங்குஇறை மகளிரொடு
அகவுநர்ப் பரந்த அன்பின், கழல் தொடி,
நறவு மகிழ் இருக்கை, நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் அன்ன, நின்
அலர்முலை ஆகம் புலம்ப, பல நினைந்து,
ஆழல் என்றி – தோழி! யாழ என்
கண் பணி நிறுத்தல் எளிதோ – குரவு மலர்ந்து
அற்சிரம் நீங்கிய அரும் பத வேனில்
அறல் அவிர் வார் மணல் அகல்யாற்று அடைகரை,
துறை அணி மருதமொடு இகல் கொள ஓங்கி,
கலிழ் தளிர் அணிந்த இருஞ் சினை யா அத்து
இணர் ததை புதுப் பூ நிரைத்த பொங்கர்
புகை புரை அம் மஞ்சு ஊர,
நுகர் குயில் அகவும் குரல் கேட்போர்க்கே?

*– மாமூலனார் அக 97*

*“தோழியே, நான் ஆற்றியிருக்க வேண்டும் எனக் கூறுபவளே கேட்பாயாக: கள்ளிக் காட்டில் உள்ள புள்ளி யாகிய பொறி பொருந்திய கலைமானை, வறண்ட அழகிய கொம்பு தெறித்து விழுமாறு ஓடுகின்ற அதன் வெற்றியையும் கடந்து பிடித்துத் தின்ற புலால் விருப்பையுடைய புலி அது கைவிட்டுப் போன மூட்டுவாய் கழிந்து மிக்க முடை நாற்றத்தையுடைய தசை உள்ள இடம் அது. அந்த இடத்தில் இரவில் காட்டரண்களில் உள்ளவர் அலறுமாறு அவர் களைக் கொன்று தாம் கவர்ந்து வந்து நிரைகளைப் பகுத்துக் கொண்டு பெரிய கற்பாறையினது முடுக்கிலே தசையை அறுத்துத் தின்பர், கொலைத் தொழிலில் வல்ல வலிய வில்லினையுடைய வெட்சி வீரர். அவர் போல, பெரிய தலையையுடைய கழுகுகளுடன் பருந்துகள் பலவும் ஒருங்கு வந்து சூழ்ந்துள்ள அரிய சுர நெறியைக் கடந்து போனார் கொடியவரான நம் தலைவர்.*

அவர் பொருட்டு, பெரிய மூங்கிலை உடைய சிறு காட்டில் ஆராய்ந்து பார்த்து அறுத்துக் கொண்ட சிறிய கணுக்களையுடைய நுண்மையான தலைக்கோலையுடைய கூத்தியருடன், பாணர்களைப் புரக்கும் அன்பையும் கழலும் தொடியையும் கள்ளுண்டு களித்திருக்கும் அத்தாணி மண்டபத்தையும் உடைய 'நன்னன் வேண்மான்' என்ற அரசனின் வயலைக் கொடி படர்ந்த வேலிகளையுடைய வியலூரைப் போன்ற நின் பரந்த முலையையுடைய மார்பு தனித்து வருந்தப் பலவற்றையும் நினைத்துத் துன்பத்தில் சூழாதே என்று கூறி வற்புறுத்துகின்றாய் இஃது என்ன?

குரவ மலர் மலர்ந்து முன் பனிக்காலம் நீங்கப் பெற்ற அரிய செவ்வியையுடைய இளவேனிற் காலம் அக் காலத்தில், அற்று அற்று விளங்கும் நீரினூடே விளங்கும் மணலையுடைய அகன்ற ஆற்றின் கரையில் உள்ள துறையை அழகு செய்யும் மருத மரங்கள் அவற்றுடன் தொகுதியாக உயர்ந்து அழகு விளங்கும் தளிர் பொருந்திய கிளைகளையுடைய மா மரத்தின் கொத்துகளாய்ப் பொருந்திய புதிய மலர்கள் செறிந்த சோலைகளில், புகையைப் போன்ற வெண்மையான முகில்கள் தவழ, அச் சோலையில் மாந்தளிரைத் தின்னும் குயில்களின் குரலைக் கேட்கும் துணைவரைப் பிரிந்த மகளிர்க்குக் கண்ணின் நீரை நிறுத்துவது எளிதாகுமோ? அந்தத் துன்பத்தின் தன்மையை நீ அறிந்திலை போலும்!" என்று தோழிக்குத் தலைவி சொன்னாள்

## 346. இளையாய், காண்க!

வாள் வரி வயமான் கோள் உகிர் அன்ன
செம் முகை அவிழ்ந்த முள் முதிர் முருக்கின்
சிதரல் செம்மல் தாஅய், மதர் எழில்
மாண் இழை மகளிர் பூணுடை முலையின்
முகை பிணி அவிழ்ந்த கோங்கமொடு அசைஇ, நனை
அதிரல் பரந்த அம் தண் பாதிரி
உதிர்வீ அம்சினை தாஅய், எதிர்வீ
மராஅ மலரொடு விராஅய், பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்

நன்றே, கானம் நயவரும் அம்ம;
கண்டிசின் வாழியோ — குறுமகள்! — நுந்தை
அடு களம் பாய்ந்த தொடி சிதை மருப்பின்,
பிடி மிடை, களிறறின் தோன்றும்
குறு நெடுந் துணைய குன்றமும் உடைத்தே!

*— பாலை பாடிய பெருங்கடுங்கோ அக 99*

*"அன்புடைய இளையவளே, நீ வாழ்வாயாக! வாளைப் போன்ற கோடுகளையுடைய புலியின் கொல்லும் கூரிய நகம் போன்ற, சிவந்த அரும்பு விரிந்த முள் நிறைந்த முருக்க மலர்கள் அவற்றில் வண்டுகள் மொய்க்கும் அதனால் வாடிய பூக்கள் கீழே விழுந்தன மதர்த்த அழகையும் சிறந்த அணி களையும் உடைய இளைய மகளிரின் பூண் அணிந்த கொங்கையைப் போன்ற அரும்புகள் கட்டவிழ்த்து, கோங்கின் மலருடன் தங்கி, அரும்பிய புலிப்பூக்கள் பரவப் பெற்றுள்ளன குளிர்ந்த பாதிரியின் அழகிய கிளைகளினின்று உதிர்ந்த பூக்களுடன் தாவிப் பூக்கம் பருவத்தை உடைய வெண் கடப்ப மலருடன் கலந்து விளங்குகின்றன வணங்குதற்குரிய தெய்வ முடைய கோயிலில் கலந்து கிடக்கும் மலர் களைப் போல அவை மணம் கமழும் பல்வேறு மலர்கள் உடைமையால் நாம் செல்லும் இக்காடு விரும்பத்தக்கதாய் உள்ளது. இளைய மகளே! நீ காண்பாயாக!*

*மற்றும் உன் தந்தை பகவரை வென்ற போர்க்களத்தில் பாய்ந்து போரிடலால் பூண் அழியப் பெற்ற கொம்பையும் பெண் யானைகள் சூழப் பெற்றனவுமான ஆண் யானை களைப் போல தோன்றும் சிறியவும் பெரியவும் என அள வுடைய குன்றங்களையும் உடையதாகின்றது" என்று உடன் போக்கில் வந்த தலைவி மருளக் கூறினான்*

## 347. துன்பத்துக்கு யாது காரணம்?

அம்ம வாழி, தோழி! 'இம்மை
நன்று செய் மருங்கில் தீது இல்' என்னும்
தொன்றுபடு பழமொழி இன்று பொய்த்தன்றுகொல்? —
தகர் மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு, சுரிந்த
சுவல் மாய் பித்தை, செங் கண் மழவர்

வாய்ப் பகை கடியும் மண்ணொடு கடுந் திறல்
தீப் படு சிறு கோல் வில்லொடு பற்றி,
நுரை தெரி மத்தம் கொளீஇ, நிரைப் புறத்து
அடி புதை தொடுதோல் பறைய ஏகி
கடி புலம் கவர்ந்த கன்றுடக் கொள்ளையர்,
இனம் தலைபெயர்க்கும் நனந்தலைப் பெருங் காட்டு,
அகல் இரு விசும்பிற்கு ஓடம் போல,
பகலிடை நின்ற பல் கதிர் ஞாயிற்று
உருப்பு அவிர்பு உளரிய கழன்று வரு கோடை,
புன் கால் முருங்கை ஊழ் கலி பல் மலர்,
தண் கார் ஆலியின், தாவன உதிரும்
பனி படு பல் மலை இறந்தோர்க்கு
முனிதகு பண்பு யாம் செய்தன்றோ இலமே!

*- மாமூலனார் அக 101*

*"தோழியே, நான் சொல்வதைக் கேட்பாயாக இம்மையில் நன்மை செய்தால் தீமை உண்டாவதில்லை எனக் கூறப்படும் தொன்று தொட்டு வழங்கும் பழமொழி இன்று பொய்யாகி விட்டதோ!*

*செம்மறியாட்டுக் கிடாயின் கொம்பினைப் போன்ற சுற்றிக் கடை குழன்ற பிடரியை மறைக்கும் தலைமயிரையும் சிவந்த கண்ணையும் உடையவர் மழவர் அவர்கள் வாயி னின்று உண்டாகும் இருமலான பகையை எழாமல் தீர்க்கும் மருந்தான புற்று மண்ணை வாயில் அடக்கிக் கொண்டு, கடிய திறல் பொருந்திய தீ உண்டாகும் அம்பை வில்லுடன் கையில் கொண்டு, வெண்ணெயை வெளிப்படுத்தும் மத்தைக் கவர்ந்து கொண்டு, ஆனிரைகள் உள்ளவிடத்துத் தம் அடி களை மறைத்துள்ள செருப்புகள் தேயச் சென்று அவரிடம் கவர்ந்து கொண்ட கன்றுகளையுடைய ஆநிரைகளைக் கொள்ளை யிட்டுக் கொணர்ந்து அவற்றைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளும் அகன்ற இடத்தையுடைய பெருங்காடு*

*அதில், அகன்ற வானமாகிய கடலில் இயங்கும் தோணி போல் பகற்போதில் நின்ற பல கதிர்களையுடைய பகலவனின் வெப்பம் விளங்கிப் பரவச் சுழன்று வரும் மேல் காற்றால், புல்லிய அடிப் பகுதியை உடைய முருங்கை மரத்தில்*

முதிர்ந்து கழியும் பல பூக்கள் கார் காலத்தில் ஆலங்கட்டி போல உதிரும் இவ் இயல்புடைய நடுக்கம் ஏற்படுத்தும் பல மலைகளையும் தாண்டிச் சென்ற நம் தலைவர்க்கு வெறுக்கத் தக்க செய்ல யாதும் நாம் செய்திலமே!" என்று பிரிவிடை வேறுபட்ட தலைவி தோழிக்குச் சொன்னாள்

## 348. நலனையேனும் நல்காரோ?

நிழல் அறு நனந்தலை, எழால் ஏறு குறித்த
கதிர்த்த சென்னி, நுணங்கு செந் நாவின்
விதிர்த்த போலும் அம் நுண் பல் பொறி,
காமர் சேவல் ஏமம் சேப்ப;
முளி அரில் புலம்பப் போகி, முனாஅது
முரம்பு அடைந்திருந்த மூரி மன்றத்து,
அதர் பார்த்து அல்கும் ஆ கெழு சிறுகுடி,
உறையுநர் போகிய ஓங்கு நிலை வியல் மனை,
இறை நிழல் ஒரு சிறைப் புலம்பு அயா உயிர்க்கும்
வெம் முனை அருஞ் சுரம் நீந்தி; தம்வயின்
ஈண்டு வினை மருங்கின் மீண்டோர்மன் என,
நள்ளென் யாமத்து உயவுத்துணை ஆக
நம்மொடு பசலை நோன்று, தம்மொடு
தானே சென்ற நலனும்
நல்கார் கொல்லோ, நாம் நயந்திசினோரே?

*– காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் அக 103*

"நம்மால் விரும்பப்பட்ட தலைவர் நிழல் இல்லாத அகன்ற பாலை நிலத்தில் வல்லூற்றினை எறிவதற்குக் குறி வைக்கப்பட்ட பெரிய தலையையும், நுணுகிய சிவந்த நாவையும், அள்ளித் தெளித்தாற் போன்ற அழகிய நுட்பமான பல புள்ளிகளையும் கண்டாரால் விரும்பப்படும் தன்மையையும் உடைய அழகிய குறும்பூழ்ச் சேவல், பாதுகாப்பான இடத்திற் சென்று தங்க எண்ணித் தானிருந்த காய்ந்த சிறிய புதர் தனித்திடச் செல்லும் அங்ஙனம் போன அது முன் பக்கத்தில் வன்னிலத்தைச் சார்ந்திருந்த பழைய பெரிய அம்பலத்தில் ஆறலைக் கள்வர் வழிப்போக்கரை எதிர்பார்த்துத் தங்குவ தற்கு இடமான, பசுக்களையுடைய சிறிய ஊர் அந்த ஊரில்

வாழ்ந்தவர் விட்டுப் போன இடமான உயர்ந்த நிலையை உடைய பெரிய மனையில் இறப்பினது நிழலின் ஒரு பக்கத்தே தங்கித தனிமையாய்ப் பெருமூச்சு விடும் இத்தகைய கொடிய போர் முனை இருப்புகளையுடைய அழகிய சுரத்தைக் கடந்து தம்மிடத்து வந்த பொருள் ஈட்டும் வினையில் மீண்டும் செல்லலானார் என, நள்ளென்ற நடு யாமத்தும் உசாவும் துணையாகும் பொருட்டு நம்முடன் இதுவரை பசலையைப் பொறுத்திருந்து இப்போது அவருடனே போய்விட்ட நம் பெண்மை நலத்தையேனும் இனி நமக்கு அருள மாட்டாரோ? அங்ஙனமாயின் நான் உயிர் வாழேன்," என்று தலைவன் பிரிவின் போது தலைவி தோழியிடம் கூறினாள்

### 349. பாலையில் மகள் செல்ல வல்லளோ

அகல் அறை மலர்ந்த அரும்பு முதிர் வேங்கை
ஒள் இலைத் தொடலை தைஇ, மெல்லென
நல் வரை நாடன் தற்பாராட்ட
யாங்கு வல்லுநள்கொல் தானே – தேம் பெய்து,
மணி செய் மண்டைத் தீம் பால் ஏந்தி,
ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள்,
நிழற் கயத்தன்ன நீள் நகர் வரைப்பின்
எம்முடைச் செல்வமும் உள்ளாள், பொய்ம் மருண்டு,
பந்து புடைப்பன்ன பாணிப் பல் அடிச்
சில் பரிக் குதிரை, பல் வேல், எழினி
கெடல் அருந் துப்பின் விடுதொழில் முடிமார்
கனை எரி நடந்த கல் காய் கானத்து
வினை வல் அம்பின் விழுத் தொடை மறவர்
தேம் பிழி நறுங் கள் மகிழின், முனை கடந்து,
வீங்கு மென் சுரைய ஏற்றினம் தரூஉம்
முகை தலை திறந்த வேனிற்
பகை தலைமணந்த பல் அதர்ச் செலவே?

*– தாயங்கண்ணனார் அக 105*

"மணிகள் பதிக்கப் பெற்ற பொற்கலத்தில் இனிய பாலுடன் தேன்கலந்து ஏந்திச் செவிலித் தாய் ஊட்டவும் உண்ணாதவள் என் மகள் அத் தகையவள் மர நிழலில்

அமைந்துள்ள சுனை போன்று குளிர்ந்துள்ள மாடங்களில் அமைந்த எம் செல்வத்தையும் நினையாதவளானாள்.

அகன்ற பாறையைச் சார்ந்து வளர்ந்த அரும்பு முதிர்ந்து மலர்ந்த வேங்கை மரத்தின் ஒளியுடைய இலை கலந்து தொடுத்த மாலையை அணிந்து மெல்ல நல்ல மலை நாடன் பாராட்டிவர, அப் பொய்யை மெய் என நினைத்து மயங்கினாள் மயங்கி, பந்து அடிக்கும் ஒலி போன்ற தாளத்துக்கு ஏற்பப் பலவகையாய் அடியிடுதலை உடையனவும் சிலவான செலவுகளை உடையனவுமான குதிரைகளையும், வேலையும் உடையவன் எழினி அவன் ஏவி விட்ட தொழிலை முடிக்கும் பொருட்டு அவனுடைய ஒரு காலத்தும் கெடுதல் இல்லாத தம் வலிமை காரணமாக மிக்க தீப் பரவிக் கற்கள் சுடுகின்ற காட்டில் தம் தொழில் வலிமை உடைமையால் அம்புகளைக் குறி தவறாது தொடுக்கும் வீரர் பிழிந்த தேனால் ஆன நறிய கள்ளை உண்ட மகிழ்ச்சியினால் பகைவரின் போர் முனையை வென்று பருத்த மெல்லிய மடியை உடையனவும் காளைகளுடன் கூடியனவுமாயுள்ள ஆ நிரையைக் கொண்டு வந்து தருவர் அத்தகைய இடமான பகைவருடன் பொருந்திய பலவான நெறிகளில் மலை முழைஞ்சுகள் வெடித்ததற்குக் காரணமான வேனிற் காலத்தில் என் மகள் நடந்து செல்லுதற்கு எங்ஙனம் வல்லவள் ஆவாள்?" என்று மகள் போக்கிய தாய் அரற்றினாள்

## 350. என் தோழி நின்னுடன் வருவாள்!

நீ செலவு அயரக் கேட்டொறும், பல நினைந்து,
அன்பின் நெஞ்சத்து, அயாஅப் பொறை மெலிந்த
என் அகத்து இடும்பை களைமார், நின்னொடு
கருங் கல் வியல் அறைக் கிடப்பி, வயிறு தின்று
இரும் புலி துறந்த ஏற்றுமான் உணங்கல்
நெறி செல் வம்பலர் உவந்தனர் ஆங்கண்,
ஒலிகழை நெல்லின் அரிசியொடு ஓராங்கு
ஆன் நிலைப் பள்ளி அளை பெய்து அட்ட
வால் நிணம் உருக்கிய வாஅல் வெண் சோறு
புகர் அரைத் தேக்கின் அகல் இலை மாந்தும்

கல்லா நீள் மொழிக் கத நாய் வடுகர்
வல் ஆண் அரு முனை நீந்தி, அல்லாந்து,
உகு மண் ஊறு அஞ்சும் ஒரு கால் பட்டத்து
இன்னா ஏற்றத்து இழுக்கி, முடம் கூர்ந்து,
ஒரு தனித்து ஒழிந்த உரனுடை நோன் பகடு
அம் குழை இருப்பை அறை வாய் வான் புழல்
புல் உளைச் சிறாஅர் வில்லின் நீக்கி
மரை கடித்து ஊட்டும் வரையகச் சீறூர்
மாலை இன் துணை ஆகி, காலைப்
பசு நனை நறு வீப் பரூஉப் பரல் உறைப்ப,
மண மனை கமழும் கானம்
துணை ஈர் ஓதி என் தோழியும் வருமே.

*– காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் அக 107*

"பெருமானே, நீ என் தோழியை நின்னுடன் அழைத்துக் கொண்ட போக எண்ணினாய் இச் செய்தியை யான் குறிப்பாக அவள் உணர்ந்து கொள்ளும் பொருட்டுப் பல வகையாலும் சொல்லுந்தோறும் அவள் அதைக் கேட்கும் போதெல்லாம் தன் நெஞ்சுள் பல நினைவுகளை நினைந்து அந் நினைவுகளை ஆராய்ந்து பார்த்துப் பின் துன்பச் சுமையால் மெலிந்துள்ள என் துன்பத்தை நீக்கும் பொருட்டு நின்னுடன் வர இசைந்தாள்

பெரிய புலியானது கரிய கல்லாகிய அகன்ற மலை இடத்தே, கலைமானைக் கொன்று தன் வயிறு நிறையத் தின்று எஞ்சியவற்றை விட்டுவிட்டுப் போனது அக் கலை மானின் உலர்ந்த தசையைப் பார்த்து, வழியில் செல்பவர் பெரிதும் மகிழ்ந்தவராயினர் அதை அங்குத் தழைத்த மூங்கிலின் விளைந்த நெல்லரிசியுடன் ஒருங்கே கூட்டி ஆயர் சேரியில் உள்ள தயிரை இட்டுச் சமைத்த வெண்மை நிற நிணத்தை உருக்கிக் கூட்டிய வெண் சோற்றைப் புள்ளி பொருந்திய அரையையுடைய தேக்க மரத்தினது அகன்ற இலையில் வைத்து உண்பர் அங்ஙனம் உண்ணுதற்கு இட மாய், போர்த் தொழிலை அல்லாது பிறவற்றைக் கல்லாத நெடுமொழியையும், சினம் மிக்க நாயையும் உடைய வடுகர் அவரின் வலிய ஆண்மை விளங்குகின்ற கடப்பதற்கரிய போர்க்

*களங்களையும் கடந்து போய்ச் சரிந்து விழும் மண்ணின் இடையூற்றுக்கு அஞ்சும் ஒரே துறையினை உடைய ஓடையில் உள்ள இன்னாமையுடைய ஏற்றம் கொண்ட நெறியில் வழுக்கி விழுந்து மிக்க முடம்பட்டுத் தன்னந் தனியே ஒழிந்து கிடக்கும் உடல் வன்மை வாய்ந்த பொதி சுமக்கும் எருது*

*அந்த எருதை, பொலிவற்ற தலைமயிரை உடைய சிறுவர் அழகிய தளிரையுடைய இருப்பையின் அற்ற வாயையும் வெண்மையான துளையினையும் உடைய மலரை வில்லால் உதிர்ப்பர் அவற்றைத் தின்ன வரும் மானைத் துரத்தி எருதை உண்ணச் செய்வர். அத்தகைய மலையிடம் உள்ள சிறிய ஊர்களில் மாலைப் பொழுதில், நினக்கு இனிய துணையாய்த் தங்கிக் காலையில் புதிய தேனையுடைய நறுமணப் பூக்கள் பெரிய பாறைகளில் உதிர்ந்து கிடத்தலால் மணம் கமழும் - திருமண மனைபோல விளங்கும் - காட்டில் நின் குளிர்ந்த வாழ்க்கைத் துணைவியான குளிர்ந்த கூந்தலாள் என் தோழியும் வருவாள் எனத் தோழி தலைவனை நோக்கிக் கூறினாள்*

## 351. மீளக் கூடாது வீணே!

பல் இதழ் மென் மலர் உண்கண், நல் யாழ்
நரம்பு இசைத்தன்ன இன் தீம் கிளவி,
நலம் நல்கு ஒருத்தி இருந்த ஊரே –
கோடு உழு களிற்றின் தொழுதி ஈண்டிக்
காடு கால்யாத்த நீடு மரச் சோலை
விழை வெளில் ஆடும் கழை வளர் நனந்தலை
வெண் நுனை அம்பின் விசை இட வீழ்ந்தோர்
எண்ணு வரம்பு அறியா உவல் இடு பதுக்கைச்
சுரம் கெழு கவலை கோட்பால் பட்டென,
வழங்குநர் மடிந்த அத்தம் இறந்தோர்
கைப்பொருள் இல்லைஆயினும் மெய்க் கொண்டு
இன் உயிர் செகாஅர் விட்டு அகல் தப்பற்குப்
பெருங் களிற்று மருப்பொடு வரி அதள் இறுக்கும்
அறன் இல் வேந்தன ஆளும்
வறன் உறு குன்றம் பல் விலங்கினவே.

*– கடுத்தொடைக்காவினார் அக 10.*

*"அறிவற்ற நெஞ்சே, பல இதழ்களைப் பெற்ற மென்மையான மலர் போன்ற மை பூசப்பெற்ற கண்களையும், நல்ல யாழின் நரம்பு ஒலித்ததைப் போன்ற மிக இனிய சொல்லையும் உடைய நலம் எல்லாம் பொருந்திய நம் காதலி இருக்கும் ஊரானது, தம் கொம்புகளின் பகைவர் மார்பினைக் குத்தி உழும் ஆண் யானைகளின் கூட்டம் செறியப் பெற்றுக் காடாய்ப் பரவி நீண்ட மரங்களையுடைய சோலையில் உள்ள ஒன்றை ஒன்று விரும்பும் அணில்கள் கூடி ஆடும் மூங்கில் வளர்ந்த அகன்ற இடம் அங்கு நிணம் தோய்தலால் வெண்மையான முனையையுடைய அம்பின் வேகம் பட இறந்தவர் பலர் அவர்களின் உடலைப் புதைத்த, எண்ணால் எல்லை இட்டு அறிய இயலாத தழையிட்டு மூடிய பதுக்கைகளையுடைய சுரத்தில் பொருந்திய கவர்த்த வழிகள் ஆறலைக்கும் கள்வரின் கையகப்பட்டது என்பதை அறிந்து வழிப்போவார் இல்லையாயிற்று அச் சுரநெறி*

*அந்நெறியில், வந்த வழிப்போக்கரிடம் கைப்பொருள் சிறிதும் இல்லா விட்டாலும் அவரது உடலைப் பற்றிக் கொண்டு அவர் உயிரைப் போக்காமல் விட்ட தவற்றுக்காகப் பெரிய ஆண் யானைகளின் கொம்புகளையும் புலித் தோலையும் தண்டமாகக் கொடுக்கச் செய்கின்ற அறப் பண்பு சிறிதும் இல்லாத எயினர் மன்னன் ஆளும் வறண்ட பல குன்றுகள் இடையிடையே குறுக்கிட்டுக் கிடக்கின்றன." என்று பாலை நிலத்து இடையில் தலைவன் தன் நெஞ்சிற்கு உரைத்தான்*

## 352. வருவார் தலைவர் விரைவில்

**உள் ஆங்கு உவத்தல் செல்லார், கறுத்தோர்**
**எள்ளல் நெஞ்சத்து ஏஎச் சொல் நாணி**
**வருவர் – வாழி, தோழி! – அரச**
**யானை கொண்ட துகிற் கொடி போல**
**அலந்தலை ஞெமையத்து வலந்த சிலம்பி**
**ஒடைக் குன்றத்துக் கோடையொடு துயல்வர**
**மழை என மருண்ட மம்மர், பல உடன்**
**ஒய்களிறு எடுத்த நோயுடைய நெடுங் கை**
**தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும்**

அத்தக் கேழல் அட்ட நற் கோள்
செந்நாய் ஏற்றை கம்மென ஈர்ப்பக்,
குருதி ஆரும் எருவைச் செஞ் செவி
மண்டு அமர் அழுவத்து எல்லிக் கொண்ட
புண் தேர் விளக்கின் தோன்றும்
விண் தோய் பிறங்கல் மலை இறந்தோரே.

– *பாலை பாடிய பெருங்கடுங்கோ அக 111*

*தோழி வாழ்க! இப்படி வருந்தாதே. பட்டத்து யானை தன்மீது கொண்ட துகில் கொடியைப் போல் ஒடைக்குன்றம் என்ற மலையுச்சியில் சுழலுகின்ற 'ஞெமை' என்னும் மரத்தினது உயர்வான கிளையில் கட்டப் பெற்ற சிலம்பியின் கூடானது மேல் காற்றால் அசைகின்றது. அதை முகில் எனக் கருதி மயங்கிய மயக்கத்தை உடைய, நீருக்காக அலைந்து களைத்த ஆண் யானைகள் பலவும் ஒருங்கே உயரத் தூக்கிய வருத்தத்தை உடைய நீண்ட கைகள் புகழைத் தொகுத்துக் கூறும் கூத்தரின் 'தூம்பு' என்ற இசைக்கருவி போல் ஒலிக்கும். அத்தகைய இடமான வழியில் பதுங்கிக் கிடந்து ஆண் பன்றியைக் கொன்றதால் நல்ல இரையைக் கொண்ட ஆண் செந்நாய் விரைவாக இழுத்துச் செல்லும். அப் பன்றியின் இரத்தத்தைப் பருகும் கழுகுகளின் சிவந்த காதுகள் வீரர்கள் நெருங்கிச் சென்று போரிடும் போர்க் களத்தில், இரவுப் பொழுதில் கையில் கொண்ட வீரர்களின் புண்களை ஆராயும் விளக்குகளைப் போல் தோன்றும். இத்தகைய இயல்பு கொண்ட வான் தோயும் விளக்கம் பொருந்திய மலையைக் கடந்து பொருள் ஈட்டச் சென்றவர் நம் தலைவர்.*

*தமக்குப் பொருள் உள்ள அளவுக்கு மகிழாதவராய்ப் பகைவர் இகழும் நெஞ்சத்துடன் கூறும் அம்பு போலும் சொல்லுக்கு நாணம் கொண்டு சென்றவர் உன்னை நினைந்து மீண்டு வருவர். அவர் வரும்வரை ஆற்றி இருப்பாயாக!" என்று தலைவன் பிரிவின் போது தோழி தலைவியிடம் கூறினாள்.*

## 353. அழாமல் இருப்பேன்

நன்று அல் காலையும் நட்பின் கோடார்,
சென்று வழிப்படூஉம் திரிபு இல் சூழ்ச்சியின்,

புன் தலை மடப் பிடி அகவுநர் பெருமகன்
மா வீசு வண் மகிழ் அஃதை போற்றி,
காப்புக் கைந்நிறுத்த பல் வேல் கோசர்
இளங் கள் கமழும் நெய்தல்அம் செறுவின்
வளம் கெழு நல் நாடு அன்ன என் தோள் மணந்து
அழுங்கல் மூதூர் அலர் எடுத்து அரற்ற
நல்காது துறந்த காதலர், 'என்றும்
கல் பொரூஉ மெலியாப் பரட்டின் நோன் அடி
அகல்சூல் அம் கரைப் பெய்த வல்சியர்
இகந்தனர் ஆயினும், இடம் பார்த்துப் பகைவர்
ஓம்பினர் உறையும் கூழ் கெழு குறும்பில்
குவை இமில் விடைய வேற்று ஆ ஒய்யும்
கனை இருஞ் சுருணைக் கனி காழ் நெடு வேல்
விழவு அயர்ந்தன்ன கொழும் பல் திற்றி
எழஅப் பாணன் நல் நாட்டு உம்பர்
நெறி செல் வம்பலர்க் கொன்ற தெவ்வர்
எறிபடை கழிஇய சேயரிச் சில் நீர்
அறுதுறை அயிர் மணற் படுகரைப் போகி
சேயர்' என்றலின், சிறுமை உற்ற என்
கையறு நெஞ்சத்து எவ்வம் நீங்க
அழாஅம் உறைதலும் உரியம் — பராரை
அலங்கல் அம் சினைக் குடம்பை புல்லெனப்
புலம் பெயர் மருங்கில் புள் எழுந்தாங்கு,
மெய் இவண் ஒழியப் போகி, அவர்
செய்வினை மருங்கில் செலீஇயர், என் உயிரே!

*— கல்லாடனார் அக 113*

*நண்பர் கேடு அடைந்த போதும் தாம் கொண்ட நட்புத் தன்மையில் குறையாதவராய் அந்த நண்பரிடம் சென்று அவரை வழிப்பட்டு அவர்க்கு நன்மையைச் செய்யும் தன்மை காரணமாக, புன்மையான தலையை உடைய இளைய பெண் யானைகளைத் தன்னைப் பாடி வருகின்ற பாணர் தலைவனுக்குப் போர்க் களத்தில் பரிசிலாக வழங்கும் வள்ளன்மையால் இன்பம் கொள்பவன் அஃதை அவனுக்குத் துன்பம் வந்த காலத்தில் அதைப் போக்கிக் காத்துப் பின்பும் துன்பம்*

அவனுக்கு ஏற்படாத வண்ணம் தம் அரணில் வைத்துக் காப்பாற்றிய பல வேற் படையை உடையவர் கோசர். அவரது புதிய கள்ளின் மணம் கமழும் 'நெய்தலம் செறு' என்னும் வளம் பொருந்திய நல்ல நாட்டைப் போன்ற என் தோளைக் கூடி ஆரவாரம் மிக்க பழைய ஊர்ப் பெண்டிர் அலரைச் சொல்ல, நமக்கு அருள் செய்யாமல் எம்மைவிட்டுச் சென்றார் நம் தலைவர்.

எப்போதும் கல்லைப் பொருது மெலிவு அடையாத வலிய அடியை உடையவன்; வலிமை மிக்க மூங்கில் குழாயில் இட்ட உணவை உடையவன்; தன் நாட்டு எல்லையைக் கடந்து தொலைவில் உள்ளனவாயினும் கவரும் சமயத்தைப் பார்த்துப் பகைவர் ஆக்களைப் பாதுகாத்து வாழும் உணவு மிகுந்த அரண்களில் போய்க், குவிந்த இமிலையுடைய காளை களுடன் கூடிய பகைப்புலத்து ஆக்களைக் கவர்ந்து செலுத்து பவன்; செறிந்த கரிய பூணையும் நெய் மிக்க தண்டையும் உடைய நீண்ட வேலையும் விழா நிகழ்ந்தது போன்ற கொழுவிய பல உணவுகளையும் உடையவன்; பகைவர்க்குப் புறம் கொடாத பாணன். அத் தகையவனின் நல்ல நாட்டுக்கு அப்பாற்பட்ட வழியில் செல்பவள் ஆகிய புதியவரைக் கொன்றை ஆறலைப் போர் தாங்கள் கையாண்ட படைக் கலத்தைக் கழுவிய சிவந்த நிறம் உடைய அரித்தோடும் சின்னீரையுடைய மக்களின் நடமாட்டம் அற்ற துறையாகிய நுண்மணல் பொருந்திய கரையைத் தாண்டித் தொலைவில் நம் தலைவர் உள்ளார் என்பதைப் பலரும் கூறுதலால் அதைக் கேட்டுச் சிறுமை அடைந்து செயலற்றுக் கிடக்கும் எம் நெஞ்சில் உள்ள துன்பம் முழுவதும் ஒழியுமாறு அழாமல் இருத்தற்கு உரியோம்.

அவ்வாறு இருத்தலுக்கு, பருத்த அடிப் பகுதியில் கிளைத்த அசையும் அழகிய கிளைகளில் உள்ள தன் கூடா னது பொலிவில்லாது அழிய, தான் போக எண்ணிய இடத் துக்குப் பறவை புறப்பட்டுச் சென்றாற் போல் என் உடல் இங்குத் தனித்திருக்க உயிர் பிரிந்து புறப்பட்டுத் தலைவர் வினையாற்றும் இடத்துக்குச் செல்வதாகுக. அங்ஙனம் சென்ற பின்பு அழாமல் இருப்பதற்கு உரியோம்," என்று தலைவன் பிரிவின் போது தலைவி தோழிக்கு இயம்பினாள்.

